ஜூலை

2019

# நடப்பு நிகழ்வுகள்

www.winmeen.com

# நடப்பு நிகழ்வுகள்

## 1.வீர் சோட்ரானி என்பவர் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A) தடகளம்

B) மல்யுத்தம்

C) பாட்மிண்டன்

D) ஸ்குவாஷ் ☑

- ✓ சீனாவின் மக்காவ் நகரத்தில் நடைபெற்ற ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில், ஆடவர் பிரிவில் சக நாட்டு வீரர் யாஷ் பதேவை 3-2 என்ற கணக்கில் வீழ்த்தி, 19 வயதுக்குட்பட்டோருக்கான பட்டத்தை வென்றார் வீர் சோட்ரானி. இதன் காரணமாக இந்தியா தங்கம் வென்றது. இவ்வெற்றியின் மூலம், ரவி தீட்சித் மற்றும் வேலா செந்தில்குமார் ஆகியோருக்குப் பிறகு ஆசிய கோப்பையை வென்ற மூன்றாவது இந்தியர் என்ற பெருமையை வீர் பெற்றார்.
- ✓ மற்ற இரண்டு இறுதிப்போட்டிகளில், சிறுவர் 17 வயதுக்குட்பட்ட பிரிவில் நீல் ஜோஷி மூலமாகவும், 15 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் யுவனா குப்தா மூலமாகவும் இந்தியா 2 வெள்ளிப்பதக்கங்களைப் பெற்றது. இந்தியா ஒரு தங்கம், 3 வெள்ளி மற்றும் பல வெண்கலங்களுடன் போட்டியை முடித்தது.

## 2.புலனாய்வுப் பணியகத்தின் (Intelligence Bureau – IB) தற்போதைய இயக்குநர் யார்?

A) அனில் தஸ்மானா

B) அர்விந்த் குமார் ☑

C) சமந்த் குமார் கோயல்

D) இராஜீவ் ஜைன்

- ✓ 1984ஆம் ஆண்டைய அஸ்ஸாம் – மேகாலயா பிரிவைச் சேர்ந்த IPS அதிகாரி அர்விந்த் குமார், புலனாய்வுப் பணியகத்தின் (IB) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். மாவோயிஸ்ட்டுகள் மற்றும் காஷ்மீர் விவகாரங்களை கையாள்வதில் இவர் திறமை வாய்ந்தவர் எனக் கூறப்படுகிறது. உளவுத் துறையில் காஷ்மீரின் சிறப்பு இயக்குநராகவும் அவர் பொறுப்பு வகிப்பார்.
- ✓ இவருக்கு முன்பு IB தலைவராக இருந்த இராஜீவ் ஜைன், தனது 2 ½ ஆண்டுகால பதவிக்காலத்தை நிறைவு செய்ததை அடுத்து, குமார் இப்பதவிக்கு வந்துள்ளார். மத்திய உளவுப்பிரிவான IB என்பது உள்நாட்டு புலனாய்வு அமைப்பாகும். இது புது தில்லியை தலைமையிடமாகக் கொண்டுள்ளது.

## 3.விவசாயிகளுக்கு இலவச பயிர்காப்பீட்டு திட்டத்தை அறிமுகம் செய்துள்ள மாநில அரசு எது?

A) ஜார்க்கண்ட்

B) மத்திய பிரதேசம்

C) மேற்கு வங்கம் ☑

D) இராஜஸ்தான்

- 2019 ஆடிப்பட்டம் பருவத்திற்காக, மேற்கு வங்க அரசு, இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனத்துடன் (AIC) இணைந்து இலவச பயிர்காப்பீட்டு திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. “பங்ளா சஷ்யா நிவாஸ்” எனப் பெயரிடப்பட்டுள்ள இத்திட்டமானது டார்ஜிலிங், கலிம்போங், கிழக்கு மற்றும் மேற்கு பர்த்வான், கிழக்கு & மேற்கு மிதினிபூர், மலடா, ஹூக்ளி, நாடியா, முர்சிதாபாத், கூச் பெகார், பிர்பம், புருலியா, தென் தினாஜ்புர் மற்றும் வட & தென் 24 பர்கனாஸ் ஆகிய 15 மாவட்ட விவசாயிகளுக்கு பொருந்தும்.

- இந்தத் திட்டத்திற்கான பிரீமியத்தினை அரசே செலுத்தி விடுவதால் இது முழுக்க இலவசமான ஒரு திட்டமாகும். அத்துடன் இந்தத் திட்டத்தில் அமன் மற்றும் அஸ் வகை நெல் வகைகள், சணல் மற்றும் சோளம் ஆகிய பயிர் வகைகளுக்கு இது பொருந்தும். ஏற்கனவே கடன் பெற்ற (வழங்கப்பட்ட அல்லது விண்ணப்பித்த) மற்றும் கடன் பெறாத என அனைத்து விவசாயிகளும் இக்காப்பீட்டைப் பெறலாம்.

- நடவு செய்யும் போது ஏற்பட்ட இழப்புகளுக்கு, சாகுபடியின் போது, அறுவடைக்குப் பிறகான காலகட்டத்தில் மற்றும் மோசமான வானிலை சூழ்நிலைகள் என நான்கு நிலைகளில் இந்தக் காப்பீடு வழங்கப்படும். இத்தொகை மாநில அரசால் ஒரு ஹெக்டேருக்கு என கணக்கிடப்பட்டு வழங்கப்படும்.

**4.** அண்மையில் காலமான அப்பூரி சாயா தேவி, எந்த மொழிசார்ந்த பிரபல புனைகதை எழுத்தாளராவார்?

A) தெலுங்கு ☑

B) மராத்தி

C) மலையாளம்

D) கன்னடம்



- தெலுங்கு மொழி சார்ந்த பிரபல புனைகதை எழுத்தாளரான அப்பூரி சாயா தேவி (86) ஜூன்.28 அன்று ஹைதராபாத்தில் காலமானார். ‘தானா மார்கம்’ என்ற தனது நூலுக்காக 2005இல் இவர் சாகித்திய அகாதமி விருது பெற்றார். எழுத்தாளரும், விமர்சகரும், அதிகாரப்பூர்வ மொழி ஆணையத்தின் (OFC) முன்னாள் தலைவருமான மறைந்த அப்பூரி வரத ராஜேஸ்வர ராவின் மனைவியாவார் சாயா தேவி.

- அனகா அனகா (சிறார்களுக்கான நாட்டுப்புறக்கதைகள்), அப்பூரி சாயா தேவி கதாலு (சிறுகதைகள்), மிருத்யுஞ்சய (நெடுங்கதை), தானா மார்கம் (குடும்ப உறவுகள் என்ற போர்வையில் பெண்களை தன்னலத்திற்காகப் பயன்படுத்துவது பற்றிய சிறுகதைகள்) உள்ளிட்டவை அவரது படைப்புகளாம்.

**5.** நடப்பாண்டில் வரும் உலக வெண்புள்ளி (Vitiligo) நாளுக்கான கருப்பொருள் என்ன?

A) Children, Research, and Hope for the Future

B) The Quality of Life of a Vitiligo Patient ☑

C) Mental and Medical Journey of Living with Vitiligo

D) How I Feel

- வெண்தோல் நோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.25 அன்று உலக வெண்புள்ளி நாள் அனுசரிக்கப்படுகிறது. நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருள்,

"The Quality of Life of a Vitiligo Patient" என்பதாகும். 'Vitiligo' என்பது ஒரு தன்னுடல் தாக்கக் கோளாறு ஆகும். இதில், உடலின் நோயெதிர்ப்பு அமைப்பானது நலமான செல்களைத் தாக்கி, உடலைப் பாதிக்கத் தொடங்குகிறது. தோலில் உள்ள மெலனோசைட்டுகளின் விளைவாக தோலில் ஏற்படும் வெண்திட்டுகளால் இந்நிலை வகைப்படுத்தப்படுகிறது. மெலனோசைட்டுகள், தோலுக்கு நிறந்தரும் தோல் நிறமியான மெலனினை உருவாக்கும் செல்களாகும். மெலனோசைட்டுகள் இறக்கும் போது வெண்திட்டுகள் தோன்றும். இந்நிலை வெண்தோல் நோய் / வெண்புள்ளி என அழைக்கப்படுகிறது.

## 6. தேசிய வீட்டுவசதி வங்கியின் (National Housing Bank) புதிய மேலாண்மை இயக்குநர் யார்?

A) ஸ்ரீராம் கல்யாணராமன்

B) அஸ்வனி குமார் திரிபாதி

C) R S கார்க்

D) சாரதா குமார் ஹோதா ☑

✓ தேசிய வீட்டு வசதி வங்கியின் (NHB) புதிய நிர்வாக இயக்குநராக சாரதா குமார் ஹோதா மூன்றாண்டு காலத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனத்திற்கு முன்பு, ஹோதா, Can Fin Homesஇன் நிர்வாக இயக்குநராகவும், தலைமை நிர்வாக அதிகாரியாகவும் இருந்தார். 100% அரசுக்குச் சொந்தமான NHB, வீட்டு வசதி நிதியியல் பிரிவின் மேற்பார்வை, மறுநிதியளிப்பு மற்றும் மேம்பாடு ஆகியவற்றுக்கான மைய நிறுவனமாகும்.

## 7. சமீபத்தில் காலமான முகமது பாஜி, எம்மாநிலத்தின் சிறந்த விடுதலைப் போராட்ட வீரராவார்?

A) உத்தரப்பிரதேசம்

B) ஒடிசா ☑

C) சத்தீஸ்கர்

D) பஞ்சாப்

✓ சிறந்த விடுதலைப்போராட்ட வீரரான முகமது பாஜி (103), ஒடிசாவின் நபரங்பூரில் உள்ள சுனாரி சாகியில் காலமானார். மொழியின் அடிப்படையில் ஒடிசா ஒரு தனி மாகாணமாக உருவான 1936இல் அவர் இந்திய தேசிய காங்கிரசில் (INC) சேர்ந்தார். ஆகஸ்ட் 19, 1942இல் நடைபெற்ற 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்திலும் சேர்ந்தார். 1947ஆம் ஆண்டு ஜூன் 25 அன்று விடுதலை செய்யப்படுவதற்கு முன்பு வரை கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகள் அவர் சிறையில் இருந்தார். சுதந்தரப் போராட்டத்திற்குப் பிறகு, பாஜி, சர்வோதயா இயக்கத்தில் தீவிரமாக இயங்கினார். அவர், உத்கல் காந்தி ஸ்மரக் நிதியின் தலைவராகவும், உத்கல் சர்வோதயா மண்டலத்தின் நெருங்கிய பங்காளராகவும் இருந்தார்.

## 8. 13ஆவது தேசிய புள்ளியியல் நாளின் கருப்பொருள் என்ன?




A) Administrative Statistics

B) Quality Assurance in Official Statistics

**C)** Agriculture and Farmers' Welfare

**D)** Sustainable Development Goals (SDGs) ☑

✓ அன்றாட வாழ்வில் புள்ளியியலின் பயன்பாடு குறித்து பிரபலப்படுத்தவும், கொள்கைகளை வகுப்பதில் புள்ளியியல் எவ்வாறு பயன்படுகிறது என்பது குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தவுமாக, ஜூன்.29 அன்று தேசிய அளவில் "நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் – Sustainable Development Goals" என்ற கருப்பொருளுடன் 13ஆவது தேசிய புள்ளியியல் நாள் (National Statistics Day) கொண்டாடப்பட்டது. தரவு இடைவெளிகளை (Data Gaps) நிரப்புவது மற்றும் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளில் காலக்கோடு (Timeline) / தரம் (Quality) ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கிய தீவிரமான விவாதங்களுக்காக நடப்பாண்டு கருப்பொருள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

✓ தேசிய புள்ளியியல் நடைமுறையை உருவாக்கி, இந்தத் துறைக்கு அளப்பரிய பங்களிப்பை வழங்கிய பேராசிரியர் P C மகலநோபிஸைச் சிறப்பிக்கும் விதமாக, அவரது பிறந்தநாளான ஜூன்.29 அன்று இந்த நாள் கொண்டாடப்படுகிறது. புள்ளியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்காக 1931ஆம் ஆண்டில் கொல்கத்தாவில், இந்திய புள்ளியியல் நிறுவனம் ஒன்றை இவர் அமைத்தார்.

## 9. 'Seventh Summit' சவாலை முடித்த முதல் IPS அதிகாரி யார்?

**A)** தீபங்கர் கோஷ்

**B)** அபர்ணா குமார் ☑

**C)** மாளவத் பூர்ணா

**D)** நவங் கோம்பு

✓ 2002ஆம் ஆண்டு உ.பி பிரிவைச்சேர்ந்த IPS அதிகாரியான அபர்ணா குமார், 'Seventh Summit' என்னும் வியக்கத்தக்க சவாலை செய்து முடித்த முதல் குடிமைப்பணியாளர் / IPS அதிகாரி என்ற வரலாற்றுச் சாதனையைப் புரிந்துள்ளார். வடக்கு அமெரிக்காவின் மிகவுயர்ந்த சிகரமான அலாஸ்காவில் உள்ள தெனாலி மலைச்சிகரத்தில் (20,310 அடி) இந்தியாவின் மூவர்ணக் கொடியை அவர் ஏற்றினார். தென் துருவ பயணத்தை வெற்றிகரமாக முடித்த முதல் பெண் IPS DIG மற்றும் இந்தோ – திபெத்திய எல்லை காவல்துறை (ITBP) அதிகாரியுமாக இவர் உள்ளார்.

✓ 'Seventh Summit' என்பது ஒரு மலையேற்றச் சவாலாகும். இதில், 7 கண்டங்களில் உள்ள மிகவுயர்ந்த மலைகளின் சிகரங்களின் உச்சியை அடைய வேண்டும். இதில் நேபாளத்தின் எவரெஸ்ட் சிகரம், அர்ஜென்டினாவின் அகோன்காகுவா (Aconcagua), அமெரிக்காவின் தெனாலி, தான்சானியாவின் கிளிமஞ்சாரோ, இரஷ்யாவின் எல்ப்ரஸ் (Elbrus), அண்டார்டிகாவின் வின்சன் (Vinson) மற்றும் ஆஸ்திரேலியாவின் புன்காக் ஜெயா (Puncak Jaya) மற்றும் கொஸ்கியுஸ்கோ (Kosciuszko) ஆகியவை அடங்கும். கனடிய மலையேற்ற வீரரான பேட்ரிக் மோரோ, 1986ஆம் ஆண்டில் 'Seventh Summit' சவாலை முடித்த முதல் மனிதராவார். இந்திய இராணுவ அதிகாரியான Col. இரன்வீர் சிங் ஜம்வால், 7 கண்டங்களில் பரவியிருக்கும் 7 மிகவுயர்ந்த சிகரங்களின் உச்சியை அடைந்த முதல் இந்தியராவார்.

**10.** 'The New Delhi Conspiracy' என்ற நூலை எழுதிய இந்திய அரசியல்வாதி யார்?

A) சசி தரூர்

B) அபிஷேக் மனு சிங்வி

C) சஞ்சய் நிருபம்

D) மீனாட்சி லேகி ☑

✓ 'The New Delhi Conspiracy' என்ற நூலை தில்லியைச் சேர்ந்த மக்களவை நாடாளுமன்ற உறுப்பினரும், உச்சநீதிமன்ற வழக்குரைஞருமான மீனாட்சி லேகி எழுதியுள்ளார். கிருஷ்ண குமாருடன் இணைந்து எழுதப்பட்ட இந்தப் புத்தகம், ஜூலை.8 அன்று வெளியிடப்படவுள்ளது. இந்நூல், தில்லியின் அரசியல் அடித்தளங்களைப்பற்றி பேசுகிறது. மேலும், நாட்டின் அரசியல் பாதையின் போக்கை பாதிக்கும் விஷயங்களைத் தெளிவுபடுத்த முயற்சிக்கிறது.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ சென்னை வண்ணாரப்பேட்டையில் 5 ஏக்கர் நிலத்தில் ரூ.70 லட்சம் செலவில் விரைவில் பாரம்பரிய தோட்டம் அமைக்கப்படவுள்ளது. இந்தத் தோட்டத்தில், சங்க இலக்கியத்தில் குறிப்பிட்டுள்ள மரங்கள் மற்றும் செடிகள் இடம்பெறவுள்ளன. இம்மாத இறுதிக்குள் இந்தத் தோட்டத்தை அமைக்க தமிழ்நாடு தோட்டக்கலை மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இந்தத் தோட்டத்தில், 100 வகையான மரங்கள், செடிகள், சிறு தோட்டம், உள் நீர்ப்பாசனம் ஆகியவை இடம்பெறும்.

✓ தமிழ்நாட்டிலேயே முதல்முறையாக சென்னை எம்.ஜி.ஆர் மத்திய இரயில் நிலையத்தில், பழைய குற்றவாளிகளை கண்காணிப்பு கேமரா மூலம் அடையாளங்காணும் அதிநவீன 'எட்ஜ் பாஸ்ட்' தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

✓ கடவுச்சீட்டு அலுவலகங்களில் சிறந்த சேவைக்கான நடுவணரசின் விருதை கோயம்புத்தூர் மண்டல கடவுச்சீட்டு (Passport) அலுவலகம் பெற்றுள்ளது.

✓ சிற்பி பாலசுப்பிரமணியம் தலைமையிலான சிற்பி அறக்கட்டளை, கவிஞர் தேவதச்சனுக்கு 24ஆம் ஆண்டுக்கான 'சிற்பி இலக்கிய' விருதை அறிவித்துள்ளது. 'விரல்களில் வழியும் குரலற்றவனின் செங்குருதி' நூலுக்காகக் கவிஞர் சோலை மாரியப்பனுக்கு 'சிற்பி இலக்கிய'ப் பரிசையும் 'Target 0' என்னும் சுற்றுச்சூழல் வனப்பாதுகாப்பு அமைப்புக்கு பொ.மா.சுப்பிரமணியம் விருதையும் சிற்பி அறக்கட்டளை அறிவித்துள்ளது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.** AES & JE நோய்களுக்கு எதிராக தஸ்தக் பரப்புரையை முன்னெடுத்துள்ள மாநில அரசு எது?




A) இராஜஸ்தான்

B) மத்தியபிரதேசம்

C) உத்தரபிரதேசம் ☑

D) பீகார்

✓ கடிய மூளையழற்சி நோய் (Acute Encephellitis Syndrome – AES) மற்றும் ஜப்பானிய மூளையழற்சி (Japanese Encephallitis – JE) நோய்களுக்கு எதிராக உத்தரபிரதேச அரசு "DASTAK" என்ற வீடு வீடாக சென்று மேற்கொள்ளும் பரப்புரையைத் தொடங்கியுள்ளது. UNICEF உடன் சேர்ந்து தொடங்கப்பட்ட இந்தப் பரப்புரை ஜூலை 1 – 31 வரை நடைபெறும். இந்த மாநில அளவிலான பரப்புரைக் குழுக்கள், மாநிலத்தின் 75 மாவட்டங்களிலும் உள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று வீடு வீடாக இந்த AES & JE நோய் குறித்தும் அதேவேளை தொற்றுநோய்கள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும்.

**2.** ISAவின் முதலாவது கூட்டு பாதுகாப்புப் பயிற்சியான "ISALEX19"ஐ நடத்தும் நகரம் எது?

A) புனே

B) பாரீஸ்

C) நியூயார்க்

D) அபுதாபி ☑

✓ ஐக்கிய அரபு அமீரகத்தின் (UAE) தலைநகரமான அபுதாபியில், சர்வதேச பாதுகாப்புக் கூட்டணியின் (ISA) முதலாவது கூட்டு பாதுகாப்புப் பயிற்சியான "ISALEX19" தொடங்கப்பட்டது. ISAவின் ஐம்பது சட்ட அமலாக்க முகமைகளின் பிரதிநிதிகள் இந்தப் பயிற்சியில் பங்கேற்கின்றனர்.

✓ பங்கேற்பாளர்களுள் உத்திசார் அணிகள், தகவல் தொடர்புகள் மற்றும் சிவில் பாதுகாப்பு உள்ளிட்ட அணிகளின் பிரதிநிதிகள் அடங்குவர். ISA என்பது ஒழுங்கமைக்கப்பட்ட, நாடுகடந்த & தீவிரவாத குற்றங்களை எதிர்கொள்ளும் ஒரு சர்வதேச செயற்குழுவாகும். ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன், மொராக்கோ, பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின், செனகல், சிங்கப்பூர் மற்றும் ஸ்லோவாக் குடியரசு முதலிய ஒன்பது நாடுகள் தற்போது இந்தக் கூட்டணியில் உள்ளன.

**3.** STRIDE என்பது பின்வரும் எவற்றுடன் தொடர்புடையது?

A) ஆராய்ச்சிக் கலாசாரத்தை அதிகரிக்க ☑

B) பெண்கள் அதிகாரமளித்தலை அதிகரிக்க

C) பழங்குடி கைவினைப்பொருட்களை பிரபலப்படுத்த

D) குழந்தைக் கல்வியை மேம்படுத்துவதற்காக

- ✓ நாட்டில் ஆராய்ச்சிக் கலாச்சாரத்தை உயர்த்துவதற்காக பல்கலைக்கழக மானியக் குழுமம் (UGC), Scheme for Trans-disciplinary Research for India's Developing Economy – STRIDE (இந்தியாவின் வளர்ந்துவரும் பொருளாதாரத்திற்கான பல்-ஒழுங்கு ஆராய்ச்சித் திட்டம்) என்ற ஒரு புதிய முயற்சிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இளம் திறமையாளர்களை அடையாளங்காண்பது, ஆராய்ச்சிக்கலாசாரத்தை வலுப்படுத்துவது, திறனை வளர்ப்பது, புத்தாக்கங்களை ஊக்கப்படுத்துவது மற்றும் இந்தியாவின் வளர்ந்துவரும் பொருளாதாரம் மற்றும் தேசிய மேம்பாட்டுக்கான பல் – ஒழுங்கு ஆராய்ச்சியை ஆதரிப்பது ஆகியன இந்த STRIDEஇன் நோக்கங்களாகும்.

- ✓ பொதுவாக, சமுக ரீதியாக பொருத்தமான, உள்நாட்டுத் தேவை அடிப்படையிலான, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் பன்னாட்டளவில் முக்கியத்துவம் வாய்ந்த ஆராய்ச்சித்திட்டங்களுக்கு STRIDE தனது ஆதரவை வழங்கும். பொதுநலனுக்கான புதிய யோசனைகள், கருத்துகள் மற்றும் வழக்கங்களை உருவாக்குதல், மேம்பாடு செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் மற்றும் சிவில் சமூகத்தை வலுப்படுத்துதல் ஆகியவற்றை STRIDE ஆதரிக்கும்.

**4.** எந்தத் தேதியில், சர்வதேச ஒலிம்பிக் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது?

A) ஜூன் 23 ☑

B) ஜூன் 29

C) ஜூன் 25

D) ஜூன் 27

- ✓ உலகெங்கும் உள்ளோர் பாலினம், வயது மற்றும் தடகள திறன் போன்ற எவ்வித பாகுபாடுமில்லாமல், அனைத்து விளையாட்டுக்களிலும் பங்கேற்பதை ஊக்குவிப்பதற்காக சர்வதேச ஒலிம்பிக் நாள், ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.23 அன்று கொண்டாடப்படுகிறது.

**5.** முதலாவது இந்திய பன்னாட்டுக் கூட்டுறவு வர்த்தக கண்காட்சியானது (IICTF) பின்வரும் எந்த நகரத்தில் நடைபெறவுள்ளது?

A) புனே

B) புது தில்லி ☑

C) டேராடூன்

D) போபால்

- ✓ முதலாவது இந்திய பன்னாட்டுக் கூட்டுறவு வர்த்தக கண்காட்சியானது புது தில்லியில், அக்.11-13 வரை நடைபெறும். வேளாண் ஏற்றுமதிக் கொள்கை – 2018இன் ஒருபகுதியான இந்த முயற்சி, வேளாண் ஏற்றுமதியை இரட்டிப்பாக்குவதையும், இந்திய விவசாயிகளையும் விவசாய பொருட்களையும் பன்னாட்டு மதிப்புச்சங்கிலிகளுடன் (Value Chain) ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நாட்டுக்குள்ளும் வெளிநாட்டிலும் கூட்டுறவு மூலமாக வர்த்தகத்தை ஊக்குவிப்பதை இந்தக் கண்காட்சி நோக்கமாகக் கொண்டுள்ளது. இது மேம்படுத்தப்பட்ட கிராமப்புற மற்றும் பண்ணைச் செழிப்பை நோக்கி செயல்படுகிறது.

✓ இக்கண்காட்சி, இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த தொழில் & வணிக நிறுவனங்களுடனான கூட்டணிகளை உருவாக்குவதற்கும், தயாரிப்பு ஆதாரங்களை (Product Sourcing) உருவாக்குவதற்கும் மற்றும் பல்வேறு தயாரிப்புகள் மற்றும் சேவை வழங்குநர்களின் முதன்மைத் தயாரிப்பாளர்களுடன் தொடர்புகொள்வதற்கும் ஒரு மிகப்பெரிய வாய்ப்பை வழங்கும்.

**6.** 312 பஞ்சாயத்துகளை புகையிலை அற்ற பஞ்சாயத்துகளாக மாற்றுவதற்காக ஜம்மு மற்றும் காஷ்மீரின் எம்மாவட்ட நிர்வாகம், 'நடவடிக்கை குமார் – Operation Khumaar'ஐ தொடங்கியுள்ளது?

A) ராஜோரி (Rajouri) ☑

B) உதம்பூர்

C) கத்துவா

D) பூஞ்ச்

✓ ஜம்மு மற்றும் காஷ்மீரில், 312 பஞ்சாயத்துகளை புகையிலை அற்ற பஞ்சாயத்துகளாக மாற்றுவதற்காக ராஜோரி மாவட்ட நிர்வாகம் "நடவடிக்கை குமார்" என்ற திட்டத்தை தொடங்கியுள்ளது. புகையிலை மற்றும் புகையிலை சார்ந்த பொருட்களிலிருந்து அந்தப் பஞ்சாயத்துகளை விடுவிக்கும் வகையில், மாவட்ட நிர்வாகத்தால் இத்திட்டம் நடத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், பள்ளி எல்லையிலிருந்து நூறு கெஜம் (yard) தொலைவுக்குள் புகையிலை விற்பனை செய்தால், அதற்கு அபராதம் விதிக்க பள்ளிகளின் தலைமை ஆசிரியருக்கும் கூட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

✓ புகையிலை நுகர்வோர் இந்தப் பழக்கத்தைவிட்டு வெளியேற உதவும் வகையில், அனைத்து சமூக சுகாதார மையங்களிலும் ஆலோசனை மையங்களை அமைக்க வட்டார மருத்துவ அலுவலர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். தீங்கு விளைவிக்கும் புகையிலை மற்றும் அதுசார்ந்த பொருட்களிலிருந்து சமூகத்தை விடுவிப்பதற்காக ஒரு போர்க்கால அடிப்படையில் பணியாற்றுமாறு மாவட்ட அதிகாரிகள் வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

**7.** சமீபத்தில் காலமான சந்தோஷ் ராணா, எந்த அரசியல் கட்சியின் மூத்த தலைவராக இருந்தார்?

A) இந்திய பொதுவுடமைக் கட்சி (மார்க்சியம் – லெனினியம்) ☑

B) பாரதீய ஜனதா கட்சி

C) இந்திய தேசிய காங்கிரஸ்

D) சமாஜ்வாதி கட்சி

✓ மூத்த நக்சலைட் தலைவரான சந்தோஷ் ராணா (76), கொல்கத்தாவில் ஜூன்.29 அன்று காலமானார். அவர் இந்திய பொதுவுடைமைக் கட்சியின் (மார்க்சியம் – லெனினியம்) முன்னாள் தலைவர்களுள் ஒருவராகவும், மேற்கு வங்கத்தில் சாதி, வர்க்கம் & பழங்குடி அரசியல் குறித்த சிந்தனையாளராகவும் இருந்தார். மாநிலத்தின் சிறந்த இலக்கிய விருதையும் அவர் வென்றுள்ளார். 'Rajnitir Ek Jibon (A Life in Politics)' என்பது அவரது சுயசரிதையாகும்.

**8.** ‘A Prime Minister to Remember- Memories of a Military Chief’ என்ற நூலின் ஆசிரியர் யார்?




A) விஷ்ணு பகவத்

B) சுரேஷ் மேத்தா

C) சுஷில் குமார் ☑

D) விஜய் சிங் செகாவத்

✓ ‘A Prime Minister to Remember – Memories of a Military Chief’ என்ற நூலை கடற்படை முன்னாள் தலைமைத் தளபதி சுஷில் குமார் எழுதியுள்ளார். இந்நூல், மறைந்த பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய், இந்தியாவின் ஆயுதப்படைகளில் ஏற்படுத்திய பெரும் தாக்கத்தைப்பற்றி கூறுகிறது. 1998 – 2001ஆம் ஆண்டுக்கு இடையில் கடற்படைத்தலைவராக இருந்த கடற்படைத்தளபதி குமார், 1999இல் கார்கில் போரை மேற்பார்வை செய்தார்.

**9.** 21ஆவது காமன்வெல்த் டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்பை நடத்தும் மாநிலம் எது?

A) ஒடிசா ☑

B) ஜார்க்கண்ட்

C) பஞ்சாப்

D) மேற்கு வங்கம்

✓ 21ஆவது காமன்வெல்த் டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்பை நடத்துவதற்காக ஒடிசா அரசு சமீபத்தில், மாநில டேபிள் டென்னிஸ் அமைப்பு மற்றும் இந்திய டேபிள் டென்னிஸ் கூட்டமைப்புடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. ஜூலை 17 முதல் 22 வரை கட்டாக்கில் உள்ள ஜவகர்லால் உள்ளரங்க மைதானத்தில், இந்தப் போட்டி நடைபெறவுள்ளது. இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, வங்கதேசம், இலங்கை, இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ், ஜெர்சி, ஆஸ்திரேலியா, சைப்ரஸ், தென்னாப்பிரிக்கா, நைஜீரியா, பாகிஸ்தான் முதலிய 14 நாடுகள் இதில் பங்கேற்கவுள்ளன.

**10.** ‘Strum Ataka’ என்ற பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைக்காக, இந்தியா, எந்த நாட்டுடன் ரூ.200 கோடி மதிப்பிலான பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்துள்ளது?

A) ஐக்கிய அமெரிக்கா

B) இஸ்ரேல்

C) இரஷ்யா ☑

D) பிரான்ஸ்

✓ அவசரகால ஏற்பாடுகளின்கீழ், ‘Strum Ataka’ என்ற பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகளை (Anti-tank Missile) கொள்முதல் செய்வதற்காக இந்திய விமானப்படையானது இரஷ்யாவுடன் ரூ.200 கோடி மதிப்பிலான பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்தியாவின் Mi-35 போர் உலங்கூர்திகளில் (Helicopters) பொருத்தி ஏவுவதற்கு ஏற்றாற் போன்றவை இந்த ஏவுகணைகள்.

- இந்திய வான்படையின் பழமையான அமெரிக்க வகை 'Apache Gunships'ஐ மாற்றிவிட்டு, இந்த வகை ஏவுகணைகள் பொருத்தப்படவுள்ளது. நாட்டின் முப்படைகளுக்கும் 3 மாதகால இடைவெளியில் 300 கோடி ரூபாய் வரையிலான போர்க் கருவிகளை வாங்கிக்கொள்ளும் அனுமதி எப்போதும் உண்டு. இச்சிறப்பு அதிகாரம், கடந்த பிப்ரவரி மாதத்தில் புல்வாமாவில் பயங்கரவாதிகள் CRPF மீது நடத்திய வெடிகுண்டு தாக்குதலுக்குப் பின்னர் வழங்கப்பட்டுள்ளது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் புலிகள் காப்பகம், பவானிசாகர் காராட்சிக்கொரை வன கால் நடை மருத்துவமனையில் மலைப்பாம்புகளுக்கு அறுவைசிகிச்சை மூலம் 'ரேடியோ அலையனுப்பி – Radio Transmitter' பொருத்தி அதன் இயல்புகளைக் கண்டறிய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.** மத்திய அரசால் தொடங்கப்பட்டுள்ள நீர்ப்பாதுகாப்புப் பரப்புரை எது?

A) ஜல் பச்சவ் அபியான்

B) ஜல் தரங் அபியான்

C) ஜல் சுரக்ஷா அபியான்

D) ஜல் சக்தி அபியான் ☑

✓ மத்திய ஜல் சக்தி அமைச்சர் ஸ்ரீகஜேந்திர சிங் ஷெகாவத் அண்மையில், ஜல் சக்தி அபியான் – நீர்ப் பாதுகாப்புப் பரப்புரையைத் தொடங்கிவைத்தார். இதன்மூலம், இந்தியாவின் 256 மாவட்டங்களில் உள்ள 1,592 வட்டாரங்கள் வாரியாக நீர்நிலைகள் கண்காணிக்கப்படும். இப்பரப்புரை, பருவமழைப் பொழியும் காலமான வரும் ஜூலை 1 – செப்.15 வரை பொதுமக்களின் பங்கேற்புடன் நடத்தப்படும்.

✓ இந்தப் பரப்புரையானது நீர்ப்பற்றாக்குறை மிகுந்த மாவட்டங்கள் மற்றும் தொகுதிகளின் மீது தனது கவனத்தைச் செலுத்தும். நீர்ப்பாதுகாப்பு மற்றும் மழைநீர் சேகரிப்பு, பாரம்பரிய மற்றும் பிற நீர் நிலைகளை புதுப்பித்தல், நீரை மறுபயன்பாடு செய்தல் மற்றும் நீர்நிலைகளை நிறைத்தல், நீர்ப்படுகை மேம்பாடு மற்றும் தீவிர காடுவளர்ப்பு முதலிய ஐந்து அம்சங்களில் இது கவனம் செலுத்தும்.

✓ நீர்ப்பாசனம் மற்றும் சிறந்த பயிர் தேர்வுகளுக்கு திறமையான நீர்ப்பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக தொகுதி மற்றும் மாவட்ட நீர்ப்பாதுகாப்புத் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் 'வேளாண் அறிவியல் மைய கண்காட்சிகள்' போன்ற முயற்சிகள், இந்தப் பாதுகாப்புப் பரப்புரையோடு செயல்படுத்தப்படும். நகர்ப்புறங்களில், தொழில்துறை / விவசாய தேவைகளுக்காக காலவரையறை இலக்குகளுடன் கூடிய கழிவுநீர் மறுபயன்பாட்டுத் திட்டங்கள் உருவாக்கப்படும்.

**2.** எந்தத் தேதியில், உலக வெப்பமண்டல நாள் அனுசரிக்கப்படுகிறது?

A) ஜூன் 27

B) ஜூன் 28

C) ஜூன் 29 ☑

D) ஜூன் 30

✓ வெப்பமண்டல பகுதிகள் எதிர்கொள்ளும் குறிப்பிடத்தக்க சவால்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.29 அன்று உலக வெப்பமண்டல தினம் (International Day of the Tropics) கடைப்பிடிக்கப்படுகிறது. வெப்பமண்டல பகுதிகளின் அசாதாரண பல்வகைத் தன்மையை இந்த நாள் கொண்டாடுகிறது. அதேநேரத்தில், தனித்துவமிக்க சவால்களையும், அதை வெப்பமண்டல நாடுகள் கையாள எடுக்கும் முயற்சிகளையும் இந்நாள் வெளிப்படுத்துகிறது.

✓ வெப்பமண்டலம் என்பது புவியின் ஒருபகுதியாகும்; இது கடக ரேகை & மகர ரேகைக்கு இடையிலான பகுதி என்று வரையறுக்கப்படுகிறது. உலகின் மொத்த பரப்பளவில் வெப்பமண்டலங்கள் நாற்பது % ஆகும். மேலும், அவை புவியின் பல்லுயிர் பெருக்கத்தில் சுமார் 80 சதவீதத்தைக் கொண்டுள்ளன.

வெப்பமண்டலபகுதி காலநிலை மாற்றம், காடழிப்பு, நகரமயமாக்கல் மற்றும் மக்கள்தொகை மாற்றங்கள் போன்ற பல சவால்களை எதிர்கொள்கிறது.

**3.** வணிக நோக்கிலான திமிங்கல வேட்டையை அதிகாரப்பூர்வமாக மீண்டும் தொடங்கியுள்ள நாடு எது?

A) ஜப்பான் ☑

B) தென் கொரியா

C) நியூசிலாந்து

D) ஐக்கிய இராஜ்ஜியம்

- ✓ ஆராய்ச்சி நோக்கங்களுக்காக திமிங்கலங்களை வேட்டையாடுவது தடைசெய்யப்பட்ட சுமார் 30 ஆண்டுகளுக்குப் பிறகு, ஜூலை.1 அன்று வணிக நோக்கிலான திமிங்கல வேட்டையை ஜப்பான் அதிகாரப்பூர்வமாக மீண்டும் தொடங்கியது. சர்வதேச திமிங்கல ஆணையத்திலிருந்து (International Whaling Commission) ஜப்பான் விலகியபின் இந்த வேட்டைகள் நடத்தப்படுகின்றன. இது, திமிங்கல வேட்டை – எதிர்ப்பு ஆர்வலர்களால் கடும் கண்டனத்திற்குள்ளானது மற்றும் ஜப்பானிய திமிங்கல வேட்டைச் சமூகங்களால் பெரிதும் வரவேற்கப்பட்டது.

- ✓ சர்வதேச திமிங்கல ஆணையின் தடையிருந்தபோதும், வணிக நோக்கிலான திமிங்கல வேட்டையை நடத்தும் ஐஸ்லாந்து மற்றும் நார்வே ஆகிய நாடுகளுடன் தற்போது ஜப்பானும் இணைந்துள்ளது. ஜப்பானிய கடற்கரையிலிருந்து சுமார் 200 கடல் மைல் (370 கி.மீ) வரை நீண்டுள்ள ஜப்பானின் பிராந்திய கடல் மற்றும் பிரத்தியேக பொருளாதார மண்டலத்திற்குள் இவ்வேட்டைகள் நடத்தப்படும். உலகின் திமிங்கல எண்ணிக்கையை பாதுகாப்பதற்கும் நிர்வகிப்பதற்கும் 1946இல் நிறுவப்பட்ட IWC, 1986ஆம் ஆண்டில் வணிக நோக்கிலான திமிங்கல வேட்டைக்குத் தடைவிதித்தது.

**4.** தமிழ்நாட்டின் மாநில வண்ணத்துப்பூச்சியாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள வண்ணத்துப்பூச்சி இனம் எது?

A) Cirrochroa thais ☑

B) Papilio bianor

C) Papilio buddha

D) Troides Minos

- ✓ தமிழ்நாட்டின் மாநில வண்ணத்துப்பூச்சியாக 'தமிழ் யாமோன்' (*Cirrochroa thais*) அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்குத்தொடர்ச்சி மலைகளை வாழிடமாகக் கொண்டுள்ள இந்த வகை வண்ணத்துப்பூச்சிகள் 'தமிழ் மறவன்' அதாவது 'போர் வீரன்' என அழைக்கப்படுகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலைகளில் காணப்படும் 32 வகை வண்ணத்துப்பூச்சி இனங்களுள், அடர் – பழுப்பு நிறத்திலான வெளிப்புறம் வளையத்துடன் கூடிய மஞ்சள் கலந்த பழுப்பு நிறத்தில் இருக்கும் இந்த வகை வண்ணத்துப்பூச்சிகளும் ஒன்றாகும்.

✓ இதன்மூலம், மாநிலத்திற்கென வண்ணத்துப்பூச்சியை அறிவிக்கும் நாட்டின் ஐந்தாவது மாநிலமாக தமிழ்நாடு மாறியுள்ளது. மாநிலத்துக்கென வண்ணத்துப்பூச்சியை (Blue Mormon) அறிவித்த முதல் மாநிலமாக மகாராஷ்டிர மாநிலம் உள்ளது. அதைத்தொடர்ந்து உத்தரகாண்ட் (Common peacock), கர்நாடகா (Southern Bird Wing) மற்றும் கேரளா (Malabar banded peacock) ஆகிய மாநிலங்கள் உள்ளன.

✓ இத்தகைய அறிவிப்புக்குப் பிறகு, இந்த வண்ணத்துப்பூச்சியானது மாநில அரசின் பெருமையாக மாறும் அதேவேளையில், இம்முடிவு அதன் சுற்றுச்சூழல் அமைப்பைப் பாதுகாக்க உதவுகிறது மற்றும் சூழல் சுற்றுலாவுக்கும் வழிவகுக்கிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 32 வண்ணத்துப்பூச்சி உயிரின வளமிகு இடங்கள் (hotspots) உள்ளன. மாநில விலங்கு (நீலகிரி வரையாடு), மாநிலப்பறவை (மரகதப் புறா), மாநில மரம் (பனை), மாநில மலர் (செங்காந்தள்), மாநிலப்பழம் (பலா), மாநில முத்திரை (திரு வில்லிப்புத்தூர் ஆண்டாள் கோபுரம்), மாநில விளையாட்டு (கபடி) மற்றும் மாநில நடனம் (பரத நாட்டியம்) முதலிய சின்னங்களை தமிழ்நாடு மாநில அரசு முன்பே அறிவித்துள்ளது.

**5.** எந்தத்தளத்தில், இந்திய – பிரெஞ்சு கூட்டு வான்பயிற்சியான "கருடா – VI" தொடங்கியுள்ளது?

A) மாந்த்பேலியே

B) புனே

C) ஜோத்பூர்

D) மாண்ட்–டி–மார்சன் (Mont-de-Marsan) ☑

✓ இந்தோ – பிரெஞ்சு விமானப்படைகளுக்கு இடையேயான 'கருடா-VI' பயிற்சியானது ஜூலை.1 முதல் பிரெஞ்சு விமானப்படைத்தளமான மாண்ட்–டி–மார்சனில் தொடங்கியது. இருநாடுகளின் மிகவும் சக்திவாய்ந்த போர் விமானங்களின் பாதுகாப்பு உத்திகளை சரிபார்க்கவும், அவற்றின் திறன்களை மேம்படுத்தவும் இந்தப் பயிற்சி உதவும். இரபேல், மிரேஜ் 2000, சுகோய் 30 இரக போர் விமானங்கள் இந்தப் பயிற்சியில் பங்குகொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

✓ இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதோடு, தொழில்முறை தொடர்பு, அனுபவ பரிமாற்றம் மற்றும் செயல்பாட்டு அறிவையும் இது ஊக்குவிக்கும். வான் படை வீரர்களை ஒரு பன்னாட்டுச் சூழலில் செயல்படுவதற்கான ஒரு நல்வாய்ப்பினை இது நல்கும்.

**6.** NASAவின் PUNCH திட்டப்பணிக்கான இணை ஆய்வாளராக தேர்வு செய்யப்பட்டுள்ள இந்திய அறிவியலாளர் யார்?



A) தீபங்கர் பானர்ஜி ☑

B) ரகுநாத் ஆனந்த் மஷேல்கர்

C) அசோக் சென்

D) நரேந்திர கர்மாகர்

✓ சூரியனை படம் பிடிக்கும் PUNCH திட்டத்தை தலைமையேற்று வழிநடத்துவதற்காக டெக்சாஸைச் சேர்ந்த தென்மேற்கு ஆராய்ச்சி நிறுவனத்தை NASA தேர்வுசெய்துள்ளது. இது சூரியனின் வெளிப்புற ஒளிவட்டத்தை படம் பிடிக்கும் ஒரு முக்கியப்பணியாகும். இந்திய வானியற்பியல் நிறுவனத்தின் சூரிய

இயற்பியலாளரான பேராசிரியர் தீபங்கர் பானர்ஜியும் PUNCH திட்டத்தின் இணை ஆய்வாளராக (Co – Investigator) உள்ளார். "Polarimeter to Unify the Corona and Heliosphere" என்பதன் சுருக்கமே PUNCH ஆகும். சூரியனின் வெளிப்புற ஒளிவட்டத்திலிருந்து (Corona) சூரியக்காற்றுக்கு துகள்கள் மாறுவதை புரிந்துகொள்வதில் இந்த PUNCH திட்டம் கவனம் செலுத்துகிறது. சூரியனின் ஒளிவட்டத்தை ஆய்வு செய்வதற்கு, இந்தியா தனது சொந்த செயற்கைக்கோளான ஆதித்யா–L1ஐ அனுப்ப திட்டமிட்டுள்ளது. மேலும், அதற்கான அறிவியல் பணிக்குழுவின் இணைத் தலைவராகவும் Prof.பானர்ஜி உள்ளார்

**7.** அண்மையில் காலமான மூத்த சமூக சேவகி Dr. ஜெயா அருணாசலம், எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராவார்?

A) தமிழ்நாடு ☑

B) கேரளா

C) கர்நாடகா

D) ஆந்திரப்பிரதேசம்

✓ உழைக்கும் மகளிர் சங்கத்தின் (Working Women's Forum – WWF) நிறுவனரான டாக்டர். ஜெயா அருணாச்சலம் (87), ஜூன்.29 அன்று சென்னையில் காலமானார். 1978இல் அவர் தொடங்கிய WWF மூலம் அவராற்றிய சமூக சேவை பங்களிப்புகளுக்காக அவர் மிகவும் பிரபலமாக அறியப்பட்டார். WWF மூலம் இலட்சக்கணக்கான ஏழைப்பெண்களை அவர்களின் வறுமைப் பின்னணியிலிருந்து மீட்டு, நிதிரீதியாக அவர்களை சுயாதீனமாக செயல்படக்கூடியவர்களாக மாற்றிக்கொள்ள அவர் உதவியுள்ளார். Dr. ஜெயா, 1987இல் இந்திய அரசால் 'பத்மஸ்ரீ' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

✓ பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலனுக்காக அவராற்றிய பணிக்காக 2009இல் 'ஜம்னாலால் பஜாஜ்' விருதைப்பெற்றார். பொருளாதாரம் மற்றும் புவியியலில் பட்டம் பெற்றுள்ள அவருக்கு, 1999இல் ஜெர்மனியின் லூயன்பெர்க் பல்கலை கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியது. 2003இல் கிளீட்ஸ்மேன் அறக்கட்டளையின் சர்வதேச ஆர்வலர் விருதையும், 2010இல் காட்பிரே பிலிப்ஸ் தேசிய துணிச்சலான சமூக சேவகர் வாழ்நாள் சாதனையாளர் விருதையும் அவர் பெற்றார். அவர், தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் துணைத்தலைவராகவும், அகில இந்திய காங்கிரஸ் குழுவின் உறுப்பினராகவும் இருந்தார்.

**8.** உட்கட்டமைப்பு திட்டங்களுக்கான மூலதன கிடைப்பை அதிகரிக்க, பின்வரும் பொதுத்துறை வங்கிகளில் எது NIIF உடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?

A) பாரத ஸ்டேட் வங்கி ☑

B) பஞ்சாப் தேசிய வங்கி

C) பரோடா வங்கி

D) பேங்க் ஆப் இந்தியா

✓ உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு மூலதனம் கிடைப்பதை அதிகரிப்பதற்காக பாரத ஸ்டேட் வங்கியும் (SBI), தேசிய முதலீட்டு மற்றும் உட்கட்டமைப்பு நிதியமும் (NIIF) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

- ✓ பங்கு முதலீடுகள், திட்ட நிதி, பத்திர நிதி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதரவு மற்றும் இயக்கச் சொத்துக்களுக்கான நிதியெடுப்பு ஆகியவை இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கங்களுள் அடங்கும். உட்கட்டமைப்பிற்கான பங்குகள் மற்றும் கடன்நிதி கிடைத்தல் போன்றவை மந்தமாக இருக்கும் வேளையில், அந்த இடைவெளியை நிரப்ப உதவுவதே இதன் முதன்மை நோக்கமாகும். பெரிய அளவிலான திட்டங்களுக்கு பங்கு மற்றும் நீண்டகால கடன் நிதி விருப்பங்கள் கிடைப்பது தொடர்பான சிக்கல்களை இது தீர்க்கும், அதன் மூலம் உட்கட்டமைப்பு வளர்ச்சியை அது தூண்டும்.

**9.** பன்னாட்டு ஒலிம்பிக் சங்கத்தின் (IOC) உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்தியர் யார்?

A) பர்கத் சிங்

B) நரிந்தர் பத்ரா ☑

C) ராமன்தீப் சிங்

D) திலீப் திர்கி



- ✓ சுவிச்சர்லாந்தின் லாசோன் நகரத்தில் நடந்த IOC அமர்வின் போது இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் Dr. நரிந்தர் பத்ரா, பன்னாட்டு ஒலிம்பிக் சங்கத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தேசிய ஒலிம்பிக் சங்கம் மற்றும் சர்வதேச சம்மேளனத்தின் தலைவராகவும், சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தின் உறுப்பினராகவும் ஒருசேர பதவிவகிக்கும் முதல் இந்தியர் என்ற பெருமையை நரிந்தர் பத்ரா பெற்றுள்ளார். ஓர் ஒலிம்பிக் விளையாட்டின் சர்வதேச கூட்டமைப்பிற்கு (சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பு – FIH)க்கு தலைமைதாங்கிய முதல் இந்தியராகவும் இவர் உள்ளார்.

- ✓ பத்ரா தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, ICOஇல் உறுப்பினர்களாக உள்ள இந்தியர்களின் எண்ணிக்கை இரண்டாக உயரும். ரிலையன்ஸ் அறக்கட்டளைத் தலைவர் நீடா அம்பானி, 2016ஆம் ஆண்டில் IOCஇன் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். IOCஇன் உறுப்பினரான முதல் இந்திய பெண்ணாவார் இவர்.

**10.** ஈர்க்கப்பட்ட ஆமையானது (Impressed Tortoise) எந்த மாநிலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது?

A) ஆந்திரப்பிரதேசம்

B) அருணாச்சல பிரதேசம் ☑

C) நாகாலாந்து

D) ஒடிசா

- ✓ அருணாச்சல பிரதேசத்தின் கீழ் சுபன்ஸ்ரீ மாவட்டத்தின் யசாலி பகுதியில் உள்ள வனத்துறையைச் சேர்ந்த ஊரிடவாழ்வி ஆராய்ச்சிளர்களும் (Herpetologists), Help Earth & Turtle Survival Alliance ஆகிய இரண்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் இணைந்து ஈர்க்கப்பட்ட ஆமை (*Manouria impressa*) வகையை கண்டுபிடித்துள்ளன. இந்தியாவில் இந்த வகை ஆமைகளை கண்டறிந்து பதிவுசெய்வது இதுவே முதல்முறையாகும்.

- ✓ அச்சுறுத்தப்பட்ட உயிரினங்களின் சிவப்புப் பட்டியலில் இந்த வகை ஆமைகள் உள்ளன. 'Chelonian' என்பது கடலாமைகள், நன்னீர் ஆமைகள், ஆமைகளை உள்ளடக்கிய ஒரு ஊர்வன வரிசையாகும். ஆண் ஈர்க்கப்பட்ட ஆமையானது 30 செ.மீ நீளமுள்ள பெண் ஈர்க்கப்பட்ட ஆமையைவிட அளவில்

சிறியதாக உள்ளது. இந்த *Manouria* இனங்கள், ஆசிய வன ஆமையின் அளவில் மூன்றில் ஒருபங்கு அளவில் உள்ளது.

✓ *Manouria* இனத்தின் கீழ் இரண்டு வகையான ஆமைகள் மட்டுமே உள்ளன. ஈர்க்கப்பட்ட ஆமை கண்டறிவதற்கு முன்புவரை இந்தியா, ஆசிய வன ஆமையின் (*Manouria emys*) வசிப்பிடமாக மட்டுமே அறியப்பட்டது. ஆசிய வன ஆமையானது, ஆசியாவின் பெருநிலப்பரப்பில், வடகிழக்கில் மட்டுமே காணப்படுகிறது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.** பின்வரும் எந்தெந்த நகரங்களில், UIDAIஆல் நடத்தப்படும் முதலாவது ஆதார் சேவை மையம் செயல்படுத்தப்பட்டுள்ளது?

A) தில்லி & விஜயவாடா ☑

B) போபால் & ஜெய்ப்பூர்

C) நாக்பூர் & வாரணாசி

D) வாரணாசி & தில்லி

- ✓ இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) தனது முதல் ஆதார் சேவை மையத்தை தில்லி மற்றும் விஜயவாடாவில் செயல்படுத்தியுள்ளது. வெளியுறவுத்துறை அமைச்சகத்தால் நடத்தப்படும் கடவுச்சீட்டு சேவை மையங்களுக்கு ஒத்தவை இந்தப் புதிய ஆதார் சேவை மையங்கள். இவை புதிய ஆதார் பதிவு, தகவல்கள் புதுப்பித்தல் மற்றும் பிற செயல்பாடுகளை எளிதாக்கும்.
- ✓ இந்த மையம், தினசரி 1,000 ஆதார் தொடர்பான கோரிக்கைகளை கையாளும் திறன்கொண்டது. செவ்வாய் தவிர அனைத்து நாட்களிலும் காலை 9.30 மணி முதல் மாலை 6 மணி வரை இந்த ஆதார் பதிவு மற்றும் புதுப்பித்தல் மையம் திறந்திருக்கும். இதுபோன்ற மையங்கள், 300 – 400 கோடி ரூபாய் திட்ட செலவில், விரைவில், இந்தியாவின் 53 நகரங்களில் தொடங்கப்படவுள்ளன.

**2.** DNA கைரேகை மற்றும் நோயறிதலுக்கான மையத்தின் (Centre for DNA Fingerprinting and Diagnostics – CDFD) தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?

A) தில்லி

B) ஹைதராபாத் ☑

C) இலக்னோ

D) இந்தூர்

- ✓ CSIR-செல்லுலார் மற்றும் மூலக்கூறு உயிரியலுக்கான மையமானது (CCMB), DNA அடிப்படையிலான நோயறிதல் சேவையை பொதுமக்களுக்கு குறைந்த செலவில் வழங்குவதற்கும், புதிய நோயறிதல் முறைகளை உருவாக்குவதற்குமாக DNA கைரேகை மற்றும் நோயறிதலுக்கான மையத்துடன் (CDFD) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. மனித மரபணு கோளாறுகள் பற்றிய புரிதலை மேம்படுத்துவதற்கு அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபடுதலும் இதன் நோக்கங்களுள் அடங்கும்.
- ✓ மரபணு நோயறிதலில் பயிற்சி மற்றும் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள, இருநிறுவனங்களும் பரஸ்பரம் ஒப்புக்கொண்டுள்ளன. CDFD என்பது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உயிரித்தொழில்நுட்பத் துறையால் இயக்கப்படும் ஒரு உயிரித்தொழில்நுட்ப ஆராய்ச்சி மையமாகும். இது தெலுங்கானா மாநிலத்தின் ஹைதராபாத்தில் அமைந்துள்ளது.

**3.** 'Lessons Life Taught Me, Unknowingly' என்ற சுயசரிதையை எழுதியவர் யார்?

A) சஞ்சய் தத்

B) இர்பான் கான்

C) அனுபம் கேர் ☑

D) நசுருதீன் ஷா

✓ ஹிந்தி நடிகர் அனுபம் கேர் என்பவரால் 'Lessons Life Taught Me, Unknowingly' என்ற சுயசரிதை எழுதப்பட்டுள்ளது. இந்த நூல் வரும் ஆகஸ்ட்.5 அன்று வெளியிடப்படவுள்ளது. ஒரு சிறு நகரத்தில் வசிக்கும் கனவு காணத்துணிந்த ஒரு சிறுவனின் கதைதான் இந்தச் சுயசரிதை. இது நம்பிக்கை, ஏமாற்றங்கள், வெற்றி, தோல்விகள் மற்றும் நித்திய நம்பிக்கையைப் பற்றிய கதையாகும்.

✓ திரைக்குப் பின்னாலான தனது வாழ்க்கை நிகழ்வுகளையும், கேருக்கு வாழ்க்கைக் கற்பித்த பாடங்க–ளையும் கேர் இந்நூலில் பகிர்ந்துகொண்டுள்ளார். இந்திய மற்றும் மேற்கத்திய மொழிகளில் 530க்கும் மேற்பட்ட திரைப்படங்கள், நூறு நாடகங்கள் மற்றும் ஏராளமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இவர் நடித்துள்ளார். இரு தேசிய விருதுகள், 8 பிலிம்பேர் விருதுகள் மற்றும் BAFTA பரிந்துரைகளை அவர் வென்றுள்ளார். 'பத்மஸ்ரீ' மற்றும் 'பத்மபூஷண்' விருதுகளையும் அவர் பெற்றுள்ளார்.

**4.** பன்னாட்டு நாடாளுமன்றவாத நாளின் (International Day of Parliamentarism) 2ஆவது பதிப்பு, பின்வரும் எந்தத் தேதியில் அனுசரிக்கப்பட்டது?

A) ஜூன் 27

B) ஜூன் 28

C) ஜூன் 29

D) ஜூன் 30 ☑

1889
Inter-Parliamentary Union
For democracy. For everyone.

✓ நாடாளுமன்றங்களின் முக்கியத்துவத்தையும் குடிமக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அவற்றின் பொறுப்பையும் அங்கீகரிப்பதற்காக பன்னாட்டு நாடாளுமன்றவாத நாளின் 2ஆவது பதிப்பு, ஜூன்.30 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டது. இந்தத் தேதி, 1889இல் நாடாளுமன்றங்களுக்கான சர்வதேச கூட்டமைப்பு (Inter – Parliamentary Union – IPU) நிறுவப்பட்ட தேதியாகும்.

✓ உலகின் நாடாளுமன்றங்கள் ஈரவை மற்றும் ஓரவை என இரண்டு வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன. 193 நாடுகளில் 79 நாடுகளின் நாடாளுமன்றங்கள் ஈரவையாகவும், 114 நாடுகளின் நாடாளுமன்றங்கள் ஓரவையாகவும் உள்ளன. 930-ல் நிறுவப்பட்ட அல்திங்கி என்ற என்ற ஐஸ்லாந்து நாட்டின் நாடாளுமன்றந்தான் உலகின் மிகப்பழமையான நாடாளுமன்றமாகும்.

**5.** குறுநிதி நிறுவனங்கள் நெட்வொர்க்கின் (Microfinance Institutions Network – MFIN) புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?

A) ஹர்ஷ் ஸ்ரீவஸ்தவா

B) வினீத் சத்ரீ

C) மனோஜ் குமார் நம்பியார் ☑

D) ஜெகதீஷ் இராமடுகு

✓ அரோகன் நிதியியல் சேவைகளின் மேலாண்மை இயக்குநரான மனோஜ் குமார் நம்பியார், குறுநிதி நிறுவனங்கள் நெட்வொர்க்கின் (MFIN) புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். MFIN என்பது ஒரு தொழிற்சங்கமாகும், இதில் 56 NBFC – MFIகள் (வங்கி சாரா நிதி நிறுவனங்கள் – குறுநிதி நிறுவனங்கள்) மற்றும் வங்கிகள், சிறு நிதியியல் வங்கிகள் மற்றும் NBFCகள் உட்பட 40 கூட்டாளிகள் உள்ளனர். இது ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட NBFC-MFIக்கான ஒரு தன்– கட்டுப்பாட்டு அமைப்பாகும்.

**6.** மைய முதலீட்டு நிறுவனங்களின் (Core Investment Companies – CIC) கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான ரிசர்வ் வங்கிக் குழுவின் தலைவர் யார்?

A) லில்லி வதேரா

B) N S வெங்கடேஷ்

C) T இரவிசங்கர்

D) தபன் ராய் ☑

✓ முறையான முக்கியமான மைய முதலீட்டு நிறுவனங்களின் பெருநிறுவன நிர்வாக கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக MCA முன்னாள் செயலாளர் தபன் ரே தலைமையில், 6 பேர்கொண்ட குழுவை இந்திய ரிசர்வ் வங்கி அமைத்துள்ளது. இவை, வர்த்தகத்திற்காக அல்லாமல் குழும நிறுவனங்களில் பங்குகளை வைத்திருப்பதற்காக அவற்றின் சொத்துக்களில் பெரும்பாலானவற்றை பங்குகளில் முதலீடுகளாக வைத்திருக்கும் வங்கி சாரா நிதி நிறுவனங்களாகும். இந்தக்குழு தனது அறிக்கையை வரும் அக்.31க்குள் சமர்ப்பிக்கவுள்ளது.

✓ இந்தப் பணிக்குழு ஒழுங்காற்றுக் கட்டமைப்பை ஆராயும், இந்நிறுவனங்களுக்கு உள்ளும், வெளியும் கண்காணிப்பை மேம்படுத்தும், பெருநிறுவன நிர்வாக கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக ஒரு குழுவிற்குள் பல CIC நடைமுறை உட்பட பதிவு விதிகளில் மாற்றங்கள் மற்றும் அதுபோன்ற பிற மதிப்பீடுகளையும் பரிந்துரைக்கும்.

**7.** நடப்பாண்டு ஹென்லி கடவுச்சீட்டு குறியீட்டில் இந்திய கடவுச்சீட்டின் தரநிலை (rank) என்ன?

A) 55ஆவது

C) 86ஆவது

B) 64ஆவது

D) 77ஆவது

86

✓ சமீபத்திய ஹென்லி கடவுச்சீட்டு குறியீடு 2019இல் இந்திய பாஸ்போர்ட் 58 மதிப்பெண்ணுடன் 86ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. இந்திய கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் 58 நாடுகளுக்கு நுழைவு இசைவு இல்லாமலோ / அங்கே சென்ற பின்னரோ நுழைவு இசைவு பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை இந்த மதிப்பெண் சுட்டிக்காட்டுகிறது. இந்தக் குறியீட்டில் 199 கடவுச்சீட்டுகளும், குறு நாடுகள் மற்றும் பிரதேசங்கள் உட்பட 227 பயண இடங்கள் அடங்கியுள்ளன.

✓ இந்தியா, 86ஆவது இடத்தை மொரிஷியானா மற்றும் சாவோ டோம் மற்றும் பிரின்சிபியுடன் பகிர்ந்து கொண்டுள்ளது. இந்தப் பட்டியலில் ஜப்பான் & சிங்கப்பூர் முதலிய நாடுகள் 189 மதிப்பெண்களுடன் முதலிடத்தில் உள்ளன. தென் கொரியா, பின்லாந்து மற்றும் ஜெர்மனி முதலிய நாடுகள் இரண்டாவது இடத்தையும், டென்மார்க், இத்தாலி மற்றும் லக்சம்பர்க் முதலிய நாடுகள் மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளன. ஸ்பெயின் மற்றும் சுவீடனுடன் பிரான்ஸ் நான்காவது இடத்தில் உள்ளது. இந்தத் தரவரிசை, உலகின் மிகப்பெரிய மற்றும் மிகத்துல்லியமான பயணத்தரவுத்தளத்தைப் பராமரிக்கும் சர்வதேச வான் போக்குவரத்துக் கழகத்தின் (IATA) பிரத்யேக தரவை அடிப்படையாகக்கொண்டது.

## 8.இந்திய வேளாண்மையை மறுசீரமைப்பு செய்யும் முதலமைச்சர்களின் உயர் – அதிகாரக் குழுவிற்கான தலைவர் யார்?

A) தேவேந்திர பட்னாவிஸ் ☑

B) இரமேஷ் சந்த்

C) மனோகர்லால் கட்டார்

D) விஜய் ரூபானி

✓ வேளாண்மையை மறுசீரமைப்பதற்கும், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவதற்குமாக பிரதமர் மோடி அண்மையில் முதலமைச்சர்களின் உயர் – அதிகாரக் குழுவொன்றை அமைத்தார். மகாராஷ்டிர முதலமைச்சர் தேவேந்திர பட்னாவிஸ் தலைமையிலான 9 பேரைக்கொண்ட இந்தக் குழு, கொள்கை நடவடிக்கைகளை பரிந்துரைக்கும், முதலீடுகளை ஈர்க்கும் & உணவு பதப்படுத்துதலில் வளர்ச்சியை அதிகரிக்கும். கர்நாடகா, ஹரியானா, அருணாச்சல பிரதேசம், குஜராத், உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம் முதலிய மாநிலங்களின் முதலமைச்சர்கள், மத்திய வேளாண்மை, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் நரேந்திர சிங் தோமர் மற்றும் NITI ஆயோக் உறுப்பினர் இரமேஷ் சந்த் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

✓ வேளாண் உற்பத்தி மற்றும் கால்நடை, ஒப்பந்த வேளாண்மை மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் வசதி) சட்டம், 2018 போன்ற சீர்திருத்தங்களை ஏற்றுக்கொள்வதற்கும் காலவரையறை செய்வதற்கும் வழிமுறைகளை பரிந்துரைத்தல், விவசாய சந்தைப்படுத்தல் மற்றும் உட்கட்டமைப்பில் தனியார் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அத்தியாவசிய பொருட்கள் சட்டம், 1955இல் மாற்றங்கள் செய்தல் போன்றவை இந்தக் குழுவின் பணி வரையறைகளாகும்.

✓ சந்தை சீர்திருத்தங்களை e-NAM, GRAM மற்றும் பிற தொடர்புடைய நடுவணரசு ஆதரவிலான திட்டங்களுடன் இணைப்பதற்கான வழிமுறைகளை பரிந்துரைக்கவும், வேளாண் தொழினுட்பத்தை உலகத்தரத்திற்கு மேம்படுத்துவதற்கான வழிகள் மற்றும் விவசாய ரீதியாக முன்னேறும் நாடுகளில் பயன்படுத்தப்படும் தரமான விதைகள், பயிர்ப்பரப்புதல் பொருட்கள் மற்றும் பண்ணை இயந்திரங்கள் விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்யும் வழிகளை பரிந்துரைக்கவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

9. அண்மையில் காலமான பாபு நாராயணன், எந்தப் பிராந்தியத் திரையுலகில் பிரபல திரைப்பட இயக்குநராக இருந்தார்?

A) தமிழ்

B) மலையாளம் ☑

C) தெலுங்கு

D) கன்னடம்

✓ மலையாள திரையுலகின் பிரபல இயக்குநரான பாபு நாராயணன் (59), ஜூன்.29 அன்று கேரளாவின் திருச்சூரில் காலமானார்.

10. அண்மையில், அனைத்து வகையான கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வுபெற்ற அம்பத்தி இராயுடு, எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராவார்?

A) ஆந்திரப்பிரதேசம் ☑

B) தெலுங்கானா

C) கர்நாடகா

D) மகாராஷ்டிரா

✓ ஆந்திராவைச்சேர்ந்த இந்திய மிடில்-ஆர்டர் பேட்ஸ்மேன் அம்பத்தி இராயுடு, ஜூலை.3 அன்று தான் அனைத்து வகையான கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வுபெறுவதாக அறிவித்தார். விலகுவதற்கான எந்தக் காரணத்தையும் அவர் குறிப்பிடவில்லை. நடைபெற்றுக் கொண்டிருக்கும் உலகக்கோப்பைக்கான இந்தியாவின் அதிகாரப்பூர்வ காத்திருப்புப் பட்டியலில் அவர் இடம்பெற்றிருந்தார். இந்தியாவுக்காக 55 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள நாயுடு 47.5 சராசரியுடன் 1696 இரன்களை எடுத்துள்ளார். இருப்பினும் அவர் எந்த டெஸ்ட் போட்டிகளிலும் ஆடியதில்லை.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ எண்ணூரிலிருந்து தூத்துக்குடி வரை 1,250 கி.மீ, தூரத்திற்கு ரூ.6,000 கோடி செலவில் எரிவாயு குழாய் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக இந்தியன் ஆயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

✓ இந்தியாவில் Start-up முறையில் தொழில் தொடங்கிய மாநிலங்கள் பட்டியலில் தமிழ்நாடு 7$_{\text{ஆவது}}$ (1004 Start-up நிறுவனங்கள்) இடத்தில் உள்ளது.

✓ கடற்கரைகளை மேம்படுத்தும் வகையில், மாமல்லபுரம் கடற்கரையை முன்மாதிரியாக தேர்வுசெய்து, 'நீலக்கொடி கடற்கரைத் திட்டம்' செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பது, கடற்கரையில் உள்ள இயற்கை வளங்கள், இடங்களை பாதுகாப்பது மற்றும் மேம்படுத்துவது இந்தத் திட்டத்தின் முக்கியநோக்கமாகும்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.** சனிக்கோளின் நிலவான டைட்டனை ஆராயும் 'Dragonfly Mission', எந்த விண்வெளி ஆய்வு நிறுவனத்துடன் தொடர்புடையது?

A) ரோஸ்கோஸ்மோஸ்

B) சி.என்.இ.எஸ்

C) இ.எஸ்.ஆர்.ஓ

D) நாசா (NASA) ☑

✓ சனிக்கோளின் மிகப்பெரிய நிலவான டைட்டனை ஆராய நாசா சமீபத்தில் 'Dragonfly Mission' என்று அழைக்கப்படும் தனது புதிய திட்டத்தை அறிவித்தது. நமது சூரிய மண்டலத்தில் வளிமண்டலத்தைக் கொண்ட ஒரே நிலவு (துணைக்கோள்) இதுதான். 2026ஆம் ஆண்டு ஏவப்படும் இந்தத் திட்டம், 2034ஆம் ஆண்டுக்குள் டைட்டன் துணைக்கோளை அடையும். டைட்டன், நமது சூரிய குடும்பத்தில் 2ஆவது பெரிய துணைக்கோளாகும். இது நிலவு மற்றும் புதன் கோளை விடவும் பெரியது.

✓ சனியைச் சுற்றிவரும் இந்தத் துணைக்கோள், சூரியனிலிருந்து 886 மில்லியன் மைல் (1.4 பில்லியன் கி.மீ) தொலைவில் உள்ளது. அது பூமியைவிட 10 மடங்கு தொலைவாகும். அது சூரியனிலிருந்து வெகு தொலைவில் இருப்பதால், அதன் மேற்பரப்பு வெப்பநிலை -290°F (-179°C) ஆகும். இதன் மேற்பரப்பு அழுத்தமும் பூமியைவிட 50 சதவீதம் அதிகமாகும். டைட்டன், புவி போன்ற அடர்த்தியான, நைட்ரஜன் சார்ந்த வளிமண்டலத்தைக்கொண்டுள்ளது. புவிபோலல்லாமல், அங்கு மீத்தேனாலான மேகங்களும் மீத்தேன் மழையும் பொழிகின்றன.

**2.** 1076 என்னும் கட்டணமில்லா முதலமைச்சர் தொலைபேசி சேவையை அறிமுகப்படுத்தியுள்ள மாநில அரசு எது?

A) உத்தரப்பிரதேசம் ☑

B) மத்தியப்பிரதேசம்

C) ஜார்க்கண்ட்

D) இராஜஸ்தான்

✓ உத்தரப்பிரதேச மாநில அரசு '1076' என்னும் ஒரு கட்டணமில்லா முதலமைச்சர் தொலைபேசி சேவையை அறிமுகம் செய்துள்ளது. இதன்மூலம், அம்மாநிலத்தில் உள்ள மக்கள் தங்கள் புகார்களை பதிவுசெய்ய இயலும். மேலும், ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் அப்புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்குத் தீர்வுகாணப்படும். இந்த இலவச உதவி தொலைபேசி (Toll-free Helpline) சேவையானது 24*7 வேலை செய்யும்.

✓ 500 பேர் பணியாற்றும் இந்தச் சேவை மையமானது, நாளொன்றுக்கு, 80,000 புகார்களை ஏற்கும் திறனையும், 55 ஆயிரம் புகார்களுக்கு தீர்வுகாணும் திறனையும் கொண்டுள்ளது. புகார்தாரர் இலவச

உதவி தொலைபேசி சேவையை அழைத்த பின்னர், அவரின் புகார் சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக ஒரு குறுந்தகவல் அனுப்பப்படும்.

**3.** போலந்தில் நடந்த போஸ்னான் தடகள கிராண்ட் பிரிக்ஸில் பெண்களுக்கான 200 மீ., ஓட்டத்தில் தங்கம் வென்ற இந்திய ஸ்ப்ரிண்டர் யார்?

A) டூட்டி சந்த்

B) ஹிமா தாஸ் ☑

C) சரிதா கெய்க்வாட்

D) சதி கீதா

✓ போலந்தில் நடந்த போஸ்னான் தடகள கிராண்ட் பிரிக்ஸில், பெண்களுக்கான 200 மீ., ஓட்டத்தில் பந்தய துாரத்தை 23.65 வினாடியில் கடந்து முதலிடம் பிடித்த இந்திய வீராங்கனை ஹிமா தாஸ், தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார். ஹிமா, 400 மீ., ஓட்டத்தில் உலக ஜூனியர் சாம்பியனும், தேசிய சாதனையும் படைத்தவராவார். இந்தப்போட்டியில் பங்கேற்ற மற்றொரு இந்திய வீராங்கனை V K விஸ்மாயா, 23.75 வினாடியில் கடந்து 3ஆவது இடம்பிடித்தார். ஆண்களுக்கான குண்டு எறிதலில், இந்தியாவின் தஜிந்தர் பால் சிங் டூர், 3ஆவது இடம்பிடித்து வெண்கலப்பதக்கம் வென்றார்.

**4.** எந்த நகரத்தில், தீக்காயம் மற்றும் பிளாஸ்டிக் அறுவைச்சிகிச்சைக்கான உலகின் மிகப்பெரிய நிறுவனம் செயல்படத்தொடங்கியுள்ளது?

A) யங்கூன்

B) ஜகார்த்தா

C) புனே

D) டாக்கா ☑

✓ உலகின் மிகப்பெரிய "ஷேக் ஹசீனா தேசிய தீக்காயம் மற்றும் பிளாஸ்டிக் அறுவைச்சிகிச்சை நிறுவனம்" டாக்காவில் ஜூலை.4 முதல் செயல்படத் தொடங்கியது. 50 ICU, 12 அறுவையரங்கம் மற்றும் ஐந்நூறு படுக்கைகள் கொண்ட இந்த மருத்துவமனை, வங்கதேசத்தில் தீக்காயத்தால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு நவீன சிகிச்சையை வழங்கும். இந்த நிறுவனம், சுமார் 500 கோடி இட்டாக்கா (வங்கதேசப் பணம்) மதிப்பில் கட்டப்பட்டுள்ளது.

**5.** நடப்பாண்டு ஐ.நா. MSME நாளுக்கான கருப்பொருள் என்ன?

A) Entrepreneurship: A way of success

B) Big Money For Small Business: Financing the SDGs ☑

C) The Youth Dimension

D) Small business – big impact

- ✓ ஐக்கிய நாடுகள் அவையின் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் நாள், ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.27 அன்று அனுசரிக்கப்படுகிறது. அது, நிலையான வளர்ச்சிக்கு அத்தகைய நிறுவனங்களின் பங்களிப்பு குறித்த பொதுவான விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. இந்த வகையான நிறுவனங்கள் உலகெங்கிலும் குறிப்பிடத்தக்க வேலைவாய்ப்பு மற்றும் வருமானத்தை ஈட்டும் வாய்ப்புகளுக்கு பொறுப்பானவையாக உள்ளன. மேலும், வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச்சியின் முக்கிய இயக்கி என அவை அடையாளம் காணப்பட்டுள்ளன.

- ✓ குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் பெரும்பாலும் பெண்கள், இளைஞர்கள் மற்றும் ஏழ்மையான குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு பணி வாய்ப்பை வழங்குவனவாக உள்ளன. சில சமயங்களில் கிராமப்புறங்களின் ஒரே வேலைவாய்ப்பு ஆதாரமாக குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் உள்ளன. “Big Money For Small Business: Financing the SDGs” என்பது நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

**6.** “Working on a Warmer Planet” என்ற தனது அறிக்கையை சமீபத்தில் வெளியிட்ட சர்வதேச அமைப்பு எது?

**A)** சர்வதேச தொழிலாளர் அமைப்பு ☑

**B)** யுனிசெப்

**C)** யுனெஸ்கோ

**D)** எப்.ஏ.ஓ

- ✓ சர்வதேச தொழிலாளர் அமைப்பானது “Working on a Warmer Planet – The Impact of Heat Stress on Labour Productivity and Decent Work – ஒரு வெப்பமான கோளில் பணிபுரிதல் – தொழிலாளர் உற்பத்தித்திறன் & பண்பார்ந்த வேலைகளில் வெப்ப அயர்ச்சியின் தாக்கம்” என்று தலைப்பிடப்பட்ட தனது அறிக்கையை சமீபத்தில் வெளியிட்டது. பணிபுரியும் இடம் சூடாக இருக்கும் காரணத்தாலோ அல்லது தொழிலாளர்கள் ஆமை வேகத்தில் பணி செய்யும் காரணத்தாலோ வருங்காலத்தில் வேலை நேர இழப்பு (working hours loss) ஏற்படும் என அந்த அறிக்கை கூறுகிறது.

- ✓ இந்தியாதான் அதிகம் பாதிக்கப்படும் நாடாக இருக்கும் என்று ஐ.நா அறிக்கை தெரிவித்துள்ளது. இந்தியா அதன் அதிக மக்கள்தொகை காரணமாக, வரும் 2030ஆம் ஆண்டில் உற்பத்தித்திறனில், 34 மில்லியன் அளவுக்கு முழுநேர வேலைகளை (full-time jobs) இழக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. புவி வெப்பமடைதலால் (global warming) 2030இல் இந்தியா 5.8% வேலை நேரத்தை இழக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதுவும் குறிப்பாக விவசாயம் மற்றும் கட்டுமானத் துறைகளை இதன் பாதிப்பு மிகுந்திருக்கும்.

- ✓ 21ஆம் நூற்றாண்டின் இறுதியில் 1.5° செல்சியஸ் என்ற அளவிலான உலகளாவிய வெப்பநிலை உயர்வு மற்றும் தொழிலாளர் வளத்தின் போக்குகள் ஆகியவற்றின் அடிப்படையில் இக்கூற்றுகள் உள்ளன. இந்தியாவில் பெரும்பாலான தாக்கங்கள் விவசாயத்துறையிலேயே உணரப்படும். ஆனால், கட்டுமானத் துறையில், வெப்ப அயர்ச்சியானது ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களை பாதிப்பதால் வேலை நேரம் அதிகரிப்பு என்பது இழப்பையே ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிக ஈரப்பதம் உள்ள இடங்களில் 35° செல்சியசுக்கு மேல் வெப்பநிலை காணப்பட்டால் பொதுவாக அது வெப்ப அயர்ச்சி (Heat Stress) என வரையறுக்கப்படுகிறது.

**7.** இந்திய இரயில்வேயில் மிகநீளமான மின்மயமாக்கப்பட்ட சுரங்கப்பாதையை செயல்பாட்டுக்கு கொண்டு வந்துள்ள இரயில்வே மண்டலம் எது?

A) தெற்கு மத்திய இரயில்வே ☑

B) வடக்கு இரயில்வே

C) மத்திய இரயில்வே

D) மேற்கு இரயில்வே

- ✓ தெற்கு மத்திய இரயில்வே (SCR) சமீபத்தில் செர்லோபள்ளி மற்றும் ரபூரு நிலையங்களுக்கு இடையில் மொத்தம் ரூ.460 கோடி செலவில் கட்டப்பட்ட 6.6 கி.மீ நீளமுள்ள மிகநீளமான மின்மயமாக்கப்பட்ட சுரங்கப்பாதையை செயல்பாட்டுக்குக் கொண்டுவந்துள்ளது. ஓபுலவாரிபள்ளி – வெங்கடாச்சலம் – கிருஷ்ணாபட்டினம் துறைமுகத்திற்கு இடையில் அண்மையில் கட்டி முடிக்கப்பட்ட 113 கி.மீ நீள புதிய இரயில் வழித்தடத்தின் ஒருபகுதியாக இந்தச் சுரங்கப்பாதை அமைந்துள்ளது.

- ✓ மின்மயமாக்கப்பட்ட இச்சுரங்கப்பாதை, புதிய ஆஸ்திரேலிய சுரங்கப்பாதை முறையில் ‘குதிரை லாட’ வடிவத்தில் கட்டப்பட்டுள்ளது. சுரங்கப்பாதையின் உயரம் (இரயில் மட்டத்திலிருந்து கூரை வரை) 6.5 மீ., ஆகும். தொடர்புக்கம்பியின் குறைந்தபட்ச உயரம் 5.2 மீட்டர் என்ற அளவில் பராமரிக்கப்படுகிறது. இந்தப் புதிய வழித்தடம், தெற்கு மற்றும் மேற்கு கடற்கரை இரயில்வே மண்டலங்கள் இடையே நேரடி இணைப்புகளை எளிதாக்கும் மற்றும் மண்டலத்தின் சரக்கு வருவாயையும் மேம்படுத்தும்.

**8.** அமெரிக்கா – இந்தியா உத்திசார் பங்காளர் மன்றத்தின் (USISPF) நடப்பாண்டு சர்வதேச சிறப்பு விருதினை பெறவுள்ள இந்திய வணிகத் தலைவர் யார்?

A) ஆனந்த் மகேந்திரா

B) இரத்தன் டாடா

C) முகேஷ் அம்பானி

D) அஜய் பங்கா ☑

- ✓ அமரிக்கா – இந்தியா உத்திசார் பங்காளர் மன்றம் (USISPF) தனது நடப்பாண்டு சர்வதேச சிறப்பு விருதுகளுக்கு மாஸ்டர்கார்டு தலைமைச் செயல் அதிகாரி மற்றும் தலைவர் அஜய் பங்கா மற்றும் விப்ரோ தலைவர் அசிம் பிரேம்ஜி ஆகியோரை தேர்வுசெய்துள்ளது. ஜூலை.11 அன்று வாஷிங்டனில் நடைபெறவுள்ள 2ஆவது வருடாந்திர தலைமைத்துவ உச்சிமாநாட்டில் அவ்வணிகத் தலைவர்கள் இருவருக்கும் மதிப்புமிக்க இவ்விருது வழங்கப்படும். வர்த்தகம் மற்றும் முதலீடு, உத்திசார் ஆற்றல் உறவுகள், உற்பத்தி மற்றும் புத்தாக்க பங்காண்மை போன்ற இருதரப்பு ஒத்துழைப்பின் பகுதிகளை இந்தத் தலைமைத்துவ உச்சிமாநாடு சிறப்பித்துக்காட்டும்.

**9.** 'Whispers of Time' என்ற நூலின் ஆசிரியர் யார்?

A) ஜும்பா லஹிரி

B) கிருஷ்ண சக்ஸேனா ☑

C) விக்ரம் சேத்

D) ரோஹிந்தன் மிஸ்திரி

✓ 'Whispers of Time' என்ற நூலை Dr. கிருஷ்ணா சக்ஸேனா எழுதியுள்ளார். சமீபத்தில் புது தில்லியில் உள்ள இந்திய சர்வதேச மையத்தில், மத்திய ஜவுளி மற்றும் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் ஸ்மிருதி ஜூபின் இராணி, இந்த நூலை வெளியிட்டார்.

**10.** தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் நிறுவனத்தின் (National Institute of Rural Development and Panchayat Raj – NIRDPR) தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?

A) ஹைதராபாத் ☑

B) புது தில்லி

C) மும்பை

D) ராய்ப்பூர்

✓ காந்திபேட், மொய்னாபாத், ராஜேந்திரநகர், செரிலிங்கம்பள்ளி மற்றும் ஷம்ஷாபாத் மண்டலங்களில் உள்ள 75 பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியைகள் மற்றும் தன்னார்வலர்கள் குழுவின் மூலம் 11,516 மாணவிகளுக்கு சானிட்டரி நாப்கின்களை இலவசமாக வழங்கும் ஒரு முன்னோடி திட்டத்துக்காக தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் நிறுவனமானது பொதுத்துறை நிறுவனமான பாரத் டைனமிக்ஸ் நிறுவனத்துடன் (BDL) இணைந்துள்ளது. இத்திட்டம், தெலுங்கானாவில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகள் மத்தியில் மாதவிடாய் மற்றும் மாதவிடாய் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

✓ பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு முன்னெடுப்புகளின் ஒருபகுதியாக BDL வழங்கிய ரூ.71.82 லட்சம் நிதியுதவியுடன் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சமூகவியல் மற்றும் சூழல் பிரச்சனைகளுடன் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், கிராமப்புற வளரிளம்பருவத்துப் பெண்கள் மத்தியில் மாதவிடாயுடன் தொடர்புடைய களங்கத்தை நீக்குவதும் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். NIRDPR என்பது கிராமப்புற வளர்ச்சியில் ஆராய்ச்சி மேற்கொள்ளும் ஓர் இந்திய நிறுவனமாகும். இது ஹைதராபாத் அருகே ராஜேந்திரநகரில் அமைந்துள்ளது.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ உலக முதலீட்டாளர் மாநாட்டில் செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின்படி, புதிய நிறுவனங்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் K. பழனிசாமி அடிக்கல் நாட்டினார். அவற்றின் விபரம்.,

- **காஞ்சிபுரம் மாவட்டம்** – ஒரகடத்தில் டிபிஐ காம்போசைட்ஸ் நிறுவனம்; சுங்குவார்சத்திரத்தில் மகேந்திரா எம்எஸ்டிசி நிறுவனம்; இருங்காட்டுக்கோட்டையில் சக்தி ஸ்டீல் நிறுவனம், ஸ்ரீபெரும்புதூர் சமுத்திரப்பேடு கிராமத்தில் சன் எஸ்டேட்ஸ்.
- **திருவள்ளூர் மாவட்டம்** – கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழிற்பூங்காவில் பிர்லா குழுமத்தின் ஹைடெக் கார்பன் நிறுவனம், மாவட்ட தனியார் தொழிற்பூங்காவில் மகேந்திரா ஸ்டீல் சர்வீஸ் மையம்; பெரியபாளையத்தில் காளீஸ்வரி நிறுவனத்தின் புதிய பயோடீசல் உற்பத்தி ஆலை.
- **நாமக்கல் மாவட்டம்** – பள்ளிபாளையத்தில் மோதி ஸ்பின்னர்ஸ், லக்கி வேவ்ஸ் நிறுவனம்.
- சேலம் வாழப்பாடி, ஈரோடு கோபிசெட்டிபாளையம், கோவை மேட்டுப்பாளையம் ஆகிய இடங்களில் எஸ்.பி. நிறுவனத்தின் நூற்பாலைகள், ஆயத்த ஆடை உற்பத்தி நிறுவனம்.
- **கோயம்புத்தூர் மாவட்டம்** – சின்னவேடம்பட்டி பகுதியில் கிருஷ்ணவேணி கார்பன் நிறுவத்தின் சீல், பேரிங்குகள் உற்பத்தி ஆலை.
- **திருவண்ணாமலை மாவட்டம்** – சிப்காட் தொழிற்பூங்காவில் வேல்போ மெட்டல்ஸ்.
- **வேலூர் மாவட்டம்** – இராணிப்பேட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் கால்வனோ டிராக்.
- **கிருஷ்ணகிரி மாவட்டம்** – சிப்காட் பூங்காவில் இரங்கநாயகி நிறுவனத்தின் காகித உற்பத்தி ஆலை.

# நடப்பு நிகழ்வுகள்

**1.** மனப்பித்துடன் (Schizophrenia) தொடர்புடைய புதிய மரபணுவை இந்தியா மற்றும் எந்நாட்டின் அறிவியலாளர்கள் இணைந்து அடையாளம் கண்டறிந்துள்ளனர்?

A) தென்னாப்பிரிக்கா

B) இரஷ்யா

C) ஆஸ்திரேலியா ☑

D) பெல்ஜியம்

- ✓ 18 ஆண்டுகால ஆராய்ச்சிக்குப் பிறகு, ஆஸ்திரேலியாவில் உள்ள குயின்ஸ்லாந்து பல்கலைக்கழக அறிவியலாளர்கள் குழுவும், இந்திய அறிவியலாளர்கள் குழுவும் இணைந்து மனப்பித்துடன் நேரடியாகத் தொடர்புடைய 'NAPRT1' என்ற ஒரு புதிய மரபணுவை அடையாளம் கண்டறிந்துள்ளனர். இந்தியாவைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்களின் DNAவைப் பயன்படுத்தி, மனப்பித்துக்கான காரணங்கள் மற்றும் சாத்தியமான சிகிச்சைகளுக்கான தேடலில், அந்தக் குழு, சில துருப்புகளைக் கண்டறிந்தது.

- ✓ இந்த ஆய்வு, உயிர்ச்சத்து B3 வளர்சிதை மாற்றத்தில் ஈடுபடும் ஒரு நொதியைக் குறிக்கும் ஒரு மரபணுவை அடையாளங்கண்டுள்ளது. ஐரோப்பிய வம்சாவளியைச்சேர்ந்த மனப்பித்து நோயாளிக -ளின் மரபணு தரவுத்தொகுப்பிலும் இம்மரபணுவைக் கண்டுபிடிக்க முடிந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இந்திய ஆராய்ச்சியாளர்களின் குழுவுக்கு சென்னையைச் சேர்ந்த மனப்பித்து ஆராய்ச்சி அறக்கட்டளையின் இணை நிறுவனரும் இயக்குநருமான R தாரா தலைமைதாங்கினார். மனப்பித்து என்பது ஒரு நாள்பட்ட மற்றும் கடுமையான மனக்கோளாறு ஆகும். இது ஒரு நபரின் சிந்தனை, உணர்திறன் மற்றும் நடத்தையைப் பாதிக்கிறது.

**2.** MOSAiC பணி என்பது எந்தக் கடலில் நடத்தப்படும் ஓராண்டுகால ஆய்வுப்பயணமாகும்?

A) ஆர்டிக் பெருங்கடல் ☑

B) அண்டார்டிகா பெருங்கடல்

C) பசிபிக் பெருங்கடல்

D) இந்தியப் பெருங்கடல்

MOSAiC
International Arctic Drift Expedition

- ✓ ஓராண்டுகாலம் நடைபெறவுள்ள MOSAiC பணியில், 17 நாடுகளைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்கவுள்ளனர். அவர்கள் காலநிலை மாற்றத்தைப் பற்றி ஆய்வுசெய்வதற்காக ஆர்டிக் பெருங் கடல் பனியின் ஒரு பெரிய பகுதியில் கப்பலை நங்கூரமிடுவார்கள்.

- ✓ ஆர்டிக்கில் காலநிலை மாற்றத்தின் தாக்கம் மற்றும் அது உலகின் பிற பகுதிகளை எவ்வாறு பாதிக்கும் என்பதை ஆய்வு செய்யும் ஆராய்ச்சியாளர்களுக்கு ஜெர்மானிய பனி உடைப்புக் கப்பலான RV Polarstern (போலார் ஸ்டெர்ன்) ஆராய்ச்சித் தளமாக இருக்கும். Multidisciplinary drifting Observatory for the Study of Arctic Climate என்பதன் சுருக்கமே MOSAiC. US நிறுவனங்களான தேசிய அறிவியல்

அறக்கட்டளை, ஆற்றல் துறை, தேசிய பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம் (NOAA) மற்றும் NASA ஆகியவற்றிடமிருந்து இந்தப் பணி நிதியுதவி பெற்றுள்ளது.

### 3. சமீபத்தில் UNSECO உலக பாரம்பரியக் களமாக அறிவிக்கப்பட்ட இராஜஸ்தானிய நகரம் எது?

A) பிகானேர்

B) உதய்பூர்

C) ஜெய்ப்பூர் ☑

D) ஜோத்பூர்

✓ இராஜஸ்தானின் வரலாற்றுச் சிறப்புமிக்க நகரமான ஜெய்ப்பூர், அசர்பைஜானின் பாகுவில் நடந்த UNESCO உலக பாரம்பரியக் களத்தின் 43ஆவது அமர்வில், உலக பாரம்பரியக்களமாக (World Heritage Site) அறிவிக்கப்பட்டது. பொ.ஆ.1727இல் இரண்டாம் சவாய் ஜெய் சிங் தலைமையின் கீழ் இந்த நகரம் நிறுவப்பட்டது. கட்டடக்கலைக்கும், கலாசாரத்திற்கும் அறியப்படும் இந்த நகரம், இராஜஸ்தான் மாநிலத்தின் தலைநகரமாக செயல்படுகிறது.

### 4. வேளாண்மையில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவது குறித்த ஆய்வுக்காக, எந்தத் தொழில்நுட்ப நிறுவனத்துடன் இந்திய அரசு ஒப்பந்தம் செய்துள்ளது?

A) இன்போசிஸ்

B) விப்ரோ

C) மைக்ரோசாப்ட்

D) ஐ பி எம் (IBM) ☑

IBM Watson™

✓ மூன்று மாநிலங்களில் தலா ஒரு மாவட்டத்தில், வேளாண்மையில் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) மற்றும் வானிலை தொழில்நுட்ப தீர்வுகளை பயன்படுத்துவது குறித்த ஒரு முன்னோடி ஆய்வை மேற்கொள்வதற்காக இந்திய அரசு IBM இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. மத்தியப் பிரதேசம், குஜராத் மற்றும் மகாராஷ்டிராவில் முறையே போபால், இராஜ்கோட் மற்றும் நந்தேடு ஆகிய மூன்று மாவட்டங்களில் மானாவரிப் பயிர் பருவத்திற்கான முன்னோடி ஆய்வு நடத்தப்படும்.

✓ இந்த ஒப்பந்தத்தின் ஒருபகுதியாக, சிறந்த உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனுக்கான நீர் மற்றும் பயிர் மேலாண்மை தொடர்பான முடிவுகளை விவசாயிகள் எடுக்க உதவுவதற்காக IBMஇன் வாட்சன் தீர்வுத் தளமானது செயற்கை நுண்ணறிவு மற்றும் வானிலை தொழில்நுட்பம் மூலம் கிராம / பண்ணை மட்டத்தில் விவசாயத் துறையில் வானிலை முன்னறிவிப்பு மற்றும் மண்ணின் ஈரப்பதம் குறித்த தகவல்களை இலவசமாக வழங்கும்.

### 5. எந்தத் தேதியில், இந்தியாவில், தேசிய மருத்துவர்கள் நாள் கொண்டாடப்படுகிறது?

A) ஜூலை 5　B) ஜூலை 3

C) ஜூலை 1 ☑　D) ஜூலை 7

- ✓ இந்தியாவில் 1991ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.1 அன்று தேசிய மருத்துவர்கள் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. வரலாற்று புகழ்மிக்க மருத்துவரும் மேற்கு வங்க மாநிலத்தின் 2ஆவது முதலமைச்சருமான மருத்துவர் பிதான் சந்திர ராயின் நினைவாக தேசிய மருத்துவர்கள் தினம் கொண்டாடப்படுகிறது. மேற்கு வங்கத்தின் சிற்பி என கருதப்படும் இவர் துர்காபூர், கல்யாணி, பிதான் நகர், அசோக்நகர் மற்றும் ஹப்ரா முதலிய நான்கு நகரங்களை நிறுவியுள்ளார்.

- ✓ இந்தியாவின் மிகவுயரிய விருதான 'இந்திய மாமணி' விருதை 1961ஆம் ஆண்டு பிப்.4 அன்று இவர் பெற்றார். இவரின் நினைவாகவும், மனித வாழ்வில் மருத்துவர்களின் மதிப்புமிக்க சேவையின் முக்கியத்துவத்தை உணரவும், அவர்களுள் சிறந்தவரை போற்றவும் இந்நாள் கொண்டாப்படுகிறது. "Zero tolerance to violence against doctors and clinical establishment" என்பது நடப்பாண்டில் வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும்.

**6.** தமன் கங்கா – பிஞ்சல் ஆறு இணைப்புத் திட்டமானது, எந்த மாநிலத்துடன் தொடர்புடையது?

A) தமிழ்நாடு

B) கர்நாடகா

C) ஜார்க்கண்ட்

D) மகாராஷ்டிரா ☑

- ✓ மகாராஷ்டிராவில், வறட்சியின் நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதற்காக ஆறுகளை ஒருங்கிணைக்க அம்மாநில அரசு முடிவுசெய்துள்ளது. மும்பையைப் பொறுத்தவரை, 2060ஆம் ஆண்டு வரை அதன் நீர் தேவைகளை பூர்த்தி செய்யும் தமன் கங்கா – பிஞ்சல் ஆறு இணைபப்புத் திட்டம் சிறந்த தெரிவாக உள்ளது. வைதர்ணா வடிநிலத்தில், பிஞ்சல் ஆற்றில் கட்டப்பட்டுள்ள பிஞ்சல் அணையின் வழியாக தமன் கங்கா வடிநிலத்தில் உள்ள நீர்த்தேக்கங்களிலிருந்து மும்பைக்கு உபரிநீரை திசை திருப்ப இந்தத் திட்டம் முன்மொழிகிறது.

**7.** சச்சின் டெண்டுல்கரின் அரிய உலகக்கோப்பை சாதனையை முறியடித்த இக்ரம் அலி கில், எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

A) ஆப்கானிஸ்தான்

B) தென்னாப்பிரிக்கா

C) பாகிஸ்தான்

D) இங்கிலாந்து

- ✓ சச்சின் டெண்டுல்கரின் நீண்டநாள் உலகக்கோப்பை சாதனையை ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வீரர் இக்ரம் அலி கில் முறியடித்தார். மேற்கிந்தியத்தீவுகள்–ஆப்கானிஸ்தான் இடையே ஜூலை.4 அன்று லீட்ஸில் நடந்த ஆட்டத்தில், இக்ரம் அலி சிறப்பாக ஆடி 86 ரன்களை எடுத்தார். கடந்த 1992ஆம் ஆண்டு உலகக்கோப்பையில், ஜிம்பாப்வே அணிக்கு எதிராக சச்சின் 81 ரன்களை எடுத்திருந்தார்.

- ✓ அப்போது அவர் 18 ஆண்டுகள், 318 நாள் என்ற வயதில் உலகக்கோப்பை வரலாற்றில் எண்பதுக்கும் அதிகமான ரன்களை எடுத்த சாதனையை நிகழ்த்தினார். இந்நிலையில் தற்போது இக்ரம் அலி அதை

முறியடித்துள்ளார். 18 ஆண்டுகள், 278 நாள்கள் என்ற வயதில் அவர் 86 ரன்களை எடுத்து சச்சினின் சாதனையை முறியடித்தார்.

## 8. NITI ஆயோக்கின் நடப்பாண்டு AMFFR குறியீட்டில், முதலிடம் பிடித்துள்ள மாநிலம் எது?

A) குஜராத்

B) மத்தியப்பிரதேசம்

C) இராஜஸ்தான்

D) மகாராஷ்டிரா ☑

✓ NITI ஆயோக் வெளியிட்டுள்ள “Agricultural Marketing and Farmer Friendly Reforms Index – வேளாண் சந்தைப்படுத்தல் மற்றும் உழவர்க்கு உகந்த சீர்திருத்த குறியீட்டில் – AMFFRI” மகாராஷ்டிர மாநிலம் முதலிடத்தைப் பிடித்துள்ளது. வேளாண் சந்தைப்படுத்துதலில் மாநிலங்கள் மேற்கொண்ட சீர்திருத்த -ங்களின் அடிப்படையில் இந்தக் குறியீடு அவற்றை வரிசைப்படுத்தியுள்ளது. குஜராத் நூற்றுக்கு 71.5 மதிப்பெண்ணுடன் 2ஆவது இடத்தில் உள்ளது. இராஜஸ்தான் & மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

✓ NITI ஆயோக், APMC சட்டத்தின்கீழ் முன்மொழியப்பட்ட e-NAM திட்டத்தில் சேருதல், சந்தைப்படுத்தும் பழங்கள் மற்றும் காய்கறிகளுக்கான சிறப்பு சிகிச்சை மற்றும் மண்டிகளில் வரிகளின் அளவு போன்ற ஏழு விதிகளை அமல்படுத்துவதன் அடிப்படையில் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை தரவரிசைப்படுத்த ஒரு குறியீட்டை அறிமுகப்படுத்தியது. இந்தச் சுட்டிகள் (Indicators) வேளாண் வணிகத்தை எளிதாக்குவதையும், நவீன வணிகத்தின் மூலம் விவசாயிகள் பயனடைவதற்கான வாய்ப்புகளையும் வெளிப்படுத்துகின்றன. மேலும் அவர்களது விளைபொருட்களை விற்பனை செய்வதற்கான பரந்த வாய்ப்பையும் இது கொண்டுள்ளது. இந்தச் சுட்டிகள் வேளாண் சந்தைகளில் போட்டித்திறன், செயல்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றையும் குறிக்கின்றன.

## 9. எந்த மாநிலத்தில், அத்தி வரதர் திருவிழா தொடங்கியுள்ளது?

A) தமிழ்நாடு ☑

B) கேரளா

C) ஆந்திரப்பிரதேசம்

D) கர்நாடகா

✓ தமிழ்நாட்டின் காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள வரதர் கோவிலில் ஜூலை.1 அன்று அத்தி வரதர் திருவிழா தொடங்கியது. அத்திமரத்தாலானவர் என்பதால் அவருக்கு ‘அத்தி’வரதர் எனப்பெயர். ‘அனந்தசரஸ்’ என அழைக்கப்படும் கோவில் குளத்தில் மூழ்கவைக்கப்பட்டிருக்கும் அவர், நாற்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியே கொண்டுவரப்பட்டு, 45 நாட்களுக்கு பூஜை செய்யப்பட்ட பின்பு மீண்டும் அக்குளத்திலேயே மூழ்கவைக்கப்படுவார்.

- ✓ கடைசியாக அவர் வெளியே வந்தது 1979ஆம் ஆண்டு ஜூலை.2 அன்று, அதற்கு முன்னதாக 1939ஆம் ஆண்டு ஜூலை.12 அன்று அவர் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். திருவிழாவின் முதல் நாளன்று ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் அத்திவரதரை தரிசிக்க கோவிலுக்குத் திரண்டனர்.

**10.** ஈராக்கின் எப் பண்டைய தளம், UNESCO உலக பாரம்பரியக் களமாக அறிவிக்கப்பட்டுள்ளது?

A) பாபிலோன் ☑

B) பாக்தாத்

C) மோசுல்

D) கர்பலா

- ✓ பண்டைய மெசபடோமிய நாகரிகத்தின் முக்கிய அங்கமாக திகழ்ந்த பாபிலோன் நகரம், உலக பாரம்பரியக் களமாக அங்கீகாரம் அளிக்கப்படுவதாக UNESCO தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகளின் மதிப்புமிக்க இடங்களின் பட்டியலில் 4,000 ஆண்டுகள் பழமையான நகரமான பாபிலோனை சேர்க்க வேண்டும் என்று 1983ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து ஈராக் கூறிவருகிறது.

- ✓ ஹம்முராபி மற்றும் நேபுகாத்நேச்சார் போன்ற சிறந்த ஆட்சியாளர்களின் கீழ், அடுத்தடுத்த பேரரசுகள் பாபிலோனை ஆண்டது. நியோ-பாபிலோனிய சாம்ராஜ்யத்தின் படைப்பாற்றலின் வெளிப்பாட்டை பாபிலோன் பிரதிபலிக்கிறது. பண்டைய உலகின் ஏழு அதிசயங்களுள் ஒன்றாக பாபிலோன் திகழ்கிறது. இங்குள்ள மாளிகையின் தொங்கும் தோட்டங்கள் – உலகளவில் கலை, பிரபலமான மற்றும் மத கலாச்சாரத்திற்கு ஊக்கம் அளிக்கக்கூடியனவாகும்.

- ✓ எனினும் இப்பகுதி ‘மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலையில்’ இருக்கிறது. கடந்த நூற்றாண்டில் சதாம் உசேனுக்கு இங்கு ஓர் அரண்மனை கட்டப்பட்டதிலிருந்தும், அதனைத்தொடர்ந்து அமெரிக்க படைப் பிரிவுகளுக்கான தளமாக பயன்படுத்தப்படுவதிலிருந்தும் இத்தளம் அண்மைய ஆண்டுகளில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளுக்கு இத்தகைய போர்ச்சூழலிலிருந்து ‘அவசரகால பாதுகாப்பு தேவை’ என்றும் UNESCO எச்சரித்துள்ளது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ பயிர்சாகுபடியில் களை வராமல் இருக்கவும், அதிக மகசூல் ஈட்டவும் விவசாயிகளுக்கு ‘களைப்பாய் தொழில்நுட்பத்தை’ (Weedmat / Multhing) தோட்டக்கலைத்துறை பரிந்துரை செய்துள்ளது. இஸ்ரேல் தொழில்நுட்பத்தில் இந்த முறை கடைப்பிடிக்கப்படுகிறது.

- ✓ 10ஆவது உலக தமிழாராய்ச்சி மாநாடு, அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் 32ஆவது தமிழ் விழா, சிகாகோ தமிழ்ச்சங்கத்தின் வெள்ளி விழா ஆகிய முப்பெரும்விழா அமெரிக்காவின் சிகாகோ நகரில் ஜூலை 4 – 7 வரை நடந்தது. ‘கீழடி – நம் தாய்மடி’ என்பது இந்த மாநாட்டுக்கான கருப்பொருளாகும். அப்போது, தமிழ் இயக்கம் பதிப்பித்த 46,000 தனித்தமிழ்ப் பெயர்கள் கொண்ட “சூட்டி மகிழ்வோம் தமிழ்ப்பெயர்கள்” எனும் நூலை தமிழ்நாட்டின் தமிழ் வளர்ச்சி, தொல்லியல் துறை அமைச்சர் க. பாண்டியராஜன் வெளியிட்டார். ஜூலை 6 மற்றும் 7 ஆகிய தேதிகளில் தமிழர்களின் வணிக பொருளாதாரம் தொடர்பான மாநாடும் நடந்தது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.** “War over Words: Censorship in India, 1930 – 1960” என்ற நூலின் ஆசிரியர் யார்?




A) ரோஹிந்தன் மிஸ்திரி

B) தேவிகா சேதி ☑

C) அமிதவ் கோஷ்

D) சுதீப் நாகர்கர்

✓ மண்டி ஐஐடி நிறுவனத்தின் நவீன வரலாற்றாசிரியரான தேவிகா சேதி, “War over Words: Censorship in India, 1930 – 1960” என்ற நூலை எழுதியுள்ளார். தணிக்கைக்கான (Censorship) பல்வகைப்பட்ட வழிமுறைகள் மற்றும் உந்துதல்கள் மற்றும் நவீன இந்திய குடியரசை வடிவமைப்பதில் தணிக்கையின் பங்கு ஆகியவற்றை இந்நூல் ஆராய்கிறது.

✓ அரசைக் காத்தல், பொதுமக்களைப் பாதுகாத்தல்: 1930களில் தணிக்கை கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்; ஆர்ப்பாட்டங்கள் மற்றும் விளம்பரம்: இந்தியரல்லாத ஆசிரியர்களைத் தடை செய்தல்; அரசியலா / இராணுவமா? 2ஆம் உலகப்போரின்போது இந்தியாவில் தணிக்கை; மற்றும் தணிக்கை முறை தணிக்கைகள்: சுதந்தரம் மற்றும் சுதந்தரமான பேச்சு முதலிய நான்கு பகுதிகளாக இந்நூல் பிரிக்கப்பட்டுள்ளது.

**2.** மிதிவண்டி பகிர்வு திட்டத்தை (Bicycle Sharing Scheme) அறிமுகப்படுத்த முடிவு செய்துள்ள யூனியன் பிரதேசம் / மாநிலம் எது?

A) தமிழ்நாடு

B) கர்நாடகா

C) ஒடிசா

D) புதுச்சேரி ☑

Government of Puducherry

✓ புதுச்சேரி பொலிவுறு நகர மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், வரும் ஓரிரு மாதங்களில் மிதிவண்டி பகிர்வு திட்டத்தை அறிமுகப்படுத்த ஒன்றிய பிரதேச அரசு முடிவு செய்துள்ளது. பதிவுசெய்த பயனர்கள், மிதிவண்டிகளைப் பயன்படுத்தி ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு நெடுஞ்சாலைப் பகுதிக்குள் செல்லலாம். பயன்படுத்திய பின், மிதிவண்டிகளை எந்தவொரு நிறுத்தகத்திலும் விடலாம். இதற்கென 100 மிதிவண்டித்துறைகள் (Docking Station) அடையாளங்காணப்பட்டுள்ளன.

✓ தொடக்கத்தில், கடற்கரை உலாப்பகுதி, பாரதி பூங்கா, காந்தி திடல், ஆரோபிந்தோ ஆசிரமம் மற்றும் இரயில் நிலையம் போன்ற இடங்களில் தலா 10 – 15 மிதிவண்டிகளுடன் 20 துறைகள் அமைக்கப்பட உள்ளன. புதுச்சேரிக்கு வரும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளுக்கு இப்புதுமையான திட்டம் ஒரு வரப்பிரசாதமாகும், வார இறுதிநாட்களில் வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அங்கு பல்லாயிரங்களாக உயர்கின்றன. புதுச்சேரி பொலிவுறு நகர திட்டத்தின் 22 முன்னுரிமைத் திட்டங்களில் இந்தத் திட்டமும் ஒன்றாகும். இதற்காக சுமார் 194 கோடி ரூபாய் செலவிடப்படும்.

**3.** நடப்பாண்டு உலக இளையோர் கோப்பையில் வெள்ளிப்பதக்கம் வென்ற அரிஞ்சீதா டே, எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராவார்?

A) மேற்கு வங்கம் ☑

B) உத்தரப்பிரதேசம்

C) ஜார்க்கண்ட்

D) ஹரியானா

✓ குரோஷியாவின் உமாக் நகரில் நடந்த நடப்பாண்டு உலக இளையோர் கோப்பையில், மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த கிராமத்துச்சிறுமியான அரிஞ்சீதா டே 12 வயதுக்குட்பட்டோர் பிரிவில் வெள்ளி வென்றுள்ளார். இந்தப் போட்டியை, சர்வதேச ஒலிம்பிக் சங்கத்துடன் இணைந்த உலக கராத்தே கூட்டமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. இந்தப் போட்டியில் மொத்தம் 35 நாடுகள் பங்கேற்றன.

**4.** ரிலையன்ஸ் ஜியோ தனது டிஜிட்டல் உதானுக்காக (Digital Udaan) எந்த சமூக ஊடக தளத்துடன் கூட்டிணைந்துள்ளது?

A) இன்ஸ்டாகிராம்

B) டுவிட்டர்

C) பேஸ்புக் ☑

D) வாட்ஸ் ஆப்

✓ ஜியோபோன் பயனாளர்களுக்கும், புதிதாக இணையத்தை பயன்படுத்துவோருக்கும் இணையதள உபயோகம் குறித்து பயிற்சியளிப்பதற்காக ‘டிஜிட்டல் உதான்’ எனப் பெயரிடப்பட்ட ஒரு நாடு தழுவிய டிஜிட்டல் கல்வியறிவு இயக்கத்தை தொடங்க ரிலையன்ஸ் ஜியோ இன்போகாம் நிறுவனம் பேஸ்புக் சமூக ஊடக தளத்துடன் இணைந்துள்ளது.

✓ இந்த முயற்சியின் கீழ், ஒவ்வொரு சனிக்கிழமையும் ஜியோ தனது பயனர்களுடன் அதன் 4G VoLTE அம்ச தொலைபேசியின் (JioPhone என அழைக்கப்படுகிறது) அம்சங்கள், பல்வேறு செயலிகளின் பயன்பாடு மற்றும் இணைய பாதுகாப்பு மற்றும் பேஸ்புக் பயன்படுத்துவது உள்ளிட்ட இணையம் சார்ந்த விஷயங்களைப் பகிர்ந்துகொள்ளும். அதன்படி ஜியோ மற்றும் பேஸ்புக் நிறுவனம் இணைந்து இணையதளத்தை பயன்படுத்துவது குறித்து ஒலி – ஒளி பதிவை தயாரித்துள்ளது.

✓ இப்பதிவு 10 இந்திய மொழிகளில் அமைந்துள்ளது. முதற்கட்டமாக இத்திட்டம் 13 மாநிலங்களிலுள்ள 200 இடங்களில் அமல்படுத்தப்படுகிறது. அதன் பிறகு நாட்டிலுள்ள 7000 இடங்களுக்கு இத்திட்டம் விரிவாக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**5.** சில்லறை மற்றும் MSME கடன்களை செயலாக்க மையப்படுத்தப்பட்ட நடுவத்தை (Centralized Hub) அமைத்துள்ள பொதுத்துறை வங்கி எது?

A) பாரத ஸ்டேட் வங்கி

B) பஞ்சாப் தேசிய வங்கி

C) பஞ்சாப் மற்றும் சிந்து வங்கி ☑

D) தேனா வங்கி

- ✓ பஞ்சாப் மற்றும் சிந்து வங்கியானது கடன் வசதிகளுக்காக மையப்படுத்தப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) மற்றும் சில்லறை குழுமத்தை (Cen – MARG) புது தில்லியில் உள்ள அதன் தலைமை அலுவலகத்தில் அமைத்துள்ளது. இம்மையப்படுத்தப்பட்ட அமைப்பில், அனைத்து MSME மற்றும் சில்லறை கடன் ஒப்புதல்களும் செயலாக்கப்படும். சில்லறை மற்றும் MSME கடன் மற்றும் மேம்பட்ட வாடிக்கையாளர் சேவையில் கிளைகள் சிறப்பாக கவனம் செலுத்த இது உதவும்.

- ✓ Cen – MARG பல்வேறு கட்டமாக இந்தியா முழுவதுமுள்ள அதன் கிளைகளுடன் இணைக்கப்படும். கடன் மதிப்பீட்டில் தரமான முன்னேற்றம், மேம்பட்ட சென்றுவரு நேரம் (Turnaround time), சீரான ஆவணமாக்கல் மற்றும் திறமையான கண்காணிப்பு ஆகியவற்றை இது உறுதி செய்யும்.

**6.** WEFஇன் சர்வதேச கலங்கரை விளக்க வலையமைப்பில் சேர்க்கப்பட்டுள்ள இந்திய உற்பத்தி ஆலை எது?

A) ஜிண்டால் எஃகு மற்றும் ஆற்றல் நிறுவனம்

B) துர்காபூர் எஃகு ஆலை

C) ரூர்கேலா எஃகு ஆலை

D) டாடா எஃகு கலிங்காநகர் ☑

- ✓ டாடா எஃகு கலிங்காநகர் (TSK) ஆனது உலக பொருளாதார மன்றத்தின் (World Economic Forum) Global Lighthouse Network (GLN)இல் சேர்க்கப்பட்ட முதல் மற்றும் ஒரே இந்திய உற்பத்தி ஆலை ஆகும். நிதியியல் மற்றும் செயல்பாட்டு தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக நான்காவது தொழிற்துறை புரட்சி தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் அவற்றின் தலைமைத்துவத்திற்காக கலங்கரை விளக்கங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

- ✓ இந்தத் தொழில்நுட்பங்களை ஒருங்கிணைப்பதில் அவை அடைந்த வெற்றியின் அடிப்படையில் தொழிற்சாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. நெதர்லாந்தில் உள்ள டாடா எஃகின் IJmuiden ஆலை, ஏற்கனவே இந்த வலையமைப்பில் உறுப்பினராக உள்ளது. TSK எஃகு ஆலை இந்தியாவின் மிகப் பெரிய ஒற்றை – இருப்பிட (Single – Location) பைம்புல (Greenfield) எஃகு திட்டமாகும். இது ஒடிசாவின் ஜஜ்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது.

**7.** சமீபத்தில் எந்நகரத்தில், இந்தியாவின் முதல் வடிவமைப்பு மேம்பாட்டு மையமான ‘Fashionova’ தொடங்கப்பட்டது?

A) புனே

B) சூரத் ☑

C) அகமதாபாத்

D) தில்லி

- ஆடை வணிக ஆர்வலர்களுக்கு ஒரு தளத்தை வழங்குவதற்காக, குஜராத் மாநிலத்தின் ஜவுளி நகரமான சூரத்தில் அண்மையில் இந்தியாவின் முதல் வடிவமைப்பு மேம்பாட்டு மையம் தொடங்கப்பட்டது. இணை – பணிபுரி வெளி (Co – Working Space), தொழில்நுட்ப வல்லுநர்கள், வல்லுநர்களின் ஆலோசனை முதல் அறிவுத்திறன் பயிலரங்கங்கள், தொழிற்துறை அறிவு வரையிலான அனைத்து வணிகத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பை இது வழங்கும். ஆடை வணிகத்தில் திறமையுள்ள அனைவருக்கும் ஒரு வலுவான தளத்தை வழங்குவதே இந்த மையத்தின் முக்கிய நோக்கமாகும்.

## 8. கார்கில் அஞ்சலிப் பாடலை இயற்றிய பிரபல ஹிந்தி பாடலாசிரியர் யார்?

A) A M துராஸ்

B) சுவானந்த் கிர்கிரே

C) சமீர் அஞ்சான் ☑

D) நீலேஷ் மிஸ்ரா

- ஜூலை.26 அன்று, கார்கில் வெற்றி நாளின் இருபதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் விதமாக, கார்கில் தியாகிகள் மற்றும் போர் வீரர்களுக்கு மரியாதை, வணக்கம் & அஞ்சலி செலுத்துவதற்காக இராணுவ தலைமைத் தளபதி பிபின் ராவத், புது தில்லியில் நடந்த ஒரு விழாவில் கார்கில் அஞ்சலிப் பாடலை வெளியிட்டார். சதாத்ரு கபீர் பாடியுள்ள இந்தப் பாடலை பிரபல ஹிந்தி பாடலாசிரியர் சமீர் அஞ்சான் இயற்றியுள்ளார். இப்பாடலுக்கு ராஜூ சிங் என்பவர் இசையமைத்துள்ளார். நடப்பாண்டில், "Remember, Rejoice and Renew – நினைவுகூர், மகிழ் மற்றும் புதுப்பி" என்னும் கருப் பொருளுடன் இந்நாள் கொண்டாடப்படவுள்ளது.

## 9. தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தின் (NSDC) தற்போதைய தலைவர் யார்?

A) மனிஷ் குமார்

B) ஜோத்ஸ்னா சிட்லிங்

C) K P கிருஷ்ணன்

D) அனில் மணிபாய் நாயக் ☑

- 'WorldSkills Indiaவின் பன்னாட்டு மேகக்கணிமை சவால் 2019 –International Cloud Computing Challenge 2019'ஐ தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் (NSDC) இணைந்து NASSCOM நடத்தவுள்ளது. இந்தப் போட்டியில் நியூசிலாந்து, பெல்ஜியம், ஜப்பான், சீனா, தென்கொரியா, இரஷ்யா, ஓமன், அயர்லாந்து ஆகிய நாடுகளுடன் இந்தியா உள்ளிட்ட 10 நாடுகள் பங்கேற்கின்றன. வரும் ஆகஸ்டில் இரஷ்யாவின் கசானில் நடைபெறவுள்ள 45ஆவது "WorldSkills சர்வதேச போட்டி 2019"இல் இறுதிப்போட்டியாளர்கள் போட்டியிடுவார்கள்.

- 'WorldSkills India' என்பது 2011ஆம் ஆண்டில் NSDCஆல் தொடங்கப்பட்ட ஒரு முன்னெடுப்பாகும். இது தொழிற்துறை 4.0க்குத் தேவையான முக்கிய தொழிற்முறை திறன் தொகுப்புகளுடன் போட்டியிடவும், பட்டறியவும், அவற்றைக் கற்றுக்கொள்ளவும் மற்றும் மேம்படுத்தவும் இளையோருக்கு ஒரு தளத்தை

வழங்குகிறது. NSDC புது தில்லியை தலைமையிடமாகக் கொண்டுள்ளது மற்றும் அனில் மணிபாய் நாயக் அதன் தலைவராக உள்ளார்.

**10.** நடப்பாண்டின் சர்வதேச கூட்டுறவு நாளுக்கான கருப்பொருள் என்ன?

A) Cooperative Enterprise Empowers Women

B) Coops 4 Decent Work

C) Co-operatives ensure no one is left behind

D) Choose co-operatives, choose equality

✓ நாட்டின் சமூக – பொருளாதார வளர்ச்சியில் முக்கிய இடம் வகிக்கும் கூட்டுறவுத்துறையை அங்கீகரிக்கும் வகையில், சர்வதேச கூட்டுறவு ஒன்றியமானது 1923ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை மாதம் முதலாவது சனிக்கிழமையன்று சர்வதேச கூட்டுறவு நாளை (International Co-operative Day) கடைப்பிடித்துவருகிறது. நடப்பாண்டில் ஜூலை.6 அன்று அனுசரிக்கப்பட்ட சர்வதேச கூட்டுறவு நாளுக்கான கருப்பொருள், "Coops 4 Decent Work" என்பதாகும்.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ ஆயுஷ்மான் பாரத் – பிரதமர் ஜன் ஆரோக்யா திட்டத்தின்கீழ், ரூ.399 கோடி நிதிக்கோரிக்கையுடன் தமிழ்நாடு 2ஆம் இடத்தில் உள்ளது.

✓ 34ஆவது உள்விழி வைப்பு மற்றும் ஒளிவிலகல் அறுவைசிகிச்சை மாநாட்டினை (Intraocular Implant and Refractive Society of India – IIRSI) தமிழ்நாடு முதலமைச்சர் கே பழனிசாமி தொடங்கிவைத்தார்.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.** எந்த மாநில அரசு தனது சொந்த விதைகளை சா – பீஜ் (Sah – Beej) என்ற பெயரில் தயாரிக்க முடிவு செய்துள்ளது?

A) சத்தீஸ்கர்

B) உத்தரப்பிரதேசம்

C) இராஜஸ்தான்

D) மத்தியப்பிரதேசம் ☑

- ✓ சான்றளிக்கப்பட்ட (Certified) மற்றும் உயர்தர விதைகளை விவசாயிகளுக்கு விநியோகிப்பது மற்றும் சந்தைப்படுத்துவது ஆகியவற்றோடு தனது சொந்த விதைகளை ‘சா – பீஜ்’ என்ற பெயரில் தயாரிப்பதற்கு மத்தியப்பிரதேச மாநிலத்தின் கூட்டுறவு விதை கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.
- ✓ போபாலில், ஜூலை.9 அன்று கூட்டுறவுத்துறை அமைச்சர் கோவிந்த் சிங் தலைமையில் நடந்த இயக்குநர்கள் வாரிய கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது. அடுத்த குறுவைப் பருவத்திலிருந்து விதைகளை உற்பத்தி செய்ய திட்டம் தீட்டப்பட்டுள்ளது. மாநிலத்தில் உள்ள விதைக்குழுக்கள், விதை கூட்டமைப்புடன் இணைக்கப்பட்டு விதை சந்தைப்படுத்துதலுக்காக அவை பயன்படுத்தப்படும்.

**2.** தேசிய கிரிக்கெட் அகாடமியின் (NCA) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A) சௌரவ் கங்குலி

B) விவிஎஸ் இலட்சுமணன்

C) அனில் கும்ப்ளே

D) இராகுல் டிராவிட் ☑

- ✓ இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டனான இராகுல் டிராவிட், பெங்களூரில் உள்ள தேசிய கிரிக்கெட் அகாடமியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தேசிய கிரிக்கெட் அகாடமியின் கிரிக்கெட் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்பார்வையிடுவார். மேலும், NCAஇல் வீரர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் உதவி ஊழியர்களை வழிநடத்துதல், பயிற்சி & ஊக்குவித்தல் ஆகியவற்றில் ஈடுபடுவார்.
- ✓ இந்தியா A அணி, 19 மற்றும் 23 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் அணி ஆகியவற்றுக்கும் இராகுல் டிராவிட் ஆலோசனை வழங்குவார். மேலும், தேசிய ஆண்கள் மற்றும் பெண்கள் அணி பயிற்சியாளர்களுடனும் ராகுல் டிராவிட் இணைந்து பங்களிப்பார். தலைமைப்பயிற்சியாளர்களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கும் அவர் பொறுப்பாவார்.

**3.** புட்ஜ் பிம் (Budj Bim) கலாசார தலம், எந்த நாட்டில் அமைந்துள்ளது?

A) மேற்கிந்தியத் தீவுகள்

B) நியூசிலாந்து

C) ஆஸ்திரேலியா ☑

D) இங்கிலாந்து

✓ தென்மேற்கு விக்டோரியாவில் உள்ள புட்ஜ் பிம் கலாசார தலமானது அதன் பழங்குடி கலாசார முக்கியத்துவத்துக்காக மட்டும் உலக பாரம்பரிய பாதுகாப்பைப் பெற்ற ஆஸ்திரேலியாவின் முதல் தலமாக மாறியுள்ளது. இது ஜூலை.6 அன்று, அசர்பைஜானின் பாகுவில் நடைபெற்ற கூட்டத்தில் UNESCO உலக பாரம்பரியக் களப் பட்டியலில் (World Heritage Site) சேர்க்கப்பட்டது.

✓ உலகின் பழமையான நன்னீர் மீன் வளர்ப்பு அமைப்புகளில் ஒன்றாக கருதப்படுகிற இந்தத் தளம், சுமார் 6,600 ஆண்டுகளுக்கு முன்பு குண்டிட்ஜ்மாரா (Gunditjmara) பழங்குடியின மக்களால் உருவாக்கப்பட்டது. அனைத்துப் பழங்குடியின மக்களும் நாடோடிகள் என்ற பொதுவான கருத்தை உடைக்கும் விதமாக, சுமார் 300 வட்டக்கல் குடிசைகளின் எச்சங்கள் இந்தத் தளத்தில் உள்ளன.

**4.** இந்தியாவின் எந்த மாநிலத்தில், ஆசியாவின் முதல் சிக்ஸ் சிக்மா மலையக மருந்துகள் மற்றும் மிக்கவுயர மீட்பு நிறுவனம் (Six Sigma Institute of Mountain Medicines and High Altitude Rescue) அமையவுள்ளது?

A) ஹிமாச்சல பிரதேசம்

B) உத்தரகாண்ட் ☑

C) ஜம்மு & காஷ்மீர்

D) சிக்கிம்

✓ ஆசியாவின் முதல் சிக்ஸ் சிக்மா மலையக மருந்துகள் மற்றும் மிக்கவுயர மீட்பு நிறுவனமானது உத்தரகாண்ட் மாநிலத்தின் ருத்ரபிரயாக்கில் அமைக்கப்படவுள்ளது. அம்மாநிலத்தின் ருத்ரபிரயாக் மாவட்டத்தில், ரூ.750 கோடி மதிப்பிலான பிரம்மாண்ட மலையக நிறுவனத்தை நிறுவுவதற்கான திட்டத்திற்கு, உத்தரகாண்ட் முதலமைச்சர் திரிவேந்திர சிங் ராவத் ஒப்புதல் அளித்ததை அடுத்து இது அமைக்கப்பட உள்ளது. இந்நிறுவனம், உத்தரகாண்டில் 1200 பணிவாய்ப்பை உருவாக்கும், மேம்பட்ட சுகாதார பராமரிப்பு, மேம்பட்ட கல்வி மற்றும் மீட்புப் பயிற்சி ஆகியவற்றை வழங்கும்.

✓ அலோபதி, ஹோமியோபதி, ஆயுர்வேதம், இயற்கை மருத்துவம் மற்றும் யோகா ஆகியவற்றில் மிக உயர்ந்த மலைகளுடன் தொடர்புடைய அனைத்து வகையான ஆராய்ச்சிகளை வளர்த்தெடுப்பதும், மலையக மருந்துகள் குறித்து வல்லுநர்களுக்கு கற்பிப்பதும் இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். முக்கிய பிரச்சனைகளில் மத்திய மற்றும் மாநில அரசுக்கு ஆலோசனைகளை வழங்குவதோடு, மலையகங்களில் நலமிக்க வாழ்க்கை முறையை மேம்படுத்தவும் இந்நிறுவனம் உதவும்.

## 5. ‘உத்கர்ஷ் 2022 – Utkarsh 2022’ என்ற சொல், எந்த அமைப்புடன் தொடர்புடையது?

A) இந்திய காப்பீடு ஒழுங்காற்று மற்றும் வளர்ச்சி முகமை

B) தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி

C) இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம்

D) இந்திய ரிசர்வ் வங்கி ☑

- ✓ மத்திய வங்கியின் ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வைத் திறனை மேம்படுத்துவதற்காக இந்திய ரிசர்வ் வங்கியின் வாரியம் ‘உத்கர்ஷ் 2022’ என்ற மூன்றாண்டு செயல்திட்டத்தை இறுதி செய்துள்ளது. ஒழுங்குமுறை & மேற்பார்வை முறைகளை வலுப்படுத்துவதற்கான பன்னாட்டு மத்திய வங்கிகளின் திட்ட வரிசையில் இந்த மத்திம கால உத்தி (Medium Term Strategy) உள்ளது.
- ✓ எதிர்காலத்தில் வேறு எந்த உட்கட்டமைப்பு குத்தகை & நிதியியல் சேவைகள் (IL&FS) கடன்களின் இயல்புநிலை சிக்கல்களைத் தவிர்ப்பதற்கான மத்திய வங்கியின் பங்கும் இதில் அடங்கும். ஜூலை 2019 – ஜூன் 2020 காலத்திற்கான ரிசர்வ் வங்கியின் வரவு செலவுத் திட்டத்திற்கும் இந்திய ரிசர்வ் வங்கி வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

## 6. பருவமழையை கணிப்பதற்கென அடையாளம் காணப்பட்டுள்ள புதிய முறை எது?




A) Xenon – 7

B) Krypton – 7

C) Argon – 7

D) Beryllium – 7 ☑

- ✓ முழுமையான அணுகுண்டு சோதனைத் தடை உடன்பாடு அமைப்பானது (CTBTO) வியன்னாவில் ஏற்பாடு செய்திருந்த அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மாநாட்டில், பருவமழையை கணிப்பதற்கான ஒரு புதிய வழிமுறையை பெல்ஜிய அணு ஆராய்ச்சி மையத்தின் (SCKCEN) ஆராய்ச்சியாளர் லுக்ரேஷியா டெர்சி (Lucrezia Terzi) அறிமுகப்படுத்தினார். இப்புதிய முறையானது காற்றில் Beryllium – 7 (பெரிலியம் என்ற தனிமத்தின் ஐசோடோப்பு) எவ்வளவு உள்ளது என்பதை கணக்கிடுகிறது.
- ✓ படைமண்டலத்தில் (Stratosphere) மட்டுமே உருவாகும் காரணத்தால் Be – 7 தேர்வுசெய்யப்பட்டுள்ளது. அண்டக்கதிர்கள் நைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜனின் உட்கருக்களைத் தாக்கி உடைக்கும்போது மட்டுமே Be – 7 படைமண்டலத்தில் உருவாகும். வெவ்வேறு அட்சரேகைகளில் பெருங்கடல்களை சூரியன் வெவ்வேறு விதமாக வெப்பமாக்குவதாலும், புவியின் சுழற்சி காரணமாகவும், நீரைக் கொண்டிருக்கும் காற்றானது வட்டவடிவில் மேல் நோக்கியும் கீழ் நோக்கியும் நகர்கிறது. இது பருவ காலம் உண்டாவதற்கான அடிப்படைக் காரணமாகும்.
- ✓ படைமண்டலத்திலிருந்து (புவியின் மேற்பரப்பிலிருந்து 33,000 அடி வரை) காற்று கீழே பாயும் போது, அது சில Be – 7ஐக் கொண்டுவருகிறது. Be – 7 அளவிற்கும் பருவமழை காலத்திற்கும் இடையிலான வலுவான தொடர்பை அது கொண்டுள்ளது.

**7.** மின்னணுத் தரவுத்தளங்களை சேதப்படுத்தும் அல்லது அழிக்கும் நிறுவனங்களுக்கு எதிராக செயல்படுவதற்காக SEBI சட்டத்தில், எந்தப் புதிய பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது?

A) பிரிவு 16A

B) பிரிவு 18AA

C) பிரிவு 19HA

D) பிரிவு 15HAA ☑

✓ நிதி மசோதா 2019இன்படி, மின்னணுத் தரவுத்தளங்களை சேதப்படுத்தும் அல்லது அழிக்கும் நிறுவனங்களுக்கும், மூலதன சந்தை ஒழுங்காற்றுநரால் கோரப்படும்போது தகவல்களை வழங்கத் தவறும் நிறுவனங்களுக்கும் எதிராக செயல்படுவதற்காக SEBI சட்டத்தில், பிரிவு 15HAA என்ற ஒரு புதிய பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. இதன்மூலம், இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) சில விதிமீறல்களுக்கு தரகர்களுக்கு ரூ.1 கோடி வரை அபராதம் விதிக்க முடியும்.

✓ WhatsApp மூலம் முக்கியமான தரவுகளை கசியவிடுவதை கண்காணிக்க ஒழுங்காற்றுநர் இருப்பதால், இப்புதிய அதிகாரங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. மேலும், சமீபத்தில், தேசிய பங்குச்சந்தையின் (NSE) இணை – இருப்பிட (Co – Location) விஷயத்தில் புதிய உத்தரவுகளையும் SEBI பிறப்பித்தது, அவை பத்திரங்கள் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் மேல்முறையீடும் செய்யப்பட்டன.

**8.** கேரளாவிலுள்ள எவ்விடம், இந்தியாவின் முதல் யானை மறுவாழ்வு மையமாக மாறவுள்ளது?

A) கோட்டூர் ☑

B) திருச்சூர்

C) ஆலப்புழா

D) கொல்லம்

✓ இந்தியாவின் முதல் யானை மறுவாழ்வு மையமானது கேரள அரசால் அம்மாநிலத்தின் தலைநகரான திருவனந்தபுரத்திற்கு அருகிலுள்ள சூழல் சுற்றுலா சிற்றூரான கோட்டூரில் அமைக்கப்படவுள்ளது. இம்மையத்தில் யானைகள் அருங்காட்சியகம், யானைப்பாகன்களுக்கான பயிற்சி மையம், மீச்சிறப்பு மருத்துவமனை, ஓய்வில்லம் மற்றும் விலங்குகளுக்கான தகன வசதி முதலானவை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு கைவிடப்பட்ட, காயமுற்ற & வயதான யானைகளும் பாதுகாக்கப்படும். இலங்கையில் உள்ள பின்னவாலா யானைகள் காப்பகத்தின் மாதிரியில் இது திட்டமிடப்பட்டுள்ளது.

**9.** இந்தியாவின் முதல் பசுக்கள் சரணாலயமானது, ம.பிஇன் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

A) நீமச்

B) அகர் மால்வா ☑

C) மண்டோசோர் D) உஜ்ஜைன்

✓ இந்தியாவின் முதல் பசுக்கள் சரணாலயமான காமதேனு காவ் அபயரண்யா, மத்தியப்பிரதேசத்தின் அகர் மால்வா மாவட்டத்தில் அமைந்துள்ளது. நிதியியல் நெருக்கடிகள் காரணமாக இந்தப் பசுக்கள் சரணாலயத்தை தனியார்மயமாக்க காங்கிரஸ் தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளதால் இது அண்மைய செய்தியில் இடம்பெறுகிறது. 472 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள இந்தச் சரணாலயத்தில், சுமார் 4,000 பசுக்கள் வசித்து வருகின்றன. இந்தச் சரணாலயத்தை ம.பிஇன் காவ் சம்வர்தன் வாரியம் ரூ.32 கோடி செலவில் உருவாக்கியது.

**10.** மனித உடலைப்பற்றிய முழுமையான புரிதலுக்காக எந்த மனித வரைபட திட்டத்தை (Human Atlas Initiative) மத்திய அரசு தொடங்கியுள்ளது?

A) குகை மனிதன்

B) மனிதன் (மானவ்)

C) முற்காலத்திய மனிதன்

D) நாகரிக மனிதன்

✓ உயிரித்தொழில்நுட்ப துறை மற்றும் Persistent Systems ஆகியவற்றால் மனித உடலைப்பற்றிய முழுமையான புரிதலுக்காக ‘மானவ்’ எனப் பெயரிடப்பட்டுள்ள ஒரு புதிய மனித வரைபட திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. மனித உடலில் உள்ள அனைத்துத் திசுக்களின் மூலக்கூறு வலையமைப்பின் ஒருங்கிணைந்த தரவுத்தளத்தை உருவாக்குவதும், மனித உடலின் செயல்பாட்டின் முழுமையான படத்தைப் பெறுவதும் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

✓ இது இறுதியில், தற்போதைய அறிவின் இடைவெளிகளைக் கண்டறிவதில் ஆராய்ச்சியாளர்களுக்கு உதவும் மற்றும் நோயறிதல் மற்றும் நோய் உயிரியலில் எதிர்கால திட்டங்களுக்கு உதவும். இந்தப் பொது – தனியார் திட்டத்தில், உயிரித்தொழில்நுட்ப துறை மற்றும் Persistent Systems ஆகியவை முறையே ரூ.13 கோடி மற்றும் ரூ.7 கோடி முதலீடு செய்யும். இந்தத் திட்டத்தை இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமும் (IISER), புனேவைச் சேர்ந்த தேசிய அறிவியல் அறிவியல் மையமும் (NCSS) இணைந்து செயல்படுத்தும்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.** 30ஆவது உலக பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகளில் (WUG-2019) 100 மீ., போட்டியில் தங்கம் வென்ற முதல் இந்திய ஸ்ப்ரிண்டர் யார்?

A) அஸ்வினி அக்குஞ்சி

B) சதி கீதா

C) ஹிமா தாஸ்

D) டூட்டி சந்த் ☑

✓ இத்தாலியின் நபோலியில் நடந்த 30ஆவது உலக பல்கலைக்கழகங்கள் இடையேயான விளையாட்டுப் போட்டியில், 100 மீ., ஓட்டத்தில் இந்திய தடகள வீராங்கனை டூட்டி சந்த் தங்கப்பதக்கம் வென்றுள்ளார். சுவிச்சர்லாந்தின் டெல் போன்டே வெள்ளிப்பதக்கமும், ஜெர்மனியின் லியா குவா யீ வெண்கலப் பதக்கமும் வென்றனர். இதன் மூலம், உலக பல்கலைக்கழகங்கள் இடையேயான போட்டியில் தங்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமையை டூட்டி சந்த் பெற்றுள்ளார்.

✓ இதற்கு முன்னர் பல்கலைக்கழகங்கள் இடையேயான விளையாட்டுப் போட்டிகள் வரலாற்றில் 100 மீ., இறுதிப்போட்டிக்கு எந்த இந்தியரும் தகுதி பெற்றதில்லை. 19 வயதான ஹிமா தாஸுக்குப் பிறகு, உலக அளவிலான நிகழ்வில் தங்கம் வென்ற இரண்டாவது இந்திய வீராங்கனை என்ற பெயரையும் டூட்டி சந்த் பெற்றுள்ளார்.

**2.** புகழ்பெற்ற கதிர்காமம் கோயில் அமைந்துள்ள நாடு எது?

A) நேபாளம்

B) இலங்கை ☑

C) மியான்மர்

D) வங்கதேசம்

✓ இலங்கையில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமம் கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழா தொடங்கியுள்ளது. இதில் அனைத்து மதங்களையும் சேர்ந்த பக்தர்களும் பங்கேற்றனர். 15 நாட்கள் நீடிக்கும் இந்தத் திருவிழாவில் இலங்கை மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த மக்களும் பங்கேற்கின்றனர். இந்தத்திருவிழா, அடுத்த வாரம் வரும் முழுநிலவு இரவில், 'நீர் வெட்டும்' விழாவுடன் முடிவடையும்.

✓ ஆண்டுதோறும் இம்மாதத்தில் நடைபெறும் இத்திருவிழாவைக் காண, இலங்கை முழுவதிலுமிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள், நாட்டின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள கதிர்காமத்தின் புனித ஆலயத்திற்கு வருகை தருகிறார்கள். இவ்விடம், ஸ்கந்த புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் பல நூற்றாண்டுகள் பழமையான 'கார்த்திகை தேவி'யாலும் இக்கோவில் பிரபலமாக அறியப்படுகிறது. அந்நாட்டில், 'கதிர்காம தேவியோ' என்று அத்தெய்வம் அழைக்கப்படுகிறது.

✓ கதிர்காமம் பல்வேறு மதத்தினர் வசிக்கும் ஒரு நகரமாகும். இந்தக் கோவில் வளாகத்தினுள்ளேயே ஒரு பள்ளிவாசலும் அருகிலேயே ஒரு பௌத்த கோவிலும் உள்ளது. இலங்கையிலுள்ள பௌத்த யாத்திரைக்கான 16 முக்கிய இடங்களுள் ஒன்றாக அது கருதப்படுகிறது. 15 நாட்கள் நடைபெறும் இத் திருவிழா, இலங்கையின் கலாசார மற்றும் ஆன்மீக நிகழ்வுகளுள் குறிப்பிடத்தக்க ஒன்றான எசல பெரஹராவையும் காண்கிறது. பெரஹராவின்போது, ஆட்டக்காரர்கள் மற்றும் மேளக்காரர்கள் புடை சூழ, நன்கு அலங்கரிக்கப்பட்ட யானையின் மீது 'கதிர்காம தேவி' வலம் வருவார்.

**3.** சிறைக்கைதிகளுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம், அஸ்ஸாமின் எம்மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது?

A) கசார்

B) போங்கைகோன் (Bongaigaon) ☑

C) கர்பி ஆங்கலாங்கு

D) கோகராஜார்

✓ அஸ்ஸாம் மாநிலத்தின், போங்கைகான் மாவட்டத்தில், சிறைக் கைதிகளுக்கான மூன்று மாத திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. சிறைக் கைதிகள் தங்களது தண்டனைக் காலத்தில் பலன்தரும் முயற்சிகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இது தவிர, கைதிகள் தங்களின் விடுதலைக்குப் பின்னர், வேலைவாய்ப்பைப் பெறவும் இது உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. திறன் மேம்பாட்டுப் பயிற்சி தவிர, போங்கைகான் மாவட்ட சிறைக்கைதிகளுக்கு ஒரு மாத கால யோகா பயிற்சியும் தொடங்கப்படவுள்ளது.

**4.** நடப்பாண்டின் AIFF ஆண்கள் கால்பந்து வீரராக தேர்வு செய்யப்பட்டுள்ளவர் யார்?

A) ஜேஜே லால்பெக்லுவா

B) லாலியன்சுவாலா சங்தே

C) அப்துல் சமத்

D) சுனில் சேத்ரி ☑

✓ இந்திய கால்பந்து சம்மேளனம் (AIFF) சார்பில் நடப்பாண்டுக்கான சிறந்த இந்திய கால்பந்து வீரருக்கான விருதுக்கு (AIFF Men's Footballer) சுனில் சேத்ரி தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்திய அணியின் கேப்டனான சுனில் சேத்ரி, 109 ஆட்டங்களில் பங்கேற்று 70 கோல்கள் அடித்துள்ளார். போர்ச்சுகலின் கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு (149) அடுத்தபடியாக சேத்ரி 2ஆவது அதிகபட்ச சர்வதேச மதிப்பெண் பெற்றவராக உள்ளார்.

✓ ISL கால்பந்தில் பெங்களூரு FC அணிக்காக விளையாடிவரும் சுனில் சேத்ரி இந்த விருதை பெறுவது இது 6ஆவது முறையாகும். ஏற்கனவே 2007, 2011, 2013, 2014, 2017ஆம் ஆண்டுகளிலும் அவர் இந்த பெருமையைப் பெற்றுள்ளார். 2018-19ஆம் ஆண்டின் வளர்ந்துவரும் வீரருக்கான விருதை (AIFF Emerging Men's Player) இந்திய நடுகள வீரர் அப்துல் சமாத்தும், தாங்கமெய் கிரேஸ் AIFF வளர்ந்து வரும் வீராங்கனைக்கான விருதையும் (AIFF Emerging Women's Footballer) பெறுகிறார்கள்.

✓ இந்தியாவின் சிறந்து கால்பந்து வீராங்கனை விருதை (AIFF Women's Footballer) ஆஷாலதா தேவி பெறுகிறார். இதே போல், சிறந்த நடுவராக தமிழ்நாட்டின் R வெங்கடேஷ் தேர்வு செய்யப்பட்டார்.

**5.** சமீபத்தில், நடுவணரசின் சாட்சிப் பாதுகாப்புத் திட்டத்தை செயல்படுத்திய மாநில அரசு எது?

A) இராஜஸ்தான்

B) ஜார்க்கண்ட்

C) ஒடிசா ☑

D) குஜராத்

✓ நவீன் பட்நாயக் தலைமையிலான ஒடிசா அரசு சமீபத்தில் மாநில உயர்நீதிமன்றத்தில் மத்திய அரசின் சாட்சிகள் பாதுகாப்புத் திட்டம் (Witness Protection Scheme) – 2018ஐ நடைமுறைப்படுத்தியுள்ளதாக அறிவித்தது. குற்றச் செயல்களில் விசாரணை, வழக்குத் தொடுப்பு மற்றும் நீதிமன்ற விசாரணை ஆகியவற்றில் எவ்வித பாரபட்சமும் இல்லை என்பதை உறுதிசெய்வதே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். ஏனெனில், பிற குற்றவாளிகளிடமிருந்து சாட்சிகள் வழங்கும் சாட்சியங்களை காக்க எவ்வித பாதுகாப்பும் இல்லா காரணத்தால் அவர்கள் மிரட்டப்படுகிறார்கள் / அச்சுறுத்தப்படுகிறார்கள்.

✓ மாநில அரசாங்கத்தின் அறிவிப்பின்படி, இந்தத் திட்டத்தில் அச்சுறுத்தல் கருத்துப்படி மூன்று வகை சாட்சிகள் உள்ளனர். விசாரணை அல்லது நீதிமன்ற விசாரணையின்போது சாட்சி அல்லது அவர்தம் குடும்ப உறுப்பினர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வழக்குகளை உள்ளடக்கியது வகை A ஆகும். விசாரணை அல்லது நீதிமன்ற விசாரணையின்போது சாட்சி அல்லது அவர்தம் குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்பு, நற்பெயர் அல்லது சொத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வழக்குகள் வகை B ஆகும். விசாரணை அல்லது நீதிமன்ற விசாரணையின்போதோ அல்லது அதற்குப் பிறகோ சாட்சி அல்லது அவர்தம் குடும்ப உறுப்பினர்களை மிதமாக அச்சுறுத்துவது அல்லது துன்புறுத்துவது, அவர்தம் புகழ் அல்லது சொத்துக்கு பங்கம் விளைவிப்பது வகை C ஆகும்.

✓ விசாரணையின்போது சாட்சியும் குற்றஞ்சாட்டப்பட்டவரும் நேருக்கு நேர் சந்தித்துக்கொள்ளாமல் பார்த்துக்கொள்ளுதல், பாதுகாத்தல் மற்றும் அடையாளத்தை மாற்றுதல், சாட்சியை இடமாற்றம் செய்தல், இரகசியத்தன்மை மற்றும் பதிவுகளை பாதுகாத்தல் மற்றும் செலவுகளை மீட்டெடுத்தல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகள் இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சங்களுள் அடங்கும்.

**6.** உள்நாட்டு விமானப் போக்குவரத்துத் தலைமை இயக்குநரகத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A) அருண்குமார் ☑

B) பிரதீப்குமார்

C) அதிதி சவுகான்

D) புரோனே ஹல்தர்

✓ 1989ஆம் ஆண்டு ஹரியானா பிரிவைச்சேர்ந்த அருண்குமார் IAS, உள்நாட்டு விமானப் போக்குவரத்துத் தலைமை இயக்குநரகத்தின் (DGCA) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர், உள்நாட்டு

விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் கூடுதல் செயலாளராகவும் உள்ளார். DGCA என்பது உள்நாட்டு வான் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழியங்கும் இந்திய அரசாங்கத்தின் உள்நாட்டு வான் போக்குவரத்துக்கான ஒழுங்குமுறை அமைப்பாகும். இது புது தில்லியை தலைமையிடமாகக் கொண்டுள்ளது. இந்த இயக்குநரகம் விமான விபத்துக்கள் மற்றும் சம்பவங்களை விசாரிக்கிறது.

**7.** பாரத் சஞ்சார் நிகாம் நிறுவனத்தின் (BSNL) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A) C K வினீத்

B) நாராயண் தாஸ்

C) பிரவீன்குமார் பர்வார் ☑

D) அனிருத் சிங்

- ✓ பாரத் சஞ்சார் நிகாம் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக பிரவீன்குமார் பர்வார் ஐந்தாண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். தற்சமயம் அவர், மகாநகர் தொலைபேசி நிகாம் நிறுவனத்தின் (MTNL) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக பணிபுரிந்து வருகிறார்.

**8.** அமராபாத் புலிகள் காப்பகம் அமைந்துள்ள மாநிலம் எது?

A) ஆந்திரப்பிரதேசம்

B) தெலுங்கானா ☑

C) கர்நாடகா

D) கேரளா

- ✓ தெலுங்கானாவில் உள்ள அமராபாத் புலிகள் காப்பகத்தில் யுரேனிய ஆய்வை மேற்கொள்ள 'கொள்கையளவில்' அனுமதிக்க மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் கீழ் வரும் வன ஆலோசனைக்குழு பரிந்துரைத்துள்ளது. கள ஆய்வுக்குப் பிறகு வன அதிகாரிகளால் வழங்கப்பட்ட அறிக்கைகளில் முரண்பாடுகள் இருந்தபோதிலும் இந்த ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது.

- ✓ திருத்தப்பட்ட இந்த முன்மொழிவு, அமராபாத் மற்றும் உடுமிலா பகுதிகளில் 76 கி.மீ., தூரத்துக்கும், அதற்கருகே ஆந்திராவில் உள்ள நாகர்ஜுனாசாகர் புலிகள் காப்பக பகுதியில் 7 கி.மீ., தூரத்துக்கும் அணு மின்னுற்பத்தியில் பயன்படுத்துவதற்காக யுரேனிய ஆய்வுமேற்கொள்ள அனுமதி கோருகிறது. இந்த ஆய்வின் சூழல் பாதிப்புகளுள் அரிப்பு, உறிஞ்சுத் துளைகள் உருவாகுதல், பல்லுயிர் இழப்பு, நிலத்தடி நீர், மேற்பரப்பு நீர் மற்றும் மண் மாசுபாடு ஆகியவை வனவுயிரிகளை பாதிக்கக்கூடும் என்று அவ்வறிக்கை குறிப்பிட்டுள்ளது. இருப்பினும், திருத்தப்பட்ட முன்மொழிவுகளுக்கு மீண்டும் மாநில வனவுயிரி வாரியத்தின் ஒப்புதல் தேவையில்லை.

- ✓ இறுதி ஒப்புதலுக்காக அவை நேரடியாக ஆலோசனைக் குழுவுக்கு அனுப்பப்படும், அதன்பிறகு முறையான உத்தரவுகள் மூலம் மாநில அரசாங்கம் அனுமதி வழங்கும். தற்போது வரை இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட யுரேனியப் படிமங்களானது குறைந்த தரம் கொண்டதாகவோ அல்லது குறைந்த எடைவீதம் உடையதாகவோ அல்லது இரண்டையும் கொண்டதாகவோ உள்ளன.

**9.** இந்திய இரயில்வேயின் சிறந்த புத்தாக்க விருதை (Best Innovation Award) வென்ற 'Plan Bee', எந்த இரயில்வே மண்டலத்துடன் தொடர்புடையது?

A) மேற்கு இரயில்வே

B) வடக்கு இரயில்வே

C) வடகிழக்கு எல்லைப்புற இரயில்வே ☑

D) வடக்கு மத்திய இரயில்வே

- ✓ வடகிழக்கு எல்லைப்புற இரயில்வேயின் (NFR) 'Plan Bee' முயற்சி 2018 – 19ஆம் நிதியாண்டிற்கான இந்திய இரயில்வேயின் சிறந்த புத்தாக்க விருதை வென்றுள்ளது. இரயில் தண்டவாளங்களை கடக்கும் யானைகளை இரயில்கள் தாக்காமல் தடுப்பதற்கு இந்த முயற்சி உதவுகிறது. இம்முயற்சியில் சாதனம் ஒன்று தேனீக்கூட்டத்தின் ரீங்காரம் போன்ற ஓர் ஒலியை இரயில் தண்டவாளங்கள் அருகே ஒலிபரப்பும். தேனீக்களை முழுவதுமாக வெறுக்கும் யானைகள் இவ்வொலியைக் கேட்டு இரயில் தண்டவாளங்களின் அருகே வராமலிருக்கும்.
- ✓ யானைக் கூட்டத்தை திசைதிருப்ப (குறிப்பாக இரயில்கள் நெருங்கும்போது) இந்தத் தனித்துவமான முயற்சி மிகவும் உதவியாக இருக்கும். மூன்று இலட்சம் ரொக்கப்பரிசு மற்றும் பாராட்டுப்பட்டயத்தை உள்ளடக்கியதாகும் முதல் பரிசு.

**10.** எந்த நகரத்தில், நடப்பாண்டின் பெண்கள் ஸ்டார்ட் – அப் உச்சிமாநாட்டை (Women Startup Summit – WSS) நடத்த திட்டமிடப்பட்டுள்ளது?

A) புனே

B) கொல்கத்தா

C) புது தில்லி

D) கொச்சி ☑

KERALA STARTUP MISSION™

- ✓ வரும் ஆகஸ்ட்.1 அன்று கொச்சியின் ஒருங்கிணைந்த தொடங்கல் வளாகத்தில் இந்திய தொழில் கூட்டமைப்பின் (CII) இந்திய பெண்கள் வலையமைப்புடன் இணைந்து பெண்கள் தொடங்கல் உச்சிமாநாட்டை கேரள தொடங்கல் திட்டம் (Kerala Startup Mission) நடத்தவுள்ளது.
- ✓ ஆர்வமுடைய பெண் தொழில் வல்லுநர்கள் தங்களது தொழில்முனைவு பயணத்தை மேற்கொள்ள ஊக்குவிப்பதற்கும், மாநிலத்தில் ஓர் உள்ளடக்கிய தொழில்முனைவு சூழலமைப்பை உருவாக்குவதற்கும் இந்த உச்சிமாநாடு நோக்கம் கொண்டுள்ளது. இந்த உச்சிமாநாடு, அனைத்து பெண் தொழில் வல்லுநர்கள், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள், பெருநிறுவன தலைமைகள் மற்றும் துளிர் நிறுவனத்தின் நிறுவனர்கள் என அனைவருக்குமானதாகும்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.** புதிதாக வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களில் ஆராய்ச்சி ஒத்துழைப்பு பெறுவதற்காக, எந்த IIT உடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பிரசார் பாரதி கையெழுத்திட்டுள்ளது?

A) ஐஐடி தில்லி

B) ஐஐடி பாம்பே

C) ஐஐடி இந்தூர்

D) ஐஐடி கான்பூர் ☑

✓ புதிதாக வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மற்றும் ஒளிபரப்பு தொடர்பான துறைகளில் ஆராய்ச்சி ஒத்துழைப்பு பெறுவதற்காக கான்பூர் IIT நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், புது தில்லியில், பிரசார் பாரதி கையெழுத்திட்டது. இந்த நடவடிக்கை ஒலிபரப்புத் துறையில் ஆராய்ச்சி நடவடிக்கையை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

✓ நேரடி அலைபேசி ஒளிபரப்பு சேவை, 5G ஒருங்கிணைப்பு, பிரசார் பாரதியின் செயற்கை நுண்ணறிவு அடைவு மையம் மற்றும் பிரசார் பாரதியில் கான்பூர் IIT நிறுவன மாணவர்களுக்கு உள்ளுறை பயிற்சி (Internship) ஆகியவை இந்த ஆராய்ச்சி ஒத்துழைப்பின் முக்கியப்பகுதிகளுள் அடங்கும்.

**2.** எந்தத் தேதியில், உலக மக்கள்தொகை தினம் (World Population Day) கடைப்பிடிக்கப்படுகிறது?

A) ஜூலை 10

B) ஜூலை 11 ☑

C) ஜூலை 12

D) ஜூலை 13

✓ மக்கள்தொகை பிரச்சனைகளின் அவசரநிலை & முக்கியத்துவம் குறித்து கவனம் செலுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.11 அன்று உலக மக்கள்தொகை தினம் அனுசரிக்கப்படுகிறது. வழக்கம் போலல்லாமல், நடப்பாண்டில் இந்நாளுக்கென குறிப்பிட்ட கருப்பொருள் எதுவும் அறிவிக்கப்படவி-ல்லை, ஆனால் இந்த நாள் தாய்வழி நலத்தை (Maternal Health) நோக்கிய கவனத்தை ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ நடப்பாண்டு, 1994ஆம் ஆண்டின் சர்வதேச மக்கள்தொகை மற்றும் வளர்ச்சி மாநாட்டின் முடிக்கப்படாத கூறுகளில் உலகளவில் கவனம் செலுத்துவதற்காக அழைப்பு விடுக்கிறது. இந்த மாநாட்டில், 179 அரசுகள் கலந்துகொண்டன; அவை நீடித்த வளர்ச்சியை அடைவதற்கு இனப்பெருக்க நலம் மற்றும் பாலின சமத்துவம் ஆகியவை அவசியம் என்பதை அங்கீகரித்தன.

**3.** கிரேக்கத்தின் புதிய பிரதமராக பதவியேற்றுள்ளவர் யார்?

A) கைரியாகோஸ் மிட்சோடாகிஸ் (Kyriakos Mitsotakis) ☑

B) டிமிட்ரிஸ் கௌட்சவும்பாஸ்

C) அலெக்சிஸ் சிப்ராஸ்

D) போஃபி ஜென்னிமாதா

✓ கைரியாகோஸ் மிட்சோடாகிஸ் கிரேக்கத்தின் புதிய பிரதமராக பதவியேற்றார். அவரது கட்சியான புதிய ஜனநாயகம், நடந்து முடிந்த 2019 சட்டமன்றத்தேர்தலில் 39.85% வாக்குகள் பெற்று ஹெலெனிக் நாடாளுமன்றத்தில் 158 இடங்களுடன் மகத்தான வெற்றியைப்பெற்றது.

**4.** 23ஆவது புச்சியோன் திரைப்பட விழாவில், நடப்பாண்டின் சிறந்த ஆசிய திரைப்படத்திற்கான NETPAC விருதை வென்ற இந்திய படம் எது?

A) கலீ பாய் (Gully Boy) ☑

B) கபீர் சிங்

C) பாரத்

D) சூப்பர் 30

✓ சோயா அக்தர் இயக்கிய 'கலீ பாய்' திரைப்படம், தென்கொரியாவில் நடைபெற்ற 23ஆவது புச்சியோன் சர்வதேச அருந்திரைப்பட விழாவில் (BIFAN) சிறந்த ஆசிய திரைப்படத்திற்கான Network for the Promotion of Asian Cinema (NETPAC) விருதை வென்றது. நடிகர்கள் இரன்வீர் சிங் மற்றும் ஆலியா பட் ஆகியோர் நடித்துள்ள இந்தத் திரைப்படம், சாதாரண சொல்லிசைக் கலைஞர்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டதாகும். இது மும்பை சொல்லிசைக் கலைஞர்களான (Rappers) விவியன் பெர்னான்டஸ் (டிவைன்) மற்றும் நவேத் ஷேக் (நெய்சி) ஆகியோரின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது. இப்படம், நடப்பாண்டு மெல்பர்ன் இந்திய திரைப்பட விழாவிலும் திரையிடப்படவுள்ளது.

**5.** யாருடைய தலைமையின்கீழ், இரண்டாவது இந்திய-இரஷ்ய உத்திசார் பொருளாதார பேச்சு வார்த்தை (IRSED) புது தில்லியில் நடைபெற்றது?

A) அஜய் நாராயண் ஜா

B) சுபாஷ் சந்திர கார்க்

C) நிர்மலா சீதாராமன்

D) ராஜிவ் குமார் ☑



✓ NITI ஆயோக் துணைத்தலைவர் Dr. ராஜிவ் குமார் தலைமையில், ஜூலை.10 அன்று புது தில்லியில் 2ஆவது இந்திய – இரஷ்ய உத்திசார் பொருளாதார பேச்சுவார்த்தை நடந்தது. இந்தக் கூட்டத்தில், போக்குவரத்து உட்கட்டமைப்பு மற்றும் தொழினுட்பங்களின் வளர்ச்சி; வேளாண் மற்றும் வேளாண்

செயன்முறை துறையின் வளர்ச்சி; சிறு மற்றும் நடுத்தர வணிக ஆதரவு; டிஜிட்டல் மாறுதல் மற்றும் அதி நவீன தொழினுட்பங்கள்; வர்த்தகம், வங்கியியல், நிதியியல் மற்றும் தொழிற்துறையில் ஒத்துழைப்பு; மற்றும் சுற்றுலா மற்றும் இணைப்பு ஆகிய ஆறு முக்கியப்பகுதிகளில் ஒத்துழைப்பு குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

✓ அக்.5, 2018 அன்று புது தில்லியில் நடந்த வருடாந்திர இந்திய – இரஷ்ய இருதரப்பு உச்சிமாநாட்டின் 19ஆவது பதிப்பின்போது, NITI ஆயோக் மற்றும் இரஷ்ய கூட்டமைப்பின் பொருளாதார மேம்பாட்டு அமைச்சகம் இடையே கையெழுத்திடப்பட்ட இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இந்த உத்திசார் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

**6.** 1967ஆம் ஆண்டு UAPA சட்டத்தின் எந்தப்பிரிவின்கீழ், இந்திய அரசு, 'நீதிக்கான சீக்கியர்கள்' (Sikhs for Justice – SFJ) அமைப்புக்குத் தடை விதித்துள்ளது?

A) பிரிவு 3 (2)

B) பிரிவு 3 (3)

C) பிரிவு 3 (1) ☑

D) பிரிவு 3 (4)

✓ இந்தியாவில் பிரிவினைவாதம் மற்றும் காலிஸ்தானிய சார்பு நடவடிக்கைகளை ஆதரித்ததற்காக அமெரிக்காவைத் தளமாகக்கொண்ட பிரிவினைவாதக்குழு – 'நீதிக்கான சீக்கியர்கள்' அமைப்புக்கு மத்திய உள்துறை அமைச்சகம் சமீபத்தில் தடை விதித்தது. தனது பிரிவினைத் திட்டத்தின் ஒரு பகுதியாக 2020ஆம் ஆண்டில் சீக்கியர்கள் இடையே பொது வாக்கெடுப்பு நடத்தும் முயற்சியில் அந்த அமைப்பு ஈடுபட்டது.

✓ அதன் நிறுவனர் அவ்தார் சிங் பன்னு, கடந்த ஜூலை.10 அன்று இங்கிலாந்தில் நடந்த இந்தியா – நியூசிலாந்து கிரிக்கெட் போட்டியில் "காலிஸ்தான் ஜிந்தாபாத், வாக்கெடுப்பு 2020" என்று முழக்கங்களை எழுப்புவதும், சட்டை அணிந்திருப்பதுமாக காணப்பட்டார். இக்குழு, 1967ஆம் ஆண்டு சட்டத்துக்குப் புறம்பான செயல்பாடுகள் (தடுப்பு) சட்டத்தின் பிரிவு 3 (1)இன் கீழ், சட்டத்துக்குப் புறம்பான அமைப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது.

**7.** 2020 முதல் விமானப் பயணச்சீட்டுகளுக்கு பசுமை வரி விதிக்க முடிவுசெய்துள்ள ஐரோப்பிய நாடு எது?

A) ஆஸ்திரியா

B) பிரான்ஸ் ☑

C) ஜெர்மனி

D) போலந்து

✓ மாசு குறைவான போக்குவரத்துத் திட்டங்களுக்கு நிதியுதவி அளிப்பதற்காக பிரான்சில் உள்ள அனைத்து விமான நிலையங்களிலிருந்தும் புறப்படும் அனைத்து விமானங்களுக்குமான விமானப்

பயணச்சீட்டுகளில் 18 யூரோக்கள் ($20) வரை வரி விதிக்க பிரெஞ்சு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. 2020ஆம் ஆண்டு முதல் அமுலுக்கு வரும் இந்தப் புதிய வரிவிதிப்புத் திட்டத்தின்படி, சிக்கன வகுப்பு பயணச்சீட்டின் மீது 1.5 யூரோக்கள் வரி விதிக்கப்படும் என்றும், அதிகபட்ச வரி உயர்தர வகுப்புக்கு விதிக்கப்பட உள்ளது என்றும் பிரான்ஸ் அரசு அறிவித்துள்ளது.

✓ இந்தப் புதிய திட்டத்தால் ஆண்டொன்றுக்கு சுமார் 182 மில்லியன் யூரோக்கள் வருவாய் கிடைக்கும். இந்த வருவாய் பசுமைப் போக்குவரத்து உட்கட்டமைப்பிற்கு, முக்கியமாக இரயில்வே துறைக்கு பயன்படுத்தப்படும். இந்த வரி விதிப்பு பிரான்ஸிலிருந்து புறப்படும் விமானங்களுக்குத்தானேயொழிய, பிரான்சுக்குள் வரும் விமானங்களுக்கு அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. முன்னதாக, ஏப்ரல் 2018இல், இதேபோன்ற வரி சுவீடனில் அறிமுகப்படுத்தப்பட்டது, அது காலநிலையில் விமானப் பயணத்தின் தாக்கத்தை குறைக்கும் முயற்சியாக ஒவ்வொரு பயணச்சீட்டுக்கும் €40 வரை வரி விதித்தது.

**8.** நாட்பட்ட ITPக்கு சிகிச்சையளிக்க 'Romiplostim'ஐ அறிமுகப்படுத்தியுள்ள இந்தியாவின் முதல் நிறுவனமாக மாறியுள்ள மருந்து நிறுவனம் எது?

A) லுபின்

B) சிப்லா

C) சன் பார்மா

D) இன்டாஸ் (Intas) ☑

✓ நாள்பட்ட Immune Thrombocytopenia (ITP) சிகிச்சைக்காக 'Romy' என்ற பெயரில் இந்தியாவில் 'Romyplostim'ஐ அறிமுகப்படுத்திய முதல் நிறுவனமாக இன்டாஸ் மருந்துத் தயாரிப்பு நிறுவனம் மாறியுள்ளது. ITP என்பது ஒரு தன்னெதிர்ப்பு (Auto – Immune) குருதிக்கோளாறு ஆகும். இது குறைந்த தட்டை அணுக்கள் எண்ணிக்கைக்கு வழிவகுக்கிறது.

✓ புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இம்மருந்துக்கு ஆகும் செலவானது தற்போதைய மருந்துகளின் விலையையில் ஐந்தில் ஒருபங்கு மட்டுமே உள்ளது. இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 42,000 நோயாளிகள் ITP நோயால் பாதிக்கப்படுகின்றனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. அவர்களுள், பத்துச் சதவீதத்துக்கும் குறைவான நோயாளிகளுக்கே சிகிச்சை கிடைக்கப்பெறுகிறது.

**9.** புரோசெக்கோ குன்றுகள் (Prosecco Hills), எந்த நாட்டில் அமைந்துள்ளன?

A) ஸ்பெயின்

B) இத்தாலி ☑

C) நார்வே

D) சுவீடன்

✓ அசர்பைஜானின் பாகுவில் நடைபெற்ற UNESCO உலக பாரம்பரியக் குழுவின் 43ஆவது அமர்வில், இத்தாலியின் Conegliano மற்றும் Valdobbiadeneஇன் Prosecco குன்றுகள் UNESCO 'உலக பாரம்பரியம்' என அறிவிக்கப்பட்டுள்ளன. உலகப்புகழ்பெற்ற 'Prosecco Sparkling Wine' தயாரிக்க பயன்படுத்தப்படும் திராட்சை வளர்க்கப்படும் தளம் இதுதான்.

- ✓ இது வடகிழக்கு இத்தாலியில் மலைப்பாங்கான நிலப்பரப்பின் ஒருபகுதியாகும். அதன் Prosecco உற்பத்திக்காக பெயர் பெற்றது. இந்தப்பகுதி UNESCO உலக பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப்பட்ட 55ஆவது இத்தாலிய தளமாகும்.

**10.** எந்த IT நிறுவனம், மாணவர்களை தொழிற்திறனுடன் உருவாக்குவதற்காக, AICTE உடன் கூட்டிணைந்துள்ளது?

A) டிசிஎஸ் (TCS) ☑

B) இன்போசிஸ்

C) ரிலையன்ஸ்

D) விப்ரோ

- ✓ மாணவர்களை தொழிற்சார் திறன்களுடன் உருவாக்குவதற்கு மின்னணு கற்றல் பாடத்திட்டத்தை (Digital Learning Course) வழங்குவதற்காக, தகவல் தொழில்நுட்ப நிறுவனமான டாடா கன்சல்டன்சி சர்வீசஸின் (TCS) ஒரு பிரிவான TCS iON, அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுவுடன் (AICTE) கூட்டிணைந்துள்ளது. பெருநிறுவன நடத்தை நெறி, பயனுள்ள வகையில் மின்னஞ்சல் எழுதுதல், பயனுள்ள விளக்கக்காட்சிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப விழிப்புணர்வு போன்ற தலைப்புகளை உள்ளடக்கிய ஓர் இலவச, 20 மணிநேர தொழிற்திறன் பாடத்திட்டத்தை TCS iON உருவாக்கியுள்ளது. இது மாணவர்களுக்கு அவர்களின் பட்டப்படிப்பு காலம் முழுவதும் கிடைக்கும்.
- ✓ AICTEஆல் அங்கீகரிக்கப்பட்ட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கு இப்பாடத்திட்டம் கிடைக்கப்பெறும். இதை TCS iON மின்னணு கற்றல் மையத்தில் (Digital Learning Hub), எந்தச் சாதனத்தினூடாகவும் அணுகமுடியும். TCS iONஆல் வழங்கப்பட்டுள்ள இத்தனித்துவமான பாடத் திட்டம், AICTE நிறுவனங்களுக்கான பணியமர்த்தல் வாய்ப்புகளை மேம்படுத்த உதவும் மற்றும் மாணவர்களின் தொழிற்முறை வாழ்க்கைக்கு ஒரு வலுவான தொடக்கத்தைத்தரும். AICTE என்பது தொழில்நுட்பக் கல்விக்கான தேசிய அளவிலான ஓர் உச்ச ஆலோசனை மற்றும் ஒழுங்குமுறை அமைப்பாகும்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ தமிழ்நாட்டிலுள்ள 7 கோடி மக்களுக்கும் தனித்துவமான எண் வழங்குவதற்காக 'குடிமகன் பெட்டகம்' என்ற வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தனித்துவமான 'மக்கள் எண்' வாயிலாக குடிமகன் பெட்டகத்தை சம்பந்தப்பட்ட நபருக்குரிய ஆவணங்கள் மின்னணு முறையில் சென்றடையும். குடிமக்கள் எண்ணைப் பெற தமிழ்நாடு மின் – ஆளுமை முகமையில் வசதி செய்யப்பட்டுள்ளது. இதற்கான இணையதளம் – www.tnesevai.tn.gov.in ஆகும்.
- ✓ தமிழ்நாட்டிலிருந்து மாநிலங்களவைப் பதவிகளுக்கு தெரிவான 6 மாநிலங்களவை உறுப்பினர்கள்:
  - ○ முகமது ஜான், சந்திரசேகர், அன்புமணி (பாமக) – அதிமுக.
  - ○ சண்முகம் (தொமுச) , மூத்த வழக்குரைஞர் வில்சன், வைகோ (மதிமுக) – திமுக.

# நடப்பு நிகழ்வுகள்

**1.** அபியாவில் நடந்த நடப்பாண்டு காமன்வெல்த் சாம்பியன்ஷிப்பில், 81 கிலோ பிரிவில் தங்கம் வென்ற இந்திய பளுதூக்கு வீரர் யார்?

A) குர்தீப் சிங்

B) ருஸ்தம் சாரங்

C) அஜய் சிங் ☑

D) தீபக் லதேர்

✓ சமோவா நகரமான அபியாவில் நடைபெற்ற காமன்வெல்த் சாம்பியன்ஷிப் போட்டியில், ஜூலை.12 அன்று இந்திய பளுதூக்கு வீரர் அஜய் சிங், 81 கி.கி பிரிவில் தங்கப்பதக்கம் வென்றார். ஒலிம்பிக் தகுதி நிகழ்வான இதில், சிறப்பான புள்ளிகளைப்பெற தனது உடல் எடைபோன்று இருமடங்கு எடையை (190 கி.கி) தூக்கி 'கிளீன் & ஜெர்க்' பிரிவில் புதிய காமன்வெல்த் சாதனையையும் உருவாக்கியுள்ளார். அதே பிரிவில், தேசிய சாதனையையும் அவர் முறியடித்துள்ளார். 81 கி.கி பிரிவில் போட்டியிட்ட மற்றோர் இந்தியரான, பப்புல் சாங்மாய் மொத்தம் 313 கி.கி பளுவைத் தூக்கி வெள்ளி வென்றார்.

**2.** வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்கள் விவகாரத்துறை செயலாளராக (Secretary of Overseas Indian Affairs) நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A) சுமந்தா சவுத்ரி

B) அனுப் வதவன்

C) அனந்த் நாராயண் நந்தா

D) விகாஸ் ஸ்வரூப் ☑

✓ 1986ஆம் ஆண்டுப்பிரிவு இந்திய அயலுறவுப் பணி அதிகாரியான விகாஸ் ஸ்வரூப், வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செயலராக (தூதரகம், கடவுச்சீட்டு, நுழைவு இசைவு (Visa), வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்கள் விவகாரம்) நியமிக்கப்பட்டுள்ளார். ஆகஸ்ட் 1 அன்று அவர் இந்தப்புதிய பதவியை ஏற்றுக் கொள்வார். தற்போது, அவர் கனடாவுக்கான இந்தியாவின் உயராணையராக உள்ளார். விருது பெற்ற 'Q&A' நூலை எழுதியவர் ஸ்வரூப். இந்நூல், ஆஸ்கார் விருது வென்ற 'ஸ்லம்டாக் மில்லியனர்' என்ற திரைப்படத்தில் தழுவி எடுக்கப்பட்டது. இந்நூல், 'பிரத்யேக நூல்கள் போய்க் பரிசு 2006' மற்றும் பாரிஸ் புத்தகக் கண்காட்சியின் 'வாசகர்கள்' பரிசைப் பெற்றது.

**3.** வணிக நிலைச்சொத்து சேவைகளின் (Commercial Real Estate Services – CBRE) சமீபத்திய ஆய்வின்படி, இந்தியாவின் மிகவும் விலையுயர்ந்த அலுவலக இடம் எது?

A) கன்னாட் பிளேஸ் ☑ B) நரிமன் முனை

C) பாந்த்ரா குர்லா வளாகம் D) இந்தியாவின் வாயில்

CSR
COMMERCIAL
REAL ESTATE SERVICES

- நிலைச்சொத்து ஆலோசனை நிறுவனமான CBRE நடத்திய சமீபத்திய ஆய்வில், ஆண்டொன்றுக்கு ஒரு சதுர அடிக்கு $144 டாலர் வாடகையுடன் உலகின் 9ஆவது மிகவும் விலையுயர்ந்த அலுவலக இடமாக (Most Expensive Office Location) கன்னாட் பிளேஸ் உள்ளது. CBRE அதன் வருடாந்திர 'Global Prime Office Occupancy Costs' ஆய்வில், பன்னாட்டளவில் முக்கியம் மிக்க அலுவலக இடங்களை வாடகைக்கு எடுப்பதற்கான செலவை ஆராய்ந்துள்ளது.

- பன்னாட்டளவில் மிகவும் விலையுயர்ந்த அலுவலக இடங்களில், ஆண்டொன்றுக்கு ஒரு ச.அடிக்கு $322 டாலர் வாடகையுடன் மத்திய ஹாங்காங் முதலிடத்தைப் பிடித்துள்ளது. இலண்டன் (ஒரு சதுர அடிக்கு $222.7) மற்றும் ஹாங்காங்கில் உள்ள கவ்லூன் ஆகியவை இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்றுள்ளன. நியூயார்க்கில் உள்ள மிட்டவுன் மன்ஹாட்டன், பட்டியலில் நான்காவது இடத்தையும், பெய்ஜிங்கின் (நிதி வீதி) பட்டியலில் 5ஆவது இடத்தையும் பிடித்துள்ளன. அறிக்கையின் படி, மும்பையின் பாந்த்ரா குர்லா வளாகம் மற்றும் நரிமன் முனை – மத்திய வணிக மாவட்டம் ஆகியவை முறையே 27 மற்றும் 40ஆவது இடங்களைப் பிடித்துள்ளன.

**4.** இந்தியாவின் எந்த அமைப்பால், 'தாகம் நடவடிக்கை – Operation Thirst' தொடங்கப்பட்டுள்ளது?

A) இந்திய இராணுவம்

B) இந்திய விண்வெளி ஆய்வு மையம்

C) இந்திய இரயில்வே ☑

D) பாபா அணு ஆராய்ச்சி மையம்

- அங்கீகரிக்கப்படாத போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் (Packaged Drinking Water) விற்பனையை தடுக்கும் ஒரு முயற்சியாக, இரயில்வே பாதுகாப்புப் படையானது அண்மையில் 'தாகம் நடவடிக்கை' என்ற ஒன்றை அறிமுகப்படுத்தியது. இரயில் நிலையங்களின் வளாகத்தில், அங்கீகரிக்கப்படாத PDW அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்காக, நாடு முழுவதுமுள்ள அனைத்து முக்கிய ரயில் நிலையங்களி–லும் இந்நடவடிக்கை தொடங்கப்பட்டதாக இரயில்வே பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

- ஜூலை 8 & 9ஆம் தேதிகளில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையின்போது, அங்கீகரிக்கப்படாத நிறுவனங்களின் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீரை விற்பனை செய்ததற்காக, அதாவது ரயில்வே சட்டத்தின் 144 மற்றும் 153 ஆகிய பிரிவுகளின்கீழ், 1371 பேர் கைது செய்யப்பட்டனர். இந்தக் குற்றவாளிகளுக்கு மொத்தம் ரூ.6,80,855 அபராதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டது.

**5.** 2019 சர்வதேச பல் – பரிமாண ஏழ்மைக் குறியீட்டை வெளியிட்டுள்ள சர்வதேச அமைப்பு எது?

A) உலக சுகாதார அமைப்பு

B) ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் ☑

C) உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு

D) சர்வதேச தொழிலாளர் அமைப்பு

- நடப்பாண்டு சர்வதேச பல் – பரிமாண ஏழ்மைக் குறியீட்டை (Multidimensional Poverty Index) சமீபத்தில் ஐ.நா வளர்ச்சித்திட்டம் (UNDP), ஆக்ஸ்போர்டு ஏழ்மை மற்றும் மனித மேம்பாட்டுத் திட்டம் (OPHI)

ஆகியவை வெளியிட்டுள்ளன. இந்தக் குறியீட்டின்படி, 2006 மற்றும் 2016க்கு இடையில் 271 மில்லியன் மக்களை இந்தியா ஏழ்மை நிலையிலிருந்து மீட்டுள்ளது. மேலும் சொத்துக்கள், சமையல் எரிபொருள், நலம் & ஊட்டச்சத்து போன்ற துறைகளில் வலுவான முன்னேற்றங்களுடன் அக்காலகட்டத்தில், பல் – பரிமாண ஏழ்மைக் குறியீடு மதிப்புகளில் மிக விரைவான ஒடுக்கத்தை இந்தியா பதிவு செய்துள்ளது.

✓ பொருளாதார வளர்ச்சியை மட்டும் அடிப்படையாகக் கொள்ளாமல் நலமிகு சூழல், நல்ல வேலை, சமூக பாதுகாப்பு, கல்வி, மருத்துவம் போன்ற வாழ்வின் 10 அடிப்படை அம்சங்களின் அடிப்படையில் பல்பரிமாண ஏழ்மை வகைப்படுத்தப்படுகிறது. 101 நாடுகள் இந்த ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. குறைந்த வருவாய் உள்ள 31 நாடு கள், நடுத்தர வருவாய் உடைய 68 நாடுகள், அதிக வருவாய் உள்ள 2 நாடுகள் என மொத்தம் 101 நாடுகளில் 130 கோடி மக்கள் ஏழ்மை நிலையில் உள்ளனர்.

## 6. குடியிருப்பு சொத்து விலை கண்காணிப்பு ஆய்வை நடத்திய இந்திய அமைப்பு எது?

A) NHB

B) SEBI

C) NABARD

D) RBI ☑

✓ 13 நகரங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கிகள்/வீட்டுவசதி நிதி நிறுவனங்கள் (HFC) வழங்கிய வீட்டுக் கடன்கள் குறித்த காலாண்டுக்கு ஒருமுறை நடத்தப்படும் குடியிருப்பு சொத்து விலை கண்காணிப்பு ஆய்வை ரிசர்வ் வங்கி (RBI) நடத்தியுள்ளது. வருமானத்துக்கேற்ற வீட்டு விலை விகிதம் (House Price to Income – HPTI) 2015 மார்ச்சில் 56.1 ஆக இருந்து 2019 மார்ச்சில் 61.5 ஆக அதிகரித்ததால் கடந்த 4 ஆண்டுகளில் வீடு வாங்கும் வாய்ப்புத் திறன் (Housing Affordability) மோசமடைந்துள்ளதாக இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

✓ HPTI விகிதமானது வீடு வாங்கும் வாய்ப்புத் திறனை பிரதிபலிக்கிறது. மும்பை (HPTI 74.4 உடன்) இந்தியாவில் மிகவும் குறைந்த வீடு வாங்கும் வாய்ப்புடைய நகரமாக உள்ளது. 2015 மார்ச்சில் 47.2 என்ற அளவிலிருந்த HPTI உடன் ஒப்பிடும்போது மார்ச் காலாண்டில் 54.3 என்ற வருமானத்துக்கேற்ற வீட்டு விலை விகிதத்துடன் வீடு வாங்குவதற்கான மிகவும் அதிக வாய்ப்புடைய நகரமாக புவனேசுவர் (54.3) உள்ளது. வருமானத்துக்கேற்ற வீட்டு விலை விகிதம் என்ற கருத்தை, கடன் வழங்குநர்கள், வீடு வாங்குவதற்கான வாய்ப்பை அளவிட பயன்படுத்துகின்றனர்.

## 7. ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?

A) டேவிட் சசோலி (David Sassoli) ☑

B) ஜான் சராதில்

C) ஸ்கா கெல்லர்

D) சிரா ரெகோ

- ✓ இத்தாலிய சமதர்மவாதியான டேவிட் மரியா சசோலி, ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை அவர் நாடாளுமன் -றத்தை வழிநடத்துவார். அன்டோனியோ தாஜானிக்குப் பிறகு அவர் இப்பதவிக்கு வந்துள்ளார்.

- ✓ சசோலி, சமதர்மவாதிகள் மற்றும் ஜனநாயகக் கூட்டணியில் உறுப்பினராக உள்ளார். ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் விவாதங்கள் / நடவடிக்கைகளுக்கு ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் தலைவர் தலைமை தாங்குகிறார். அவர் ஐரோப்பிய ஒன்றியத்திற்குள்ளும், பன்னாட்டளவிலும் நாடாளுமன்ற -த்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறார். பெரும்பாலான ஐரோப்பிய ஒன்றிய சட்டங்கள் & ஐரோப்பிய ஒன்றிய வரவு செலவுத் திட்டத்தை இயற்றுவதற்கு ஜனாதிபதியின் கையொப்பம் தேவை.

**8.** பத்மஸ்ரீ விருது பெற்றவர்களுக்கு மாதந்தோறும் ரூ.10 ஆயிரம் உதவித்தொகை வழங்குவதாக அறிவித்துள்ள மாநில அரசு எது?

A) ஜார்கண்ட்

B) ஒடிசா ☑

C) பஞ்சாப்

D) மத்தியப்பிரதேசம்

- ✓ பொருளாதார ரீதியாக நலிவுற்ற பிரிவைச்சேர்ந்த மாநிலத்தின் 'பத்மஸ்ரீ' விருது வென்றவர்களுக்கு மாதந்தோறும் ரூ.10,000 உதவித்தொகை வழங்க ஒடிசா அரசு முடிவு செய்துள்ளது. அம்மாநிலத்தின் பத்மஸ்ரீ விருதாளர்களின் அவலநிலை குறித்து ஊடக அறிக்கைகள் எடுத்துரைத்த சில நாட்களுக்கு பின்னர் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அம்மாநிலத்தைச் சேர்ந்த மொத்தம் 84 பேருக்கு இதுவரை 'பத்மஸ்ரீ' விருது வழங்கப்பட்டுள்ளது. அவர்களுள் 45 பேர் காலஞ்சென்றவர்களாவர்.

- ✓ மீதமுள்ள 39 நபர்களில், சிலரின் நிதி ரீதியான நிலை மிகமோசமாக உள்ளது. சமீபத்தில், ஒடிசாவில் உள்ள ஒரு மலையினூடாக 3 கி.மீ நீளமுள்ள கால்வாயைத் தோண்டியதற்காக நடப்பாண்டின் பத்மஸ்ரீ விருதுபெற்ற தலபாய்தாராணி கிராமத்தைச் சேர்ந்த 75 வயதான பழங்குடி விவசாயி டைதாரி நாயக், விருது பெற்ற பின்னர் கிராமவாசிகள், தனக்கு வேலை எதுவும் வழங்காததால் விருதை திருப்பித் தருவதாக பகிரங்கமாக அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**9.** ஊடக சுதந்தரத்திற்கான முதலாவது சர்வதேச மாநாடு நடைபெற்ற நகரம் எது?

A) பாரிஸ்

B) நியூயார்க்

C) இலண்டன் ☑

D) பெர்லின்

- ✓ ஊடக சுதந்தரத்திற்கான முதலாவது சர்வதேச மாநாட்டை இலண்டனில் இங்கிலாந்து மற்றும் கனடா ஆகிய நாடுகள் இணைந்து நடத்தின. உலகெங்கிலும் ஊடக சுதந்திரத்தை வலுப்படுத்தும் நோக்கில் இம்மாநாடு நடைபெற்றது. இதில் பிரசார் பாரதி தலைவர் A சூர்ய பிரகாஷ், நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்வபன் தாஸ் குப்தா & பத்திரிகை கவுன்சில் உறுப்பினர் காஞ்சன் குப்தா ஆகியோர் பங்கேற்றனர்.

**10.** இந்திய திரைப்படப் பிரிவானது எந்த நகரத்தில், "KSHITIJ" என்ற ஆவணப்படச் சங்கத்தைத் தொடங்கியுள்ளது?

A) புனே

B) மும்பை

C) தில்லி

D) ஜெய்ப்பூர்




- ✓ மும்பையில், இந்திய ஆவணப்படத் தயாரிப்பாளர் சங்கத்துடன் (IDPA) இணைந்து இந்திய திரைப் படப் பிரிவு (FDI) "KSHITIJ" என்ற ஆவணப்படச் சங்கத்தைத் தொடங்கியுள்ளது. ஒவ்வொரு மாதமும் 2 மற்றும் 4ஆம் தேதிகளில் மாலை 5:00 – 6:30 மணி வரை திரைப்படங்கள் பிரிவு வளாகத்தில் பொதுத் திரையிடல்கள் ஏற்பாடு செய்யப்படும்; அதைத்தொடர்ந்து படத்தின் இயக்குநருடன் பார்வையாளர்க –ளின் குறுகிய உரையாடல் நடைபெறும்.

- ✓ அஜய் மற்றும் விஜய் பேடியின் புகழ்பெற்ற ஆவணப்படமான "Secret Life of Frogs" தொடக்க படமாக திரையிடப்படும். 1948ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட திரைப்படப் பிரிவானது நாட்டின் சமூகம், அரசியல் மற்றும் கலாசாரத்தின் கற்பனைகள் & யதார்த்தங்களின் பதிவுகளைத் தக்கவைக்க இடைவிடாமல் முயன்றுவருகிறது. இது தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின்கீழ் அரசாங்க நிகழ்ச்சிகளை விளம்பரப்படுத்துவதற்கும், இந்திய வரலாற்றின் திரைத்துறைப் பதிவுகளுக்கும், ஆவணப்படங்கள் மற்றும் செய்தி இதழ்களை தயாரிக்கவும் செயல்படுகிறது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ சட்டப்பேரவையில் விதி எண் 110இன் கீழ் தொழிற்துறை சார்ந்த அறிவிப்புகளை தமிழ்நாடு முதல்வர் பழனிசாமி வெளியிட்டார். அவற்றின் விபரம்.,
  - '**யாதும் ஊரே**'(தனிச் சிறப்பு பிரிவு மற்றும் வலைதளம்) – உலகெங்கும் உள்ள தமிழ் மக்கள், தமிழ்ச்சங்கங்கள், தொழிலமைப்புகளுடன் தொடர்பு ஏற்படுத்தி முதலீட்டு தூதர்களை உருவாக்கி முதலீடுகளை ஈர்க்க 60 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.
  - '**தொழில் தோழன்**' என்ற இணைய அடிப்படையிலான குறைதீர் வழிமுறை ஏற்படுத்தப்படும்.
  - '**தொழில் வளர் தமிழகம்**' என்ற பெயரில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில்கள் தொடர்பான நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.
  - காஞ்சிபுரம் வல்லம் - வடகால் மற்றும் ஈரோடு பெருந்துறை சிப்காட் பூங்காக்களில் தலா 50 கோடி ரூபாய் மதிப்பில் தொழிற்கூட கட்டடங்கள் ஏற்படுத்தப்படும்.
  - சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் உற்பத்தியை பெருக்கிக் கொள்ள, நவீன தொழில்நுட்ப இயந்திரங்களை நிறுவிக்கொள்வதற்கான 25 சதவீத முதலீட்டு மானியத்தின் உச்சவரம்பு தற்போதைய ரூ.30 இலட்சத்திலிருந்து ரூ.50 இலட்சமாக உயர்த்தப்படும்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.** ஆசியாவின் மிகப்பெரிய சூரிய மின்னாற்றல் திட்டமானது, மத்தியப்பிரதேசத்தின் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

A) ஜபல்பூர்

B) சிந்தவாடா

C) இந்தூர்

D) ரேவா ☑

✓ மத்தியப்பிரதேசத்தில் தொடர்ச்சியாக பெய்த மழையின் காரணமாக ரேவாவில் அமைந்துள்ள ஆசியாவின் மிகப்பெரிய சூரிய மின் திட்டமானது சேதமடைந்தது. பலத்த மழையால் ஏற்பட்ட மண் சரிவைத் தொடர்ந்து இந்தச் சேதம் ஏற்பட்டுள்ளது.

✓ தற்சமயம் மழை நின்றுவிட்ட காரணத்தால், வல்லுநர்கள் அந்த மின் நிலையத்தை பழுதுப்பார்ப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். மதிப்பீடுகளின்படி, மழையால் இந்தத் திட்டத்துக்கு ரூ.20 கோடிக்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளது. சுமார் 90 MW வரை சூரிய மின்னுற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. பொதுவாக, இந்தச் சூரிய மின்னுற்பத்தி ஆலை 740 MW வரை மின்னுற்பத்தி செய்யும் திறன் படைத்தது.

**2.** உலக வங்கியின் மேலாண்மை இயக்குநர் (MD) மற்றும் தலைமை நிதியியல் அலுவலராக (CFO) நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A) சுனில் மேத்தா

B) அன்ஷுலா காந்த் (Anshula Kant) ☑

C) கர்ணம் சேகர்

D) R A சங்கர நாராயணன்

✓ பாரத ஸ்டேட் வங்கியின் நிர்வாக இயக்குநரான அன்ஷுலா காந்த், உலக வங்கியின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை நிதியியல் அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். உலக வங்கியின் நிதி மற்றும் இடர் மேலாண்மை (Risk Management) பிரிவின் தலைவராக அவர் பொறுப்பேற்பார்.

✓ நிதி அறிக்கை, இடர் மேலாண்மை மற்றும் பன்னாட்டு வளர்ச்சி சங்கம் (IDA) மற்றும் பிற நிதி ஆதாரங்களை அணிதிரட்டுவது குறித்து உலக வங்கியின் தலைமை நிர்வாக அதிகாரியுடன் நெருக்கமாக பணியாற்றுவது ஆகியவை அவரது பணிகளுள் அடங்கும். IDA என்பது உலகின் மிகவும் வறிய நாடுகளுக்கு உதவும் உலக வங்கியின் ஒரு பிரிவாகும்.

## 3. அந்தோணி அமல்ராஜ், எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A) டென்னிஸ்

B) கோல்ப்

C) பாட்மிண்டன்

D) டேபிள் டென்னிஸ் ☑

✓ ஜூலை.13 அன்று மெல்பர்னுக்கு அருகேயுள்ள கீலாங்கில் நடந்த ஆஸ்திரேலிய ஓப்பன் டேபிள் டென்னிஸின் (World Tour Platinum Australian Open) ஆடவர் இரட்டையர் பிரிவு போட்டியில், தென் கொரியாவின் ஜியோங் யங்சிக் – லீ சாங்சு ஜோடியிடம், இந்தியாவின் சத்தியன் – அமல்ராஜ் ஜோடி 12-14, 9-11, 8-11 என்ற கணக்கில் தோல்வியடைந்து வெண்கலம் வென்றது. இது, ஆஸ்திரேலிய ஓப்பன் வரலாற்றில், பிளாட்டினம் பிரிவு போட்டியில் இந்தியாவுக்குக் கிடைத்த முதல் பதக்கமாகும்.

## 4. அண்மையில் காலமான M J இராதாகிருஷ்ணன், எந்தப் பிராந்திய திரையுலகின் புகழ்பெற்ற திரைப்பட ஒளிப்பதிவாளராவார்?

A) தமிழ்

B) மலையாளம் ☑

C) தெலுங்கு

D) கன்னடம்

✓ மலையாள திரையுலகின் பிரபல ஒளிப்பதிவாளரான M J இராதாகிருஷ்ணன் (60), ஜூலை.12 அன்று கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் காலமானார். நிலைப்படக் கலைஞராக தனது வாழ்க்கையைத் தொடங்கிய இராதாகிருஷ்ணன், பின்னர் ஒளிப்பதிவாளராக இருந்து இயக்குநரான ஷாஜி N கருண் உடன் இணைந்து பணியாற்றினார். தேசதானம், கருணம், நாலு பெண்ணுகள் போன்ற படங்களில் இவர் பணியாற்றியுள்ளார். 1999ஆம் ஆண்டு 'மரண சிம்மாசனம்' படத்துக்காக கேன்ஸ் திரைப்பட விழாவில் 'Golden Camera' விருதை வென்ற இவர், சிறந்த ஒளிப்பதிவுக்காக கேரள மாநிலத்தின் ஏழு விருதுகளையும், மூன்று சர்வதேச விருதுகளையும் பெற்றுள்ளார்.

## 5. எந்த மாநிலத்தில், முதலாவது இமயமலை மாநிலங்களின் மாநாடு நடைபெறவுள்ளது?

A) மேகாலயா

B) ஹிமாச்சல பிரதேசம்

C) உத்தரகாண்ட் ☑

D) ஜம்மு மற்றும் காஷ்மீர்

✓ நீடித்த வளர்ச்சியில் முதன்மை கவனத்தைச் செலுத்தும் விதமாக ஜூலை.28 அன்று முசோரியில், முதலாவது இமயமலை மாநிலங்களின் மாநாட்டை (Himalayan States' Conclave) உத்தரகாண்ட் நடத்தவுள்ளது. இமயமலை மாநிலங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறித்து இந்த மாநாட்டில்

விவாதிக்கப்படும். இதில் உத்தரகாண்ட், ஜம்மு & காஷ்மீர், ஹிமாச்சல பிரதேசம், சிக்கிம், அஸ்ஸாம், அருணாசல பிரதேசம், மேகாலயா, நாகாலாந்து, திரிபுரா மற்றும் நாகலாந்து உள்ளிட்ட அனைத்து இமயமலை மாநிலங்களில் முதலமைச்சர்களும் அவர்களது நிர்வாகிகள் & சிறப்பு வல்லுநர்களுடன் கலந்துகொள்வார்கள்.

✓ இமயமலையின் சூழலமைப்பை புவி வெப்பமடைதலிலிருந்து பாதுகாப்பதற்கான வழிமுறைகள், இமயமலை பிராந்தியத்தில் நீடித்த வளர்ச்சிக்கான செயல் திட்டத்தை உருவாக்குவது மற்றும் அதன் வரைவை NITI ஆயோக்கிடம் சமர்ப்பிப்பது தவிர, பின்பற்றப்பட வேண்டிய நீர் பாதுகாப்பு நடவடிக் -கைகள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும்.

**6.** இந்தியா முழுவதும் ஒரு மிகப்பெரிய வாய்வழி சுகாதார கணக்கெடுப்பை நடத்துவதற்காக, சுகாதார அமைச்சகத்துடன் கூட்டிணைந்துள்ள இந்திய அமைப்பு எது?

A) டாட்டா நினைவு மையம்

B) சஞ்சீவன் மருத்துவமனை

C) அப்போலா மருத்துவமனைகள்

D) AIIMS ☑

✓ தடுப்பு மற்றும் சிகிச்சை உத்திகளைத் திட்டமிடுவதற்கான அடிப்படையாகச் செயல்படும் தரவுகளை சேகரிப்பதற்காக, நடப்பாண்டில், பல் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான AIIMS மையமானது சுகாதார அமைச்சகத்துடன் இணைந்து நாடு தழுவிய மிகப்பெரிய வாய்வழி சுகாதார கணக்கெடுப்பை (Oral Health Survey) மேற்கொள்ளவுள்ளது. பற்சிதைவு, ஈறு நோய்கள், பல் – முகம் சார்ந்த உருக்குலைவு, புற்றுநோய்ப்புண்கள், பல் உடைதல், குழி விழுதல் மற்றும் பல் வலி போன்ற பல் சார்ந்த நோய்கள் குறித்த குறிப்பிட்ட, பிரதிநிதித்துவ தரவுகளை பதிவு செய்வதே இக்கணக்கெடுப்பின் நோக்கமாகும்.

**7.** 1948ஆம் ஆண்டு வெளிவந்த 'வந்தே மாதரம்' திரைப்படத்தின் அரிய காட்சிகள் NFAIஇன் ஒரு பகுதியாக சேர்க்கப்பட்டுள்ளன. இந்தப் படத்தை இயக்கியது யார்?

A) சுதிர் பாட்கே

B) சதீஷ் ஜகதார்

C) P L தேஷ்பாண்டே

D) ராம் கபாலே (Ram Gabale) ☑

✓ 'வந்தே மாதரம்' (1948) என்னும் மராத்தி மொழித்திரைப்படத்தின் அரிய காட்சிகள், புனேவில் உள்ள தேசிய திரைப்பட ஆவணக்காப்பகத்தின் (NFAI) ஒருபகுதியாக சேர்க்கப்பட்டுள்ளன. சுமார் 35 நிமிட காட்சிகள் அடங்கிய ஒரு Video Home System (VHS) ஒலி/ஒளி நாடாவானது, தினேஷ் தாக்கூர் (சுனிதா தேஷ்பாண்டேவின் மருமகன்) மற்றும் திரைப்பட வரலாற்றாசிரியர் சதீஷ் ஜகதார் ஆகியோரால் NFAIஇன் சேகரிப்புக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட ஒருபகுதியாகும். அதோடு, P L தேஷ்பாண்டே ஹார்மோனியம் வாசிக்கும் அரிய காட்சிகளைக்கொண்ட U-Matic ஒளிப்பேழையும் வழங்கப்பட்டது.

✓ இந்திய விடுதலை இயக்கம் மற்றும் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கதை என்பதால் ‘வந்தே மாதரம்’ திரைப்படம் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. புகழ்பெற்ற எழுத்தாளரும், நாடக ஆசிரியருமான P L தேஷ்பாண்டே அவரது மனைவி சுனிதா தேஷ்பாண்டேவுடன் முக்கிய கதாப்பாத்-திரத்தில் நடித்துள்ளார். திரைக்கதை, வசனம் மற்றும் பாடல் வரிகளை புகழ்பெற்ற எழுத்தாளர் G D மதுல்கர் எழுதியுள்ளார். இத்திரைப்படத்திற்கு இசையமைத்தவர் இசையமைப்பாளர் சுதிர் பாட்கே. இந்தத் திரைப்படத்தை ராம் கபாலே இயக்கியுள்ளார். இந்தத் திரைப்படத்தின் படப்பிடிப்பு 1948இன் தொடக்கத்தில் கோலாப்பூரில் உள்ள ஷாலினி அரங்கில் நடந்தது.

**8.** மின்னணு சிகரெட்டுகள் மூளைத்தண்டின் செல்களை சேதப்படுத்துகின்றன என்பதை எந்த நாட்டின் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்?



A) தென்னாப்பிரிக்கா

B) இந்தியா

C) பிரான்ஸ்

D) அமெரிக்க ஐக்கிய நாடுகள் (USA) ☑

✓ அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் மின்னணு சிகரெட்டுகள் மூளைத்தண்டின் செல்களில் மன அழுத்தத்தை உருவாக்குகின்றன என்பதைக் கண்டறிந்துள்ளனர். வளர்ப்புச்சுண்டெ-லியின் நரம்பியல் தண்டு செல்களைப்பயன்படுத்தி, e-சிகரெட்டுகளால் தூண்டப்பட்ட தண்டு செல் நச்சுத்தன்மையின் அடியொற்றிய “Stress-Induced Mitochondrial Hyper-fusion (SIMH) என்னும் வழிமுறையை அவர்கள் அடையாளங்கண்டுள்ளனர்.

✓ மின்னணு திரவங்கள் (e-liquids), தூசிப்படலம் (Aerosol) அல்லது நிகோடின் போன்றவற்றில் தண்டுச் செல்களை வெளிப்படுத்துவது SIMHக்கு வழிவகுக்கும் என இந்த ஆய்வு கூறுகிறது. e-சிகரெட்டுகள் நிக்கோடினை வெளியிடும் ஒரு சாதனமாகும். வெப்பப்படுத்துவதன்மூலம் நிகோடின் & சுவையூட்டும் இரசாயனங்களை அவை தூசிப்படலங்களாக ஆக்குகின்றன.

✓ நிகோடின் மனவழுத்தம் தொடர்ந்தாலோ, SIMH சரிந்தாலோ நரம்பு தண்டுச்செல்கள் சேதமடைந்து இறுதியில் இறக்கக்கூடும். அவ்வாறு நடந்தால், சிறப்புச் செல்கள், நரம்பு நார்த்திசுக்கள் மற்றும் நரம்பு அணுக்கள் போன்றவற்றை தண்டுச்செல்களிலிருந்து தயாரிக்க இயலாது. அதன்பின், சேதமடைந்த தண்டுச்செல் மைட்டோகாண்ட்ரியாவானது முதுமையடைதலை (Ageing) துரிதப்படுத்தி நரம்பு சீரழிவு நோய்களுக்கு வழிவகுக்கும்.

**9.** மத்திய அரசின் எந்தத் திட்டத்தின்கீழ், இராய்ப்பூரில் வேளாண் – வணிக அடைவு மையம் (Agri – Business Incubation Centre) அமைக்கப்பட்டுள்ளது?

A) RAFTAAR ☑

B) பிரதமரின் விவசாய நீர்ப்பாசனத் திட்டம்

C) மண் வள அட்டை

D) நீடித்த விவசாயத்திற்கான தேசிய திட்டம்

✓ சத்தீஸ்கர் மாநிலம் இராய்ப்பூரில் உள்ள இந்திராகாந்தி வேளாண் பல்கலைக்கழகத்தில், மத்திய வேளாண் அமைச்சகம், வேளாண் – வணிக அடைவு மையத்தை அமைத்துள்ளது. இந்த மையம் RAFTAAR–தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் முயற்சிகளை வலுப்படுத்துதல், இடர் குறைப்பு மற்றும் வேளாண் – வணிக தொழில்முனைவோரை ஊக்குவிப்பதன் மூலம் விவசாயத்தை ஓர் ஆதாயமுள்ள பொருளாதார நடவடிக்கையாக மாற்றுவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

✓ இந்தத்திட்டத்தின் கீழ், இளையோர் மற்றும் தொழில்முனைவோருக்கு, வேளாண்மையின் பல்வேறு துறைகளில் துளிர் நிறுவனம் தொடங்குவதற்கு வழிகாட்டுதல், தொழில்நுட்பம் & உட்கட்டமைப்பு போன்ற வசதிகள் வழங்கப்படும். இராய்ப்பூரில் உள்ள வேளாண் – வணிக அடைவு மையமானது வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் புத்தாக்கங்கள், திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு ஆகியவற்றை மையமாகக்கொண்டு, மாநிலத்தில் வேளாண் தொழில் முனைவின் வளர்ச்சிக்கு உகந்த ஒரு சூழலமைப்பை உருவாக்குவதற்கான ஊக்கியாக செயல்படும்.

**10.** எந்த மாநிலத்தில், ஹாச்சி வழிபாடு விழா (Kharchi Puja Festival) கொண்டாடப்பட்டது?

A) நாகாலாந்து

B) அருணாச்சல பிரதேசம்

C) மிசோரம்

D) திரிபுரா ☑

✓ ஜூலை.11 அன்று, திரிபுராவில் உள்ள புரான் அகர்தலாவில் நூற்றாண்டுகள் பழைமையான ஹாச்சி வழிபாடு விழா தொடங்கியது. ‘ஹாச்சி’ என்ற சொல் புவி எனப் பொருள்படும் ‘கியா’ என்ற சொல்லில் இருந்து உருவானது. ஹாச்சி வழிபாடு, அடிப்படையில் புவியை வணங்குவதற்காக செய்யப்படுகிறது. முதலில் இந்து பழங்குடியினரால் கொண்டாடப்பட்ட இவ்விழா, தற்சமயம் அனைத்து சமூகங்களாலும் மதங்களாலும் கொண்டாடப்படுகிறது.

✓ தொடர்ச்சியாக ஏழு நாட்கள் நடைபெறும் இவ்விழாவில், சிவன், துர்கை, விஷ்ணு, லக்ஷ்மி, சரஸ்வதி, கார்த்திக், விநாயகர், பிரம்மன், அபதி (நீர் கடவுள்), சந்திரன், கங்கை, அக்னி, காமதேவன் மற்றும் ஹிமாத்ரி (இமயமலை) முதலிய 14 தெய்வங்களின் வழிபாடுகள் அடங்கும்.

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ பாரம்பரியத்துடன், தொன்மை மாறாமல் புதிய பட்டுப்புடவைகள் வடிவமைக்க காஞ்சிபுரத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் ‘வடிவமைப்பு மையம்’ நிறுவப்படும் எனத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

✓ ஆண்டுதோறும் பிற மொழிகளிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்ப்பாகும் ஒரு கவிதை நூலுக்கு கவிஞர் ஆத்மாநாம் அறக்கட்டளை சார்பாக மொழிபெயர்ப்பு விருது வழங்கப்படுகிறது. அதன்படி 2019ஆம் ஆண்டுக்கான கவிஞர் ஆத்மாநாம் விருது, கவிஞர் வெய்யில் எழுதிய ‘அக்காளின் எலும்புகள்’ கவிதைத் தொகுப்புக்கு வழங்கப்படவுள்ளது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.**2019 விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் பட்டத்தை வென்றவர் யார்?

A) ரபேல் நடால்

B) ரோஜர் பெடரர்

C) ஆன்டி முர்ரே

D) நோவக் ஜோகோவிச் ☑

✓ டென்னிஸில், 4 மணி நேரத்திற்கும் மேலாக நீடித்த ஒரு போட்டியில் சுவிஸ் டென்னிஸ் வீரர் ரோஜர் பெடரரை 7-6, 1-6, 7-6, 4-6, 13-12 என்ற செட் கணக்கில் தோற்கடித்ததன்மூலம் செர்பிய வீரர் நோவக் ஜோகோவிச் தனது ஐந்தாவது விம்பிள்டன் பட்டத்தை வென்றார். இதுவரை விளையாடிய இறுதிப் போட்டியிலேயே மிக நீண்ட இறுதிப்போட்டியாக உள்ள இதில், பெடரர் மற்றும் ஜோகோவிச் இருவரும் தலா 2 செட்களை வென்றதால், ஐந்தாவது செட்டில் போட்டியை முடிவு செய்ய வேண்டியிருந்தது. இது ஜோகோவிச்சின் 16ஆவது கிராண்ட்ஸ்லாம் மற்றும் 5ஆவது விம்பிள்டன் பட்டமாகும். இதன்மூலம், ஐந்து முறை விம்பிள்டன் போட்டியை வென்ற ஜோர்ன் போர்க்குக்கு இணையாக அவர் மாறியுள்ளார்.

**2.**2019 ICC கிரிக்கெட் உலகக்கோப்பையில், 'தொடர் நாயகன் – Player of the Tournament' ஆக தேர்வு செய்யப்பட்டவர் யார்?

A) ஐன் மோர்கன்

B) பென் ஸ்டோக்ஸ்

C) மார்க் வுட்

D) கேன் வில்லியம்சன் (Kane Williamson) ☑

✓ நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் கேப்டன் கேன் வில்லியம்சன், நடப்பாண்டு ICC கிரிக்கெட் உலகக் கோப்பையில், 'தொடர் நாயகன் விருது'க்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். ஜூலை.14 அன்று நடந்த 2019 கிரிக்கெட் உலகக்கோப்பை இறுதிப்போட்டியில், நியூசிலாந்தை வீழ்த்தியதன் பின்னர் இங்கிலாந்து முதல்முறையாக ICC உலகக்கோப்பையை வென்றது.

✓ லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடந்த இறுதியாட்டத்தில் முதலில் விளையாடிய நியூஸிலாந்து அணி 8 விக்கெட் இழப்புக்கு 241 ரன்களை சேர்த்தது. பின்னர் ஆடிய இங்கிலாந்து 50 ஓவர்களில் 241 ரன்களுக்கு ஆல் – அவுட்டான நிலையில் ஆட்டம் சமனில் முடிந்தது. இதையடுத்து, சூப்பர் ஓவர் முறை கடைப்பிடிக்கப்பட்டது. அதில் முதலில் விளையாடிய இங்கிலாந்து 15 ரன்களை சேர்த்தது.

✓ பின்னர் விளையாடிய நியூஸிலாந்தும் 15 ரன்களே எடுத்ததால், சூப்பர் ஓவரும் சமனில் முடிந்தது. இதையடுத்து, இந்த ஆட்டத்தில் 6 பவுண்டரிகள் அதிகமாக எடுத்ததன் அடிப்படையில் இங்கிலாந்து வென்று கோப்பையைக் கைப்பற்றியது. 98 பந்துகளில் 84 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்த பென் ஸ்டோக்ஸ் ஆட்டநாயகனாகத் (Player of the Match) தேர்வு செய்யப்பட்டார்.

**3.** ‘கிளீன் & ஜெர்க்’ பிரிவில் புதிய காமன்வெல்த் சாதனையை படைத்துள்ள பர்தீப் சிங், எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்?

A) ஹரியானா

B) பஞ்சாப் ☑

C) ஹிமாச்சல பிரதேசம்

D) உத்தரகாண்ட்

✓ அபியாவில் (சமோவா) நடந்த காமன்வெல்த் பளுதூக்கும் போட்டியில், ஆடவர் ‘கிளீன் & ஜெர்க்’ பிரிவில் 109 கிலோ எடைப்பிரிவில் 202 கிலோ எடை தூக்கி புதிய சாதனையுடன் தங்கம் வென்றார் பஞ்சாப்பைச் சேர்ந்த பர்தீப் சிங். ஆடவருக்கான 96 கிலோ எடைப்பிரிவில் பங்கேற்ற இந்தியாவின் விகாஸ் தாகூர், மொத்தம் 338 கிலோ (153 கிலோ + 185 கிலோ) பளுதூக்கி வெள்ளி வென்றார். இத்தொடரில், 35 பதக்கங்களைப்பெற்று (இளையோர், ஜூனியர் மற்றும் சீனியர் பிரிவுகளில்) பல்வேறு தேசிய, காமன்வெல்த், உலக மற்றும் ஆசிய சாதனைகளை இந்தியா முறியடித்தது.

**4.** இஸ்தான்புலில் நடந்த யாசர் டோகு சர்வதேச போட்டியில், 53 கிலோ பிரிவில் தங்கம் வென்ற இந்திய மல்யுத்த வீராங்கனை யார்?

A) கவிதா தேவி

B) பபிதா குமாரி

C) வினேஷ் போகத் ☑

D) சாக்ஷி மாலிக்

✓ இஸ்தான்புலில் நடந்த யாசர் டோகு சர்வதேச மல்யுத்த போட்டியில் 53 கிலோ பிரிவில் இந்திய மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் தங்கம் வென்றார். இறுதிப்போட்டியில், இரஷ்ய வீராங்கனை எகதெரினா போலேஷ்சுக்கை 9–5 என்ற கணக்கில் வீழ்த்தி அவர் தங்கப்பதக்கத்தைப் பெற்றார். சீமா (50 கிலோ) மற்றும் மஞ்சு (59 கிலோ) ஆகியோர் தத்தமது பிரிவுகளில் தங்கம் வென்ற பிறகு, மகளிர் போட்டியில் இது இந்தியா வெல்லும் மூன்றாவது தங்கமாகும்.

**5.** நீர்க்கொள்கை (Water Policy) உடைய முதல் இந்திய மாநிலம் எது?

A) தமிழ்நாடு

B) கேரளா

C) மேகாலயா ☑

D) ஹிமாச்சல பிரதேசம்

✓ மாநிலத்தின் நீர்ப்பிரச்சனைகள் மற்றும் நீராதாரங்களின் பாதுகாப்பு ஆகியவற்றுக்கான ஒரு வரைவு நீர்க்கொள்கைக்கு ஒப்புதல் வழங்கியுள்ள முதல் மாநிலமாக மேகாலயா திகழ்கிறது. இந்த வரைவுக்

கொள்கைக்கு மாநில முதலமைச்சர் கான்ராட் K சங்மா தலைமையில் நடந்த கூட்டத்தில், மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

✓ நீராதாரங்களை ஒரு பொது வளமாக அங்கீகரிப்பது, குடிநீர் தேவை, வீட்டுப்பயன்பாடு மற்றும் சுகாதார தேவை மற்றும் வாழ்வாதார மேம்பாடு ஆகியவற்றுக்கு பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான நீரை மாநிலத்தில் வசிக்கும் அனைவருக்கும் வழங்குதலே இக் கொள்கையின் நோக்கமாகும். தீவிர மக்கள் பங்களிப்புடன் நீராதாரங்களின் பாதுகாப்பை மேம்படுத்த இது முயற்சி செய்கிறது. நீராதாரங்களின் அளவு மற்றும் தரம் குறைவைத் தடுப்பதற்காக அனைத்து நீராதாரங்களின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**6.** 2019 SAARC திரைப்பட விழாவில், 'சிறந்த கதையம்சம்கொண்ட திரைப்படம் - Best Feature Film' விருதை வென்ற இந்திய படம் எது?

A) வாக்கிங் வித் த விண்ட்

B) வில்லேஜ் இராக்ஸ்டார்ஸ்

C) நகர்கீர்த்தன் (Nagarkirtan) ☑

D) நா போல் வோ ஹராம்

✓ விமர்சன ரீதியாக பாராட்டப்பட்ட வங்கமொழித் திரைப்படமான 'நகர்கீர்த்தன்', கொழும்புவில் நடந்த SAARC திரைப்பட விழாவின் 9ஆவது பதிப்பில், 'சிறந்த கதையம்சம்கொண்ட திரைப்பட'த்துக்கான விருதை வென்றுள்ளது. கௌஷிக் கங்குலி இயக்கியுள்ள இத்திரைப்படம் 'சிறந்த இயக்குநர்', 'சிறந்த நடிகர்' மற்றும் 'சிறந்த பின்னணி இசை'க்கான (Best Original Score) விருதுகளையும் வென்றுள்ளது. திருநங்கை ஒருவருக்கும், புல்லாங்குழல் இசைக்கலைஞர் ஒருவருக்கும் இடையே நடக்கும் காதல் கதைதான் இந்தத் திரைப்படம்.

✓ இந்த விழாவில், மேலும் இரண்டு இந்திய படங்கள் விருதுகளை வென்றன. அறிமுக இயக்குநர் நிதீஷ் படங்கரின் 20 நிமிடம் ஓடக்கூடிய 'நா போல் வோ ஹராம்' திரைப்படம் 'சிறந்த குறும்படம்' விருதைப் பெற்றது. அதே நேரம், பிரவீன் மோர்ச்சலேவின் 'Walking With the Wind' இயக்கம் மற்றும் கதைக்கான சிறப்பு நடுவர் விருதைப் பெற்றது.

**7.** ஜூலை.12 அன்று முதலாவது 'நீரைச் சேமியுங்கள்' தினத்தை அனுசரித்த மாநில அரசு எது?

A) ஆந்திரப்பிரதேசம்

B) ஜார்க்கண்ட்

C) ஒடிசா

D) மேற்கு வங்கம் ☑

✓ நீர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மேற்கு வங்க மாநில அரசு ஜூலை.12 அன்று மாநிலம் முழுவதும் முதலாவது 'நீரைச் சேமியுங்கள் - Save Water' நாளை அனுசரித்தது. இனி, ஒவ்வோர் ஆண்டும் மாநிலத்தில் நீரின் அத்தியாவசியம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக இந்த நாள் கடைப்பிடிக்கப்படும். தண்ணீர்ப்பற்றாக்குறை உலகின் ஒரு முக்கியப்

பிரச்சனையாக மாறியுள்ளதால், இயற்கை வளத்தை காப்பாற்றும் பொருட்டு அம்மாநில அரசானது கொல்கத்தாவில் பாதயாத்திரையையும் ஏற்பாடு செய்திருந்தது.

## 8. ஹிமாச்சல பிரதேசத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A) கல்ராஜ் மிஸ்ரா ☑

B) ஜகதீஷ் முகி

C) ஆச்சார்ய தேவவிரத்

D) லால்ஜி டாண்டன்

✓ ஹிமாச்சல பிரதேச மாநிலத்தின் புதிய ஆளுநராக மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகத்தின் முன்னாள் அமைச்சர் கல்ராஜ் மிஸ்ரா நியமிக்கப்பட்டுள்ளார். அந்த மாநிலத்தின் ஆளுநராக இருந்த ஆச்சார்யா தேவவிரத், குஜராத் மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

✓ பிரதமர் மோடி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் முந்தைய ஆட்சியில் (2014-2019) மத்திய MSME அமைச்சராக பதவி வகித்த கல்ராஜ் மிஸ்ரா, கடந்த 2017ஆம் ஆண்டில் 75 வயதை கடந்த போது தனது அமைச்சர் பதவியை ராஜிநாமா செய்தார்.

## 9. அண்மையில் காலமான உசேன் முகமது எர்ஷாத், எந்த நாட்டைச்சேர்ந்த முன்னாள் இராணுவ சர்வாதிகாரியாவார்?

A) மியான்மர்

B) வங்கதேசம் ☑

C) பாகிஸ்தான்

D) ஈரான்

✓ வங்கதேசத்தின் முன்னாள் இராணுவ சர்வாதிகாரியான உசேன் முகமது எர்ஷாத் (89), ஜூலை.14 அன்று டாக்காவில் காலமானார். அவர் ஜாதிய (Jatiya) கட்சியின் தலைவராகவும், நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் தலைவராகவும் இருந்தார். 1930ஆம் ஆண்டில் அப்போதைய பிரிட்டிஷ் இந்தியாவில், மேற்கு வங்கத்தின் கூச்பிகார் மாவட்டத்தில் அவர் பிறந்தார். இந்திய துணைக்கண்டத்தில் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சி முடிவடைந்த பின்னர், அவரது பெற்றோர் 1948இல் பாகிஸ்தானின் ஒருபகுதியாக இருந்த இன்றைய வங்கதேசத்துக்கு குடிபெயர்ந்தனர்.

✓ இராணுவ தலைமைத்தளபதியாக இருந்து கடந்த 1982ஆம் ஆண்டில் இராணுவப் புரட்சியின் மூலம் அவர் ஆட்சியைக் கைப்பற்றினார். தொடர்ந்து 8 ஆண்டுகள் சர்வாதிகார அதிபராக திகழ்ந்து வந்த எர்ஷாத், 1990இல் மக்கள் புரட்சி வெடித்ததால் பதவியிலிருந்து வலுக்கட்டாயமாக நீக்கப்பட்டார்.

✓ பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் சிறையில் அடைக்கப்பட்ட போதிலும், 1990களில் எர்ஷாத் தனது 'ஜாதிய கட்சி' நாட்டின் மூன்றாவது பெரிய அரசியலமைப்பாக உருவெடுத்த பின், மிகவும் சக்திவாய்ந்த அரசியல் தலைவர்களுள் ஒருவராக ஆனார்.

10. Spektr-RG விண்வெளி தொலைநோக்கி, பின்வரும் எந்த நாடுகளின் கூட்டுத்தயாரிப்பாகும்?



A) இரஷ்யா மற்றும் ஜெர்மனி ☑

B) இந்தியா மற்றும் இரஷ்யா

C) பிரான்ஸ் மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகள்

D) சீனா மற்றும் தென் கொரியா

✓ Spektr-RG விண்வெளி தொலைநோக்கியானது (Space Telescope) இரஷ்யா மற்றும் ஜெர்மனியின் கூட்டுத் தயாரிப்பாகும். இது முழு வான்பரப்பிலும் X-கதிர்களை (X-Rays) முன்னெப்போதும் இல்லாத வகையில் விரிவாக வரைபடப்படுத்தும் (Map).

✓ இது, ஜூலை.13 அன்று கஜகஸ்தானின் பைக்கனூரில் அமைந்துள்ள விண்வெளி ஏவுதளத்திலிருந்து வெற்றிகரமாக விண்வெளியில் ஏவப்பட்டது. Spektr-RG என்பது Spektr-Rக்கு ("இரஷ்ய ஹப்பிள்' என்று அழைக்கப்படுகிறது) மாற்றாக ஏவப்பட்ட ஒரு விண்வெளி ஆய்வகமாகும் (Space Observatory). Spektr-RGஆல் அண்ட விரிவாக்கத்தின் விரைவான போக்கு குறித்த புதிய பார்வைகளை வழங்க முடியும் என நம்பப்படுகிறது. இது விண்மீன் திரள்களின் (Galaxy) மையத்திலிருக்கும் மிகப்பெரிய கருந்துளைகள் போன்ற புதிய X-கதிர் மூலங்களின் வியப்பூட்டும் எண்ணிக்கையையும் அடையாளங்காணும்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ 'பெருந்தலைவர்' கு.காமராஜர் அவர்களின் 117ஆவது பிறந்தநாள்.

✓ 11ஆவது உலக தமிழாராய்ச்சி மாநாடானது தமிழ்நாட்டின் சிதம்பரத்தில் அமைந்துள்ள அண்ணாமலை பல்கலையில் வரும் 2021ஆம் ஆண்டில் நடைபெறும் என அமெரிக்காவிலுள்ள சிகாகோ நகரத்தில் நடைபெற்ற 10ஆவது உலக தமிழாராய்ச்சி மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.

## நடப்பு நிகழ்வுகள்

**1.** மெல்பர்னின் லா திரோப் (La Trobe) பல்கலைக்கழகத்தால் கௌரவ முனைவர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ள திரைக்கலைஞர் யார்?

A) பிரியங்கா சோப்ரா

B) ஷாருக்கான் ☑

C) மாதுரி தீட்ஷித்

D) ஐஸ்வர்யா ராய் பச்சன்

✓ வரும் ஆகஸ்ட் மாதம் ஆஸ்திரேலியா சென்று, 10ஆவது மெல்பர்ன் இந்திய திரைப்பட விழாவின் (IFFM) விருந்தினராக ஷாருக்கான் கலந்துகொள்ளவுள்ளார். அப்போது, சமுதாயத்தின் அடிநிலையில் உள்ள சிறார்களுக்கு அவராற்றிய உதவிகள்; மீர் அறக்கட்டளை மூலம் பெண்களுக்கு செய்த உதவிகள் & இந்திய பொழுதுபோக்குத் துறையில் அவரின் சாதனைகளை கௌரவிக்கும் விதமாக மெல்பர்னில் உள்ள லா திரோப் பல்கலையானது அவருக்கு கௌரவ முனைவர் பட்டம் வழங்கவுள்ளது.

✓ ஷாருக்கானுக்கு 'மதிப்புறு முனைவர்' பட்டம் (Honorary Doctor of Letters) வழங்கி கௌரவிக்கும் முதல் பல்கலையாக லா திரோப் உள்ளது. மேலும் பண்டோராவில் அமைந்துள்ள லா திரோபின் மெல்பர்ன் வளாகத்தில், வரும் ஆக.9 அன்று ஷாருக்கானுக்கு கௌரவ முனைவர் பட்டம் வழங்கப்படும்.

**2.** எந்த இந்திய அறுவை சிகிச்சை நிபுணருக்கு, தாய்லாந்தின் இராயல் காலேஜ் ஆப் சர்ஜன்ஸின் கௌரவ பெல்லோஷிப் (FRCS) வழங்கப்பட்டுள்ளது?

A) இராமகந்த பாண்டா

B) தீப் கோயல்

C) P ரகு ராம் ☑

D) பிரதீப் சௌபே

✓ பிரால மார்பக அறுவைச்சிகிச்சை நிபுணரும் 'பத்மஸ்ரீ' விருதாளருமான மருத்துவர் P ரகு ராமுக்கு இந்தியாவில் மார்பக நலத்தை (Breast Healthcare) மேம்படுத்துவதற்காக, தாய்லாந்தின் இராயல் காலேஜ் ஆப் சர்ஜன்ஸின் கௌரவ பெல்லோஷிப் (FRCS) வழங்கப்பட்டுள்ளது. இது, இந்த நிறுவனம் வழங்கும் மிகவுயர்ந்த அங்கீகாரமாகும். பட்டாயாவில் அமைந்துள்ள ராயல் கல்லூரியின் 44ஆவது ஆண்டு அறிவியல் மாநாட்டின்போது அவர் இந்தக்கௌரவத்தைப் பெற்றார்.

✓ இதன்மூலம், மருத்துவர் ரகுராம் 5 அறுவைச்சிகிச்சை இராயல் கல்லூரிகளிலிருந்தும் (இலண்டன் எடின்பரோ, கிளாஸ்கோ, அயர்லாந்து & தாய்லாந்து) FRCS பெற்றவராகவும், அமெரிக்க அறுவைச் சிகிச்சை கல்லூரியிலிருந்து FACS பெற்றவராகவும் உள்ளார். இந்திய அறுவைச்சிகிச்சை சங்கத்தின் தலைவராகவும் இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**3.** பசுமை எரிசக்தி நிதியுதவிக்காக ஆசிய உட்கட்டமைப்பு மற்றும் முதலீட்டு வங்கியிடமிருந்து (AIIB) $100 மில்லியன் கடனுதவி பெற்றுள்ள முதல் வங்கியல்லாத நிதி நிறுவனம் எது?

A) L&T நிதி நிறுவனம் ☑

B) HDB நிதியியல் சேவைகள்

C) முத்தூட்

D) டாடா முதலீடு

- ✓ L&T உட்கட்டமைப்பு நிதி நிறுவனமானது (LTIF) இந்தியாவில் காற்று மற்றும் சூரிய மின்னாற்றல் உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு கடன் வழங்குவதற்காக ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியிடம் இருந்து $100 மில்லியன் டாலர் கடனைப்பெற்ற முதல் வங்கியல்லாத நிதி நிறுவனமாக மாறியுள்ளது.
- ✓ LTIF, L&T நிதியியல் நிறுவனத்தின் துணை நிறுவனமாகும். இது, இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க எரி ஆற்றலுக்கு கடனுதவி வழங்கும் முன்னணி வங்கியல்லாத நிதியாளராகும். பாரிசு ஒப்பந்தத்தின்கீழ், 2030ஆம் ஆண்டளவில் இந்தியா அதன் கரியுமிழ்வை 2005ஆம் ஆண்டில் உள்ள அளவிலிருந்து 30 – 35% குறைக்க உறுதிபூண்டுள்ளது.

**4.** நடப்பாண்டு விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் பெண்கள் பட்டத்தை வென்றவர் யார்?

A) ஏஞ்சலிக் கெர்பர்

B) நவொமி ஒசாகா

C) செரினா வில்லியம்ஸ்

D) சிமோனா ஹாலேப் ☑

- ✓ டென்னிஸில், சிமோனா ஹாலேப் 6–2, 6–2 என்ற செட் கணக்கில் செரீனா வில்லியம்ஸை வீழ்த்தி நடப்பாண்டு விம்பிள்டன் சாம்பியன்ஷிப்பில் பெண்கள் ஒற்றையர் டென்னிஸ் பட்டத்தை வென்றார். விம்பிள்டன் இறுதிப்போட்டியை எட்டிய மற்றும் வென்ற முதல் ரோமானிய வீராங்கனை என்ற பெருமையையும் சிமோனா ஹாலேப் பெற்றுள்ளார்.
- ✓ 1968இல ஓப்பன் சகாப்தம் தொடங்கியதிலிருந்து, அதில் போட்டியிடும் மிக வயதான (37 ஆண்டுகள் 291 நாட்கள்) கிராண்ட்ஸ்லாம் மகளிர் ஒற்றையர் இறுதிப்போட்டியாளராக வில்லியம்ஸ் உள்ளார். இது, ஓர் இறுதி செட் டை – பிரேக் (Tie – Break) விதி அறிமுகப்படுத்தப்பட்ட முதல் விம்பிள்டன் ஆகும். 3ஆவது செட்டில் 12–12ஐ எட்டியவுடன், ஒரு டை – பிரேக் விளையாடப்படும். பெண்கள் ஒற்றையர் போட்டிக்கு இறுதி செட் டை – பிரேக் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை.

**5.** உலக வங்கியின் காலநிலை நெகிழ்திறன் திட்டத்தின்கீழ் (Climate Resilience Program), நிதி உதவி பெற்ற முதல் இந்திய மாநிலம் எது?

A) தமிழ்நாடு B) கேரளா ☑

C) ஆந்திரப்பிரதேசம் D) ஒடிசா

✓ காலநிலை நெகிழ்திறன் திட்டத்தின்கீழ், இயற்கைப் பேரிடர்களிலிருந்து காத்துக்கொள்வதற்காக கேரளாவின் ‘நெகிழ்திறன் கேரள திட்ட’த்திற்கு, $250 மில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்க உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. இதன்மூலம், இயற்கைப் பேரிடர்கள் மற்றும் காலநிலை மாற்ற தாக்கங்களுக்கு எதிராக மாநிலத்தின் நெகிழ்திறனை மேம்படுத்துவதற்கு இந்நிதியுதவியைப் பெற்ற முதல் இந்திய மாநிலமாக கேரளா திகழ்கிறது.

✓ ‘நெகிழ்திறன் கேரள திட்ட’மானது உள்ளடக்கிய மற்றும் பங்கேற்பு அணுகுமுறையின் மூலம் வறிய & பாதிக்கப்படக்கூடிய பொதுமக்களின் சொத்துக்களையும், வாழ்வாதாரங்களையும் பாதுகாப்பதற்காக மாநிலத்தின் நிறுவன மற்றும் நிதி திறனை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. பசுமையான மற்றும் நெகிழ்திறன் மிக்க கேரளத்தைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக்கொண்ட கேரளத்தின் ‘கேரள மறுகட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட’த்துக்கு, இந்திய அரசு அளிக்கும் ஆதரவின் ஒருபகுதியாக இந்தப் புதிய திட்டம் உள்ளது.

## 6. சிங்கப்பூர் பன்னாட்டு வணிக நீதிமன்றத்தின் பன்னாட்டு நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள இந்தியாவின் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி யார்?

A) அர்ஜன் குமார் சிக்ரி ☑

B) ஆதர்ஷ்குமார் கோயல்

C) சஞ்சய் கிஷன் கவுல்

D) சுரிந்தர் சிங் நிஜ்ஜார்

✓ புகழ்பெற்ற நீதிபதியும், இந்திய உச்சநீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியுமான நீதிபதி அர்ஜன் குமார் சிக்ரி, சிங்கப்பூர் பன்னாட்டு வணிக நீதிமன்றத்தின் பன்னாட்டு நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். ஆகஸ்ட்.1 அன்று பன்னாட்டு நீதிபதியாக அவர் பொறுப்பேற்பார். அவரது பதவிக்காலம் 2021 ஜன.4 அன்று முடிவடையும். சிங்கப்பூர் பன்னாட்டு நீதிமன்றம் என்பது சிங்கப்பூர் உயர்நீதிமன்றத்தின் ஒரு பிரிவாகும் மற்றும் சிங்கப்பூர் உச்சநீதிமன்றத்தின் ஒருபகுதியாகும்.

✓ இது, நாடுகடந்த வணிக மோதல்களைச் சமாளிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன் குழுவின் ஒருபகுதியாக தற்போது 16 பன்னாட்டு நீதிபதிகள் உள்ளனர். நீதிபதி AK சிக்ரி, அண்மையில் செய்தி ஒளிபரப்பு தர நிர்ணய ஆணையத்தின் (NBSA) தலைவராக செய்தி ஒளிபரப்பாளர்கள் சங்கத்தால் (NBA) நியமிக்கப்பட்டார்.

## 7. கசர்கோட் கடற்கரையானது (Kasarkod Beach) எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

A) தமிழ்நாடு

B) ஆந்திரப்பிரதேசம்

C) கர்நாடகா ☑

D) கேரளா

✓ ‘நீலக்கொடி’ சான்றளிப்பிற்காக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் இந்தியாவில் உள்ள பன்னிரண்டு கடற்கரைகளை தேர்ந்தெடுத்துள்ளது. அவை, மாமல்லபுரம் (தமிழ்நாடு), ஈடன் (புதுச்சேரி), காப்பாடு

(கேரளா), சிவ்ராஜ்பூர் (குஜராத்), போகாவா (மகாராஷ்டிரா), கோலா (டியு), மீராமர் (கோவா), கோல்டன் (ஒடிசா), ருஷிகொண்டா (ஆந்திரம்), கசர்கோட் மற்றும் பதூபித்ரி (கர்நாடகம்) மற்றும் இராதாநகர் (அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள்) ஆகும்.

✓ 'நீலக்கொடி சான்றளிப்பு' என்பது தூய்மையுடைமையையும், சுற்றுச்சூழல் தரநிலைகளையும் பேணிப் பராமரித்துவரும் கடற்கரைகளுக்கு வழங்கப்படும் ஒரு பன்னாட்டு அங்கீகாரமாகும். டென்மார்க்கைச் சேர்ந்த சுற்றுச்சூழல் கல்விக்கான அறக்கட்டளையால் (Foundation for Environmental Education – FEE) 1985ஆம் ஆண்டு இந்தத்தரநிலைகள் உருவாக்கப்பட்டன. 'நீலக்கொடி சான்று' பெற தகுதிபெறுவதற்கு ஏறக்குறைய 33 நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும்.

**8.** எந்த இந்திய நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள், சிறிய பொதியுறைகளில் நுண்ணுயிர் திரிபுகளை அடைப்பதற்கான தொழில்நுட்பத்தை (Technology to Pack Microbial Strains in Tiny Capsules) உருவாக்கியுள்ளனர்?

A) இந்திய நீர் மேலாண்மை நிறுவனம், புவனேஸ்வர்

B) இந்திய விதை ஆராய்ச்சி நிறுவனம், மவு

C) மத்திய தோட்டப்பயிர் ஆராய்ச்சி நிறுவனம், காசர்கோடு

D) இந்திய நறுமணப் பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம் (IISR), கோழிக்கோடு ☑

✓ கோழிக்கோட்டில் உள்ள இந்திய நறுமணப் பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள், விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் நுண்ணுயிரிகளின் திரிபுகளை (Strains), சிறிய பொதியுறைகளில் அடைப்பதற்கான ஒரு தொழினுட்பத்தை உருவாக்கியுள்ளனர். இது, விவசாயிகள் தற்போது செய்வது போல, உயிரி உரங்களின் சாக்குகளைச் சுற்றி இழுத்துச்செல்வதன் அவசியத்தை நீக்கும்.

✓ இந்தத் தொழில்நுட்பத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட உயிரி – பொதியுறைகள், 1 கிராம் அளவிலான எடையைக்கொண்டுள்ளன. ஆனால், அவை கொண்டிருக்கும் நுண்ணுயிரிகளின் எண்ணிக்கையோ 1 கி.கி., தூளாக்கப்பட்ட உயிரி உரங்கள் அல்லது 1 லிட்டர் போத்தலில் உள்ள உயிரி உரங்களுக்குச் சமமாக உள்ளன. இந்தத் தொழில்நுட்பத்தின் மற்றொரு சிறப்பம்சம் என்னவென்றால், நைட்ரஜன் அளவை நிலைப்படுத்தும் நுண்ணுயிரி, கரைதிறன்மிக்க பாஸ்பேட்டுகள், நுண்ணூட்டச்சத்துக்கள் மற்றும் நோய்க்கிருமிகளைக் கட்டுப்படுத்த உதவும் பூஞ்சை உள்ளிட்ட எந்த வகையான பண்ணை நலம் சார்ந்த நுண்ணுயிரிகளையும் பொதிசெய்வதற்கு இதனை பயன்படுத்த இயலும் என்பதுதான்.

✓ இதுபோன்ற தொழில்நுட்பம் உலகளவில் வணிகரீதியாக எங்கும் கிடைப்பதில்லை என்பதால், தினேஷ் ராகவன் தலைமையிலான IISR அறிவியலாளர்களின் இச்சாதனை குறிப்பிடத்தக்கதாகும். IISR என்பது மத்திய வேளாண் அமைச்சகத்தின்கீழ், புது தில்லியில் இயங்கிவரும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் (ICAR) ஒரு துணை நிறுவனமாகும்.

**9.** நடப்பாண்டு உலக இளையோர் திறன்கள் நாளுக்கான கருப்பொருள் என்ன?

A) Skills Development to Improve Youth Employment

B) Skills for All

WORLD YOUTH SKILLS DAY
UNESCO UNEVOC
15 JULY 2019

C) World Skills for peace and prosperity

D) Learning to learn for life and work ☑

✓ ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.15 அன்று உலக இளையோர் திறன்கள் நாள் (World Youth Skills Day) அனுசரிக்கப்படுகிறது. இளையோருக்கு சிறந்த வாழ்வாதாரத்தை வழங்கும் திறன் மேம்பாடு குறித்த விழிப்புணர்வையும் விவாதத்தையும் இந்நாள் உருவாக்குகிறது. இந்த ஆண்டு, இந்தியாவில் திறன் மேம்பாட்டுக்கு ஆதரவளிக்கவும், உலக இளையோர் திறன் நாளை கொண்டாடவுமாக 'டிக்டாக் – Tik Tok' செயலியும், தேசிய திறன் மேம்பாட்டுக்கழகமும் (NSDC) கூட்டிணைந்துள்ளன.

✓ இந்திய இளையோருக்கான NSDCஇன் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 'டிக்டாக்'இன் 200 மில்லியன் பயனர் சமூகத்தை பயன்படுத்துவதே இக்கூட்டிணைவின் நோக்கமாகும். பெரிய, தரமான மற்றும் இலாப நோக்குள்ள (for – profit) தொழில் நிறுவனங்கள் உருவாக்குவதை ஊக்குவிப்பதன் மூலம் திறன் வளர்ச்சியை மேம்படுத்துவதே NSDCஇன் நோக்கமாகும்.

**10.** "Orchids of India: A Pictorial Guide" என்னும் இந்திய மந்தாரைகளின் முதல் விரிவான கணக்கெடுப்பை வெளியிட்டுள்ள இந்திய அமைப்பு எது?

A) டாடா அடிப்படை ஆராய்ச்சிக் கழகம்

B) தேசிய செல் அறிவியல் மையம்

C) இந்திய விலங்கியல் அளவாய்வு

D) இந்திய தாவரவியல் அளவாய்வு (Botanical Survey of India) ☑

✓ இந்திய மந்தாரைகளின் முதல் விரிவான கணக்கெடுப்பை, "Orchids of India: A Pictorial Guide" என்ற தலைப்பில் இந்திய தாவரவியல் அளவாய்வு அமைப்பு வெளியிட்டுள்ளது. இக்கணக்கெடுப்பின்படி, 155 இனங்களைச் (genera) சார்ந்த 1256 சிறப்பினங்கள் (species) அல்லது மந்தாரை வகைகளும் (taxa of orchids), 388 இனங்களும் இந்திய நாட்டுக்குரியதாகும்.

✓ அருணாச்சல பிரதேச மாநிலத்தில் அதிக எண்ணிக்கையிலான மந்தாரை இனங்கள் (612 இனங்கள்) பதிவாகியுள்ளன. அதைத் தொடர்ந்து சிக்கிமில் 560 இனங்களும், மேற்கு வங்கத்தில் (டார்ஜிலிங் இமயமலை) 479 இனங்களும் பதிவாகியுள்ளன. இந்திய நிலப்பரப்புக்குரிய 388 வகையான மந்தாரை வகைகளில், மூன்றில் ஒருபங்கு (128) இனங்கள் மேற்குத்தொடர்ச்சி மலைகளில் காணப்படுகின்றன. அவற்றுள் 111 இனங்கள் கேரளத்துக்கும், 92 இனங்கள் தமிழ்நாட்டு நிலப்பரப்புக்கும் உரியவை என அந்த வெளியீடு சுட்டிக்காட்டியுள்ளது.

✓ அனைத்து உயிரினங்களின் 60% நிழற்படங்களைக் கொண்ட இந்த வெளியீடு, முதல் மெய்யுறுதிமிக்க கணக்கெடுப்பாக உள்ளது. இது ஆராய்ச்சியாளர்கள், உழவர் பெருமக்கள், இயற்கை ஆர்வலர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். மற்றொரு கவனத்தைக் கவரும் காரணி என்னவென்றால், முழு மந்தாரை குடும்பமும் CITESஇன் (வனவிலங்குகள் மற்றும் தாவரங்களின் அருகிவரும் இனங்கள் மீதான சர்வதேச உடன்படிக்கை) பின் இணைப்பு IIஇன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன. எனவே, வனங்களில் காணப்படும் மந்தாரைகளின் வர்த்தகம் உலகளவில் தடைசெய்யப்பட்டுள்ளது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.** நிகழ்த்துக்கலைத் துறையில் (Performing Arts) சங்கீத நாடக அகாதமியின் பெலோஷிப்பிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளவர் யார்?

A) தருண் பட்டாச்சார்யா

B) ஜாகிர் உசேன் ☑

C) ராஜீவ் நாயக்

D) மாலினி அவஸ்தி




✓ நிகழ்த்துக்கலைத்துறை வித்தகர்களான ஜாகிர் உசேன், சோனல் மான்சிங், ஜதின் கோஸ்வாமி மற்றும் K கல்யாணசுந்தரம் பிள்ளை ஆகிய நான்கு பேர் சங்கீத நாடக அகாதமியின் பெலோஷிப் (அகாடமி ரத்னா) பெறுவதற்கு இசை, நடனம் மற்றும் நாடகத்திற்கான தேசிய அமைப்பான சங்கீத நாடக அகாதமியால் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். இந்த அகாதமியின் பெல்லோஷிப் என்பது மிகவும் மதிப்புமிக்க மற்றும் ஓர் அரிய கௌரவமாகும். இது எப்போது வழங்கப்பட்டாலும் அதிகபட்சம் 40 கலைஞர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

✓ இவர்களைத் தவிர இசை, நடனம், நாடகம், பாரம்பரிய/நாட்டுப்புற/பழங்குடி இசை/நடனம்/நாடகம், பொம்மலாட்டம் போன்ற பிரிவுகள் மற்றும் ஒட்டுமொத்த பங்களிப்புக்காக 44 கலைஞர்களும், 2018ஆம் ஆண்டுக்கான சங்கீத நாடக அகாதமி விருது (அகாடமி புரஸ்கார்) பெறுவதற்கு பொதுக்குழுவால் தேர்வு செய்யப்பட்டனர்.

✓ இந்தக் கலைஞர்களுள் ஹிந்துஸ்தானி குரல் பிரிவில் மணி பிரசாத், ஹிந்துஸ்தானி கருவி பிரிவில் (சந்தூர்) தருண் பட்டாச்சார்யா, பரதநாட்டிய நடனப் பிரிவில் ராதா ஸ்ரீதர், மணிப்பூரி நடனப் பிரிவில் அகம் இலட்சுமி தேவி, நாடகம் எழுதுதல் பிரிவில் இராஜீவ் நாயக் மற்றும் நாட்டுப்புற இசைப் பிரிவில் மாலினி அவஸ்தி ஆகியோர் அடங்குவர். இதில் மூன்று கூட்டு விருதுகளும் அடங்கும்.

**2.** ஐரோப்பிய ஆணையத்தின் முதல் பெண் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட உர்சுலா வான் டெர் லேயன் (Ursula von der Leyen), எந்த நாட்டைச் சேர்ந்தவராவார்?

A) ஆஸ்திரியா

B) போலந்து

C) பிரான்ஸ்

D) ஜெர்மனி ☑

✓ ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பைத் தொடர்ந்து ஐரோப்பிய ஆணையத்தின் முதல் பெண் தலைவராக ஜெர்மனின் பாதுகாப்பு அமைச்சர் உர்சுலா வான் டெர் லேயன் தேர்வு செய்யப்பட்டுள்ளார். ஐரோப்பிய ஆணையத்தின் தற்போதைய தலைவராக இருந்து வரும் ஜீன் கிளாட் ஜங்கர் (Jean – Claude Juncker) வரும் நவ.1 அன்று ஓய்வு பெறுவதையடுத்து உர்சுலா பதவியேற்பார்.

✓ ஐரோப்பிய ஒன்றிய சட்டங்களை உருவாக்குதல், ஐரோப்பிய ஒன்றிய விதிகளை அமல்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதுடன் தேவைப்பட்டால் உறுப்பு நாடுகளுக்கு அபராதம் விதிக்கும் அதிகாரத்தையும் ஐரோப்பிய ஆணைக்குழு கொண்டுள்ளது.

**3.** அண்மையில் காலமான ஸ்வரூப் தத்தா, எந்தப் பிராந்திய திரையுலகத்தைச் சேர்ந்தவராவார்?

A) ஒடியா

B) கன்னடம்

C) பெங்காலி ☑

D) தெலுங்கு

✓ மூத்த பெங்காலி மொழி நடிகரான ஸ்வரூப் தத்தா (78), ஜூலை.17 அன்று காலமானார். 1941 ஜூன்.22 அன்று பிறந்த அவர், 60களின் பிற்பகுதியிலும் 70களின் முற்பகுதியிலும் வங்காள வெள்ளித்திரையின் புகழ்பெற்ற நடிகர்களுள் ஒருவராக கருதப்பட்டார். தபன் சின்ஹாவின் ‘அபஞ்சன்’ (1968) திரைப் படத்தின் மூலம் அவர் திரையுலகுக்கு அறிமுகமானார். இந்தப்படம், 1960களில் மேற்கு வங்கத்தில் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்புக்கு எதிராக எடுக்கப்பட்டதாகும்.

**4.** எந்தப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், தண்ணீரிலிருந்து ஆர்சனிக்கை அகற்றுவதற்கான ஒரு மலிவு விலை வடிப்பானை (low-cost filter) உருவாக்கியுள்ளனர்?

A) தில்லி பல்கலைக்கழகம்

B) ஐஐடி பாம்பே

C) தேஸ்பூர் பல்கலைக்கழகம் ☑

D) IISC பெங்களூரு

✓ அஸ்ஸாமின் தேஸ்பூர் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் ‘Arsiron Nilogon’ என்னுமோர் எளிய மற்றும் மலிவான வடிகட்டும் முறையை உருவாக்கியுள்ளனர். இது, ஆர்சனிக் & இரும்புத்துகள்களால் மாசடைந்த நிலத்தடி நீரை அருந்துவதால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேட்டைக் குறைக்க உதவும். இந்த முறையானது நிலத்தடி நீரிலிருந்து 99.9% ஆர்சனிக் மாசை வடிகட்டி அந்நீரை குடிப்பதற்கு ஏற்ற நீராக மாற்றும். pH பக்குவப்படுத்துதலுக்காக சமையல் சோடா, ஆக்ஸிஜனை வழங்குவதற்காக பொட்டாசி -யம் பெர்மாங்கனேட் & ஆர்சனிக் திட இரும்பு ஆக்சைடுகளை உறிஞ்சுவதற்காக பெரிக் குளோரைடு ஆகியன இந்த வடிகட்டுதல் செயல்பாட்டில் பயன்படுத்தப்படும் வேதிகளாகும்.

✓ இந்த முறையானது ஆர்சனிக்கை இரண்டு ppb (நூறுகோடியில் ஒருபங்கு) என்ற அளவுக்குக்கூட அகற்றும். உலக சுகாதார அமைப்பானது, 10 ppb என்ற அளவை நிலையான அளவாக வைத்துள்ளது. உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, ஆர்சனிக என்பது புவியின் மேலோட்டில் இயற்கையாக காணப்படும் ஒரு கூறு ஆகும். இது காற்று, நீர் மற்றும் நிலத்தில் பரவலாக காணப்படுகிறது. ஆயினும், அதன் கனிம வடிவத்தில் அது மிகவும் நச்சுத்தன்மை உடையதாக உள்ளது.

✓ ஆர்சனிக் மாசு நிறைந்த நீரையோ அல்லது உணவையோ நீண்ட காலத்திற்கு அருந்துவதாலோ அல்லது உண்பதாலோ அது தோலில் புண்களையோ அல்லது புற்றுநோயையோ ஏற்படுத்தும். இந்த

வடிகட்டும் முறையானது ஆர்சனிக் மற்றும் இரும்புடன் சேர்த்து மாங்கனீசு, ஈயம், நிக்கல், குரோமியம், தாமிரம் போன்ற பிற நச்சு உலோக அயனிகளையும் நீக்குகிறது.

**5.** 'மகிழ்ச்சிக் கொண்டாட்டம்' என்ற ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ள மாநிலம் அல்லது யூனியன் பிரதேச அரசு எது?

A) ஹரியானா

B) இராஜஸ்தான்

C) மத்தியப்பிரதேசம்

D) தில்லி ☑

✓ தில்லி அரசு தனது மகிழ்ச்சிப் பாடத்திட்டத்தை அறிமுகம் செய்து ஓராண்டு காலம் நிறைவடைந்ததை கொண்டாடும் விதமாக அண்மையில் தனது பள்ளிகளில் 'மகிழ்ச்சிக் கொண்டாட்டம்' என்ற ஒன்றை அறிமுகம் செய்தது. இந்தக்கொண்டாட்டத்தின்போது, ஒவ்வொரு நாளின் தொடக்கத்திலும் முதல் 50 நிமிடங்களுக்கு, தில்லி அரசாங்கப் பள்ளிகளில் பயிலும் அனைத்துச் சிறார்களும் பல்வேறு செயல்பாடுகளில் பங்கேற்பார்கள். நாடகங்கள், கவிதை அரங்கங்கள், கண்காட்சிகள் போன்ற செயல்பாடுகள், 15 நாள் நடைபெறும் இந்த விழாவின் ஒருபகுதியாக இருக்கும்.

**6.** விஜயவீர் சித்து, எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A) ஜூடோ

B) பளு தூக்குதல்

C) துப்பாக்கி சுடுதல் ☑

D) மல்யுத்தம்

✓ ஜெர்மனியில் நடந்துவரும் ஜூனியர் உலகக்கோப்பை துப்பாக்கிசுடுதல் போட்டியின், ஆடவருக்கான 25 மீ., 'பிஸ்டல்' பிரிவில் சிறப்பாக செயல்பட்ட இந்தியாவின் விஜய்வீர் சித்து, ஆதர்ஷ் ராஜ்கன்வர் அடங்கிய அணிக்கு தங்கம் கிடைத்தது. இது விஜய்வீர் வென்ற $3_{\text{ஆவது}}$ தங்கம். ஆதர்ஷிற்கு $2_{\text{ஆவது}}$ தங்கமாக அமைந்தது. இதுவரை நடந்த போட்டிகளின் முடிவில் இந்தியா ஏழு தங்கம், ஏழு வெள்ளி, 2 வெண்கலம் என மொத்தம் 16 பதக்கங்கள் பெற்று பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. 5 தங்கம் 3 வெள்ளி மற்றும் 5 வெண்கலங்களுடன் சீனா பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

**7.** எந்தத் தேதியில், சர்வதேச சுறா விழிப்புணர்வு நாள் அனுசரிக்கப்படுகிறது?

A) ஜூலை 17

B) ஜூலை 14 ☑

C) ஜூலை 16

D) ஜூலை 15

✓ சுற்றுச்சூழல் அமைப்பில் சுறாக்கள் வகிக்கும் பங்கின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.14 அன்று சர்வதேச சுறா விழிப்புணர்வு தினம் அனுசரிக்கப்படுகிறது. "The Sharks in Crisis: A Call to Action for The Mediterranean – நெருக்கடியில் சுறாக்கள்: மத்திய தரைக் கடல் நடவடிக்கைக்கான அழைப்பு" என்பது நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும். உலக வனவுயிரி நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, லிபியாவிற்கு பிறகு மத்திய தரைக்கடல் பகுதியில், சுறாக்களை வேட்டையாடும் 2ஆவது மிகப்பெரிய மீன்பிடி நாடாக துனிசியா உள்ளது.

✓ WWFஇன் இந்த அறிக்கையானது, மத்திய தரைக்கடலின் இருபுறங்களிலும் உள்ள மீனவர்கள் மட்டும் மீன்பண்ணை மேலாளர்களை வளர்ப்பு இடங்கள் போன்ற முக்கியமான பகுதிகளில் மீன்பிடிப்பதை தவிர்க்கவும், மீன்பிடித்தலின்போது சிக்கும் சுறாக்களை மீண்டும் அப்பகுதியிலேயே விடுவதற்கும் அழைப்பு விடுத்துள்ளது. பாதுகாப்பு முயற்சிகளை வலுப்படுத்துவதற்கும், மீன்பிடித் துறையில் வெளிப் -படைத்தன்மை மற்றும் சட்டபூர்வத் தன்மையை உறுதிசெய்வதற்கும் சுறாக்களின் எண்ணிக்கை & வணிகமயமாக்கப்பட்ட உயிரினங்கள் குறித்த அறிவை மேம்படுத்த வேண்டியதன் தேவையையும் இது சுட்டிக்காட்டுகிறது.

**8.** ம.பிஇன் எந்த நகரத்திலிருந்து, அம்மாநிலத்தின் முதலாவது சர்வதேச வணிகம்சார் விமானம் (Commercial Flight) புறப்பட்டுச் சென்றது?

A) இந்தூர் ☑

B) போபால்

C) ஜபல்பூர்

D) குவாலியர்

✓ மத்தியப்பிரதேசத்தின் இந்தூரில் அமைந்துள்ள தேவி அஹில்யாபாய் ஹோல்கர் சர்வதேச விமான நிலையத்திலிருந்து துபாய்க்கு அம்மாநிலத்தின் முதலாவது சர்வதேச விமான சேவையை ஏர் இந்தியா நிறுவனம் அண்மையில் தொடங்கியது. A903 என்ற அந்த இடைநில்லா விமானமானது வளைகுடா நாட்டுக்கான நேரடி இணைப்பை வழங்குவதோடு சுற்றுலாப் பயணிகளின் நெடுங்கால விருப்பத்தையும் நிறைவேற்றியுள்ளது.

✓ ஏர் இந்தியா நிறுவனமானது இந்தூரிலிருந்து 162 இருக்கைகள் கொண்ட A320 என்ற நியோ (Neo) விமானத்தை இயக்குகிறது. இது, வாரத்தில் மும்முறை – திங்கள், புதன் மற்றும் சனிக்கிழமைகளில் துபாய்க்கு இடைநில்லாது பறக்கும். இந்தூரில் பிறந்த சுனிஷ்குமார் பார்கவா, தனது சொந்த நகரத்திலிருந்து பயணப்படும் இந்த முதல் சர்வதேச விமானத்தின் தளபதியாக இருந்தார். இந்தூரில் இருந்து திங்கள், புதன் மற்றும் சனிக்கிழமைகளில் துபாய்க்கு நேரடியாக பறக்கும் இந்த விமானம், துபாயிலிருந்து செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இந்தூருக்கு நேரடியாக பறக்கும். ரூ.18,700 முதல் 42,000 வரை இதற்கான கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**9.** இந்திய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான அகலக்கற்றை தயார்நிலை குறியீட்டை (Broadband Readiness Index) உருவாக்க முடிவு செய்துள்ள இந்திய அமைப்பு எது?

A) இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI)

B) பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் (BSNL)

C) சர்வதேச பொருளாதார உறவுகள் குறித்த இந்திய ஆராய்ச்சி கவுன்சில் (ICRIER) ☑

D) மகாநகர் டெலிபோன் நிகாம் லிமிடெட் (MTNL)

✓ இந்திய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான அகலக்கற்றை தயார்நிலை குறியீட்டை (BRI) உருவாக்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், தொலைத்தொடர்புத் துறையும், சர்வதேச பொருளாதார உறவுகள் குறித்த இந்திய ஆராய்ச்சி கவுன்சிலும் (ICRIER) கையெழுத்திட்டுள்ளன. இதன் முதல் மதிப்பீடு நடப்பாண்டிலும், அதன்பின்னர் 2022ஆம் ஆண்டுவரை ஒவ்வோர் ஆண்டும் செய்யப்படும். இந்தக் குறியீடானது மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அளவில் உள்ள அடிப்படை டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் அது தொடர்புடைய காரணிகளின் நிலையை மதிப்பிடும்.

✓ ICT திட்டங்களில் முதலீடு ஒதுக்கீட்டிற்காக மாநிலங்கள் மேற்கொண்ட உத்திசார் விருப்பங்கள் பற்றிய பயனுள்ள பார்வைகளை இது வழங்கும். இந்தியாவில் டிஜிட்டல் உள்ளடக்கம் மற்றும் வளர்ச்சியின் ஒட்டுமொத்த நோக்கத்தை அடைவதில் கூட்டாக பங்கேற்க மாநிலங்களை இது ஊக்குவிக்கும்.

**10.** மகாராஷ்டிர மாநிலத்தில் பாயும் எந்த ஆற்றின் கரையில், மார்க்கண்டேசுவரர் திருக்கோவில் அமைந்துள்ளது?

A) வைங்கங்கா ஆறு (River Wainganga) ☑

B) பைங்கங்கா ஆறு

C) வர்தா ஆறு

D) கொய்னா ஆறு

✓ மகாராஷ்டிராவின் கட்சிரோலி மாவட்டத்தில் வைங்கங்கா ஆற்றின் கரையில் மார்க்கண்டேசுவரர் திருக்கோவில் அமைந்துள்ளது. இந்திய தொல்பொருள் ஆய்வு மையம், 2017ஆம் ஆண்டு நவம்பர் முதல் இந்தக் கோவிலில் பேரளவான புனரமைப்புப்பணிகளைத் தொடங்கியது. "விதர்பாவின் கஜுராகோ" என்றழைக்கப்படும் இக்கோவில்கள் வட இந்தியாவின் நாகரா கோவில்கள் குழுமத்தைச் சேர்ந்தவை. காலத்தின் அடிப்படையில், அந்தக் கோவில்கள், 9–12ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்டதாக உள்ளன. அவை, சைவம், வைணவம் மற்றும் சாக்த மத நம்பிக்கைகள் சார்ந்தவையாகும்.

✓ பெரும்பாலான கோவில்கள் எளிய வடிவில் கட்டப்பட்டுள்ளன. அவை அர்த்தமண்டபம், மண்டபம், கருவறை உள்ளிட்ட கூறுகளைக் கொண்டுள்ளன. இதன் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சமானது கருவறையில் ஏற்பட்ட மிகப்பெரிய பேரழிவாகும். சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு கருவறையின் விமானத்தை மின்னல் தாக்கியதையடுத்து விமானத்தின் பல்வேறு பகுதிகள் சேதமடைந்ததாக அலெக்சாண்டர் கன்னிங்காம் தனது குறிப்பில் பதிவு செய்துள்ளார்.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ வளரிளம் பெண்களுக்கு இரத்தசோகை பிரச்சனை ஏற்படாமல் தடுக்கும் நோக்கில் ஊட்டச்சத்துப் பொருள்கள் அடங்கிய ‘அம்மா இயற்கை நலப்பெட்டகம்' இலவசமாக வழங்கப்படும் எனத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.
- ✓ தில்லியில் வரும் செப்.23, 24 ஆகிய தேதிகளில் மொரிசியஸ் சர்வதேச திருக்குறள் அறக்கட்டளை, சென்னை ஆசியவியல் நிறுவனம் ஆகியவை இணைந்து மூன்றாவது உலக திருக்குறள் மாநாட்டை நடத்துகின்றன.
- ✓ செங்கல்பட்டில் 50 ஏக்கர் பரப்பில், ரூ.92 கோடி செலவில் உலகத்தரம்வாய்ந்த யோகா பயிற்சி மையம் அமைக்கப்படும் என சட்டசபையில், சுகாதார அமைச்சர் விஜயபாஸ்கர் கூறியுள்ளார்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.** தியாகிகள் வாரிசுக்கான நிதியுதவியை ரூ.1 கோடி என்ற அளவிற்கு உயர்த்தியுள்ள மாநில அரசு எது?

A) ஒடிசா

B) கேரளா

C) ஆந்திரப்பிரதேசம்

D) மகாராஷ்டிரா ☑

- ✓ மகாராஷ்டிரா மாநில அரசானது அண்மையில் போர் அல்லது போர் போன்ற சூழ்நிலைகளிலோ அல்லது தேசிய பாதுகாப்பு தொடர்பான மோதல்களின் போதோ உயிர்த்தியாகம் செய்த தியாகியரின் குடும்பங்களுக்கான நிதியுதவியை ரூ.25 இலட்சத்திலிருந்து ரூ.1 கோடி என்ற அளவிற்கு உயர்த்தி உள்ளது. மோதலில் காயமடைந்தோர்க்கு அவர்களின் காயத்தின் தீவிரத்தைப் பொறுத்து தலா ரூ.20 இலட்சம் முதல் ரூ.60 இலட்சம் வரை இழப்பீடு வழங்கப்படும். இந்த விதி, 2019 ஜனவரி 1ஆம் தேதியில் இருந்து முன்தேதியிட்டு அமலுக்கு வரும்.

**2.** சர்வதேச சூரிய கூட்டணி (ISA) கட்டமைப்பின் ஒப்பந்தத்தில் இணைய எழுபத்து ஆறாவதாக கையெழுத்திட்டுள்ள நாடு எது?

A) நார்வே

B) பலாவு ☑

C) சுவீடன்

D) லத்வியா

- ✓ ஓசியானியாவில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட தீவுகளைக்கொண்ட ஒரு தீவுக்கூட்டமான பலாவு, சர்வதேச சூரிய கூட்டணி (International Solar Alliance – ISA) கட்டமைப்பின் ஒப்பந்தத்தில் இணைய எழுபத்தாறாவதாக கையெழுத்திட்டுள்ள நாடாக மாறியுள்ளது. ISA என்பது இந்தியாவின் குருகிராமை தலைமையிடமாகக்கொண்ட 121 சூரிய ஆற்றல் வளம் நிறைந்த நாடுகளின் குழுவாகும். இந்த அமைப்பு, 2015 நவம்பரில் பாரிசில் நடந்த ஐ.நா காலநிலை மாற்ற மாநாட்டின்போது இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் முன்னாள் பிரெஞ்சு ஜனாதிபதி பிராங்கோயிஸ் ஹாலண்டே ஆகியோரால் கூட்டாக தொடங்கப்பட்டது.

- ✓ சூரிய ஆற்றல் வளத்தை விரைவாகவும், பெருமளவிலும் பயன்படுத்துவதன் மூலம் பாரிசு காலநிலை ஒப்பந்தத்தை செயல்படுத்துவதில் பெரும் பங்களிப்பு செய்யும் ஒரு முதன்மையான உலகளாவிய முயற்சிதான் இந்தக் கூட்டணி. காலநிலை மாற்றம், நீடித்த மீன்வளம் மற்றும் கடல் மாசுபாடு போன்ற பிரச்சனைகளை மையமாகக்கொண்ட 'நமது பெருங்கடல்கள் மாநாடு – Our Oceans Conference'இன் 2020ஆம் ஆண்டைய பதிப்பை பலாவு நடத்தவுள்ளது.

**3.** "தபோர் தடகளத்தில்", 200 மீ., ஓட்டப்பந்தயத்தில் தங்கம் வென்ற இந்திய பெண்மணி யார்?

A) டூட்டி சந்த்

B) V K விஸ்மயா

C) ஹிமா தாஸ் ☑

D) ஸ்வப்னா பர்மன்

✓ செக் குடியரசில் நடந்த "தபோர் தடகள – Tabor Athletics" சந்திப்பில், இந்தியாவின் ஹிமா தாஸ் 200 மீ ஓட்டப்பந்தயத்தை 23.25 வினாடிகளில் கடந்து தங்கம் வென்றார். மற்றோர் இந்திய வீராங்கனை V K விஸ்மயா, 23.43 வினாடிகளில் கடந்து இரண்டாவது இடம்பிடித்து வெள்ளி வென்றார். 200 மீ., ஓட்டப் பந்தயத்தில் ஹிமாவின் முந்தைய சாதனை 23.10 வினாடிகள் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஜூலை 2ஆம் தேதியிலிருந்து ஹிமா தாஸ் வெல்லும் 4ஆவது தங்கம் இது என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

**4.** "சந்தைப்படுத்துதல் – முதன்மை அரசாங்க சுற்றுலாத்தலம்" பிரிவில் பசிபிக் ஆசிய பயணக் கூட்டமைப்பின் (Pacific Asia Travel Association – PATA) நடப்பாண்டுக்கான தங்க விருதை வென்ற இந்திய அரசாங்கத்தின் பரப்புரை (Campaign) எது?

A) Swachh Bharat Abhiyan

B) Find the Incredible You ☑

C) India Shining

D) God's Own Country

✓ 'Incredible India – வியத்தகு இந்தியா'வின் "Find the Incredible You – வியத்தகு உங்களை கண்டறியுங்கள்' என்ற பரப்புரையானது "சந்தைப்படுத்துதல் – முதன்மை அரசாங்க சுற்றுலாத்தளம் (Marketing – Primary Government Destination)" என்ற பிரிவில் பசிபிக் ஆசிய பயணக்கூட்டமைப்பின் நடப்பாண்டுக்கான தங்க விருதை வென்றுள்ளது. இந்தப் பரப்புரையானது 2018-19இல் மத்திய சுற்றுலா அமைச்சகத்தால் பன்னாட்டளவில் வெளியிடப்பட்டது. இந்தப் பரப்புரை, டிஜிட்டல் மற்றும் சமூக ஊடகங்கள் மற்றும் நாட்டின் முக்கிய சுற்றுலா தயாரிப்புகளை மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. ஆசிய – பசிபிக் பிராந்தியம் முழுவதும் சுற்றுலாத்துறையை பிரபலப்படுத்துவதில் வெற்றிகரமான சிறப்பான பங்களிப்பை வழங்கிவரும் சுற்றுலாத்துறை நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு இந்த PATA தங்க விருதுகள் வழங்கப்படுகின்றன.

**5.** "Kargil: Untold stories from the War" என்ற நூலின் ஆசிரியர் யார்?




A) ரச்சனா பிஷ்த் இராவத் ☑

B) மிருனல் தாக்கூர்

C) பிரகாஷ் கோவேலமுடி

D) இலட்சுமி மஞ்சு

- “Kargil: Untold stories from the War” என்ற தலைப்பிலான நூலை ரச்சனா பிஷ்த் இராவத் எழுதியுள்ளார். இந்த நூல், போரில் உயிர் பிழைத்தவர்கள் மற்றும் தியாகியரின் குடும்பங்களுடனான ஆசிரியரின் நேர்காணல்களை அடிப்படையாகக்கொண்டது. இந்நூல், இந்திய ராணுவத்தின் மிகப்பயங்கரமான போர்களில் சிலவற்றை கண்ட இமயமலைக்கு அதன் வாசகர்களை இட்டுச்செல்லும்.

- இந்திய பக்கத்திலான எல்லைக்கட்டுப்பாட்டுக்கோட்டை ஆக்கிரமிப்பு செய்திருந்த பாகிஸ்தானிய படை வீரர்களை, அந்த இடத்திலிருந்து வெளியேற்றும் பொருட்டு, 1999ஆம் ஆண்டு மே மாதம் தொடங்கப்பட்ட அந்தப் போர், ஏறக்குறைய 3 மாதங்கள் நீடித்தது. போரில் வென்ற இந்தியா, சுமார் 500 படைவீரர்களை இழந்தது. இந்த நூல் அவர்களின் வீரத்திற்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் காணிக்கை செலுத்தும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

**6.** துளிர்நிறுவனங்களுக்கான நிதியங்களின் நிதிப் பங்களிப்பிற்காக (Fund of Funds Contribution) இணைய அடிப்படையிலான பயன்பாட்டு முறையை அறிமுகப்படுத்தியுள்ள இந்திய அமைப்பு எது?

A) IRDA

B) SEBI

C) SIDBI ☑

D) RBI

- துளிர்நிறுவனங்களுக்கான நிதியங்களின் நிதிப் பங்களிப்பிற்காக இணைய அடிப்படையிலான பயன்பாட்டு முறையை SIDBI அறிமுகப்படுத்தியுள்ளது. பல்வேறு மாற்று முதலீட்டு நிதியங்களிடம் (Alternative Investment Funds – AIF) இருந்து பங்களிப்பிற்காக பெறப்படும் விண்ணப்பங்கள் தற்போது இணையவழியிலேயே ஏற்றுக்கொள்ளப்படும். மேலும், அந்த விண்ணப்பத்தின் நிலையானது விண்ணப்பதாரர்கள் அணுகக்கூடிய வகையிலிருக்கும். இதனால் அமைப்பில் வெளிப்படைத்தன்மை அதிகரிக்கும்.

- இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான வசதிகள் அனைத்தும் SIDBIஇன் முகப்புப் பக்கத்தில் இருக்கும். விண்ணப்பித்தலை தொடங்க, AIF ஒரு கணக்கை உருவாக்கி, விவரங்களை நிரப்பவேண்டும். பின்னர், தேவையான ஆவணங்களுடன் இணையத்தில் விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்க வேண்டும். இந்திய அரசாங்கத்தின் சார்பாக ரூ.10,000 கோடி தொகுப்புடன் துளிர் நிறுவனங்களுக்கான நிதியங்களின் நிதிப் பங்களிப்பை செயல்படுத்தும் நிறுவனமாக SIDBI உள்ளது.

**7.** 2018ஆம் ஆண்டுக்கான அர்ஜுனா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ள இந்திய கிரிக்கெட் வீராங்கனை யார்?

A) வேதா கிருஷ்ணமூர்த்தி

B) ஸ்மிருதி மந்தனா ☑

C) ஹர்மன்பிரீத் கவுர்

D) ஜூலன் கோஸ்வாமி

✓ புது தில்லியில் நடந்த ஒரு விழாவில் நட்சத்திர இந்திய கிரிக்கெட் வீராங்கனை ஸ்மிருதி மந்தனா மற்றும் டென்னிஸ் வீரர் ரோகன் போபண்ணா ஆகியோருக்கு 2018ஆம் ஆண்டுக்கான அர்ஜுனா விருதுகளை மத்திய விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு வழங்கினார். தற்போது, ICC ஒருநாள் சர்வதேசப் போட்டிகளின் பேட்டிங் தரவரிசையில் ஸ்மிருதி மந்தனா முதலிடத்தில் உள்ளார். இந்தியாவுக்காக விளையாடி வரும் அவர், 1951 ரன்களை இதுவரை பதிவுசெய்துள்ளார் மற்றும் அவரது சராசரி 42.41 என உள்ளது. மறுபுறம், 2018ஆம் ஆண்டின் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், டென்னிஸ் ஆண்கள் இரட்டையர் பிரிவில், போபண்ணா தங்கம் வென்றார். இவ்விருதுக்காக வழங்கப்பட்ட மொத்த பரிசுத்தொகையானது 350,000,000 ஆகும்.

**8.** 3D பயோ பிரிண்டிங் மற்றும் மறுசீரமைப்பு மருத்துவத்திற்கான இந்தியாவுக்கும் எந்நாட்டுக்கும் இடையேயான நிறுவனங்கள் – இடை ஒப்பந்தத்திற்கு (Inter – Institutional Agreement) மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது?

A) அமெரிக்க ஐக்கிய நாடுகள் (USA) ☑



B) பிரான்ஸ்

C) இத்தாலி

D) கனடா

✓ மறுசீரமைப்பு மருத்துவம் மற்றும் 3D பயோ பிரிண்டிங், புதிய தொழில்நுட்பங்கள், அறிவியல் ஆலோசனைகள் / தகவல்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் பரிமாற்றம், அறிவியல் உட்கட்டமைப்பை இணைந்து பயன்படுத்துவது ஆகிய துறைகளில் இந்தியா மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் (USA) இடையேயான நிறுவனங்கள் – இடை ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை பின்னேற்பு ஒப்புதல் (ex – post facto approval) அளித்துள்ளது.

✓ கல்வி ஒத்துழைப்பின் மூலம் இரு நிறுவனங்களின் ஆராய்ச்சி மற்றும் கல்வி வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்வதே இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும். இந்த ஒப்பந்தத்தின் கீழ், கூட்டு ஆராய்ச்சித் திட்டங்கள், பயிற்சித்திட்டங்கள், மாநாடுகள், கருத்தரங்குகள் (Seminars) போன்ற அனைத்தும் தகுதிவாய்ந்த அனைத்து அறிவியலாளர்கள் & தொழில்நுட்ப வல்லுநர்களுக்குமானதாக இருக்கும். மறுசீரமைப்பு மருத்துவம் மற்றும் முப்பரிமாண (3D) பயோ பிரிண்டிங் முதலிய துறைகளின் அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப மேம்பாடானது புதிய அறிவுசார் சொத்து, செயல்முறைகள், முன்மாதிரிகள் அல்லது தயாரிப்புகளை உருவாக்கும் திறனைக் கொண்டிருக்கும்.

**9.** எந்தத் தேதியில், சர்வதேச நீதி நாள் கடைப்பிடிக்கப்படுகிறது?

A) ஜூலை 15

B) ஜூலை 16

C) ஜூலை 17 ☑

D) ஜூலை 18

✓ சர்வதேச குற்றவியல் நீதியை ஊக்குவிப்பதையும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் பணிகளை ஆதரிப்பதையும் நோக்கமாகக் கொண்டு, ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.17 அன்று சர்வதேச நீதிக்கான உலக தினம் (World Day for International Justice) கடைப்பிடிக்கப்படுகிறது. நீதியை ஆதரிக்க விரும்பும் அனைவரையும் ஒருங்கிணைப்பதோடு, பாதிக்கப்பட்டவரின் உரிமைகளை மேம்படுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும். இந்த நாள், சர்வதேச குற்றவியல் நீதி நாள் அல்லது சர்வதேச நீதி நாள் என்றும் குறிப்பிடப்படுகிறது.

**10.** உலக சுகாதார அமைப்பானது எபோலா எதிர்பாரா நிகழ்வை உலக சுகாதார அவசர நிலை என எந்த ஆப்பிரிக்க நாட்டில் அறிவித்துள்ளது?




A) மொசாம்பிக்

B) சாம்பியா

C) காங்கோ மக்களாட்சிக் குடியரசு (DRC) ☑

D) அங்கோலா

✓ காங்கோ மக்களாட்சிக்குடியரசில் ஏற்பட்டுள்ள எபோலா நெருக்கடியை உலக சுகாதார அமைப்பானது (WHO) சர்வதேச அக்கறையின் பேரிலான பொதுநல அவசர நிலை (PHEIC) என அறிவித்துள்ளது. மக்களாட்சிக் குடியரசான காங்கோவில் ஏற்பட்டுள்ள இத்'திடீர் நிகழ்வில்' ஆயிரத்து அறுநூற்றுக்கும் மேற்பட்டோர் இதுவரை மரணித்துள்ளனர். வரலாற்றில் இரண்டாவது மிகப்பெரிய 'திடீர் நிகழ்வாக' கருதப்படும் இது, 2018 ஆகஸ்டில் தொடங்கியது. இது மக்களாட்சிக் குடியரசான காங்கோவில் உள்ள வடக்கு கிவு (Kivu) & இட்டூரி (Ituri) ஆகிய இரண்டு மாகாணங்களை பாதித்துள்ளது.

✓ வரலாற்றில் இதுபோன்று வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் இது ஐந்தாவது அறிவிப்பாகும். மேற்கு ஆப்பிரிக்காவில் 11,000க்கும் மேற்பட்ட மக்களைக்கொன்ற பேரழிவுகரமான 2014-16 எபோலா 'திடீர் நிகழ்வு', அமெரிக்காவில் ஜிகா அவசரநிலை, பன்றிக்காய்ச்சல் தொற்று மற்றும் போலியோ ஆகியன ஏற்கனவே அறிவிக்கப்பட்ட அவசரநிலைகளாகும்.

✓ 'எபோலா' என்பது ஒரு நச்சுயிரி ஆகும், இது தொடக்கத்தில் திடீர் காய்ச்சல், தீவிர சோர்வு, தசை வலி மற்றும் தொண்டைப்புண் ஆகியவற்றை ஏற்படுத்துகிறது. பின்னர் வாந்தி, வயிற்றுப்போக்கு மற்றும் உள் மற்றும் வெளிப்புற குருதிப்போக்கு ஆகியவற்றுடன் அடுத்த நிலைக்கு முன்னேறுகிறது. தோல் வெடிப்பு அல்லது வாய் மற்றும் மூக்கு வழியாக, எபோலா நோயால் பாதிக்கப்பட்ட ஒருவரின் குருதி, வாந்தி, மலம் / உடல் திரவங்களுடன் மக்கள் நேரடியாக தொடர்புகொள்ளும்போது அவர்களுக்கும் இந்தத்தொற்று ஏற்படுகிறது. நீரிழப்பு மற்றும் பல்லுறுப்பு செயலிழப்பால் நோயாளிகள் இறுதியாக மரணத்தைத் தழுவுகின்றனர்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.** 'ICC Hall of Fame' பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள இந்திய கிரிக்கெட் வீரர் யார்?

A) சவுரவ் கங்குலி

B) V V S லக்ஷ்மன்

C) ஜவகல் ஸ்ரீநாத்

D) சச்சின் டெண்டுல்கர் ☑

✓ கிரிக்கெட்டுக்காற்றிய சேவைக்காக இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர், தென்னாப்பிரிக்க வேகப்பந்து வீச்சாளர் ஆலன் டொனால்ட், ஆஸ்திரேலிய வீராங்கனை கேத்தரின் பிட்ஸ்பேட்ரிக் ஆகியோர் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ICC) 'Hall of Fame'இல் சேர்க்கப்பட்டுள்ளனர். கிரிக்கெட்டின் பிதாமகன் எனக் கூறப்படும் டான் பிராட்மேனுக்கு ஈடாகக்கருதப்படும் சச்சின், டெஸ்ட் மற்றும் ODI ஆட்டங்களில் மொத்தம் 34357 ரன்களை எடுத்துள்ளார். 100 சர்வதேச சதங்களை அடித்துள்ளார்.

✓ தென்னாப்பிரிக்காவின் மிகச்சிறந்த வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான ஆலன் டொனால்ட் 330 டெஸ்ட், 272 ஒரு நாள் விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். கடந்த 2003இல் அவர் ஓய்வு பெற்றார். இரண்டு முறை உலகக்கோப்பை வென்ற ஆஸ்திரேலிய மகளிர் கிரிக்கெட் அணி வீராங்கனையான கேத்தரின் பிட்ஸ்பேட்ரிக் 180 ஒருநாள் விக்கெட்டுகள், 60 டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்தியவர். மேலும் ஆஸ்திரேலிய அணியின் பயிற்சியாளராக இருந்து 3 முறை கோப்பை வெல்ல உதவியவர்.

**2.** எந்த மாநில / யூனியன் பிரதேசத்தின் கிரிக்கெட் சங்கத்திற்கு BCCI முழுநேர உறுப்பினர் தகுதியை வழங்கியுள்ளது?

A) டாமன் & டியு

B) அந்தமான் & நிகோபார் தீவுகள்

C) பாண்டிச்சேரி ☑

D) இலட்சத்தீவுகள்

✓ பாண்டிச்சேரி கிரிக்கெட் சங்கத்திற்கு (CAP) BCCIஇன் நிர்வாகிகள் குழுவானது முழுநேர உறுப்பினர் தகுதியை வழங்கியுள்ளது. இதன்மூலம், CAP, BCCIஇன் வாக்களிக்க தகுதியுடைய உறுப்பினராக தகுதி பெற்றுள்ளது. கடந்த 2018 அக்டோபரில், இச்சங்கத்துக்கு இணை உறுப்பினர் தகுதி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**3.** பரமார்ஷ் திட்டமானது (Paramarsh Scheme) எந்த மத்திய அமைச்சகத்துடன் தொடர்புடையது?

A) பாதுகாப்பு அமைச்சகம்

B) இரயில்வே அமைச்சகம்

C) நிதி அமைச்சகம்

D) மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் ☑

✓ மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் Dr. இரமேஷ் போக்ரியால் "நிசாங்க்", பல்கலைக்கழக மானியக்குழுவின் 'பரமார்ஷ்' என்ற திட்டத்தைத் தொடங்கிவைத்தார். புது தில்லியில் உயர்கல்வியில் தர உத்தரவாதத்தை மேம்படுத்துவதற்காக தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகாரம் கவுன்சிலின் (NAAC) அங்கீகாரத்தை பெற விரும்பும் நிறுவனங்களுக்கு வழிகாட்டும் நோக்கில் இத்திட்டம் உருவாக்கப்பட் -டுள்ளது. தொடக்கத்தில், 3.26 மற்றும் அதற்கு மேற்பட்ட NAAC மதிப்பெண்களுடைய 71 பல்கலைகள் மற்றும் 391 கல்லூரிகளும் தலா ஐந்து கல்லூரிகளுக்கு வழிகாட்டும்.

✓ 'பரமார்ஷ்' திட்டத்தின் கீழ், முன்னணி நிறுவனங்களானது கல்லூரிகளுக்கு உயர்தரத்தை அடைய உதவும் வழிகாட்டுதல்களை வழங்கும். வழிகாட்டும் நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கவும், ஒரு வல்லுநரை நியமிக்கும் விருப்புத்தேர்வையும், அவர்களுக்கு மாதத்திற்கு ரூ.31,000 உதவித்தொகை வழங்கவும் இத்திட்டம் முன்மொழிகிறது. இந்தியாவில் உயர்கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கான தேசிய சவாலை எதிர்கொள்வதில், இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

**4.** சமீபத்தில் தொடங்கப்பட்ட மாணவர் தூண்டல் திட்டத்துக்கான (Student Induction Programme – SIP) UGC கையேட்டுக்கு என்ன பெயர் வழங்கப்பட்டுள்ளது?

A) பிரவேஷிகா

B) தீக்ஷா

C) தீக்ஷாரம்ப் ☑

D) தக்ஷிணா




✓ மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் Dr. இரமேஷ் போக்ரியால் "நிஷாங்க்", ஜூலை.18 அன்று புது தில்லியில் "தீக்ஷாரம்ப்" என்ற மாணவர் தூண்டல் திட்டத்துக்கான (Student Induction Programme – SIP) UGC கையேட்டை வெளியிட்டார். இந்தக் கையேடானது, புதிய மாணவர்களுக்கு புதிய சூழலில் சக மாணாக்கருடனும், ஆசிரியர்களுடனும் பிணைப்புகளை உருவாக்கிக்கொள்ள உதவும். போட்டி நிறைந்த உலகத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள விரும்பும் மாணாக்கருக்கு அதிகாரமளிப்பதற்கும், உண்மை, நன்னடத்தை, அன்பு, அகிம்சை, அமைதி போன்ற உலகளாவிய மனித விழுமியங்களை அடிப்படையாகக்கொண்ட பாத்திரக் கட்டமைப்பிற்கு இட்டுச்செல்லும் வாழ்க்கையின் புதிய பரிமாணங்களைத் திறப்பதற்கும் இந்தத் திட்டம் நோக்கம் கொண்டுள்ளது.

✓ உயர்கல்வி நிறுவனங்கள் & அதன் பங்குதாரர்களிடையே 'தீக்ஷாரம்ப் – SIP' பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, UGC ஆனது நாட்டின் பல்வேறு பிராந்தியங்களில் உள்ள ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் பயிற்சித்திட்டத்தையும் நடத்த முடிவு செய்துள்ளது.

**5.** எந்தத் தேதியில், சர்வதேச நெல்சன் மண்டேலா தினம் அனுசரிக்கப்படுகிறது?

A) ஜூலை 19 ☑ B) ஜூலை 20

C) ஜூலை 18 D) ஜூலை 21

✓ தென்னாப்பிரிக்காவின் முன்னாள் குடியாரசுத்தலைவரின் பெருமைகள், மரபு மற்றும் சமூகத்திற்கு அவரளித்த பங்களிப்பு ஆகியவற்றுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.18 அன்று சர்வதேச நெல்சன் மண்டேலா தினம் அனுசரிக்கப்படுகிறது.

✓ மண்டேலாவின் பெருமைகள் மற்றும் மோதல் தீர்மானம்; இன உறவுகள்; மனித உரிமைகள் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு; சமரசம்; பாலின சமத்துவம் மற்றும் குழந்தைகள் மற்றும் பிற பாதிக்கப்படக்கூடிய சமுதாயங்களின் உரிமைகள்; வறுமைக்கு எதிரான போராட்டம்; சமூக நீதி மேம்பாடு போன்ற மனித குல சேவைக்கான அவரது அர்ப்பணிப்பை இந்த நாள் அங்கீகரிக்கிறது.

**6.** மோதிஹாரி – அம்லேக்கஞ்ச் பெட்ரோலிய குழாய் திட்டமானது இந்தியாவுடன் எந்த நாட்டை இணைத்துள்ளது?

A) வங்கதேசம்

B) நேபாளம் ☑

C) மியான்மர்

D) இலங்கை

✓ ரூ.325 கோடி மதிப்பிலான மோதிஹாரி – அம்லேக்கஞ்ச் பெட்ரோலிய குழாய் திட்டமானது வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. இத்திட்டத்தின் வணிக ரீதியான செயல்பாடுகள் வரும் ஆகஸ்ட் மாதத்துக்குள் தொடங்கப்படவுள்ளன. பிகாரின் மோதிஹாரியிலிருந்து, நேபாளத்தின் அம்லேக்கஞ்ச் பகுதி வரை 69 கி.மீ தூரத்திற்கு எரிபொருள் கொண்டுசெல்லும் குழாய் பதிக்கும் பணிகளை இந்தியா நிறைவு செய்துள்ளது. இது நேபாளத்திற்கான தடையற்ற, செலவு குறைந்த மற்றும் சுற்றுச்சூழல் தோழமை மிகுந்த பெட்ரோலிய பொருட்கள் விநியோக முறையை உறுதிசெய்யும்.

✓ நேபாளத்தில் எண்ணெய் சேமிப்புச்சிக்கலை சமாளிப்பதற்கும், டேங்கர் லாரிகள் மூலம் பெட்ரோலிய பொருட்களை கொண்டுசெல்வதை தவிர்ப்பதற்கும் இந்தக் குழாய் அமைப்பு உதவும். நேபாள பிரதமர் K P சர்மா ஒலி மற்றும் இந்திய பிரதமர் மோடி ஆகியோரால் இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட பின்னர், நேபாளம் இந்தியாவுடனான எரிபொருள் வர்த்தகத்தை அதிகாரப்பூர்வமாக தொடங்கும். மோதிஹாரி – அம்லேக்கஞ்ச் எண்ணெய் குழாய் திட்டமானது முதன்முதலில் 1996இல் முன்மொழியப்பட்டது. இருப்பினும், பிரதமர் மோடியின் 2014ஆம் ஆண்டு காத்மாண்டு வருகைக்குப் பிறகே இந்தத் திட்டம் இறுதியாக செயல்பாட்டுக்கு வந்தது.

**7.** 'வானிலிருந்து மருத்துவம்' என்பது எந்த மாநில அரசின் முன்னோடித் திட்டமாகும்?

A) தெலங்கானா ☑

B) ஆந்திரப்பிரதேசம்

C) கேரளா

D) தமிழ்நாடு

✓ 'வானிலிருந்து மருத்துவம் – Medicine from the Sky' என்னும் புதுமையான முன்னோடித் திட்டத்தை தெலுங்கானா அரசாங்கமும், உலக பொருளாதார மன்றத்தின் நான்காவது தொழிற்துறை புரட்சி

வலையமைப்பின் மையமும் இணைந்து தொடங்கவுள்ளன. குருதி, தடுப்பூசிகள், மருத்துவ மாதிரிகள் மற்றும் உறுப்புகள் போன்ற அவசரகால மருத்துவப் பொருட்களை ஆளில்லா விமானங்கள் (Drones) வழியாக கொண்டு செல்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இந்தத் திட்டம் மாநில அரசு மற்றும் ஹெல்த்நெட் குளோபல் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும்.

**8.** விதிகளை மீறியதற்காக எந்த நாட்டின் கிரிக்கெட் கூட்டமைப்பு மீது, ICC உடனடி தடையை கொண்டுவந்துள்ளது?

A) பெல்ஜியம்

B) ஜிம்பாப்வே ☑

C) ஸ்பெயின்

D) புருனே

- ✓ சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ICC) நீண்டகாலமாக முயற்சி செய்து பார்த்தும், ஜிம்பாப்வே கிரிக்கெட் கூட்டமைப்பு விவகாரத்தில் எந்தத் தீர்வும் எட்டப்படாத நிலையில், சுதந்திரமான, ஜனநாயக ரீதியில் வாரியதேர்தலை நடத்த உறுதி அளிக்காததாலும், கிரிக்கெட் நிர்வாகத்தில் அரசாங்கத்தின் தலையீடு இல்லை என்பதை உறுதிசெய்ய முடியாத நிலையிலும், அந்தக் கிரிக்கெட் அணியை தடைசெய்வதாக ICC அறிவித்துள்ளது. ஜிம்பாப்வே கிரிக்கெட் வாரியமானது, ICC சட்டவிதிகளின் பிரிவு 2.4 (c) & (d) ஆகியவற்றை மீறியுள்ள காரணத்தால், அவ்வணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளது.
- ✓ இத்தடையால், ஜிம்பாப்வே கிரிக்கெட் வாரியத்துக்கு ICC எந்த நிதியுதவியும் வழங்காது. மேலும், ICC நடத்தும் எந்தக் கிரிக்கெட் தொடர்களிலும் ஜிம்பாப்வே அணி பங்கேற்க முடியாது. மற்ற ICC உறுப்பு நாடுகளும், ஜிம்பாப்வே அணியுடன் கிரிக்கெட் விளையாடுவதைத் தவிர்த்து விடுவார்கள். அடுத்த 3 மாதங்களுக்குள் நேர்மையான முறையில் தேர்தல் நடத்தி, புதிய நிர்வாகத்தின் கையில் வாரியம் செல்வதே இதற்கான தீர்வாகும். அதன்பின் அக்டோபரில் நடக்கவுள்ள ICC கூட்டத்தில், ஜிம்பாப்வே மீதான தடைகுறித்து விவாதித்து முடிவு எட்டப்படும்.
- ✓ குரோஷியா கிரிக்கெட் கூட்டமைப்பு மற்றும் சாம்பியா கிரிக்கெட் ஒன்றியம் ஆகிய இரண்டும் ICC உறுப்பினர் விதிகளைத் தொடர்ந்து பின்பற்றாததால் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளன. மொராக்கோ ராயல் கிரிக்கெட் கூட்டமைப்பும் ICC உறுப்பினராக இருந்து வெளியேற்றப்பட்டுள்ளது.

**9.** நடப்பாண்டு FCG காலவே ஜூனியர் உலக கோல்ப் சாம்பியன்ஷிப்பை வென்ற இந்திய கோல்ப் வீரர் யார்?

A) அர்ஜுன் பட்டி (Arjun Bhati) ☑

B) சுபாங்கர் ஷர்மா

C) இரஷீத் கான்

D) முகேஷ் குமார்

- 14 வயதான இந்திய கோல்ப் வீரர் அர்ஜுன் பட்டி, கலிபோர்னியாவின் பனை பாலைவனத்தில் நடந்த நடப்பாண்டு FCG Callaway ஜூனியர் உலக கோல்ப் சாம்பியன்ஷிப் போட்டியில், தைவானின் ஜெரேமி செனை வீழ்த்தி பட்டத்தைக் கைப்பற்றினார். போட்டிகளில் பங்கேற்ற 40 நாடுகளைச் சேர்ந்த 637 கோல்ப் வீரர்களில், மூன்று நாள் நீண்ட இறுதிப்போட்டியில் மொத்தம் 199 அடிப்புகளுடன் (Strokes) அர்ஜுன் முதலிடத்தைப் பிடித்தார். அவரைத்தொடர்ந்து சென் மற்றும் நியூசிலாந்தின் ஜோஸ்வா பாய் ஆகியோர் முறையே 202 மற்றும் 207 அடிப்புகளுடன் 2ஆவது & 3ஆவது இடங்களைப் பிடித்தனர்.

10. போக்குவரத்துக் காவல்துறையின் பயன்பாட்டிற்காக புதிய மின்னணு செலுத்துச் சீட்டு (e-Challan) முறையை அறிமுகப்படுத்தியுள்ள மாநில / யூனியன் பிரதேச காவல்துறை எது?

A) தில்லி ☑

B) பாண்டிச்சேரி

C) ஹிமாச்சல பிரதேசம்

D) ஹரியானா

- தில்லி காவல்துறை ஆணையர் அமுல்யா பட்நாயக், அண்மையில், தில்லி போக்குவரத்துக் காவல் துறையின் பயன்பாட்டிற்காக புதிய மின்னணு செலுத்துச்சீட்டு அமைப்பு (e-Challan System) மற்றும் மின்னணு – கட்டண நுழைவாயில் (e-payment Gateway) ஆகியவற்றை அறிமுகம் செய்துவைத்தார்.

- இந்த மின்னணு செலுத்துச்சீட்டு சாதனங்கள், செயலில் உள்ள GPS உடன் இணைக்கப்பட்டிருக்கும், அதன்மூலம், போக்குவரத்து அதிகாரி மற்றும் விதிகளை மீறுபவர் என இவ்விருவரையும் எந்த ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்தும் கண்காணிக்க இயலும். வழக்கு விசாரணையின் நம்பகத்தன்மையை நிறுவுவதற்கான ஆதாரங்களின் முக்கியமான கருவியாகும் இது.

- மின்னணு கட்டண நுழைவாயிலானது குடிமக்களுக்கு அவர்களின் வசதிக்கேற்ப பாதுகாப்பாக உள் நுழையவும், பணம் செலுத்தியதற்கான ஆதாரத்துடன் நிலுவையில் உள்ள விதிமீறல் அறிக்கைகளை தீர்க்கவும் உதவும். இது பணமில்லா பொருளாதாரத்தை நோக்கிய ஒரு முக்கியமான படியாகும். காவல்துறையுடனான மக்களின் இணக்கம் மேம்படுவதையும், வெளிப்படையானதாக இருப்பதையும் இது உறுதிசெய்கிறது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- சேலம் சுகாதார மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஆத்தூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய சுகாதார மாவட்டம் உருவாக்கப்படும் என பேரவை விதி 110இன் கீழ் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

- கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில், சர்வதேச மலர் ஏல மையம், 20 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ளதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

- திருநெல்வேலியிலிருந்து பிரித்து தென்காசியும், காஞ்சிபுரத்திலிருந்து பிரித்து செங்கல்பட்டும் தனி மாவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கள்ளக்குறிச்சி மாவட்டத்துடன்

இந்த இரண்டு புதிய மாவட்டங்களையும் சேர்த்து, தமிழ்நாட்டில் மாவட்டங்களின் எண்ணிக்கை முப்பத்தைந்தாக (35) உயர்ந்துள்ளது.

- ✓ இந்திய உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகள் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு, இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.
    - ○ ஜீவஜோதியின் கணவர் சாந்தகுமார் கொல்லப்பட்ட வழக்கில் சரவணபவன் ஹோட்டல் உரிமையாளர் இராஜகோபால் சென்னை உயர்நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டிருந்தார். இந்தத் தண்டனையை எதிர்த்து இந்திய உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தது. இதில், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை உச்சநீதிமன்றம் உறுதிசெய்து தீர்ப்பு அளித்தது. இதுவே, தமிழ் மொழியில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்ட உச்சநீதிமன்றத்தின் முதல் தீர்ப்பாகும்.
- ✓ சென்னையின் முதலாவது திடக்கழிவுகள் எரிப்பு உலை மணலியில் அமையவுள்ளது. இதையடுத்து மாதவரம் மற்றும் திருவொற்றியூர் ஆகிய பகுதிகளில் இவ்வுலை அமைக்கப்படும். சுற்றுச்சூழலுக்கு ஊறுவிளைவிக்காத தூய கரிம சாம்பலை உற்பத்திசெய்வதற்காக அக்கழிவுகள் எரிக்கப்படவுள்ளன.
- ✓ தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகாரம் ஆணையமானது திருச்சியிலுள்ள புனித ஜோசப் கல்லூரிக்கு A++ தகுதிச்சான்றிதழை வழங்கியுள்ளது. இந்தியாவில் தன்னாட்சி கலைக்கல்லூரிகளில் இத்தகுதியைப் பெற்றிருப்பது இதுதான் முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது. பல்கலை மானியக்குழுவிடமிருந்து (UGC) 'சிறப்புப்பாரம்பரிய' அங்கீகாரம் பெற்ற தமிழ்நாட்டின் ஒரே கல்லூரி இதுவாகும்.
- ✓ **தமிழ்நாடு அரசின் புதிய விருதுகள் – உருவாக்கம்:**
    - ○ சமரச நெறிகளால் ஆன்மிகத் தொண்டாற்றும் ஒருவருக்கு '**அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் விருது**' அளிக்கப்படும்.
    - ○ தமிழ் வேர்ச்சொல் ஆய்வு, அகராதி உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு ஆய்வுப் பணிகளில் ஈடுபடும் தமிழறிஞர் ஒருவருக்கு '**தேவநேயப் பாவாணர் விருது**' அளிக்கப்படும்.
    - ○ காரைக்கால் அம்மையாரின் படைப்பிலக்கிய நெறிகளில் தமிழ்த்தொண்டாற்றி வரும் மகளிர் ஒருவருக்கு '**காரைக்கால் அம்மையார் விருது**' அளிக்கப்படும்.
    - ○ வீரமாமுனிவர் நெறியில் அவரது படைப்பு நடையில் காவியங்கள், சிற்றிலக்கியங்கள் என்ற வகைகளில் தமிழ்த்தொண்டாற்றி வரும் தமிழறிஞர் ஒருவருக்கு '**வீரமாமுனிவர் விருது**' அளிக்கப்படும்.
- ✓ அயல்மொழியினருக்கு எளிதாகவும், விரைவாகவும் தமிழ் கற்பிக்கும் வகையில் வாராணசி ஹிந்துப் பல்கலைக்கழகத்தில் மொழி ஆய்வுக்கூடம் தொடங்கப்படும் எனத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.
- ✓ தமிழ் ஆட்சிமொழிச் சட்டமானது கடந்த 1956ஆம் ஆண்டு டிச.27இல் இயற்றப்பட்டது. இதனை நினைவு கூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் டிச.21 – 27 வரை 'ஆட்சிமொழிச் சட்ட வாரம்' அனைத்து மாவட்டங்களிலும் கடைப்பிடிக்கப்படும் எனத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

- ✓ **சங்கப்புலவர்களுக்கு நினைவுத்தூண்கள்: தமிழ்நாடு அரசின் தமிழ்த்துறை அறிவிப்பு.**

    - சிவகங்கை மாவட்டம் மகிபாலன்பட்டியில் கணியன் பூங்குன்றனாருக்கும், விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூரில் கபிலருக்கு ஒரு தூணும், தூத்துக்குடி மாவட்டம் கொற்கையில் மாறோக்கத்து நம்பலத்தானார், மாறோக்கத்து நப்பசலையார், மாறோக்கத்து முள்ளிநாட்டு நல்லூர்க் காவிதியார் மகன் புல்லங்காடனார், வெறிபாடிய காமக்கண்ணியார், முன்றுறையரையனார் ஆகிய 6 புலவர்களுக்கும் சேர்த்து ஒரு நினைவுத்தூண் என மொத்தம் 3 நினைவுத்தூண்கள் அமைக்கப்படும்.

- ✓ சி.பா.ஆதித்தனார் பெயரில் 'சிற்றிதழ் பரிசு' என்ற புதிய விருது ஆண்டுதோறும் அளிக்கப்படும் எனத் தமிழ்நாடு அரசின் தமிழ்த்துறை அறிவித்துள்ளது.

- ✓ சொல்லாய்வுகள், ஆய்வுக்கட்டுரைகள், அகராதியியல் சார்ந்த கருத்தரங்குகள், ஆய்வரங்குகள் தொடர்பான செய்திகளை ஆவணப்படுத்தி செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலி திட்ட இயக்குநரை இதழாசிரியராகக்கொண்டு 'சொல்வயல்' என்ற பெயரில் மாத இதழ் வண்ணப் படங்களுடன் எழுதுபொருள் அச்சுத்துறை மூலம் அச்சிட்டு வெளியிடப்படவுள்ளது.

- ✓ பேரவை விதி 110இன் கீழ், ஆண்டுதோறும் நவம்பர்.1 அன்று தமிழ்நாடு நாளாக கொண்டாடப்படும் எனவும், ரூ.50 லட்சம் செலவில் திருச்சியில் தியாகராஜ பாகவதருக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் எனவும், திருக்குறள் ஹீப்ரு மொழியில் மொழிபெயர்ப்பு செய்யப்படும் எனவும், நீர்வளத்தை மேம்படுத்த 'நடந்தாய் வாழி காவிரி திட்டம்' செயல்படுத்தப்படும் எனவும் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.** எந்த நகரத்தில், 10ஆவது ஜாக்ரன் திரைப்பட விழா (JFF-2019) தொடங்கியுள்ளது?

A) புது தில்லி ☑

B) மும்பை

C) கொல்கத்தா

D) கொச்சின்

✓ ஜூலை.18 அன்று, மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர், 10ஆவது ஜாக்ரன் திரைப்பட விழாவை புது தில்லியில் உள்ள சிரி கோட்டை அரங்கில் தொடங்கிவைத்தார். ஜாக்ரன் திரைப்பட விழா என்பது ஜாக்ரன் பிரகாஷன் குழுமத்தின் திரைத்துறையில் விமர்சன கலாசாரத்தை உருவாக்குவதற்கான ஒரு முன்னெடுப்பாகும். கடந்த ஆண்டு நடைபெற்ற விழாவில், பதினெட்டுக்கும் மேற்பட்ட நகரங்களில், 400 திரையிடல்கள், 18 திரைத்துறை விமர்சன பயிலரங்கம் போன்றவை நடத்தப்பட்டன.

**2.** செயற்கை நுண்ணறிவில் இயங்கும் "ABHi" என்ற அரட்டை இயலியை (Chatbot) அறிமுகம் செய்வதற்காக ஆந்திர வங்கியானது எந்த நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்துள்ளது?

A) மைக்ரோசாப்ட்

B) விப்ரோ

C) இன்போசிஸ்

D) புளோட்பாட் (Floatbot) ☑

✓ இணைய வங்கி பயனர்களுக்கு செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence – AI) மூலம் செயல்படும் ஒரு மெய்நிகர் உதவியாளரை வழங்குவதற்காக ஆந்திர வங்கியானது புளோட்பாட் உடன் கூட்டு சேர்ந்துள்ளது. அந்நிறுவனம் உருவாக்கிய "ABHi" என்ற AI அரட்டை இயலியானது ஆந்திர வங்கியின் மைய வங்கியியல் சேவையகங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. மேலும், ஆந்திர வங்கியில் கணக்கு வைத்திருக்கும் ஐந்து கோடி வாடிக்கையாளர்களுக்கும் அது தானியங்கி ஆதரவு சேவையை வழங்கும். இந்த அரட்டை இயலியால் ஆங்கிலம், ஹிந்தி & ஹிங்கிலம் (ஹிந்தி கலந்த ஆங்கிலம்) ஆகிய மொழிகளில் வங்கிச் சேவைகளை வழங்கவியலும்.

✓ "ABHi" மூலம் வாடிக்கையாளர்கள் எப்போது வேண்டுமானாலும் தகவல்களை உடனடியாகப் பெற முடியும். அலைபேசி / மேசைக்கணினி உலாவி, பேஸ்புக் மெசஞ்சர் மற்றும் கூகுள் உதவியாளர் வழியாக 'www.andhrabank.in' என்ற வலைத்தளத்தின் மூலம் வாடிக்கையாளர்கள் "ABHi" மூலம் தகவல்களை அறிந்துகொள்ளலாம். டிஜிட்டல் வங்கி, கடன்கள், வங்கிச்சேவைகள், அரசு திட்டங்கள், காப்பீடு, மூத்த குடிமக்கள், RuPay சலுகைகள், ஆதார் சேவைகள், கட்டண முறை, வைப்பு / EMI கணிப்பான், வாடிக்கையாளர் புகாரளித்தல், கூகுள் வரைபடத்தில் அருகிலுள்ள கிளை / ATM ஆகியவற்றை அறிவது, பிரீபெய்ட் மொபைல் ரீசார்ஜ் செய்தல் போன்ற தகவல்களை வாடிக்கையாளர்கள் எந்த நேரத்திலும், எப்போது வேண்டுமானாலும் இதன் மூலம் அறியலாம்.

**3.** IAAF 'மூத்த வீராங்கனை' விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள முன்னாள் இந்திய விளையாட்டு வீராங்கனை யார்?

A) கர்ணம் மல்லேஸ்வரி

B) P T உஷா ☑

C) அஞ்சு பாபி ஜார்ஜ்

D) மஞ்சு பாலா சுவாமி

✓ சர்வதேச தடகள கூட்டமைப்பு (IAAF) சார்பில் 'மூத்த வீராங்கனை – Veteran Pin' என்ற விருதுக்கு இந்தியாவின் P T உஷா பரிந்துரைக்கப்பட்டுள்ளார். அவர் பெரும்பாலும், 'இந்திய தடகளங்களின் இராணி – Queen of the track and field' என அழைக்கப்படுகிறார். வரும் செப்டம்பர் 24 அன்று கத்தாரில் நடைபெறவுள்ள 52ஆவது IAAF கூட்டத்தின் தொடக்க விழாவில் நடக்கும் விருது வழங்கும் நிகழ்வில் பங்கேற்க IAAF தலைமை நிர்வாக அதிகாரி ஜோன் ரிட்ஜியன் அழைப்பு விடுத்துள்ளார்.

✓ 1985ஆம் ஆண்டில் ஜாகர்த்தாவில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வெண்கலம் வென்றது தவிர 100 மீ, 200 மீ, 400 மீ ஓட்டம், 400 மீ தடைதாண்டும் ஓட்டம் மற்றும் 4x400 மீ தொடரோட்டம் என பலபிரிவுகளில் பதக்கம் வென்றார். கடந்த 1984ஆம் ஆண்டில் லாஸ் ஏஞ்சல்ஸில் நடந்த ஒலிம்பிக்கில் 400 மீ தடைதாண்டும் ஓட்டத்தில் இறுதிப்போட்டிவரை சென்றார். இதன்மூலம் இப்பிரிவில் இறுதிப் போடிக்கு முன்னேறிய முதல் இந்திய வீராங்கனையானார்.

**4.** ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் இந்தியா ஏன் படிப்படியாக தொழில்மயமாகியது?

A) புதிய தொழிற்சாலைகள் அமைக்க முதலாளிகள் உதவினர்

B) பல தொழில்நுட்ப வல்லுநர்கள் இந்தியாவுக்கு வந்திருந்தனர்

C) இந்திய குடிசைத்தொழில்களை ஆங்கிலேயர் கைப்பற்றி முடக்கினர் ☑

D) புதிய இயந்திரத்தால் தயாரிக்கப்பட்ட பொருட்களை மக்கள் பெரிதும் விரும்பினர்

✓ 17 & 18ஆம் நூற்றாண்டுகளில் இந்தியாவை "உலகின் தொழிற்துறை பட்டறை" என அழைத்தனர். அந்த நேரத்தில், இங்கிலாந்தில், இந்திய பருத்தித்தயாரிப்புகளுக்கான தேவை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இருந்தது. இந்திய பருத்தித்துணியை ஆங்கிலேயர்கள் அக்காலத்தின் "நடை (Style) மற்றும் நாகரிகத்தின் (Fashion)" அடையாளமாகக் கருதினர்.

✓ ஆங்கிலேயர்கள் பின்பற்றிய பொருளாதார கொள்கைகள் இந்தியாவின் பொருளாதாரத்தை ஒரு காலனித்துவ பொருளாதாரமாக விரைவாக மாற்ற வழிவகுத்தன. அதன் இயல்பும், கட்டமைப்பும் ஆங்கிலேய பொருளாதாரத்தின் தேவைகளைப் பொறுத்துத் தீர்மானிக்கப்பட்டது. அவர்கள் எப்போதும் இந்திய நிலத்தில் அந்நியராகவே வாழ்ந்தனர், இந்திய வளங்களைச் சுரண்டிச்சென்றனர். ஆங்கிலேய ஆட்சியின்போது இந்தியாவில் முதல் உற்பத்தித் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. பம்பாய் மற்றும் தானே இடையே முதல் இரயில்பாதை அமைக்கப்பட்ட உடனேயே 1854ஆம் ஆண்டில், முதலாவது பருத்தி – ஜவுளி ஆலை பம்பாயில் நிறுவப்பட்டது.

**5.** எந்த நகரத்தில், 5ஆவது சர்வதேச காவலர் கண்காட்சி நடைபெற்றது?

A) கான்பூர்

B) பதேபூர்

C) புது தில்லி ☑

D) சிம்லா

- ✓ 5ஆவது சர்வதேச காவல்துறை கண்காட்சியானது ஜூலை.19 – 20 வரை "அமைதி மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான சவால்கள் – Challenges to Strengthen Peace and Security" என்ற கருப்பொருளுடன் புது தில்லியின் பிரகதி மைதானத்தில் நடைபெற்றது. இந்தக் கண்காட்சியானது பல்வேறு நாடுகளின் காவற்துறையின் பிரதிநிதிகள் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தொழினுட்ப வழங்குநர்களை சந்திக்கக்கூடிய ஓர் ஊடாடும் தளமாகும்.

- ✓ இக்கண்காட்சியில் நவீன இரக துப்பாக்கிகள், போர்/கவச வாகனங்கள் மற்றும் இணைய பாதுகாப்பு, ஆளில்லா விமானங்கள், தாய்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு மற்றும் மீட்பு முதலானவற்றில் எதிரிகளை தாக்கியழிக்கும் நவீன தொழில்நுட்பங்களை 25க்கும் மேற்பட்ட நாடுகள் காட்சிப்படுத்தின. நெக்ஸ்ஜென் கண்காட்சியாளர் ஏற்பாடு செய்திருந்த இந்தக் கண்காட்சியில் சிங்கப்பூர், இஸ்ரேல், தென் கொரியா, தைவான், சீனா, இங்கிலாந்து, அமெரிக்கா, மலேசியா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா, போலந்து மற்றும் பிற நாடுகளைச்சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் சிறந்த மற்றும் நவீன தொழினுட்பங்களைக் காட்சிப்படுத்தின. அகில இந்திய அளவில் 100,000 மக்களுக்கு 117 காவலர்கள் என்ற விகிதத்தில் உள்ளனர்.

**6.** பிரிதூ குப்தா (Prithu Gupta), எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A) சதுரங்கம் ☑

B) ஜூடோ

C) ஹாக்கி

D) கால்பந்து

- ✓ தில்லியைச்சேர்ந்த பிரிதூ குப்தா (15), 2500 மதிப்பெண்ணுக்கு மேல் பெற்று இந்தியாவின் 64ஆவது கிராண்ட்மாஸ்டர் ஆனார். அவர், நடப்பாண்டு போர்த்துகீசிய தகுதிச் சுற்றின் 5ஆவது சுற்றில் IM லெவ் யங்கலவிச்சை வீழ்த்தி எலோ (Elo) வரம்பைக்கடந்தார். விஸ்வநாதன் ஆனந்த் இந்தியாவின் முதல் கிராண்ட்மாஸ்டரான 31 ஆண்டுகளுக்குப்பிறகு, குப்தா இப்பட்டியலில் சேர்ந்துள்ளார்.

**7.** 21ஆவது காமன்வெல்த் டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்பில் தங்கம் வெல்வதற்காக, எந்த நாட்டு அணியை இந்திய பெண்கள் அணி தோற்கடித்தது?

A) ஆஸ்திரேலியா

B) தென்னாப்பிரிக்கா

C) இங்கிலாந்து

D) சிங்கப்பூர் ☑

✓ ஜூலை.18 அன்று கட்டாக்கில் நடந்த 21ஆவது காமன்வெல்த் டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்பில், ஜவஹர்லால் நேரு அரங்கில், ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் தங்கம் வென்றதன் மூலம் இந்தியா சாதனை படைத்தது. மகளிர் பிரிவில் சிங்கப்பூர் அணியை எதிர்கொண்ட இந்தியா 3-0 என்ற செட் கணக்கில் வென்று முதன்முறையாக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. ஆடவர் பிரிவில் இந்தியா 3-2 என போராடி இங்கிலாந்தை வீழ்த்தியது. இந்த வெற்றியின் விளைவாக, இந்திய ஆடவர் அணி தனது பட்டத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது. இந்திய ஆடவர் அணியானது 2004ஆம் ஆண்டில் கோலாலம்பூரில் முதல் முறையாகப் பட்டத்தை வென்றது.

**8.** எந்த மாநிலத்தில், நடப்பாண்டு டியூராண்ட் கோப்பைக்கான போட்டி நடைபெறவுள்ளது?

A) கர்நாடகா

B) ஒடிசா

C) பஞ்சாப்

D) மேற்கு வங்கம் ☑

✓ ஆக.2-23 வரை மேற்கு வங்கத்தின் கொல்கத்தாவில் 129ஆவது டியூராண்ட் கோப்பைக்கான போட்டிகள் நடைபெறவுள்ளன. இந்தப் போட்டிகள், முதல்முறையாக அதன் வழக்கமான இடமான புது தில்லியில் நடவாமல் வெளியே நடக்கவுள்ளது. கீழை வங்க மைதானம், மோஹன் பகன் மைதானம், கல்யாணி அரங்கம், சிலிகுரி அரங்கம் மற்றும் உப்பு ஏரி அரங்கம் என மேற்கு வங்கத்தின் மூவிடங்களில் (கொல்கத்தா, சிலிகுரி & கல்யாணி) உள்ள 5 வெவ்வேறு அரங்கங்களில் ஆக.2 முதல் நடைபெறும்.

✓ ஆர்மி கிரீன் நடப்புச் சாம்பியனாக உள்ளது. அவ்வணி கடந்த பதிப்பின்போது NEROCA FC அணியை வீழ்த்தி அதன் முதல் பட்டத்தை வென்றது. டியூராண்ட் கோப்பையானது ஆசியாவின் பழமையான கால்பந்து போட்டியும், உலகின் மூன்றாவது பழமையான கால்பந்து போட்டியும் ஆகும்.

**9.** இராமானுஜன் இயந்திரம் என்ற கருத்தாக்கத்தை (Concept) எந்த நாட்டின் அறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்?



A) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

B) இஸ்ரேல் ☑

C) ஜப்பான்

D) பிரான்ஸ்

✓ இஸ்ரேல் தொழில்நுட்ப நிறுவனமான 'டெக்னியான் – Technion'இன் அறிவியலாளர்கள் ஒரு கருத்துருவை உருவாக்கி, இந்திய கணிதவியலாளரான இராமானுஜத்தின் பெயரில் 'இராமானுஜன் இயந்திரம் – Ramanujan Machine" என்று பெயரிட்டுள்ளனர். இது உண்மையில் ஓர் இயந்திரம் அல்ல, ஆனால் அடிப்படை மாறிலிகளுக்கு (Fundamental Constants) தாமாகவே அனுமானங்களை (Conjectures) உருவாக்கும் ஒரு படிமுறையாகும் (Algorithm). இந்த அனுமானங்களானது மெய்யான கூற்றுகளாக முன்மொழியப்பட்ட கணிதக் கூற்றுகளாகும் (Mathematical Statements). வேறு மாதிரி கூறுவதானால், அவை இதுவரை நிரூபிக்கப்படாத கணிதக் கூற்றுகளாகும்.

✓ பொதுவாக, மக்கள் உள்ளீட்டை (Input) வழங்குகிறார்கள்; பின்னர் படிமுறையானது அதற்கானத் தீர்வைக் காண்கிறது. "இராமானுஜன் இயந்திரம்" செயல்முறையை தலைகீழாக்குகிறது. எனவே, π போன்ற ஒரு மாறிலி இயந்திரத்தில் உள்ளிடப்பட்டால், அது ஒரு தொடரை உருவாக்கும், அதன் மதிப்பு πஐ நோக்கிச் செல்லும். அவர்களின் இந்த உருவாக்கமானது இளைய கணிதவியலாளர்களை ஊக்குவிக்கும் என ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர். ஒரு பயனர் ஒரு புதிய ஆதாரம் அல்லது படிமுறையை உருவாக்கினால், அது அவரின் பெயரால் பெயரிட்டு அழைக்கப்படும்.

✓ சீனிவாச இராமானுஜன் தனது சுருக்கமான வாழ்க்கையில் (1887–1920) பணியாற்றிய விதத்தை இந்த படிமுறை பிரதிபலிக்கிறது. தனது வாழ்நாள் முழுவதும், இராமானுஜன், π மதிப்பிற்கு வழிவகுக்கும் சமன்பாடுகள் உட்பட புதிய சமன்பாடுகள் மற்றும் சமனிகளை உருவாக்கினார்.

**10.** தேர்ந்தெடுக்கப்பட்ட கொல்லுதலுக்காக (Selective Slaughter) விலங்குகளை 'பூச்சி – Vermin' என அறிவிக்கக்கோரி, நடுவணரசுக்கு வனவிலங்குகளின் பட்டியலை அனுப்ப, மாநிலங்களுக்கு அதிகாரமளிக்கும் 1972ஆம் ஆண்டு வனவுயிரி பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு எது?

A) பிரிவு 61

B) பிரிவு 62 ☑

C) பிரிவு 63

D) பிரிவு 64

✓ மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகமானது அண்மையில் ஓராண்டு காலத்திற்கு ஹிமாச்சல பிரதேசத்தில் செம்முக குரங்குகளை (Rhesus Macaque) குரங்குகளை 'பூச்சி'களாக அறிவித்துள்ளது. பயிர்களைச் சேதப்படுத்துதல், மனிதர்களுடனான மோதல் மற்றும் அவர்தம் சொத்துக்களுக்குச் சேதமிழைத்தல் ஆகியவற்றைத் தடுப்பதற்காக அம்மாநில வனத்துறைக்கு அவற்றைக் கொல்வதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. 1972ஆம் ஆண்டு வனவுயிரி பாதுகாப்புச் சட்டத்தின் அட்டவணை IIஇன் கீழ், ரீசஸ் செம்முக குரங்குகள் பாதுகாக்கப்பட்ட இனங்கள்தான் என்றாலும், அது மனித உயிர் அல்லது அவர்தம் உடைமைகளுக்கு ஊறு ஏற்படுத்தினால், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு 'பூச்சிகள் – Vertim' என அறிவிப்பதன் மூலம் அதை வேட்டையாட சட்டம் அனுமதிக்கிறது.

✓ தேர்ந்தெடுக்கப்பட்ட கொல்லுதலுக்காக (Selective Slaughter) விலங்குகளை 'பூச்சிகள் – Vermin' என அறிவிக்கக்கோரி, மத்திய அரசாங்கத்துக்கு வனவுயிரிகளின் பட்டியலை அனுப்ப, 1972ஆம் ஆண்டு வனவுயிரி (பாதுகாப்பு) சட்டத்தின் 62ஆவது பிரிவானது மாநிலங்களுக்கு அதிகாரமளிக்கிறது.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

## சென்னை இசை அகாடமியின் விருதுகள்

| | |
|---|---|
| *சங்கீத கலாநிதி விருது* | கர்நாடக இசைக்கலைஞர் S சௌம்யா. |
| *கலா ஆச்சார்யா விருது* | 1) M S ஷீலா.<br>2) சீதா நாராயணன். |
| *TTK விருது* | 1) நாதஸ்வர இசைக்கலைஞர் வியாசர்பாடி கோதண்டராமன்.<br>2) இராஜ்குமார் பாரதி ('மகாகவி' பாரதியாரின் கொள்ளுப்பேரன்) |
| *இசையியலாளர் விருது* | ஆர்த்தி N இராவ். |
| *நிருத்ய கலாநிதி நாட்டிய விருது* | பிரியதர்ஷினி கோவிந்த். |

---

- ✓ தமிழ்நாட்டில் தாய்வழி இறப்பு வீதம் (Maternal Mortality Rate) 6 புள்ளிகள் (அறுபத்தாறிலிருந்து 60) குறைந்துள்ளன.

- ✓ 'பெண் குழந்தைகளைக் காப்போம் – பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்' என்ற திட்டத்தின் திருவள்ளூர் மாவட்ட சிறப்பு தூதராக அ.வேண்டாம் என்ற பொறியியல் கல்லூரி மாணவியை அந்த மாவட்டத்தின் ஆட்சியர் நியமித்தார். தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேச எல்லைப்பகுதிகளாக உள்ள திருவள்ளூர் மாவட்டம், R K பேட்டை, பள்ளிப்பட்டு மற்றும் வேலூர் மாவட்டம் – சோளிங்கர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பெற்றோருக்கு தொடர்ந்து பெண் குழந்தைகள் பிறந்தால், 'இனி பெண்குழந்தை வேண்டாம் – ஆண் குழந்தை வேண்டும்' என்பதற்காக, கடைசியாக பிறந்த பெண் குழந்தைக்கு, '*வேண்டாம்*', '*போதும் பொண்ணு*' உள்ளிட்ட பெயர்கள் வைப்பது வழக்கமாக உள்ளது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.சிறிய நகரங்களுக்கென எந்த இலகுவான நகர்ப்புற இரயில் போக்குவரத்து முறையை மத்திய அரசு பரிந்துரைத்துள்ளது?**

அ) மெட்ரோலிங்க்

ஆ) மெட்ரோ வே

இ) மெட்ரோலைட் (Metrolite) ☑

ஈ) மெட்ரோ மினி

- ✓ பெரு நகரங்களில் மெட்ரோ இரயில் இருப்பதைப்போல, சிறு நகரங்களில் குறைவான பெட்டிகள் கொண்ட இலகுரக 'மெட்ரோலைட்' இரயிலை இயக்கலாம் என மத்திய அரசு பரிந்துரைத்துள்ளது. 'மெட்ரோலைட்' இரயில் மூன்று பெட்டிகள் கொண்டதாக இருக்கும். அதிகபட்சமாக மணிக்கு 60 கி.மீ., வேகத்திலும், குறைந்தபட்சமாக 25 கி.மீ., வேகத்திலும் இந்த இரயிலை இயக்கலாம்.
- ✓ தற்போதுள்ள மெட்ரோ இரயில் சேவையைவிட குறைவான செலவில் இந்த 'மெட்ரோலைட்' இரயில் சேவையை தொடங்கலாம். இத்திட்டத்தை அமல்படுத்த மாநில அரசுகளுக்கு மத்திய அரசு நிதியுதவி வழங்கும் என கூறப்படுகிறது. இதில், 300 பயணிகள் வரை பயணிக்க முடியும். நிலப்பரப்பு மற்றும் மேம்பாலத்தில் இரயிலை இயக்கலாம். இரு சாலைகளின் நடுவே இந்த இரயில்கள் செல்லும்வகையில் ஒரே தடத்திலும் தண்டவாளம் அமைக்கலாம். இதில், மெட்ரோ இரயில் நிலையத்தை போல அதிநவீன வசதிகள் இருக்காது. துருப்பிடிக்காத எஃகு அல்லது அலுமினியம் கொண்டு இந்த இரயிலுக்கான பெட்டிகள் தயாரிக்கப்படும்.

**2.அண்மையில் காலமான அருண்குமார் ராய், எந்த மாநிலத்தில் மூத்த இடதுசாரி தலைவராக இருந்தார்?**

அ) ஒடிசா

ஆ) பீகார்

இ) மேற்கு வங்கம்

ஈ) ஜார்க்கண்ட் ☑

- ✓ இடதுசாரிகளின் மூத்த தலைவரும், CITU ஜார்க்கண்ட் மாநிலக்குழுவின் தலைமைக் காப்பாளருமான அருண்குமார் ராய் (90), ஜூலை.21 அன்று ஜார்க்கண்டின் தன்பாத்தில் காலமானார். அவர், முன்னாள் மக்களவை உறுப்பினரும், மார்க்சிய ஒருங்கிணைப்புக்குழுவின் நிறுவனருமாவார். 1977, 1980 & 1989ஆம் ஆண்டுகளில் தன்பாத் மக்களவைத்தொகுதியில் இராய் வென்றார். 1967, 1969 & 1972ஆம் ஆண்டுகளில் பீகார் சட்டமன்றத்தில் சிந்திரி தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்.

**3.பிரசிடென்ட் கோப்பை குத்துச்சண்டைப் போட்டியில் இந்தியாவின் முதல் தங்கத்தை வென்றவர் யார்?**

அ) விகாஸ் கிருஷ்ணன் யாதவ்

ஆ) சிவா தபா ☑

இ) முகமது அலி கௌமார்

ஈ) ஜக்திஷ் சிங்

- ✓ ஜூலை.20 அன்று கஜகஸ்தானின் தலைநகரமான அஸ்தானாவில் நடந்த பிரசிடென்ட் கோப்பை குத்துச்சண்டைப் போட்டியில், ஆடவருக்கான 63 கி.கி எடைப்பிரிவு இறுதிப்போட்டியில் இந்தியாவின் சிவா தபா தங்கப்பதக்கம் வென்றார். இதன்மூலம், இத்தொடரில் தங்கம் வென்ற முதல் இந்தியரானார்.
- ✓ கஜகஸ்தானின் ஜாகிர் சபியுலின், காயம் காரணமாக விலகியதை அடுத்து சிவா தபா வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டார். கடந்த ஏப்ரல் மாதம் தாய்லாந்தில் நடந்த ஆசிய குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் 60 கி.கி எடைப்பிரிவு அரையிறுதியில் சிவா தபா, ஜாகிர் சபியுலினிடம் தோல்வியடைந்திருந்தார்.

**4.எந்த மாநில அரசு, இந்தியாவின் முதல் விண்வெளிப்பூங்காவை அமைக்க முடிவு செய்துள்ளது?**

அ) கேரளா ☑

ஆ) தமிழ்நாடு

இ) ஆந்திரப்பிரதேசம்

ஈ) தெலுங்கானா

- ✓ விண்வெளித் துறையில் பணிபுரியும் பன்னாட்டு துளிர்நிறுவனங்களை (Startup) ஈர்ப்பதற்கும், விண்வெளி தொடர்பான தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான முதன்மை மையமாக அதை உருவாக்குவதற்குமாக திருவனந்தபுரத்தில் அதிநவீன விண்வெளி அமைப்புகள் பூங்காவை அமைக்க கேரள மாநில அரசு முடிவு செய்துள்ளது. இது இந்தியாவின் முதல் விண்வெளிப் பூங்காவாக இருக்கும் என அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.
- ✓ Dr.ஆ.ப.ஜெ அப்துல் கலாம் மையம் மற்றும் விண்வெளி அருங்காட்சியகம் ஆகியவற்றை விண்வெளிப் பூங்காவின் ஒருபகுதியாக மாற்றவும், அதனை அமைப்பதற்குத் தேவையான நிலங்களை ஒதுக்கவும் மாநில அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இதற்கான முழு நிதியுதவியையும் விக்ரம் சாரபாய் விண்வெளி மையம் (VSSC) வழங்கும்.
- ✓ 20.01 ஏக்கர் நிலமானது கேரள மாநில தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு நிறுவனத்துக்கு (KSITIL) குத்தகைக்கு வழங்கப்படும். இதில், 16.07 ஏக்கர், சிறப்பு பொருளாதார மண்டலம் என்னும் (SEZ) தகுதியைப் பெற்றுள்ளது. அந்நிலம் டெக்னோபார்க்குக்கு சொந்தமானதாகும். இந்தத் திட்டத்தை கேரள அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை செயல்படுத்தும்.

## 5. நடப்பாண்டு Mr.தெற்காசியா பட்டத்தை வென்ற இந்திய உடற்கட்டுநர் (Body Builder) யார்?

அ) யதிந்தர் சிங்

ஆ) மீஹியர் சிங்

இ) யோகேஷ் குமார் சனன்

ஈ) இரவீந்தர் குமார் மாலிக் ☑

- ✓ இந்திய உடற்கட்டுநரான இரவீந்தர் குமார் மாலிக், 'Mr.தெற்காசியா' பட்டத்தை வென்றுள்ளார். ஜூலை 20 அன்று காத்மாண்டுவில் நடந்த 12ஆவது தெற்காசிய உடற்கட்டுதல் மற்றும் உடல்சார் விளையாட்டு சாம்பியன்ஷிப்பில் ஒட்டுமொத்த சாம்பியனாக அவர் முடிசூட்டப்பட்டார்.
- ✓ 80 கி.கி பிரிவில் வென்ற மாலிக், ஒன்பது சீனியர் ஆடவர் எடைப்பிரிவுகளில் வென்றவர்களுள் சிறந்த உடற்கட்டுநராக தேர்வுசெய்யப்பட்டார். ஆப்கானிஸ்தான் 535 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பெற்று அணி சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றது. சாம்பியன்ஷிப்பை வழங்கிய நேபாளம் 445 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தையும், 380 புள்ளிகளுடன் இந்தியா மூன்றாவது இடத்தையும் பிடித்தது. நேபாள பாடி பில்டிங் மற்றும் பிட்னஸ் சங்கத்தின் ஆதரவில், தெற்காசிய உடற்கட்டுதல் மற்றும் உடல்சார் விளையாட்டு கூட்டமைப்பு ஏற்பாடுசெய்த இந்நிகழ்வில் மொத்தம் 91 உடற்கட்டுநர்கள் பங்கேற்றனர்.

## 6. ஈராண்டுக்கு ஒருமுறை நடைபெறும் DefExpo India – 2020இன் 11ஆவது பதிப்பானது எந்த நகரத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது?

அ) தில்லி

ஆ) இலக்னோ ☑

இ) அமராவதி

ஈ) ஹைதராபாத்

- ✓ ஈராண்டுக்கு ஒருமுறை நடைபெறும் DefExpo India – 2020இன் 11ஆவது பதிப்பானது முதல்முறையாக உத்தரபிரதேச தலைநகர் இலக்னோவில் வரும் 2020 பிப்.5 முதல் நடைபெறவுள்ளது. நான்கு நாள் நடைபெறும் இந்த நிகழ்வு, இந்திய பாதுகாப்புத்துறைக்கு அதன் திறன்களை வெளிப்படுத்தவும், அதன் ஏற்றுமதித் திறனை மேம்படுத்தவும் ஒரு சிறந்த வாய்ப்பை வழங்கும். DefExpo India – 2020இன் முக்கிய கருப்பொருள், "இந்தியா – வளர்ந்து வரும் பாதுகாப்பு உற்பத்தி மையம் (India – The Emerging Defence Manufacturing Hub)" என்பதாகும்.
- ✓ இந்த DefExpo, முதன்மை அயல்நாட்டு மூலக்கருவி உற்பத்தியாளர்களுக்கு (Original Equipment Manufacturer) இந்திய பாதுகாப்புத் துறையுடன் இணைந்து பணியாற்ற ஒரு நல்வாய்ப்பை வழங்கும். மேலும், பிரதமர் மோடியின் "இந்தியாவில் தயாரிப்போம்" திட்டத்தை ஊக்குவிக்கவும் இது உதவும்.

### 7. நடப்பாண்டு ஹோம்லெஸ் உலககோப்பை கால்பந்து போட்டியானது எந்த நாட்டில் நடைபெறவுள்ளது?

அ) ஐக்கிய பேரரசு (UK) ☑

ஆ) பிரான்ஸ்

இ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் (USA)

ஈ) ஜெர்மனி

- ✓ ஹோம்லெஸ் உலககோப்பை கால்பந்து போட்டியின் 17ஆவது பதிப்பு வரும் ஜூலை.27 முதல் ஆகஸ்ட்.3 வரை வேல்ஸில் உள்ள கார்திப் நகரத்தில் நடைபெறுகிறது. இந்தப் போட்டியை ஹோம்லெஸ் உலக கோப்பை அறக்கட்டளை ஏற்பாடு செய்துள்ளது. ஹோம்லெஸ் உலககோப்பை அறக்கட்டளையின் விதிகளின்படி, இதில் பங்கேற்கும் வீரர்கள் குறைந்தபட்சம் 16 வயது நிறைவடைந்தவர்களாக இருக்க வேண்டும் மற்றும் இதன் முந்தைய பதிப்புகளில் அவர்கள் பங்கேற்றிருக்கக்கூடாது.
- ✓ அம்ரித் பால் சிங் மற்றும் சுஜாதா ராய் தலைமையிலான இந்திய ஆண்கள் மற்றும் பெண்கள் கால்பந்து அணிகள் நடப்பாண்டு கால்பந்து போட்டியில் பங்கேற்கின்றன. வேல்ஸ் என்பது ஒரு நாடு; அது, ஐக்கிய பேரரசின் ஒருபகுதியும், கிரேட் பிரிட்டனின் ஒரு தீவுமாகும்.

### 8.விலங்கு உணவுத்தொழிலில், எந்த நுண்ணுயிர் எதிர்ப்பியை மத்திய அரசு தடை செய்துள்ளது?

அ) பையாக்ஸின்

ஆ) கெப்லெக்ஸ்

இ) காலிஸ்டின் (Colistin) ☑

ஈ) டாக்ஸிக்ளைன்

- ✓ மனிதர்களில் காலிஸ்டினின் பாதிப்பைக் குறைக்கும் ஒரு முயற்சியாக சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகமானது காலிஸ்டினின் உற்பத்தி, விற்பனை மற்றும் விநியோகத்தையும், உணவுக்காக வளர்க்கப்படும் விலங்குகள், கோழி, நீர் வாழ் உயிரிகள் மற்றும் விலங்கு தீவனங்களுக்கான அதன் உற்பத்தியையும் தடைசெய்துள்ளது. 1940ஆம் ஆண்டின் மருந்துகள் மற்றும் அழகுசாதன பொருட்கள் சட்டத்தின் பிரிவு 26Aஇன்கீழ் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
- ✓ ஓர் அமைச்சக அதிகாரியின் கூற்றுப்படி, இந்த நுண்ணுயிர் எதிர்ப்பியானது மருந்து – எதிர்ப்பு நுண்ணுயிரியால் (drug – resistant bacteria) ஏற்படும் தொற்றுநோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிக்கு சிகிச்சையளிப்பதற்கு இறுதிமருந்தாக பயன்படுத்தப்படுகிறது. ஆனால், இம்மருந்து கோழிப்பண்ணைத் தொழிலில், நோய்த்தடுப்பு நோக்கத்திற்காக வளர்ச்சி ஊக்கிகளாக மிகத்தவறாக பயன்படுத்தப்படுகிறது.

**9.அடுத்த தலைமுறை வரிசைப்படுத்துதல் (Next Generation Sequencing – NGS) வசதியானது அண்மையில் எந்த நகரத்தில் தொடங்கப்பட்டுள்ளது?**

அ) சிம்லா

ஆ) ஜபல்பூர்

இ) கொச்சின்

ஈ) ஹைதராபாத் ☑

- ✓ ஹைதராபாத்தில் உள்ள CSIR ஆய்வகமான செல்லுலார் மற்றும் மூலக்கூறு உயிரியல் மையத்தில், அடுத்த தலைமுறை வரிசைப்படுத்துதல் வசதியை மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் ஹர்ஷ் வர்தன் தொடங்கிவைத்தார். நாட்டில் அமைந்துள்ள இதுபோன்ற வசதிகளில், இது நான்காவது வசதியாகவும். இதன்மூலம், ஒரு நாளில் 30 மனித மரபணுக்கள் (அல்லது 384 கண்டறி மாதிரிகளை) வரிசைப்படுத்த இயலும். இந்த வசதியைப் பயன்படுத்தி ஒரு மரபணுவை வரிசைப்படுத்த ரூ.1 இலட்சம் செலவாகும்.
- ✓ இது திசுக்களில் உள்ள தனிப்பட்ட செல்களின் அடிப்படை உயிரியலை ஆராய்வதற்கும், செல்களின் பன்முகத்தன்மையைப் புரிந்துகொள்வதன் மூலம் புற்றுநோய் போன்ற கொடிய நோய்களை எதிர்த்துப் போராடுவதற்கும் வழிகோலுகிறது. இந்தச் சேவைகள் மருத்துவமனைகள், தொழிற்துறை மற்றும் கல்வியாளர்களுக்கு கட்டணச் சேவையாகக் கிடைக்கும்.

**10. இந்தியாவின் எந்த மாநிலத்தில், நடப்பாண்டுக்கான Hand – in – Hand இராணுவ பயிற்சியை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது?**

அ) மேகாலயா ☑

ஆ) நாகாலாந்து

இ) அருணாச்சல பிரதேசம்

ஈ) சிக்கிம்

- ✓ இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையேயான Hand – in – Hand என்ற இராணுவ பயிற்சியானது மேகாலயாவின் ஷில்லாங் அருகேயுள்ள உம்ரோய் நகரத்தில் வரும் டிசம்பரில் நடைபெறவுள்ளது. பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட இரண்டு வார கால பயிற்சியாக இது இருக்கும்.
- ✓ இரு நாடுகளின் படைகளுக்கிடையில் நெருங்கிய உறவை உருவாக்குவதே இப்பயிற்சியின் நோக்கம் ஆகும். இருநாட்டின் இராணுவ படைகளிலிருந்தும் சுமார் 120 துருப்புக்கள் இதில் பங்கேற்பார்கள்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.அண்மையில் காலமான யுகியா அமனோ, எந்தப் பன்னாட்டு அமைப்பின் தலைவராக இருந்தார்?**



A) UNICEF

B) UNESCO

C) FAO

**D) IAEA ☑**

✓ முன்னாள் ஜப்பானிய தூதரும், பன்னாட்டு அணுசக்தி முகமையின் (IAEA) தலைவருமான யுகியா அமனோ (72), ஜூலை.23 அன்று காலமானார். கடந்த 2009இல் IAEAஇன் தலைமை இயக்குநராக அவர் பொறுப்பேற்றார். இடைக்கால அடிப்படையில் அமனோவுக்குப் பிறகு யார் இந்தப் பதவிக்கு வருவார்கள் என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

✓ பிரிட்டன், சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இரஷ்யா மற்றும் அமெரிக்கா முதலிய ஆறு முக்கிய நாடுகளுடன் 2015இல், பொருளாதார தடைகளை நீக்குவதற்கு ஈடாக இஸ்லாமிய குடியரசான ஈரான் அதன் அணுசக்தி திட்டத்தை கட்டுப்படுத்த ஒப்புக்கொண்டு ஒரு முக்கிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதை அமனோ தனது பதவிக்காலத்தில் மேற்பார்வையிட்டார்.

**2.சந்திரயான்–2, நிலவின் எந்தப்பகுதியை ஆராய்ந்து ஆய்வு செய்யும்?**

A) வட துருவம்

B) மேற்கு துருவ

**C) தென் துருவம் ☑**

D) கிழக்கு துருவம்

✓ ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதிஷ்தவான் விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து சந்திரயான்–2 விண்கலமானது GSLV–Mk–III–M1 ஏவுகணை மூலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. 978 கோடி ரூபாய் செலவிலான இந்தியாவின் இத்திட்டம், இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சியில் ஒரு மாபெரும் மைல்கல்லாக இருக்கும்.

✓ இதன்மூலம், நிலவில் ஆய்வுக்கலத்தை தரையிறக்கிய நான்காவது நாடாக இந்தியா மாறும். இந்திய விண்வெளி ஆய்வுப்பணி வரலாற்றில் முதல்முறையாக இத்திட்டத்துக்கான இயக்குநர்களாக வனிதா முத்தையா, ரிது கரிதால் ஆகிய இரண்டு பெண்கள் உள்ளனர். ISROவின் கூற்றுப்படி, நிலவின் தென் துருவமானது ஒரு சுவாரஸ்யமான மேற்பரப்பாகும், இது வடதுருவத்தைவிட அதிக நிழலான பகுதியில் அமைந்துள்ளது. அதைச்சுற்றியுள்ள பகுதிகளில், நீர் இருப்பதற்கான வாய்ப்புள்ளதாக கருதப்படுகிறது.

✓ இந்திய விண்வெளி ஆராய்ச்சித் திட்டத்தின் தந்தை Dr. விக்ரம் A சாராபாயின் நினைவாக பெயரிடப்பட்டுள்ள 'விக்ரம்' என்னும் தரையிறங்கியானது (Lander), 'பிரக்யான்' என்னும் ஆய்வுக்

கலத்துடன் (Rover) நிலவுக்கு தெற்கே சுமார் 70° அட்சரேகையில் 2 பள்ளங்களுக்கு (Manzinus – C மற்றும் Simpelius – N) இடையில் உயரமான சமவெளியில் தரையிறக்கப்படும்.

- ✓ சமற்கிருதத்தில் 'ஞானம்' என்று பொருள்படும் 6 சக்கரங்களும் 27 கி.கி எடையும் உடைய 'பிரக்யான்', நிலவின் மேற்பரப்பு குறித்த தகவல்களைச் சேகரிக்கும் பணியைத் தொடங்கும். 'விக்ரம்' கருவி ஒரு நிலவுநாள், அதாவது, பூமியில் 14 நாட்கள் செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

### 3.மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?

**A) கொச்சின் ☑**

B) நாக்பூர்

C) தில்லி

D) சிம்லா

- ✓ மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனம் (CMFRI) பயனுள்ள மீன் சந்தைப்படுத்துதல் முறைகளை எளிதாக்கும் பொருட்டு வலைத்தளத்தை உருவாக்குவதற்கான ஆராய்ச்சித்திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. இந்தத் திட்டம், ஒரு மீன் சந்தை தகவல் அமைப்பு, மீன் விலை தகவல் மற்றும் வணிக ரீதியாக முக்கியமான மீனினங்களுக்கான மின்னணு–ஏல (e–auctioning) முறை வர்த்தக தளத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ இந்தத் திட்டத்தை செயல்படுத்த நாடு முழுவதும் இறக்குமதி மையங்கள், மொத்தவிலை சந்தைகள், சில்லறை சந்தைகள் மற்றும் மீன்வளர்ப்பு உற்பத்தி சந்தைகள் உட்பட 1,500 மீன் சந்தைகள் தேர்வு செய்யப்படும். மீன்சந்தை மற்றும் விலை தகவல் அமைப்பு குறித்த திட்டத்திற்கு ஹைதராபாத்தின் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் நிதியளிக்கும். CMFRIஇன் தலைமையகம் கேரளாவின் கொச்சியில் அமைந்துள்ளது.

### 4.2019 பன்னாட்டு சுறாக்கள் குறித்த சந்திப்பானது எந்த இந்திய நகரத்தில் நடைபெறவுள்ளது?

A) கட்டாக்

B) சென்னை

C) பெங்களூரு

**D) கொச்சின் ☑**

- ✓ 4 நாள் நடைபெறும் பன்னாட்டு சுறா சந்திப்பானது வரும் ஜூலை.24 முதல் கேரளாவில், கொச்சியில் நடைபெறுகிறது. இது சுறா மற்றும் திருக்கை மீன் வர்த்தகத்தில் பணிபுரியும் உலகெங்கிலும் உள்ள ஆராய்ச்சியாளர்களுக்கு, அத்துறை குறித்த அவர்களின் அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ள ஒரு தளத்தை அமைத்துத் தருகிறது.

✓ இந்தியாவில் முதன்முதலில் நடத்தப்படும் இந்நிகழ்வை, மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனமும் FAOஉம் இணைந்து அவற்றின் சுறாக்கள் மற்றும் துடுப்பற்ற திருக்கை மீன் உற்பத்திப் பொருட்கள் குறித்த கூட்டு ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்துள்ளன.

✓ சுறா மற்றும் திருக்கை மீன்களை கண்காணிப்பதில் உள்ள வழிமுறைகள் குறித்து விவாதிக்க FAOஇன் பிரதிநிதிகள் மற்றும் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, மெக்ஸிகோ, பிரேசில், அர்ஜென்டினா, மலேசியா, இந்தோனேசியா, பெரு, இத்தாலி, இலங்கை, நைஜீரியா, சோமாலியா, மியான்மர் மற்றும் நமீபியா போன்ற பல்வேறு நாடுகளின் வல்லுநர்கள் இதில் கலந்துகொள்வார்கள்.

**5. "Indo–Pak Relations: Beyond Pulwama & Balakot" என்னும் நூலின் ஆசிரியர் யார்?**

A) நீரத் C. சவுத்ரி

B) அமிஷ் திரிபாதி

C) வினித் கோயங்கா

**D) U V சிங் ☑**




✓ "**Indo–Pak Relations: Beyond Pulwama & Balakot**" என்னும் நூலை Dr. U V சிங் எழுதியுள்ளார். இந்தோ – பாக் மோதலுக்கான அடிப்படைக் காரணங்களை இந்த நூல் எடுத்தாள்கிறது.

**6.ஆசிய குத்துச்சண்டைக் கூட்டமைப்பின் போட்டி ஆணையத்தின் (Competitions Commission) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

**A) கிஷென் நர்சி (Kishen Narsi) ☑**

B) அகில் குமார்

C) மனீஷ் கௌசிக்

D) வர்கீஸ் ஜான்சன்

✓ ஆசிய குத்துச்சண்டைக் கூட்டமைப்பின் (ASBC) போட்டி ஆணையத்தின் தலைவராக இந்தியாவைச் சேர்ந்த கிஷென் நர்சி நியமிக்கப்பட்டுள்ளார். அவர், முன்னாள் அனைத்து இந்திய பல்கலைக்கழக சாம்பியன் குத்துச்சண்டை வீரராவார். சர்வதேச நடுவர் மற்றும் சர்வதேச குத்துச்சண்டைச் சங்கத்தின் (AIBA) நிர்வாகக் குழுவின் துணைத்தலைவராகவும் அவர் இருந்துள்ளார். மூன்று ஒலிம்பிக்கில் பணியாற்றியுள்ளார். இந்திய குத்துச்சண்டைக் கூட்டமைப்பின் (Boxing Federation of India) நிறுவன இடைக்காலத் தலைவராகவும் இருந்துள்ளார்.

**7.சென்னை இசை அகாதமியின் 'சங்கீத கலாநிதி' விருதுக்கு தேர்வுசெய்யப்பட்டுள்ளவர் யார்?**

A) சீதா நாராயணன்

B) S இராமநாதன்

**C) S சௌமியா ☑**

D) பிரியதர்ஷினி கோவிந்த்

- ✓ சென்னை இசை அகாதமியின் 'சங்கீத கலாநிதி – கர்நாடக இசைக்கலையின் பெருஞ்செல்வம்' விருதுக்கு பிரபல பாடகி Dr. S சௌமியா தேர்வுசெய்யப்பட்டுள்ளார். மேலும், அவர், இந்த ஆண்டு டிசம்பர் 15ஆம் தேதி முதல் 2020ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி வரை நடைபெறவிருக்கும் அகாதமியின் 93ஆவது ஆண்டு மாநாட்டுக்கு தலைமைதாங்குவார். 'சங்கீத கலாநிதி' S இராமநாதனிடமும், 'சங்கீத கலா ஆச்சார்யா' T. முக்தாவிடமும் இசைபயின்ற சௌம்யா, சென்னை பல்கலையில் 'இந்திய இசையில்' முனைவர் பட்டம் பெற்றவராவார்.
- ✓ அவரைத் தவிர M S ஷீலா மற்றும் சீதா நாராயணனுக்கு 'கலா ஆச்சார்யா' விருது வழங்கப்படுகிறது. நாதஸ்வர கலைஞர் வியாசர்பாடி கோதண்டராமன் மற்றும் 'மகாகவி' பாரதியாரின் கொள்ளுப்பேரன் இராஜ்குமார் பாரதிக்கு 'TTK' விருது வழங்கப்படுகிறது. 'இசையியலாளர்' விருதுக்கு ஆர்த்தி N இராவ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ✓ நடனமாமணி பிரியதர்ஷினி கோவிந்த், 'நிருத்ய கலாநிதி' விருது பெறுகிறார். வரும் 2020ஆம் ஆண்டு ஜனவரி 1 அன்று நடைபெறவுள்ள 'சதஸ்' விழாவில், இவ்விருதுகள் வழங்கப்படும். 'நிருத்ய கலாநிதி' நாட்டிய விருதுபெறும் பிரியதர்ஷினி கோவிந்துக்கு ஜனவரி 3 அன்று நடைபெறும் நாட்டிய விழாவின் தொடக்க நிகழ்ச்சியில் விருது வழங்கப்படும்.

**8.காமன்வெல்த் டேபிள் டென்னிஸ் கூட்டமைப்பின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?**

A) இந்து பூரி

B) M P சிங்

C) கமலேஷ் மேத்தா

**D) விவேக் கோலி ☑**



- ✓ காமன்வெல்த் டேபிள் டென்னிஸ் கூட்டமைப்பின் (CTTF) தலைவராக விவேக் கோலி தேர்வு செய்யப்பட்டுள்ளார். தற்போதைய தலைவராக இருந்துவரும் இங்கிலாந்தைச் சேர்ந்த ஆலன் ரான்சமை வீழ்த்தி அவர் இந்தப் பதவிக்கு வந்துள்ளார்.
- ✓ 21ஆவது காமன்வெல்த் டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் நடைபெறும் இடத்திற்கு (கட்டாக்) அருகேயுள்ள புவனேசுவரத்தில் சமீபத்தில் இத்தேர்தல் நடந்தது. இந்திய டேபிள் டென்னிஸ் கூட்டமைப்பின் (TTFI) பொதுச்செயலராக இருக்கும் MP சிங், CTTF பொதுச்செயலாளராக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். CTTFஇன் தலைவர் பதவியை TTFI தலைவர் துஷ்யந்த் சவுதாலா ஏற்கனவே வகித்துள்ளார். CTTFஇன் 3 பதவிகளும் இந்தியர்களால் வகிக்கப்படுவது இதுவே முதல்முறையாகும்.

**9.21ஆவது காமன்வெல்த் டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்பில் பெண்கள் ஒற்றையர் பட்டத்தை வென்றவர் யார்?**

**A) அஹிகா முகர்ஜி ☑**

B) பூஜா சஹஸ்ரபுதே

C) கிருத்விகா சின்ஹா ராய்

D) மனிகா பத்ரா

✓ அண்மையில் கட்டாக்கில் நடந்து முடிந்த 21ஆவது காமன்வெல்த் டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்பில், போட்டியை நடத்திய இந்தியா 7 தங்கப்பதக்கங்களை வென்றது. ஆடவர் மற்றும் மகளிர் ஒற்றையர் பட்டங்களை முறையே ஹர்மித் தேசாய் மற்றும் அஹிகா முகர்ஜி ஆகியோர் வென்றனர். ஹர்மித், G.சத்தியனை 4–3 என்ற கணக்கில் வீழ்த்தி ஆடவர் ஒற்றையர் பட்டத்தை வென்றார். மகளிர் ஒற்றையர் பிரிவில், முன்னாள் தேசிய சாம்பியனான மதுரிகா பட்கரை 4–0 என்ற கணக்கில் வீழ்த்தி சாம்பியன்ஷிப்பில் தனது முதல் தங்கத்தை வென்றார் அஹிகா.

✓ ஆடவர் இரட்டையர் பிரிவில் அந்தோணி அமல்ராஜ் – மானவ் தாக்கர் இணையானது 3–1 என்ற கணக்கில் தங்கப்பதக்கம் வென்றது. மகளிர் இரட்டையர் பிரிவில் பூஜா – கிருத்விகா இணையானது சக இணையான ஸ்ரீஜா அகுலா – மௌஸ்மி பால் இணையை 3–1 என்ற கணக்கில் வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றது. 7 தங்கம், 5 வெள்ளி மற்றும் 3 வெண்கலங்களுடன் இந்திய வீரர்கள் முதலிடத்தில் உள்ளனர். இங்கிலாந்து 2 வெள்ளி மற்றும் 3 வெண்கல பதக்கங்களை வென்றது. சிங்கப்பூருக்கு 6 வெண்கலப் பதக்கங்களும், மலேசியா மற்றும் நைஜீரியா தலா 1 வெண்கலமும் பெற்றன.

**10.கராகசில் நடந்த NAM அமைச்சர்கள் சந்திப்பில் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தியவர் யார்?**

A) இரஞ்சன் மதாய்

**B) சையத் அக்பருதீன் ☑**

C) சுப்ரமணியம் ஜெய்சங்கர்

D) விஜய் கேசவ் கோகலே

✓ வெனிசுலாவின் கராகஸில் நடந்த நடப்பாண்டு அணிசேரா நாடுகளின் (NAM) அமைச்சர்கள் சந்திப்பில் ஐ.நா அவையின் இந்திய தூதர் சையத் அக்பருதீனால் இந்தியா பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது. அப்போது, ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலத்தில் மனித உரிமை மீறல்கள் நடந்து வருவதாக பாகிஸ்தான் சார்பில் தெரிவிக்கப்பட்டது. அதற்கு, உலகளாவிய ஒருமன்றத்தில் இத்தகைய பிரச்சனைகளை பற்றி பேசுவதோ, எழுப்புவதோ கூடாது. ஆனால், ஒரு தூதுக்குழு இப்படி ஒரு செயலை முயற்சித்துள்ளது. இதற்கு எந்த ஓர் உறுப்பினரும் பதிலளிக்கவில்லை. ஒரு நாட்டின் பிராந்திய ஒருமைப்பாட்டை வேறு ஒரு நாட்டில் குறைத்து மதிப்பிடக்கூடிய வகையில் பேசக்கூடாது என இந்தியா மறுமொழி உரைத்தது.

- ✓ முன்னாள் இந்திய பிரதமர் ஜவஹர்லால் நேரு மற்றும் யூகோஸ்லாவிய அதிபர் ஜோசிப் புரோஸ் டிட்டோ ஆகியோரின் கூட்டு முயற்சியால் 1961ஆம் ஆண்டில் பெல்கிரேடில் NAM நிறுவப்பட்டது.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ இந்திய கடற்படையின் விமானப்பிரிவான (INAS) 313, 5ஆவது டார்னியர் விமானப் பிரிவை, சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள கடற்படை விமானதள வளாகத்தில், கடற்படையின் தலைமைத்தளபதி கரம்பீர் சிங் தொடங்கிவைத்துள்ளார்.
    - ❖ இந்தப் புதிய படைப்பிரிவு, சென்னை சர்வதேச விமான நிலையத்திலிருந்து செயல்படும். INAS 313 தொடங்கப்பட்டிருப்பதன் மூலம், தமிழ்நாடு 3 கடற்படை விமான தளங்களை பெற்றுள்ளது. இது, நாட்டின் வேறு எக்கடற்பகுதியும் பெறாத வகையில் அதிக அளவாகும்.
    - ❖ அரக்கோணத்தில் INAS ராஜாளி & இராமநாதபுரத்தில் INAS பருந்து ஆகிய 2 கடற்படை விமான தளங்கள் தமிழ்நாட்டில் ஏற்கனவே செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. தற்போது தொடங்கப்பட்டுள்ள INAS 313 தளத்திற்கு "கடல் கழுகு – Sea Eagle" என பெயரிடப்பட்டுள்ளது.
- ✓ ஆண்டுதோறும் வழங்கப்படும் 'காவலர் பதக்க'த்தின் எண்ணிக்கையை ஆயிரத்து ஐந்நூறிலிருந்து மூவாயிரமாக உயர்த்தி தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1. நடப்பாண்டு மோகன் பாகான் ரத்னாவுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள ஹாக்கி வீரர் யார்?**

A) உதம் சிங்

**B) கேசவ் தத் ☑**

C) லெஸ்லி கிளாடியஸ்

D) தன்ராஜ் பிள்ளை

✓ இருமுறை ஒலிம்பிக் தங்கப்பதக்கம் வென்ற ஹாக்கி வீரர் கேசவ் தத் மற்றும் இந்திய கால்பந்து அணியின் முன்னாள் கேப்டன் பிரசுன் பானர்ஜி ஆகியோர் நடப்பாண்டு மோகன் பாகான் ரத்னாவுக்கு தேர்வுசெய்யப்பட்டுள்ளனர். கால்பந்து தவிர வேறு ஒரு துறைசார்ந்த விளையாட்டு வீரருக்கு இந்த விருது வழங்கப்படுவது இதுவே முதல்முறையாகும். 1948 (இலண்டன்) மற்றும் 1952 (ஹெல்சிங்கி) ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற அணியில் ஒருவராக தத் (93) இருந்தார்.

✓ பிரசுன் தனது காலத்தில் ஒரு முக்கிய நடுகள வீரராக (Mid–fielder) இருந்தார். 1974, 1978 & 1982ஆம் ஆண்டுகளில் நடந்த 3 ஆசிய விளையாட்டுகளில் விளையாடிய அவர் ஆசிய ஆல் ஸ்டார் லெவன் அணியில் ஒருவராக இருந்தார். 2018–19ஆம் ஆண்டுக்கான 'சிறந்த கால்பந்து வீரர்' விருது அரிஜித் பாகுயிக்கு வழங்கப்படவுள்ளது.

✓ 2019 ICC கிரிக்கெட் உலககோப்பையில் இந்தியாவின் ஹாட்ரிக் நாயகனான வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமியையும் மோகன் பாகான் சங்கம் பாராட்டவுள்ளது. அதே சமயம், கால்பந்து வீரர் அசோக் சட்டர்ஜிக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்படவுள்ளது. சவுரவ் கங்குலி, சுனிகோஸ்வாமி, Dr. வெஸ் பேஸ், பிரசஞ்சித் சட்டர்ஜி மற்றும் தேவ்சங்கர் ஹால்டர் ஆகியோருக்கு வாழ்நாள் உறுப்பினர் தகுதியும் வழங்கப்படவுள்ளது. ஜூலை.29 மோகன் பாகான் நாளன்று இந்த விருதுகள் வழங்கப்படும்.

✓ ஜூலை.29 'மோகன் பாகான் நாளாக' கொண்டாடப்படுகிறது. 1911ஆம் ஆண்டில் இதேநாளில், பிரிட்டிஷ் அணியான கிழக்கு யார்க்ஷயர் படைப்பிரிவைத் தோற்கடித்து IFA கேடயத்தை வென்ற முதல் இந்திய கால்பந்து அணியாக மோகன் பாகான் அணி ஆனது.

**2. எந்நாட்டின் அறிவியலாளர்கள், சணல் இழைகளை மலிவு விலை மக்கக்கூடிய செல்லுலோஸ் தாள்களாக மாற்றுவதற்கான முறையை உருவாக்கியுள்ளனர்?**

A) இலங்கை

B) மியான்மர்

C) இந்தியா

**D) வங்கதேசம் ☑**

✓ சணல் இழைகளை 'சோனாலி – Sonali' என்ற பெயரில் மலிவு விலையில் மக்கக்கூடிய செல்லுலோஸ் தாள்களாக மாற்றுவதற்கான ஒருமுறையை வங்கதேச அறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

சோனாலியால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழலுக்கு உகந்த இந்தச் சணல் பைகளை ஆடைகள் மற்றும் உணவு சிப்பம் செய்யும் பணிகளுக்கு பயன்படுத்த இயலும், அவை மனித நலத்திற்கு எந்தத் தீங்கும் விளைவிக்காது. இப்பைகளின் வணிகரீதியான உற்பத்தி இந்த ஆண்டின் இறுதிக்குள் தொடங்கும்.

✓ ஒப்பீட்டளவில், இதனை உற்பத்தி செய்வதற்கான செலவு, நெகிழித்தாள் உற்பத்தி செய்யும் செலவை விடவும் இருமடங்காகும். இருப்பினும், பெரிய அளவில் உற்பத்தி செய்வது செலவை குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 3.இந்திய இராணுவத்தின் துணைத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**A) மனோஜ் முகுந்த் நரவேன் (Manoj Mukund Naravane) ☑**

B) I.S குமன்

C) A.S கிளேர்

D) செரிஷ் மாதேசன்

✓ Lt. Gen மனோஜ் முகுந்த் நரவேன் இந்திய ராணுவத்தின் துணைத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆக.31 அன்று ஓய்வுபெறவுள்ள Lt. Gen தேவ்ராஜ் அன்புவுக்குப் பிறகு அவர் இந்தப் பதவிக்கு வருவார்.

✓ இராணுவ தளபதி பிபின் ராவத் இந்த ஆண்டு டிச.31ஆம் தேதியுடன் ஓய்வுபெறவுள்ளதால், அடுத்த மூத்த தளபதி என்ற அடிப்படையில் மனோஜ் முகுந்த் நரவேன் இராணுவ தளபதியாக நியமிக்கப்பட வாய்ப்பு உள்ளது. இராணுவத்தில் 37 ஆண்டுகளாக பணியாற்றிவரும் மனோஜ் முகுந்த், தீவிரவாத ஒழிப்புப் பணியில் சிறப்பாக செயல்பட்டவர். ஜம்மு – காஷ்மீரில் தேசிய துப்பாக்கி ஏந்திய படைப்பிரிவு, காலாட் படைப்பிரிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் பல பதவிகளை அவர் வகித்துள்ளார்.

## 4.எந்தத் தேதியில், 159ஆவது வருமான வரி நாள் இந்தியாவில் கொண்டாடப்பட்டது?

A) ஜூலை 26

B) ஜூலை 25

**C) ஜூலை 24 ☑**

D) ஜூலை 26

✓ மத்திய நேரடி வரிகள் வாரியமானது (CBDT) 159ஆவது வருமானவரி நாளை ஜூலை.24 அன்று கொண்டாடியது. நடப்பாண்டு வருமானவரி நாளுக்கு முந்தைய ஒரு வாரகாலத்தில், நாடு முழுவதும் உள்ள அத்துறையின் பிராந்திய அலுவலகங்களில், பல்வேறு செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தச் செயல்பாடுகளுள் துறைசார் வெளியீடுகள், மின்னிதழ், மக்கள் தொடர்புத் திட்டங்களுக்கான விளம்பர உபகரணங்கள் ஆகியவை அடங்கும்.

✓ பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான முதல் விடுதலைப்போரின்போது பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய சர் ஜேம்ஸ் வில்சனால் 1860 ஜூலை 24 அன்று இந்தியாவில் முதன்முறையாக வருமான வரி அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் ஜூலை.24, வருமான வரி நாளாக அனுசரிக்கப்படுகிறது.

**5.பத்திரிகையாளர்களின் பணிப்பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான சட்டத்தை கொண்டுவர முடிவு செய்துள்ள மாநில அரசு எது?**

**A) மேற்கு வங்கம் ☑**

B) ஒடிசா

C) ஜார்க்கண்ட்

D) உத்தர பிரதேசம்

✓ மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி தலைமையிலான மேற்கு வங்க மாநில அரசு, மாநிலத்தில் பத்திரிகையாளர்களின் பணிப்பாதுகாப்பை (Job Security) உறுதிசெய்வதற்கான சட்டத்தை கொண்டு வர முடிவுசெய்துள்ளது. இது, பத்திரிகையாளரின் சமூக பாதுகாப்பை நோக்கமாகக் கொண்டுள்ளது. தவிர, பத்திரிகையாளர்கள் ஆட்குறைப்பு மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகள் மற்றும் செய்தித் தாள்கள் வெளியீட்டு நிறுவனங்களை மூடுவது போன்ற பிரச்சனைகளையும் அச்சட்டம் கையாளும்.

**6.முதியோர்களுக்காக CARE4U என்ற AI பயன்பாட்டை உருவாக்கியுள்ள IIT எது?**

A) ஐஐடி கான்பூர்

**B) ஐஐடி கோரக்பூர் ☑**

C) ஐஐடி மெட்ராஸ்

D) ஐஐடி பாம்பே

✓ முதியோர் பராமரிப்பிற்கு உதவும் ஒரு நடவடிக்கையாக IIT கோரக்பூர் மாணவர்கள் ஒரு செயலியை உருவாக்கியுள்ளனர். இந்தச் செயலியானது முதியோர்கள் கீழே விழுந்தால், அவர்கள் எந்த இடத்தில் விழுந்தார்களோ அவ்விடத்துடன் கூடிய தகவலை அம்முதியோரின் பராமரிப்பாளருக்குத் தெரிவிக்கும். 'CARE4U' என பெயரிடப்பட்டுள்ள இச்செயலியானது, பராமரிப்பாளரை முதியோருடன் இணைக்கும்.

✓ முதியோர்களின் அலைபேசியில் நிறுவப்பட்ட இந்தச் செயலியில் உள்ள நரம்பியல் – வலையமைப்பு அடிப்படையிலான வீழ்ச்சி கண்டறிதல் முறையால் முதியோர் கீழே விழுந்தாரா என்பதைக் கண்டறிய இயலும். ஒருவேளை முதியோர் கீழே விழுந்துவிட்டால் அது தானாகவே அவரது பராமரிப்பாளர் / அவசரகாலச்சேவையை தொடர்புகொண்டு, எவ்விடத்தில் முதியோர் விழுந்தாரோ அவ்விடத்துடன் கூடிய தகவலை அவர்கட்குத் தெரிவிக்கும். இந்த அம்சத்தை மேலும் பயனுள்ளதாக்க, முதியோருடன் அரட்டையடிப்பதற்கான ஓர் அறிவார்ந்த அரட்டை இயலியையும் (Chatbot) அக்குழு உருவாக்கியுள்ளது.

**7.பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தல் தொடர்பாக மறுகட்டமைக்கப்பட்ட அமைச்சர்கள் குழுவின் (Group of Ministers – GoM) தலைவர் யார்?**

A) இரமேஷ் போக்ரியால்

B) ஸ்மிருதி இரானி

C) நிர்மலா சீதாராமன்

**D) அமித்ஷா ☑**

✓ கடந்த 2018ஆம் ஆண்டில், பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தல் சம்பவங்களைத் தடுப்பதற்கான சட்ட விதிமுறைகளை வலுப்படுத்துவது தொடர்பான பரிந்துரைகளை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட அமைச்சர்கள் குழுவை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் தலைமையில் இந்திய அரசு மாற்றியமைத்துள்ளது. மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்; மனித வள மேம்பாட்டு அமைச்சர் இரமேஷ் போக்ரியால்; மகளிர், குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் ஸ்மிருதி இரானி ஆகியோர் மாற்றியமைக்கப்பட்டுள்ள இக்குழுவின் பிற உறுப்பினர்களாவர்.

**8.தனியார் நிறுவனப் பணிகளில் சொந்த மாநிலத்தைச் சேர்ந்த இளையோருக்கு 75% பணிகளை ஒதுக்கியுள்ள முதல் இந்திய மாநிலம் எது?**

A) மேற்கு வங்கம்

B) மத்திய பிரதேசம்

C) கேரளா

**D) ஆந்திர பிரதேசம் ☑**

✓ அனைத்து தனியார் நிறுவனங்களிலும் சொந்த மாநிலத்தைச் இளையோருக்கு 75% பணிகளை ஒதுக்கிய இந்தியாவின் முதலாவது மாநிலமாக ஆந்திரா திகழ்கிறது. தனியார் தொழில் நிறுவனங்கள், தொழிற்சாலைகள், கூட்டுத்தொழில் நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் இயங்கும் நிறுவனங்கள் என அனைத்து நிறுவனங்களிலும், மொத்தப் பணியிடங்களில் 75 சதவீத இடங்களை ஆந்திர மாநிலத்தவர்களைக் கொண்டு நிரப்ப வழிசெய்யும் சட்டம் ஒன்று ஆந்திர சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது அனைத்துவித பணிகளுக்கும் பொருந்தும்.

✓ மேலும் தகுதியான நபர்கள் கிடைக்கவில்லையெனில் நிறுவனங்கள் அரசுடன் இணைந்து சொந்த மாநில மக்களுக்குப் பயிற்சியளித்து அவர்களைப் பணியில் அமர்த்தவேண்டும் எனவும் அந்தச் சட்டம் தெரிவிக்கிறது. இந்தச்சட்டம், மாநில இளைஞர்களின் வேலைவாய்ப்பை உறுதிசெய்யும். ஆனால், அதே சமயத்தில், அவர்களை திறமைவாய்ந்தவர்களாக மாற்றுவதற்காக பயிற்சி மையங்களை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்திலும் அம்மாநில அரசாங்கம் உள்ளது.

**9.வேளாண் பண்ணைகளில் பூச்சிக்கொல்லிகளை கைகளால் தெளிக்கும் (Manual Spraying) முறையை ஒழிப்பதற்காக 'அக்ரிகாப்டர் – Agricopter' என்ற ஒன்றை உருவாக்கியுள்ள IIT எது?**

A) ஐஐடி டெல்லி

**B) ஐஐடி மெட்ராஸ் ☑**

C) ஐஐடி பாம்பே

D) ஐஐடி இந்தூர்

✓ மெட்ராஸ் IITஐச் சேர்ந்த மாணவர்கள் வேளாண் பண்ணைகளில் பூச்சிக்கொல்லிகளை கைகளால் தெளிக்கும் முறையை ஒழிக்கவும், படமாக்கல் நிழற்படக் கருவியைப் (Imaging Camera) பயன்படுத்தி பயிர்களின் நலத்தை அடையாளங்காணவுமாக 'Smart Agricopter – திறன்மிகு வேளாண் விமானம்'

ஒன்றை உருவாக்கியுள்ளனர். கையால் தெளிப்பதை விடவும் 10 மடங்கு வேகமாக பூச்சிக்கொல்லியை தெளிக்கும் திறன்பெற்றதாகும் இந்த அக்ரிகாப்டர். 100 மடங்கு துல்லியமாக மருந்தைத்தெளிக்கும் இந்த விமானம், 15 லிட்டர் பூச்சிக்கொல்லியை சுமந்துசென்று பயிர்களுக்கு தெளிக்கும் திறன்பெற்றதாகும்.

**10.தனியார் டிஜிட்டல் நாணயங்களுக்கு தடை விதிக்க பரிந்துரை செய்யும் கிரிப்டோகரன்ஸி குழுவின் தலைவர் யார்?**

A) நிர்மலா சீதாராமன்

**B) சுபாஷ் சந்திர கார்க் ☑**

C) N K சிங்

D) அனுராக் தாக்கூர்

✓ கிரிப்டோகரன்ஸிகள் மற்றும் பிளாக்செயின்களின் சட்டபூர்வ தன்மையைக் கண்டறிய அமைக்கப்பட்ட அமைச்சர்கள் – இடை குழுவானது சமீபத்தில் தனது அறிக்கையை நிதியமைச்சகத்திடம் சமர்ப்பித்து, தனியார் கிரிப்டோகரன்ஸிகளை இந்தியாவில் முழுமையாக தடைசெய்ய பரிந்துரைத்தது. கிரிப்டோ கரன்ஸி பரிவர்த்தனை செய்வோருக்கு அபராதம் மற்றும் பத்தாண்டு வரை சிறை தண்டனை விதிக்க விதிக்க அனுமதிக்கும், "கிரிப்டோகரன்ஸிகள் தடை மற்றும் முறைப்படுத்துதல் மசோதா – 2019" என்ற சட்ட வரைவையும் அது உருவாக்கியுள்ளது. பொருளாதார விவகார செயலாளர் சுபாஷ் சந்திர கார்க் தலைமையிலான ஒரு வல்லுநர் குழுவை இதற்காக மத்திய அரசு அமைத்திருந்தது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.புதிய பிரிட்டிஷ் பிரதமராக அதிகாரப்பூர்வமாக பொறுப்பேற்றுள்ளவர் யார்?**

A) ஜெர்மி கார்பைன்

**B) போரிஸ் ஜான்சன் (Boris Johnson) ☑**

C) ஜெர்மி ஹன்ட்

D) நைகல் ஃபரேஜ்

- ✓ முன்னாள் வெளியுறவுச் செயலாளரும், இலண்டன் மேயருமான போரிஸ் ஜான்சன், தெரசா மே தனது பதவி விலகல் கடிதத்தை பக்கிங்ஹாம் அரண்மனையில் உள்ள இராணியிடம் சமர்ப்பித்த பிறகு புதிய பிரிட்டிஷ் பிரதமராக அதிகாரப்பூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார்.
- ✓ 28 உறுப்பினர்களைக்கொண்ட பொருளாதார கூட்டணியுடன் "புதிய ஒப்பந்தம், ஒரு சிறந்த ஒப்பந்தம்" என்பதன்கீழ், 2019 அக்டோபர் 31ஆம் தேதியன்று ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதாக போரிஸ் ஜான்சன் உறுதியளித்தார். முழு அமைச்சரவை பதவிகளில் பெண்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கவும் இந்த வாய்ப்பை ஜான்சன் பயன்படுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2.பிரிட்டனின் முதல் இந்திய வம்சாவளி உள்துறை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

A) சைலேஷ் வாரா

**B) பிரீத்தி படேல் ☑**

C) இந்தர்ஜித் சிங்

D) வீரேந்திர சர்மா

- ✓ பழமைவாதக் கட்சியின் பேக் போரிஸ் பரப்புரையின் முக்கிய உறுப்பினரான பிரீத்தி படேல், புதிய பிரதமர் போரிஸ் அரசின் உயர்மட்ட அணியின் ஒருபகுதியாக, பிரிட்டனின் முதல் இந்திய வம்சாவளி உள்துறை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ✓ பாகிஸ்தானிய வம்சாவளியைச் சேர்ந்த சஜித் ஜாவித், முதல் சிறுபான்மை இன கருவூலத் துறைத் தலைவராக நியமிக்கப்பட்டதை அடுத்து பிரீத்தி படேல் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். நாட்டின் வெளியுறவு செயலாளராக தீவிர Brexit ஆதரவாளரான டொமினிக் ராப்பை ஜான்சன் நியமித்துள்ளார்.

**3.எந்த நகரத்தில், இந்திய இரயில்வேயின் முதல் அச்சக பாரம்பரிய காட்சியகம் (Printing Press Heritage Gallery) திறக்கப்பட்டுள்ளது?**

**A) மும்பை ☑**

B) கொல்கத்தா

C) தில்லி

D) சென்னை

पश्चिम रेलवे
Western Railway

- ✓ மேற்கு இரயில்வேயானது இந்திய ரயில்வேயின் முதல் அச்சக பாரம்பரிய காட்சியகத்தை மும்பையில் உள்ள மகாலட்சுமியில் திறந்துள்ளது. இதன்மூலம், மேற்கு ரயில்வே மகாலட்சுமி பல்பொருள் அங்காடி மண்டியானது 1948ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை பயன்பாட்டில் இருக்கும் மேற்கு ரயில்வேயில் பயன்படுத்தப்பட்ட அச்சிடுதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய இயந்திரங்களின் பாரம்பரிய காட்சியகத்தை சித்தரிக்கும் இந்திய இரயில்வேயின் முதல் பிரிவாக மாறியுள்ளது. 1912ஆம் ஆண்டில் பம்பாயின் கிரேட்டர் இந்திய தீபகற்ப இரயில்வேயின் கீழ் இந்த அச்சகம் நடைமுறைக்கு வந்தது.

**4. இந்திய அரசாங்கத்தின் புதிய மத்திய உள்துறை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**



A) சுபாஷ் சந்திர கார்க்

B) அன்ஷு பிரகாஷ்

C) அதானு சக்ரவர்த்தி

**D) அஜய் குமார் பல்லா ☑**

- ✓ அஸ்ஸாம் மேகாலயா பிரிவு IAS அதிகாரியான அஜய் குமார் பல்லா, உள்துறை அமைச்சகத்தின் சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது உள்துறை செயலாளராக பொறுப்பிலிருக்கும் ராஜீவ் கவ்பாவுக்கு பிறகு அவர் இந்தப் பதவிக்கு வந்துள்ளார். வரும் ஆகஸ்ட் 2021 வரை (இரண்டாண்டு காலத்துக்கு) அஜய் குமார் பல்லா இப்பதவியை வகிப்பார். பொருளாதார விவகாரத்துறை செயலாளராக இருந்த சுபாஷ் சந்திர கார்க் எரிசக்தித் துறை செயலாளராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.
- ✓ குஜராத் பிரிவு அதிகாரியான அதானு சக்கரவர்த்தி புதிய பொருளாதாரத்துறை செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். மேலும், புதிய தொலைத்தொடர்புத் துறை செயலாளராக அன்ஷு பிரகாஷ் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த மறு நியமனங்களில் 1984, 1985 மற்றும் 1986ஆம் ஆண்டுப் பிரிவுகளின் IAS அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர்.

**5. சர்வதேச புத்தாக்கக் குறியீடு – 2019இல் இந்தியாவின் தரநிலை என்ன?**

A) 64ஆவது

**B) 52ஆவது ☑**

C) 45ஆவது

D) 33ஆவது

- ✓ சர்வதேச புத்தாக்கக் குறியீடு (Global Innovation Index – GII) 2019இல் இந்தியா 5 இடங்கள் முன்னேறி 52ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. மேலும், தகவல் தொழினுட்ப சேவைகளின் சிறந்த ஏற்றுமதியாளராக தனது நிலையை இந்தியா தக்கவைத்துக் கொண்டுள்ளது. இப்பட்டியலில் சுவிச்சர்லாந்து தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. அதே சமயம், முதல் 10 இடங்களுள் இஸ்ரேல் தனது இடத்தைப் பிடித்துள்ளது.
- ✓ 2011ஆம் ஆண்டு தொடங்கி ஒவ்வோர் ஆண்டும் மத்திய மற்றும் தெற்காசிய பிராந்தியத்தில் மிகவும் புத்தாக்கம் மிக்க நாடாக இந்தியா தனது தலைமை நிலையை தொடர்ந்து பராமரித்து வருவதை இந்தச்

அண்மைய GII தரவரிசை காட்டுகிறது. 80 சுட்டிகளின் (Indicators) அடிப்படையில் 129 நாடுகளின் பொருளாதாரங்களை இந்த GII தரவரிசை தரவரிசைப்படுத்தியுள்ளது.

✓ இந்தத் தரவரிசையை, கார்னெல் பல்கலைக்கழகம், INSEAD மற்றும் ஐ.நா. உலக அறிவுசார் சொத்து அமைப்பு (WIPO) மற்றும் GII அறிவுப் பங்காளர்கள் ஆண்டுதோறும் வெளியிட்டு வருகின்றனர்.

**6.ரிசர்வ் வங்கியின் எந்தத் துணை ஆளுநருக்கு பணக்கொள்கை இலாகா (Monetary Policy Portfolio) ஒதுக்கப்பட்டுள்ளது?**

A) விரால் ஆச்சார்யா

B) M K ஜெயின்

C) N S விஸ்வநாதன்

**D) B P கனுங்கோ ☑**

✓ சக துணை ஆளுநர் விரால் ஆச்சார்யாவின் பதவி விலகலைத் தொடர்ந்து துணை ஆளுநர் B P கனுங்கோவுக்கு பணக்கொள்கை இலாகாவை ஒதுக்கி ரிசர்வ் வங்கி (RBI) உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆகஸ்ட் 5–7 வரை கூட்டப்படவுள்ள ரிசர்வ் வங்கியின் அடுத்த பணக் கொள்கைக் குழுவின் 6ஆவது உறுப்பினராக கனுங்கோ இருப்பார். அதோடு தனது நாணய மேலாண்மை இலாகாவையும் அவர் தக்கவைத்துக்கொள்வார். மற்ற 3 துணை ஆளுநர்களான N S விஸ்வநாதன், B P கனுங்கோ மற்றும் M K ஜெயின் ஆகியோர் தலா 12 துறைகளுக்கு பொறுப்பேற்றுள்ளனர்.

**7.தனது உள்நாட்டு நீர்வழிகளில் 'Water Taxis – நீர் வாடகையுந்துகளை' இயக்க முடிவு செய்துள்ள மாநில அரசு எது?**

A) கேரளா

B) ஆந்திர பிரதேசம்

**C) கோவா ☑**

D) ஒடிசா

✓ நாட்டிலேயே முதன்முறையாக கோவா மாநில அரசு தனது உள்நாட்டு நீர்வழிகளில் (பனாஜிக்கும் பழைய கோவாவுக்கும் இடையில்) 'நீர் வாடகையுந்துகளை' இயக்க முடிவுசெய்துள்ளது. 2019–2020 நிதியாண்டிற்கான ஆற்று வழிப் போக்குவரத்துத் துறையின் (RND) செயல்திறன் அறிக்கையை சமர்ப்பிக்கும்போது இந்த அறிவிப்பை கோவா அரசு வெளியிடப்பட்டது. தற்போதுள்ள படகுத்துறைகள் மற்றும் குழாம்களை மேம்படுத்தவும், அனைத்து படகு வழித்தடங்களிலும் சிறந்த வசதிகளை அளிக்கவும் அந்தத் துறை திட்டமிட்டுள்ளது. RND 34 படகுகளை கைவசம் வைத்துள்ளது.

✓ கோவாவில் 9 படகுத்துறைகளை புனரமைக்க மத்திய அரசின் சாகர்மாலா திட்டம் நிதியளித்துள்ளது. கப்பல் அமைச்சகத்தின் ஒரு முக்கிய திட்டமான சாகர்மாலா திட்டமானது இந்தியாவின் 7,500 கி.மீ., நீளமுள்ள கடற்கரையோரம், 14,500 கி.மீ., நீளமுள்ள செல்லத்தக்க நீர்வழிகள் மற்றும் பன்னாட்டு கடல்

வர்த்தகப் பாதைகளில் அதன் உத்திசார் இருப்பிடத்தை தன்னலப்படுத்துவதன் மூலம் துறைமுக தலைமையிலான வளர்ச்சியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**8. ICCஇன் நிதி மற்றும் வணிக விவகாரங்களின் தலைவராக நியமிக்கப்பட்ட ஏசன் மேனியா, எந்த நாட்டைச் சேர்ந்தவராவார்?**

A) ஆப்கானிஸ்தான்

B) நியூசிலாந்து

**C) பாகிஸ்தான் ☑**

D) இங்கிலாந்து

✓ பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் தற்போதைய தலைவரான ஏசன் மேனியா (Ehsan Mania) ICCஇன் அதிகாரம் மிக்க நிதி மற்றும் வணிக விவகாரங்களின் (F & CA) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ICCஇன் மிகமுக்கியமான குழுக்களுள் F & CAஉம் ஒன்றாகும். மேலும், ICC நிகழ்வுகளுக்கான வரவு செலவுத் திட்டங்களை வடிவமைப்பதற்கும் அதன் உறுப்புநாடுகளுக்கு பணம் விநியோகிப்பதற்கும் அது பொறுப்புடையதாகும்.

**9.இந்திய டேபிள் டென்னிஸ் அணியின் புதிய தேசிய பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

A) வெசலின் மேடிக்

B) இகோர் ஸ்டீமாக்

**C) தேஜன் பாபிக் (Dejan Papic) ☑**

D) ஹரேந்திர சிங்

✓ இந்திய டேபிள் டென்னிஸ் அணியின் புதிய தேசிய பயிற்சியாளராக கனடாவைச் சேர்ந்த தேஜன் பாபிக் நியமிக்கப்பட்டுள்ளார். இந்திய விளையாட்டு ஆணையம் (SAI) தனக்கு வழங்கிய ஓராண்டு ஒப்பந்தத்தை அவர் ஏற்றுக்கொண்டார். அவருக்கு மாதத்திற்கு $7000 டாலர் ஊதியமாக வழங்கப்படும். டோக்கியோ ஒலிம்பிக்கிற்குப் பிறகு அவரது ஒப்பந்தம் புதுப்பிக்கப்படும்.

✓ 2018 ஜாகர்த்தா ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலிருந்தே இந்திய அணியானது பயிற்சியாளர் இல்லாமலே விளையாடி வருகிறது. ஒரு பயிற்சியாளர் இல்லாமல், அந்த அணி பல முக்கியப் போட்டிகளில் தோல்விகளை சந்திதுள்ளது. இருப்பினும், சமீபத்தில் முடிவடைந்த 2019 காமன்வெல்த் டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்பில், அனைத்துப் பிரிவுகளிலும் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

**10.இந்தியாவில் எந்தத் தேதியில், தேசிய ஒலிபரப்பு நாள் கொண்டாடப்படுகிறது?**

A) ஜூலை 24

**B) ஜூலை 23 ☑**

C) ஜூலை 26

D) ஜூலை 25

- ✓ 1927ஆம் ஆண்டில் இதே நாளில் இந்தியாவில் முதன்முறையாக வானொலி ஒலிபரப்புச் சேவை தொடங்கப்பட்டதன் நினைவாக, இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.23 அன்று தேசிய ஒலிபரப்பு நாள் (National Broadcasting Day) கடைப்பிடிக்கப்படுகிறது. நாட்டின் முதலாவது வானொலி ஒலிபரப்பானது இந்திய ஒலிபரப்பு நிறுவனம் என்ற தனியார் நிறுவனத்தால் பம்பாய் நிலையத்தில் இருந்து ஒலிபரப்பப்பட்டது. இதை, அப்போதைய இந்தியாவின் பிரிட்டிஷ் அரசப் பிரதிநிதியான இர்வின் பிரபு தொடங்கிவைத்தார்.
- ✓ 1927ஆம் ஆண்டு முதல், இந்திய மக்களின் வாழ்வின் ஓர் அங்கமாக வானொலி இருந்து வருகிறது. ஜூன் 8, 1936 அன்று, இந்திய ஸ்டேட் ஒலிபரப்புச் சேவையானது அகில இந்திய வானொலி (AIR) என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. "பகுஜன் ஹிட்டாயா பகுஜன் சுக்காயா" என்பது AIRஇன் குறிக்கோளாகும். உலகின் மிகப்பெரிய பொது ஒலிபரப்பு நிறுவனங்களுள் AIRஉம் ஒன்றாகும். இது 414 நிலையங்கள் மூலம் 23 மொழிகளிலும், 179 வட்டார மொழிகளிலும் ஒலிபரப்பை மேற்கொண்டு வருகிறது.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் உறுப்பினர் எண்ணிக்கையை ஆறிலிருந்து ஒன்பதாக உயர்த்துவதற்கான சட்ட முன்வரைவை தமிழ்நாடு சட்டப்பேரவை ஏற்றுக்கொண்டுள்ளது.
- ✓ "தமிழ்நாட்டில் காந்திஜியின் முதல் அடிச்சுவடினை" நினைவுகூரும் வகையில், முதல் அஞ்சல் உறையை தமிழ்நாடு அஞ்சல் வட்டத்தின் தலைமை இயக்குநர் M.சம்பத், சென்னை தலைமை அஞ்சல் அலுவலகத்தில் வெளியிட்டார். 1896ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், 'மகாத்மா' காந்தி சென்னை வந்தபோது, தமிழ்நாட்டில் அவரது முதல் அடிச்சுவடு பதிவானது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1. இந்தியாவின் முதல் டிராகன் இரத்தக்கசிவு மரமானது (Dragon Blood–Oozing Tree) அண்மையில் எந்த மாநிலத்தில் கண்டுபிடிக்கப்பட்டது?**

**A) அஸ்ஸாம் ☑**

B) கேரளா

C) நாகாலாந்து

D) திரிபுரா

- ✓ அசாமிய வன அலுவலர் ஜதிந்திர சர்மா தலைமையிலான ஓர் ஆய்வுக்குழு, மேற்கு கர்பி ஆங்லாங்கின் டோங்கா சர்போ பகுதியில், 'Dracaena cambodiana' என்னும் டிராகன் மரவகையை கண்டறிந்துள்ளது. டிராகன் மரவகை இந்தியாவில் கண்டறியப்படுவது இதுவே முதல்முறையாகும்.
- ✓ Dracaena cambodiana ஒரு மிகமுக்கியமான மருத்துவத் தாவரமும் அதே சமயம் ஓர் அலங்கார மரமும் ஆகும். சீனாவில், பாரம்பரிய மருந்தாகப் பயன்படுத்தப்படும் 'டிராகன் இரத்த'த்தின் முக்கிய வளமாக இது உள்ளது. பல்வேறு பூஞ்சை/காளான் மற்றும் பாக்டீரியா எதிர்ப்புக் கலவைகள், ஆக்சிசனேற்றிகள் போன்றவை இந்தத் தாவரத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறது.
- ✓ இந்தியாவில், Asparagaceae குடும்பத்தைச்சேர்ந்த Dracaena இனமானது இமயமலைப் பகுதியில், வட கிழக்கு மற்றும் அந்தமான் & நிக்கோபார் தீவுகளில் 9 இனங்கள் & 2 வகைகளால் குறிப்பிடப்படுகிறது. ஆனால் Dracaena cambodiana மட்டுமே உண்மையான டிராகன் இன மரங்களாகும்.

**2. "Fire and Fury Corps – Saga of Valour, Fortitude and Sacrifice" என்ற நூலின் ஆசிரியர் யார்?**

A) பிரிஜ் மோகன் கவுல்

**B) இரன்பீர் சிங் ☑**

C) முகுந்த் நரவேன்

D) D அன்பு

- ✓ "Fire and Fury Corps – Saga of Valour, Fortitude and Sacrifice" என்ற நூலை வடக்கு இராணுவத் தளபதி Lt.Gen இரன்பீர் சிங் எழுதியுள்ளார். ஜம்மு காஷ்மீரின் இலடாக் பிராந்தியத்தில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு (LoC) மற்றும் மெய்யான கட்டுப்பாட்டுக்கோடு (LAC) ஆகியவற்றை பாதுகாக்கும் வீரர்களின் சாதனைகளை இந்த நூல் வெளிக்கொணர்கிறது.
- ✓ இந்நூல் அவ்வீரர்களின் வீரத்தையும், துணிச்சலையும் ஆவணப்படுத்துகிறது. மேலும், இந்திய இராணுவத்தின் வளமான பாரம்பரியத்தையும், நெறிமுறைகளையும் சித்தரிக்கிறது.

**3.இந்திய கிரிக்கெட் அணியின் அதிகாரப்பூர்வ விளம்பரதாரராக மாறியுள்ள நிறுவனம் எது?**

**A)** BYJU’s ☑

B) ஜியோ

C) வேதாந்தா

D) ஏர்டெல்

- ✓ பெங்களூருவைச் சேர்ந்த இணையதள கற்பித்தல் நிறுவனமான BYJU's, சீன அலைபேசி உற்பத்தி நிறுவனமான OPPO நிறுவனத்தை இந்திய கிரிக்கெட் அணியின் அதிகாரப்பூர்வ விளம்பரதாரரில் (Official Sponsor) இருந்து மாற்றியுள்ளதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (BCCI) சுமீபத்தில் அறிவித்தது. இந்த ஒப்பந்த காலம் வரும் செப்.5 தொடங்கி 2020ஆம் ஆண்டு மார்ச்.31 வரை தொடரும்.
- ✓ BYJU's என்பது ஒரு முன்னணி கல்வி மற்றும் கற்றல் செயலியாகும். அதன் விளம்பர தூதராக (Brand Ambassador) ஷாருக்கானை அது கொண்டுள்ளது. இதையடுத்து செப்டம்பர்.15 முதல் தொடங்கவுள்ள தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான தொடரில், BYJU's பெயரை தாங்கியை சீருடையை அணிந்து இந்திய அணி வீரர்கள் விளையாடுவார்கள்.

**4. SUPARCO என்பது எந்த நாட்டின் அதிகாரப்பூர்வ விண்வெளி நிறுவனமாகும்?**

A) இலங்கை

B) மியான்மர்

C) வங்கதேசம்

**D) பாகிஸ்தான் ☑**

- ✓ **S**pace and **U**pper **A**tmosphere **R**esearch **Co**mmission (SUPARCO) என்பது பாகிஸ்தான் அரசாங்கத்தின் விண்வெளி நிறுவனமாகும். இது அந்நாட்டின் பொது மற்றும் உள்நாட்டு விண்வெளித் திட்டத்திற்கும், வானூர்தி மற்றும் விண்வெளி ஆராய்ச்சிக்கும் பொறுப்புடையதாகும். பாகிஸ்தான் அதன் நட்பு நாடான சீனத்தின் துணையோடு, வரும் 2022ஆம் ஆண்டில் விண்வெளிக்கு தனது முதல் விண்வெளி வீரரை அனுப்பவுள்ளது. இந்தியா, தனது சந்திரயான்–2 விண்கலத்தை ஜூலை.22 அன்று வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியதைத் தொடர்ந்து பாகிஸ்தான் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

**5.எந்நகரத்தில், இந்தியாவின் முதல் விண்வெளிப் போர்ப் பயிற்சியான 'IndSpaceEx' தொடங்கியது?**

A) கொச்சின்

B) விசாகப்பட்டினம்

**C) புது தில்லி ☑**

D) நெல்லூர்

✓ இந்தியாவின் முதல் விண்வெளிப் போர்ப் பயிற்சியான 'IndSpaceEx', ஜூலை.25 மற்றும் 26 ஆகிய தேதிகளில் புது தில்லியில் இந்திய ஆயுதப்படைகளால் தொடங்கப்பட்டு நடத்தப்பட்டது. புவிக்கு அப்பால் நாட்டிற்கிருக்கும் உடனடி அச்சுறுத்தல்களை மதிப்பிடுவதே இப்பயிற்சியின் நோக்கமாகும். எதிர்காலப் போர்களுக்கு ஒரு கூட்டு விண்வெளிக் கோட்பாட்டை உருவாக்குவதற்கும் இது திட்டமிட்டுள்ளது. விண்வெளிப் பாதுகாப்பு மற்றும் திறன்களில் சீனாவின் வளர்ந்து வரும் செல்வாக்கினைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 6.2019 CSR ஜர்னல் சிறப்பு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்ட நிறுவனங்கள் எத்தனை?

A) ஐந்து

**B) ஆறு ☑**

C) ஏழு

D) நான்கு

✓ CSR ஜர்னல் சிறப்பு விருதுகளானது TATA பவர், ReNew பவர், ஹிந்துஸ்தான் துத்தநாகம், ஆதித்யா பிர்லா மூலதன நிறுவனம், YES வங்கி மற்றும் மஹிந்திரா & மஹிந்திரா ஆகிய 6 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. விருதுகளின் 3ஆம் பதிப்பில், கல்வி மற்றும் திறன் பயிற்சி, பெண்கள் அதிகாரமளித்தல் மற்றும் சிறார் நலன், விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சி, விளையாட்டு, நலம் & தூய்மை மற்றும் சூழல் முதலிய 6 பிரிவுகள் இருந்தன. மின்னணு மற்றும் அச்சு ஊடக செய்தி வெளியீட்டு நிறுவனமான CSR ஜர்னல், இந்த விருதுகளை நிறுவியுள்ளது. 'India First' என்பது இந்நிகழ்வின் கருப்பொருளாகும்.

### 7.அண்மையில் காலமான பெஜி கெய்ட் எஸ்ஸெப்சி (Beji Caid Essebsi), எந்த ஆப்பிரிக்க நாட்டின் குடியரசுத்தலைவராக இருந்தார்?

A) காங்கோ

**B) துனிசியா ☑**

C) தென்னாப்பிரிக்கா

D) நைஜீரியா

✓ வட ஆப்பிரிக்க நாடான துனிசியாவின் முதல் ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரான பெஜி கெய்ட் எஸ்ஸெப்சி (92), ஜூலை.25 அன்று காலமானார். அவர் உலகின் "பதவியிலிருந்த அதிக வயதான குடியரசுத்தலைவர்" ஆவார். பிராந்தியம் முழுவதும் நடந்த அரபு எழுச்சிகளைத்தொடர்ந்து 2014இல் துனிசியாவில் நடந்த தேர்தலில் எஸ்ஸெப்சி வெற்றிபெற்றார்.

### 8.பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனாவை (PMSBY) செயல்படுத்துவதில் எந்த மாநிலம் முதலிடத்தில் உள்ளது?

A) இராஜஸ்தான் B) ஒடிசா

C) பஞ்சாப் **D) உத்தரப்பிரதேசம் ☑**

- ✓ நாட்டிலேயே பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா திட்டத்தை செயல்படுத்துவதில் உத்தரப்பிரதேச மாநிலம் முதலிடத்தை பிடித்துள்ளது. அம்மாநில அரசு வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, 31 மார்ச் 2019 வரை 1.95 கோடி பொதுமக்களுக்கு இந்தத் திட்டத்தின்கீழ் காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் இந்த இலட்சியத் திட்டத்தை ஜனவரி 2018இல் அம்மாநிலம் தொடங்கியது. இதன் கீழ், 18 – 70 வயதுக்குட்பட்டவர்கள் பெயரளவு பிரீமியம் தொகையான ரூ.12ஐ ஆண்டுக்கு ஒருமுறை செலுத்தி, ரூ.2 இலட்சம் வரை விபத்துக் காப்பீடு பெறமுடியும்.

- ✓ இதுதவிர, பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா திட்டத்தை (PMJJBY) செயல்படுத்துவதில் உ.பி மாநிலம் நாட்டிலேயே 2ஆவது இடத்தில் உள்ளது. PMJJBY என்பது ஆயுள் காப்பீட்டுத்திட்டமாகும். இது ஆண்டுக்கு 330 ரூபாயை பிரீமியமாக செலுத்துவதன் மூலம் ரூ.2 இலட்சம் மதிப்புள்ள ஆயுள் காப்பீட்டை வழங்குகிறது. 18–50 வயதிற்குட்பட்ட வங்கிக்கணக்கு வைத்திருப்போர் இதன் மூலம் பயன் பெறலாம்.

### 9.எந்த இந்திய அமைப்பைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், பால்வீதி விண்மீன் திரளில் 28 புதிய விண்மீன்களை கண்டறிந்துள்ளனர்?

A) VSSC

B) BARC

**C)** ARIES ☑

D) ISRO

- ✓ நைனிடால் அருகே 2016இல் நிறுவப்பட்ட 3.6 மீட்டர் தேவஸ்தல் ஆப்டிகல் தொலைநோக்கியைப் (DOT) பயன்படுத்தி பால்வீதி விண்மீன் திரளில் 28 புதிய மாறுபட்டு ஒளிரும் வகையிலான விண்மீன்களை ஆரியபட்டா அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த (ARIES) இந்திய ஆராய்ச்சியாளர்கள் அண்மையில் கண்டுபிடித்தனர். ARIES ஆராய்ச்சியாளர்கள் குழுவுக்கு Dr. சினேகலதா மற்றும் Dr. A K பாண்டே ஆகியோர் தலைமைதாங்கினர். NGC 4147 விண்மீன் தொகுதியில், முதல்முறையாக மாறுபட்டு ஒளிரும் வகையிலான விண்மீன்கள் கண்டறியப்பட்டுள்ளன.

- ✓ புதிய மாறுபட்டு ஒளிரும் வகையிலான விண்மீன்களை கண்டறிந்தது தவிர, NGC 4147 விண்மீன் தொகுதியின் உட்கட்டமைப்பு குறித்தும் இந்த ஆய்வின் மூலம் அறிந்துகொள்ளப்பட்டது. மாறுபட்டு ஒளிரும் வகையிலான விண்மீன்களின் ஒளிரும் தன்மை மாறுபட்டுக் காணப்படுவதற்கு, அந்த விண்மீன்களின் சீரான சுருங்கி விரியும் தன்மையோ அல்லது மற்ற வானியல் பொருள்களின் நிழல் இவற்றின் மீது விழுவதோ காரணமாக இருக்கலாம். NGC 4147 விண்மீன் தொகுதியை கடந்த 1784இல் பிரிட்டன் வானியலாளர் வில்லியம் ஹெர்ஷல் கண்டறிந்தார். அதிகப்படியான ஈர்ப்புவிசை காரணமாக இந்த விண்மீன் தொகுதி, கோளவடிவில் காணப்படுகிறது.

**10.தேசிய சுரங்கத் தொழிலாளர்கள் நலன் நிறுவனமானது (NIMH), எந்த மத்திய அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது?**

A) பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

B) இரயில்வே அமைச்சகம்

C) சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம்

**D) சுரங்க அமைச்சகம் ☑**

- ✓ மத்திய சுரங்கங்கள் அமைச்சகத்தின் கீழ் உள்ள தன்னாட்சி அமைப்பான, சுரங்கப்பணியாளர்கள் நலத்திற்கான தேசிய நிறுவனத்தைக் கலைத்து, அதன் சொத்துக்கள் மற்றும் கடன் பொறுப்புகளுடன் அதனை சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் கீழ் அகமதாபாதில் உள்ள ICMR – தொழில்சார் நலத்திற்கான தேசிய நிறுவனத்துடன் (NIOH) இணைக்கப்பட்டுள்ளது.
- ✓ மேலும், அந்நிறுவனத்தின் பணியாளர்கள் அனைவரும் அதே பதவியிலும் / அதே ஊதியத்திலும் இணைப்பு நிறுவனத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். இந்த இணைப்பின் மூலம் மக்களின் பணம் திறமையாக நிர்வகிக்கப்படுவதோடு, தொழிற்சார்ந்த நலத்துறையின் நிபுணத்துவமும் விரிவுப்படுத்தப்படும். ICMR – NIOH ஆனது சுகாதார & குடும்பநல அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ ஹூண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழலுக்கு மாசு விளைவிக்காத மின்சாரத்தில் இயங்கும் KONA மகிழுந்தை (Car) முதலமைச்சர் பழனிசாமி கொடியசைத்து தொடங்கி வைத்தார்.
    - இந்த KONA மகிழுந்தானது உயர் தொழில்நுட்பத்துடன் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும், 57 நிமிடங்களில் 80% மின்னேற்றம் செய்யும் வசதிகொண்ட மின்கலன் பொருத்தப்பட்டு, ஒருமுறை முழுமையாக மின்னேற்றம் செய்வதன் மூலம் 452 கி.மீ., தூரம் செல்லும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.தேசிய மிகை இலாபத் தடுப்பு ஆணையத்தின் (National Anti-profiteering Authority-NAA) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

**A) பத்ரி நரைன் சர்மா ☑**

B) அமந்த் ஷா

C) R பாக்யதேவி

D) J C சவுகான்

- ✓ 1985ஆம் ஆண்டுத் தொகுதியின் இராஜஸ்தான் பிரிவு IAS அதிகாரியான பத்ரி நரைன் சர்மா, அடுத்த ஈராண்டுகளுக்கு தேசிய மிகை இலாபத்தடுப்பு ஆணையத்தின் (NAA) தலைவராக மறு நியமனம் செய்யப்பட்டுள்ளார். சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் (GST) கீழ், குறைக்கப்பட்ட விலைகளின் பயனை நுகர்வோர்ப் பெறுவதை இவ்வாணையம் உறுதிசெய்கிறது.
- ✓ வரிக்குறைப்பின் பயன்கள் முழுமையாக நாட்டு மக்களுக்குக் கிடைக்கும் வகையிலும், வர்த்தகர்கள் GSTஐ பயன்படுத்தி மிகையாக இலாபமீட்டுவதைத் தடுக்கும் நோக்கத்திலும் 2017ஆம் ஆண்டின் மத்திய GST சட்டத்தின் பிரிவு 171இன் கீழ், NAA அமைக்கப்பட்டுள்ளது. GSTஇன் கீழ், வரிக்குறைப்பின் பயனை நுகர்வோருக்கு வழங்கத்தவறினால் எந்தவொரு நிறுவனம் / வர்த்தகரின் பதிவை இரத்துசெய்யும் அதிகாரமும் NAAக்கு உண்டு.

**2. "Chandra Shekhar – The Last Icon of Ideological Politics" என்ற நூலின் ஆசிரியர் யார்?**

A) இராம தேவி

**B) ஹரிவன்ஷா ☑**

C) பூபேஷ் பாகல்

D) சினேகலதா ஸ்ரீவஸ்தாவா

- ✓ "சந்திரசேகர் – சிந்தாந்த அரசியலின் கடைசி பிம்பம்" என்ற நூலை மாநிலங்களவை துணைத் தலைவர் ஹரிவன்ஷா மற்றும் ரவி தத் பாஜ்பாய் ஆகியோர் எழுதியுள்ளனர். இந்நூலை, நாடாளுமன்ற நூலக கட்டடத்தில் அமைந்துள்ள பாலயோகி அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் மோடி, வெளியிட்டார். முன்னாள் பிரதமர் சந்திரசேகர் தனது நடுத்தர குடும்பப் பின்னணியிலிருந்து இந்தியாவின் மிக முக்கியமான அரசியல் தலைவர்களுள் ஒன்றாக மாறிய பயணத்தை இந்நூல் விவரிக்கிறது.

**3.இந்தியாவின் எந்த மத்திய ஆயுதக்காவல்படையால் (CAPF) பாதுகாப்புக்களஞ்சியம் (Securitypedia) தொடங்கப்பட்டுள்ளது?**

A) SSB

B) ITBP

C) BSF

**D)** CISF ☑

- மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படையானது (CISF) யூடியூபின் அடியொற்றி 'CISFTube' என்ற ஒரு தனிப்பயனாக்கப்பட்ட காணொளி தளத்தையும், விக்கிப்பீடியாவின் அடியொற்றி 'Securitypedia' என்ற ஒரு பாதுகாப்புக் களஞ்சியத்தையும் தொடங்கியுள்ளது. பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகள், படைகளில் பின்பற்றப்படும் சிறந்த நடைமுறைகள் மற்றும் உலகம் முழுவதும் கிடைக்கும் அண்மைய தொழினுட்பங்கள் குறித்து அதன் பணியாளர்களுக்குக் கற்பிப்பதற்காக இது தொடங்கப்பட்டுள்ளது.
- பாதுகாப்புக் களஞ்சியம் என்பது ஒரு வலைத்தள கலைக்களஞ்சியம் ஆகும். இது உலகம் முழுவதும் பாதுகாப்புத் தொடர்பான நடைமுறைகள் குறித்த தகவலை உள்ளடக்கியுள்ளது. CISFTube என்பது CISF தொடர்பான அனைத்துக் காணொளிகளின் தரவுத்தளமாகும். CISF பணியாளர்கள் அவர்களின் செயல்பாடுகள் தொடர்பான பல்வேறு செயல்முறைகளை கற்றுக்கொள்ள இது உதவும்.

**4.சூரிய ஆற்றல் மேற்கூரை நிறுவல்களில் முதலிடம் வகிக்கும் மாநிலம் எது?**

**A)** குஜராத் ☑

B) மகாராஷ்டிரா

C) இராஜஸ்தான்

D) மத்தியப்பிரதேசம்

- ஜூலை.23 நிலவரப்படி சூரிய ஆற்றல் மேற்கூரை நிறுவலின் பரப்பளவுபடி, 261.97 MW நிறுவல் திறனுடன் குஜராத் நாட்டிலேயே முதலிடத்தில் உள்ளது. குஜராத்தைத் தொடர்ந்து மகாராஷ்டிரா (198.52 MW) மற்றும் தமிழ்நாடு (151.62 MW) முதலிய மாநிலங்கள் முறையே 2ஆவது மற்றும் 3ஆவது இடத்தில் உள்ளது. மத்திய அரசின் தரவுகளின்படி, இந்தியாவின் மொத்த சூரிய ஆற்றல் மேற்கூரை நிறுவல்களின் திறன் 1700.54 MW ஆகும். 2022ஆம் ஆண்டளவில் 40,000 MW திறனளவுக்கு சூரிய ஆற்றல் மேற்கூரை திட்டங்களை நாட்டில் நிறுவும் இலக்கை இந்திய அரசு நிர்ணயித்துள்ளது.

**5.அண்மையில் காலமான ஆற்றூர் இரவி வர்மா, எந்த மொழிசார்ந்த புகழ்பெற்ற கவிஞரும் மொழிபெயர்ப்பாளருமாவார்?**

A) தமிழ் **B)** மலையாளம் ☑

C) தெலுங்கு D) கன்னடம்

✓ புகழ்பெற்ற கவிஞரும் மொழிபெயர்ப்பாளருமான ஆற்றூர் இரவி வர்மா (88), ஜூலை.26 அன்று கேரளத்தின் திரிச்சூரில் காலமானார். நவீன மலையாள கவிதைகளின் முன்னோடிகளுள் ஒருவராக அவர் கருதப்பட்டார். எழுத்தச்சன் புரஸ்கரம், ஆஷான் விருது, கேரள சாகித்திய அகாதமி விருது மற்றும் கேந்திர சாகித்திய அகாதமி விருது உட்பட பல மதிப்புமிக்க விருதுகளை இவர் பெற்றுள்ளார்.

✓ கவித; ஆற்றூர் இரவி வர்மாயுடே கவிதகள் (1957–1994); ஆற்றூர் இரவி வர்மாயுடே கவிதகள் (1995–2003); ஜே.ஜே சில குறிப்புகள்; ஒரு புளிமரத்தின்டே கத; நாளே மட்டொரு நாள் மாத்ரம்; ரண்டாம் யாமங்களுடே கத மற்றும் புதுநானூறு: தமிழ் கவிதகளுடே மொழிமாட்டம் உள்ளிட்டவை அவரது முக்கியப் படைப்புகளுள் சிலவாகும்.

**6.** **2019 TIFFஇல் முதலாவது 'பாராட்டுக்குரிய நடிகர் – Tribute Actor' விருதைப் பெறவுள்ளவர் யார்?**

A) லியனார்டோ டி காப்ரியோ

B) கிர்க் டக்ளஸ்

**C) மெரில் ஸ்ட்ரீப் (Meryl Streep) ☑**

D) எல்லன் டிஜெனெரஸ்

✓ 44ஆவது டொரன்டோ சர்வதேச திரைப்பட விழாவில், பாராட்டுக்குரிய நடிகருக்கான விருதைப் பெறும் முதல் நபராக மெரில் இருப்பார். திரைத்துறை, தொலைக்காட்சி மற்றும் மேடையில் 50 ஆண்டுகளாக அவராற்றிய மகத்தான பங்களிப்புக்காக செப்.9 அன்று அவர் இவ்விருதை நேரில் பெற்றுக்கொள்வார். 'தி அயர்ன் லேடி', 'சோபீஸ் சாய்ஸ்' மற்றும் 'கிராமர் Vs கிராமர்' முதலிய திரைப்படங்களுக்காக மும்முறை ஆஸ்கர் விருது பெற்றவர் மெரில் ஸ்ட்ரீப்.

**7.** **அண்மையில் நீருக்கடியில் இராணுவ அருங்காட்சியகத்தை திறந்துள்ள அரபு நாடு எது?**

A) குவைத்

B) சவுதி அரேபியா

**C) ஜோர்டான் ☑**

D) ஓமன்

✓ அகாபா கடற்கரையோரத்தில் செங்கடல் படுகையில் ஜோர்டான் தனது முதல் நீருக்கடியில் இராணுவ அருங்காட்சியகத்தை (Underwater Military Museum) அண்மையில் திறந்துள்ளது. இதில், பீரங்கிகள், படைகளை ஏற்றிச்செல்லும் வாகனங்கள் மற்றும் ஓர் உலங்கூர்தி உட்பட 19 இராணுவம் சார்ந்த பொருட்கள் இடம்பெற்றுள்ளன. 28 மீ., (92 அடி) ஆழத்தில் மூழ்கியிருக்கும் அவை, அகாபா சுற்றுலாத் தலத்திற்கு பெருமளவிலான சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கும் என அந்நாட்டு அரசு நம்புகிறது.

✓ சாகசத்தை விரும்பும் சுற்றுலாப்பயணிகளுக்கு புதியதொரு அருங்காட்சியக அனுபவத்தை அளிப்பதே இந்த அருங்காட்சியகத்தின் நோக்கமாகும். வட செங்கடலில் உள்ள பவளப்பாறைகள், ஆழ்கடல் நீர் மூழ்கு வீரர்கள் மற்றும் பிற சுற்றுலாப்பயணிகளுக்கு ஒரு பிரபலமான சுற்றுலாத்தலமாக உள்ளது.

**8.மின்சாரத்தில் இயங்கும் வாகனங்கள் மீதான GST விகிதத்தை 12 சதவீதத்திலிருந்து எத்தனை சதவீதமாக குறைக்க GST குழுமத்தில் முடிவு செய்துள்ளது?**

A) 10%

B) 8%

C) 6%

**D)** 5% ☑

✓ மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் ஒரு முயற்சியாக அனைத்து மின்சார வாகனங்களின் GST வரி 12 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. மின்சார வாகனங்களுக்கான மின்னேற்று நிலையங்களுக்கு 18 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக GST வரி குறைக்கப்பட்டுள்ளது. மின்சாரத்தில் இயங்கும் பேருந்துகளை (12 பயணிகளுக்கும் அதிகமாக ஏற்றிச் செல்பவை) உள்ளூர் அதிகாரிகளால் வாடகைக்கு எடுக்கும்போது GST வரி விலக்கு அளிக்கப்படுகிறது. இந்த மாற்றங்கள் 2019 ஆக.1ஆம் தேதியிலிருந்து அமலுக்கு வரும்.

✓ மத்திய நிதித்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன், காணொளிக் காட்சி மூலம் இந்த 36ஆவது GST குழுமக்கூட்டத்தை நடத்தினார். ஜூலை.5 அன்று நாடாளுமன்றத்தில், 2019ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்த பின்னர் நடக்கும் முதல் GST குழுமக்கூட்டமாகும் இது.

**9.கணக்குத் திரட்டு மாதிரியான 'சஹமதி'யை வெளியிட்ட இந்திய பொருளாதார வல்லுநர் யார்?**

A) அமர்த்தியா சென்

B) இரகுராம் ராஜன்

**C) நந்தன் நிலகேனி** ☑

D) ஜகதீஷ் பகவதி

✓ நந்தன் நிலகேனி, 'சஹமதி – Sahamati' என்னும் ஒரு கணக்குத் திரட்டு மாதிரியை (Account Aggregator Model) அறிமுகப்படுத்தியுள்ளார். இதன்மூலம் தனிநபர்கள் மற்றும் சிறு வணிகர்கள் தங்களின் டிஜிட்டல் நிதிசார் ஆவணங்களை மூன்றாம் தரப்பினருடன் பாதுகாப்பான முறையில் பகிர்ந்துகொள்ளலாம். எடுத்துக்காட்டாக, கடனைப் பெற விரும்பும் ஒரு பயனர், விருப்பமான கணக்கு ஒருங்கிணைப்பாளரை தேர்ந்தெடுப்பதன் மூலம் கடன் வழங்கும் நிறுவனத்திடம் டிஜிட்டல் முறையில் அவரது வங்கி அறிக்கைகள் மற்றும் பிற விவரங்களை விரைவாகப் பகிர முடியும்.

✓ இதுவரை, ஆறு கணக்கு ஒருங்கிணைப்பாளர்கள் ரிசர்வ் வங்கியின் கொள்கை ரீதியான ஒப்புதலைப் பெற்றுள்ளன. இதில், NESL Asset Data, CAMS Finserv Financial Services, Cookiejar Technologies Pvt Ltd, FinSec AA Solutions Pvt Ltd, Yodlee Finsoft Pvt Ltd மற்றும் Jio Information Solutions ஆகியவை அடங்கும். சூழலமைப்பை ஆதரிக்கும் பொருட்டு, 'சஹமதி'யானது பிரிவு 8இன் கீழ், இலாப நோக்கற்ற மாதிரியாக உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு OneIndia.comஐ நிறுவிய BG மகேஷ் தலைமைதாங்குவார்.

✓ ரிசர்வ் வங்கியிடம் சுய ஒழுங்குமுறை அமைப்பு உரிமத்திற்கு சஹமதி விண்ணப்பிக்கவுள்ளது. அது ஒரு தன்னாட்சி அமைப்பு நிலையை 'சஹமதி'க்கு வழங்கும். இத்தொழில்நுட்பக் கட்டமைப்பை இலாப நோக்கற்ற iSpirt உருவாக்கியுள்ளது.

**10.எந்த IITஐச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், மிகைப்பூச்சிக்கான ஒரு புதிய மூலக்கூறு கட்டமைப்பை உருவாக்கியுள்ளனர்?**

A) ஐஐடி பாம்பே

**B) ஐஐடி கான்பூர் ☑**

C) ஐஐடி மெட்ராஸ்

D) ஐஐடி இந்தூர்

✓ ஐஐடி கான்பூர் மற்றும் இலக்னோவைச் சேர்ந்த மத்திய மருந்து ஆராய்ச்சி நிறுவனத்தின் (CDRI) ஆராய்ச்சியாளர்கள் மிகைப்பூச்சியை (Superbugs) அழிப்பதற்காக ஒரு புதிய மூலக்கூறு கட்டமைப்பை வடிவமைத்துள்ளனர். அவை, பெரும்பாலான நுண்ணுயிர் எதிர்ப்பிகளை பேரளவில் எதிர்க்கின்றன. மேலும், அவற்றின் பெருக்கத்தையும் தடுக்க உதவுகின்றன. இந்த ஆய்வுக்காக, ஆராய்ச்சியாளர்கள் Staphylococcus Aureus என்றவொரு பாக்டீரியாவைப் பயன்படுத்தினர். இந்தப் பாக்டீரியாவானது கிட்டத்தட்ட 30% மக்களின் நாசி, மேல் சுவாசக்குழாய் மற்றும் தோலில் பொதுவாகக் காணப்படுகிறது.

✓ ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி, பாக்டீரியாவின் உயிர்வாழ்விற்கும் பெருக்கத்திற்கும் திருகூக்கி (gyrase) எனப்படும் ஒரு பொருள் அவசியமாகும். பெரும்பாலான உயிரினங்களில், திருகூக்கி A மற்றும் திருகூக்கி B என இருவகையான திருகூக்கிகள் உள்ளன. இந்தப் புதிய மூலக்கூறு திருகூக்கி Bஐ குறிவைக்கிறது. இது உயிரினங்களில் அதிகம் காப்புற்று உள்ளது. எனவே இதை மாற்றுவது கடினம். இப்புதிய உத்தியானது, பாக்டீரியாக்களை எதிர்க்க உதவும் அதேவகை மருந்துகளைப் பயன்படுத்தி அவற்றை அழிக்கவும் செய்கிறது.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ சென்னை மக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் கிடைக்க, 'Dial for Water 2.0' என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப்புதிய திட்டத்தின் மூலம், காத்திருப்புக் காலம் எந்த நிலையிலும் 48 ம.நேரத்தைத் தாண்டாது. குடிநீர் விநியோகித்த காலத்திலிருந்து 7 – 10 நாட்களுக்குப் பிறகே மீண்டும் அடுத்த முன்பதிவைச் செய்யவிலும்.

✓ தமிழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டுவரும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியானது ரூ.2.50 கோடியிலிருந்து ரூ.3 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.எந்த நகரத்தில், கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுக்களின் (KIYG–2020) 3ஆவது பதிப்பு நடைபெறவுள்ளது?**

A) கான்பூர்

**B)** குவகாத்தி ☑

C) ஹைதராபாத்

D) சென்னை

✓ 3ஆவது கேலோ இந்தியா இளையோர் விளையாட்டு போட்டிகள், 2020 ஜன.18 முதல் 30 வரை அசாம் மாநிலம் குவகாத்தியில் நடைபெறவுள்ளது. இதில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர். இதனை, இந்திய ஒலிம்பிக் சங்கமும், இந்திய பள்ளி விளையாட்டுக்கள் கூட்டமைப்பும் இணைந்து நடத்தவுள்ளன. இப்போட்டிகளை நடத்தும் மாநிலமாக அசாம் உள்ளது. இதன் முதல் பதிப்பு புது தில்லியில் நடைபெற்றது. புனேவில் இதன் இரண்டாவது பதிப்பு நடைபெற்றது.

**2.ஹிந்து பொருளாதார மன்றமானது தனது தேசிய அத்தியாயத்தை (National Chapter) சமீபத்தில் எந்த நாட்டில் அறிமுகப்படுத்தியது?**

A) இலங்கை

**B)** நேபாளம் ☑

C) மியான்மர்

D) தாய்லாந்து

✓ ஹிந்து பொருளாதார மன்றம் (HEF) தனது நேபாள அத்தியாயத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் சமயம், உலக ஹிந்து பொருளாதார மன்றத்தின் (WHEF) நிறுவனர் சுவாமி விக்யானனந்த், நவீன உலகில் உரிய மரியாதை மற்றும் அங்கீகாரத்தைப் பெற பொருளாதார வலுவூட்டல் மிகவும் அவசியம் என்றார். இந்தியாவுக்கும் நேபாளத்துக்கும் இடையிலான பொருளாதார கூட்டுறவை அதிகரிப்பதும், நேபாள நாட்டின் பொருளாதார செழிப்புக்காக உலகளாவிய வலைப்பின்னலுடன் அதனை இணைப்பதுமே நேபாள அத்தியாயத்தின் அடிப்படை நோக்கமாகும்.

✓ ஹிந்து சமுதாயத்துக்குள் பண ரீதியாக உள்ள வெற்றிகரமான கூறுகளை ஹிந்து பொருளாதார மன்றம் ஒருங்கிணைக்கிறது. இதன்மூலம் ஒவ்வொரு குழுவும் தங்கள் வணிக அறிவு, நிபுணத்துவம் மற்றும் வளங்களை தங்கள் சக சகோதரர்களுடன் பகிர்ந்துகொள்ளலாம். அது மிகையான செல்வத்தை உருவாக்க தூண்டுகிறது மற்றும் சமூகத்தை வளமாக்குகிறது.

✓ HEF ஆனது WHEF உடன் இணைக்கப்பட்டுள்ளது. இது இந்தியா, ஜெர்மனி, கென்யா போன்ற பல்வேறு நாடுகளில் தேசிய அத்தியாயங்களையும், அந்நாடுகளுக்குள்ளான நகர அத்தியாயங்களான HEF–மும்பை, HEF–வாஷிங்டன் DC போன்றவற்றையும் கொண்டுள்ளது.

**3.எந்த IITஐச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், பக்கவாத நோயாளிகளுக்கு உதவும் விதமாக இரு–விரல் தானியங்கி கையை (two–finger robotic hand) உருவாக்கியுள்ளனர்?**

A) ஐஐடி பாம்பே

B) ஐஐடி தில்லி

**C) ஐஐடி கான்பூர் ☑**

D) ஐஐடி இந்தூர்



✓ கான்பூர் IIT நிறுவனத்தைச் சேர்ந்த அறிவியலாளர்கள் முடங்கிப்போன பக்கவாத (Paralysed Stroke) நோயாளிகளுக்கு உதவும் விதமாக இரு–விரல் தானியங்கி கையை (புறச்சட்டகம் – Exoskeleton) உருவாக்கியுள்ளனர். புறச்சட்டகத்தைப்பொறுத்தவரை, பேராசிரியர் ஆஷிஷ் தத்தா மற்றும் பேராசிரியர் K.S வெங்கடேஷ் ஆகியோர் உல்ஸ்டர் பல்கலை (ஐக்கிய பேரரசில் உள்ளது) மற்றும் கோரக்பூரைச் சேர்ந்த அவர்களின் ஆசிரியர் கிரிஜேஷ் பிரசாத் ஆகியோருடன் கூட்டு சேர்ந்து அதனை வடிவமைத்து உள்ளனர்.

✓ இந்தப் புறச்சட்டகமானது நான்கு–தண்டு (four–bar) பொறிமுறையைப் பயன்படுத்துகிறது மற்றும் 4° தன்விருப்ப வளவுகளைக் (Degrees of Freedom) கொண்டுள்ளது. இதை ஒரு நோயாளியால் கையாக பயன்படுத்த முடியும். இது, தலையில் அணிந்திருக்கும் மூளை–கணினி இடைமுகத்தின் உதவியுடன் மூளையின் சமிக்ஞைகளைப் பயன்படுத்தி நோயாளிக்கு உதவும். மின்கல ஆற்றலில் செயல்படும் இது, 300 MHz MEGA நுண்கட்டுப்படுத்தியால் இயக்கப்படுகிறது. இதன் விலை சுமார் ரூ.15,000 ஆகும்.

**4.நடப்பாண்டு உலக கல்லீரல் அழற்சி தினத்தை வழங்கும் நாடு எது?**

A) இலங்கை

B) இந்தியா

C) வங்கதேசம்

**D) பாகிஸ்தான் ☑**

✓ கல்லீரலில் வீக்கத்தை ஏற்படுத்துவதோடு ஒவ்வோர் ஆண்டும் சுமார் 1.4 மில்லியன் உயிர்கள் மரணிக்கக் காரணமாக இருக்கும் கல்லீரல் அழற்சி நோயைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்–காக ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.28 அன்று உலக கல்லீரல் அழற்சி தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. கல்லீரல் அழற்சி – வகை B நச்சுயிரியைக் கண்டுபிடித்ததற்காக நோபல் பரிசுபெற்ற அறிவியலாளர் பருச் சாமுவேல் பிளம்பெர்க்கை நினைவுகூரும் விதமாக, அவர் பிறந்தநாளான ஜூலை.28 உலக கல்லீரல் அழற்சி தினமாக தேர்வு செய்யப்பட்டது.

✓ நடப்பாண்டின் உலக கல்லீரல் அழற்சி தினத்தை வழங்கும் நாடாக பாகிஸ்தான் உள்ளது. மேலும், "Invest in eliminating hepatitis" என்பது நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

5.அண்மையில் காலமான ஜெய்பால் ரெட்டி, எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவராவார்?

**A) இந்திய தேசிய காங்கிரசு ☑**

B) பாரதீய ஜனதா கட்சி

C) இந்திய பொதுவுடமைக் கட்சி

D) பிஜூ ஜனதா தளம்

- ✓ முன்னாள் நடுவணமைச்சரும், மூத்த காங்கிரசு தலைவருமான ஜெய்பால் ரெட்டி (77), ஐதராபாத்தில், ஜூலை.28 அன்று காலமானார். ஒஸ்மானியா பல்கலையில் மாணவர் தலைவராக இருந்த அவர், 1970இல் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வுசெய்யப்பட்டார். இந்திரா பிரதமராக இருந்தபோது அவசரநிலை பிறப்பிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து சிறிதுகாலம் ஜனதா கட்சியிலும், ஜனதா தளத்திலும் அவர் இருந்தார். 1999இல் மீண்டும் காங்கிரசில் சேர்ந்தார்.
- ✓ முன்னதாக கூட்டாட்சி முன்னணி அரசாங்கத்திலும், காங்கிரஸ் தலைமையிலான UPA I மற்றும் UPA II ஆட்சிகளிலும் அவர் மத்திய அமைச்சராக இருந்தார். அவர் மக்களவைக்கு நான்கு முறையும், மாநிலங்களவைக்கு இரண்டு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

6.அண்மையில் BCCI இணைப்பு கிடைக்கப்பெற்ற யூனியன் பிரதேசம் எது?

A) அந்தமான் & நிக்கோபார் தீவுகள்

B) டாமன் & டையூ

C) புதுச்சேரி

**D) சண்டிகர் ☑**

- ✓ ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு, சண்டிகர், இறுதியாக, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து (BCCI) இணைவைப் பெற்றுள்ளது. இதன்மூலம் இரஞ்சிக் கோப்பை மற்றும் BCCIஆல் ஏற்பாடு செய்யப்படும் பிற உள்நாட்டுப் போட்டிகளில், அந்நகரம் தனது சொந்த அணியை பங்கேற்க வைக்கவியலும். இதனை யூனியன் பிரதேச கிரிக்கெட் சங்கத்தின் (UTCA) தலைவர் சஞ்சய் டாண்டன் தெரிவித்தார்.
- ✓ இந்த முன்னேற்றத்தைத்தொடர்ந்து தேசிய மற்றும் சர்வதேச அளவில் பஞ்சாப் அல்லது ஹரியானாவை பிரதிநிதித்துவப்படுத்த கட்டாயப்படுத்தப்பட்ட சண்டிகர் கிரிக்கெட் வீரர்கள், இப்போது, தங்களது சொந்த நகரத்தை நேரடியாக பிரதிநிதித்துவப்படுத்த முடியும். 1982இல் பதிவுசெய்யப்பட்ட UTCA, அதன் பின்னர் இணைப்பைப் பெற பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. BCCI இணைவில் உள்ள மற்றொரு யூனியன் பிரதேசம் தில்லி.

**7.இந்திய இராணுவத்தின் புதிய இராணுவ நடவடிக்கைகளின் தலைமை இயக்குநராக (Director General of Military Operations – (DGMO) நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

A) அனந்த் பிரசாத் சிங்

B) H S பனக்

**C) பரம்ஜித் சிங் ☑**

D) K இரவி பிரசாத்

✓ பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் பேரனுபவமுள்ள Lt.Gen பரம்ஜித் சிங், இந்திய ராணுவத்தின் அடுத்த புதிய இராணுவ நடவடிக்கைகளின் தலைமை இயக்குநராக (DGMO) நியமிக்கப்பட்டுள்ளார். அவர், வரும் அக்.15 அன்று, Lt.Gen அனில் சவுகான் ஓய்வுபெற்ற பிறகு அந்தப் பொறுப்புக்கு வருவார். தற்போது அவர், ராணுவத்தின் நக்ரோட்டாவை தளமாகக்கொண்ட XVI படைப்பிரிவின் தலைமை அதிகாரியாக பணியாற்றி வருகிறார்.

✓ DGMOஆக, ஜம்மு–காஷ்மீரில் உள்ள எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு உட்பட இந்திய இராணுவத்தின் பல்வேறு நடவடிக்கைகளை Lt.Gen பரம்ஜித் சிங் மேற்பார்வையிடுவார். அவர் தனது தொழில் வாழ்க்கையின் பெரும்பகுதியை ஜம்மு–காஷ்மீரில் கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் செலவழித்துள்ளார். தவிர இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை–ளிலும் அவர் பங்கேற்றுள்ளார். 2016ஆம் ஆண்டு நடத்தப்பட்ட துல்லியத் தாக்குதலை திட்டமிடுவதிலும் அவர் ஈடுபட்டுள்ளார்.

**8.அமெரிக்காவில் 'மக்களின் தேர்வு' விருதை வென்ற இந்திய மணல் சிற்பக்கலைஞர் யார்?**




A) சுபோத் குப்தா

B) விவன் சுந்தரம்

C) அக்பர் பதம்சி

**D) சுதர்சன் பட்நாயக் ☑**

✓ இந்திய மணல் சிற்பக்கலைஞரும் 'பத்ம' விருது பெற்றவருமான சுதர்சன் பட்நாயக், அமெரிக்காவில் நடந்த மதிப்புமிக்க மணல் சிற்ப விழாவில், 'மக்களின் தேர்வு – People's Choice' விருதை வென்றார். மாசசூசெட்ஸின் பாஸ்டனில் நடந்த 2019 ரெவரே கடற்கரை சர்வதேச மணல் சிற்பவிழாவில், 'நெகிழி மாசுபாட்டிலிருந்து நமது பெருங்கடலைக் காப்பாற்றுங்கள் – Stop Plastic Pollution, Save Our Ocean' என்ற அவரது மணல் சிற்பத்துக்காக அவர் அவ்விருதை வென்றார்.

✓ பட்நாயக்தான் இந்தியா மற்றும் ஆசியாவின் சார்பாக கலந்துகொண்ட ஒரே போட்டியாளர். கடலில் நெகிழிப்பொருட்களால் ஏற்படும் மாசு, கடல் உணவுகள் மூலமாக மனிதனையும் பாதிக்கிறது என்பதை விளக்கும் வகையில் அவரின் சிற்பம் அமைந்திருந்தது.

**9.23ஆவது அதிபர் கோப்பையில், 51 கிலோ எடைப்பிரிவில் தங்கம் வென்ற இந்திய குத்துச்சண்டை வீராங்கனை யார்?**

A) லைஷ்ரம் சரிதா தேவி

B) அங்குஷிதா போரோ

**C) மேரி கோம் ☑**

D) சிம்ரஞ்சித் கவுர்

- ✓ ஆறு முறை உலக சாம்பியனும் ஒலிம்பிகில் வெண்கலப்பதக்கம் வென்றவருமான M C மேரி கோம், இந்தோனேசியாவின் லாபுவான் பாஜோ நகரத்தில் நடந்த 23ஆவது அதிபர் கோப்பையில், 51 கிலோ எடைப்பிரிவில், 5–0 என்ற புள்ளிக்கணக்கில், ஆஸ்திரேலிய வீராங்கனை ஏப்ரல் பிராங்ஸை வீழ்த்தி தங்கப்பதக்கம் வென்றார். கடந்த மே மாதம் நடந்த இந்திய ஓப்பனிலும் மேரி தங்கம் வென்றிருந்தார்.
- ✓ இரஷ்யாவின் ஏகடெரின்பெர்க் நகரத்தில் வரும் செப்.7–21 வரை உலக பெண்கள் குத்துச்சண்டை போட்டி நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் பட்டம் வென்றால், 2020ஆம் ஆண்டு டோக்கியோவில் நடக்கும் ஒலிம்பிக் போட்டிக்கு மேரி கோம் தகுதிபெறுவார்.

**10.எந்த நகரத்தில், 5ஆவது சர்வதேச தர்ம – தம்மா மாநாடு நடைபெற்றது?**

A) தர்மசாலா

B) பாட்னா

**C) இராஜ்கிர் ☑**

D) சிம்லா

- ✓ ஜூலை.27 & 28 ஆகிய தேதிகளில், பீகார் மாநிலம் இராஜ்கிரில், 5ஆவது சர்வதேச தர்ம – தம்ம மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில், 15 நாடுகளைச்சேர்ந்த சுமார் 200 பிரதிநிதிகள் பங்கேற்றனர். உலகில் நிலவும் பயங்கரவாதம், வன்முறை மற்றும் புவி வெப்பமடைதல் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இந்த மாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.
- ✓ இந்த இரண்டு நாள் மாநாட்டில், பௌத்தத்தின் முக்கிய தலைப்புகளான சத் – சித் – ஆனந்தம் மற்றும் நிர்வாணம் ஆகியவற்றின் பாடங்களில் உரையாற்றப்பட்டது. தர்ம – தம்ம மாநாடானது ஹிந்து மற்றும் பௌத்த சிந்தனையாளர்கள் தங்களது கருத்துக்களை வெளிப்படுத்த ஒரு தளமாக செயல்படுகிறது.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ கொடைக்கானல் மலைப்பகுதியில் விளைவிக்கப்படும் மிகவும் தனித்துவம் வாய்ந்த மருத்துவ குணம் மிக்க 'மலைப்பூண்டு'க்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.

- புவிசார் குறியீடு வழங்கப்பட்டிருப்பதன் மூலம், வேறு எந்தப் பூண்டு வகையையும் மலைப் பூண்டு என்று அழைக்கவோ, விற்பனை செய்யவோ முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.
- இதன் மூலம், தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் மதுரை மல்லி, நீலகிரி தேநீர், ஈரோடு மஞ்சள் உட்பட புவிசார் குறியீடு கிடைக்கப்பெற்ற பொருட்களின் எண்ணிக்கை இருபத்தெட்டாக (28) உயர்ந்துள்ளது. கர்நாடகாவில் விளையும் 42 பொருட்கள் புவிசார் குறியீடு பெற்றிருக்கும் நிலையில், இந்திய அளவில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது.

✓ இந்தியாவின் முதல் பெண் மருத்துவர் முத்துலட்சுமி ரெட்டி பிறந்தநாளான ஜூலை 30ஆம் தேதி தமிழ்நாடு முழுவதுமுள்ள அரசு மருத்துவமனைகளில் "மருத்துவமனைகள் நாள்" கொண்டாடப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.இந்தியாவின் 7ஆவது பொருளாதாரக் கணக்கெடுப்பு, எந்த மாநிலத்திலிருந்து தொடங்கியது?**




A) அருணாச்சல பிரதேசம்

B) மேகாலயா

C) நாகாலாந்து

**D) திரிபுரா ☑**

✓ ஜூலை.30 அன்று திரிபுரா மாநிலத்திலிருந்து 7ஆவது பொருளாதாரக் கணக்கெடுப்பை இந்திய அரசு தொடங்கியுள்ளது. இது ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் பிற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் தொடங்கப்படும். ஐந்தாண்டு இடைவெளிக்குப்பிறகு இந்த ஆண்டு நடக்கும் இந்தக் கணக்கெடுப்பை மத்திய புள்ளிவிவரம் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் நடத்துகிறது. மின்னணு மற்றும் தகவல் அமைச்சகத்தின் கீழ் உள்ள CSC மின்னாளுகை சேவைகள் இந்தியா நிறுவனத்துடன் இதற்கென அவ்வமைச்சகம் கூட்டு சேர்ந்துள்ளது.

✓ சரக்குகள் மற்றும் சேவைகளின் உற்பத்தி / விநியோகத்தில் ஈடுபட்டுள்ள வீட்டமை நிறுவனங்கள் உட்பட அனைத்து நிறுவனங்களையும் இக்கணக்கெடுப்பு உள்ளடக்கும். புள்ளிவிவரங்கள் சேகரிப்புச் சட்டம், 2008 விதிகளின்கீழ், ஒவ்வொரு வீடு மற்றும் வணிக நிறுவனங்களுக்கும் நேரடியாகச் சென்று, கணக்கெடுப்பு மேற்கொண்டு, அதன் மூலம் தரவுகள் சேகரிக்கப்படும். இக்கணக்கெடுப்பானது வரும் டிசம்பர் மாதத்திற்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், தேசிய அளவிலான முடிவுகள் மார்ச் 2020க்குள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

✓ நாட்டில் உள்ள பெரிய ஒழுங்கமைக்கப்படாத துறை குறித்த தகவல்களின் ஒரே ஆதாரமாக இந்தப் பொருளாதாரக் கணக்கெடுப்பு உள்ளது. கடைசியாக 2013ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பொருளாதாரக் கணக்கெடுப்பின்படி, 58.5 மில்லியன் நிறுவனங்கள் சுமார் 131 மில்லியன் பேருக்கு பணிவாய்ப்பை வழங்கியுள்ளன.

**2.மின்னாளுகை 2019 தொடர்பான 22ஆவது தேசிய மாநாடு, இந்தியாவின் எந்த வடகிழக்கு மாநிலத்தில் நடைபெறவுள்ளது?**

A) திரிபுரா

B) அருணாச்சல பிரதேசம்

**C) மேகாலயா ☑**

D) நாகாலாந்து

✓ மின்னாளுகை 2019 குறித்த 22ஆவது தேசிய மாநாடு "Digital India: Success to Excellence" என்ற கருப்பொருளுடன் வரும் ஆக.8–9 ஆகிய தேதிகளில் மேகாலய மாநிலம் ஷில்லாங்கில் நடைபெறும். நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத்துறையானது (DARPG) மின்னணு மற்றும்

தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் மேகாலய மாநில அரசாங்கத்துடன் இணைந்து இதனை ஏற்பாடு செய்து வருகிறது. நாட்டின் வடகிழக்கு மண்டலத்தில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்படுவது இதுவே முதல்முறையாகும்.

✓ ஷில்லாங்கில் நடைபெறும் இம்மாநாடு, மத்திய அரசாங்கத்தின் DARPGஇன் 100 நாள் திட்டங்களின் ஒருபகுதியாக உள்ளது. 22ஆவது தேசிய மின்னாளுகை மாநாட்டில், 28 மாநிலங்களும் 8 யூனியன் பிரதேசங்களும் பங்கேற்கின்றன. இதில், 450க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

**3.எந்நாட்டின் அறிவியலாளர்கள், பெருங்கடல்களின் நினைவகத்தைப் பயன்படுத்தி மாசுபாட்டின் அளவைக் கணிக்கும் ஒரு புள்ளிவிவர மாதிரியை உருவாக்கியுள்ளனர்?**

**A) சீனா & அமெரிக்க ஐக்கிய நாடுகள் ☑**

B) இந்தியா & பிரான்ஸ்

C) போலந்து & இத்தாலி

D) பிரான்ஸ் & ஜெர்மனி

✓ சீனா மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆராய்ச்சியாளர்கள் ஒரு புதுமையான கணினி மாதிரியை உருவாக்கியுள்ளனர். இது, ஒரு பருவத்தில், முன்கூட்டியே ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்தில் ஏற்படும் காற்று மாசுபாட்டின் அளவை துல்லியமாக கணிக்க உதவுகிறது. இந்தப் புள்ளிவிவர மாதிரியானது பெருங்கடல்கள் தொடர்பான சில காலநிலை மாதிரிகளை பயன்படுத்துகிறது. அவை, வட இந்தியாவில் வீசும் குளிர்கால காற்றின்போது ஏற்படும் மாசுபாட்டைக் கட்டுப்படுத்தும் விளைவைக் கொண்டுள்ளன. இந்தப் புதிய மாதிரியானது குளிர்காலத்தில் ஏற்படும் தூசுப்படலங்கள் குறித்து முன்னறிவிக்கவும், அதற்கேற்ப மாசுக்கட்டுப்பாட்டுத் திட்டங்களை உருவாக்கவும் அரசுக்கு உதவும்.

✓ வட இந்தியாவில், குளிர்காலத்தில் ஏற்படும் தூசுப்படல மாசுபாட்டின் வருடாந்திர மாறுபாடு, எல் நினோ (வானிலையில் உலகளாவிய தாக்கத்தை ஏற்படுத்தும் பசிபிக் பெருங்கடலில் ஏற்படும் ஒரு காலநிலை சுழற்சி) மற்றும் அண்டார்டிக் அலைவு – Antarctic Oscillation (தென் அரைக்கோளத்தின் வளிமண்டல மாறுபாட்டின் குறைந்த அதிர்வெண்முறை) ஆகியவற்றின் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது என இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது. எல் நினோ–கடல் மேற்பரப்பு வெப்பநிலை முரண்கள் மற்றும் அண்டார்டிக் அலைவு–தூண்டப்பட்ட முரண்கள் முதலிய இரண்டும் இலையுதிர் முதல் குளிர்காலம் வரை நீடிக்கும்.

**4.அண்மையில் காலமான டோங்குபார் ராய், எந்த மாநில சட்டமன்றத்தின் அவைத்தலைவராக இருந்தார்?**

A) ஒடிசா

**B) மேகாலயா ☑**

C) மேற்கு வங்கம்

D) நாகாலாந்து

✓ மேகாலய சட்டமன்றத்தின் தற்போதைய அவைத்தலைவரும், மாநில முன்னாள் முதலமைச்சருமான Dr. டோங்குபார் ராய் (64), ஜூலை.28 அன்று குருகிராமில் காலமானார். ஐக்கிய ஜனநாயகக் கட்சியின் (UDP) தலைவராக இருந்த இராய், காசி சமூகத்தைச்சேர்ந்த செல்வாக்கு மிக்க அரசியல்வாதிகளுள் ஒருவராகக் காணப்பட்டார். கான்ராட் சங்மாவின் தேசிய மக்கள் கட்சி தலைமையிலான மேகாலய ஜனநாயக கூட்டணி அரசாங்கத்தில் UDP ஒரு முக்கியப் பங்காளராக இருந்தது.

## 5.பொதுக்கணக்குக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A) மீனாட்சி லேகி

B) கிரிஷ் பாலசந்திர பாபட்

**C) அதிர் ரஞ்சன் சவுத்ரி ☑**

D) கிரித் பிரேம்ஜிபாய் சோலங்கி



✓ மக்களவையில் காங்கிரஸ் கட்சியின் தலைவரான அதிர் ரஞ்சன் சவுத்ரி, பொதுக்கணக்குக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அவையிலிருந்து காங்கிரஸ் சார்பாக பொதுக்கணக்குக்குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ள ஒரே உறுப்பினர் இவராவார். இந்த நியமனத்தை மக்களவை அவைத்தலைவர் ஓம் பிர்லா மேற்கொண்டார்.

✓ பொதுக்கணக்குக்குழுவில் மக்களவையைச் சேர்ந்த 15 உறுப்பினரும் மாநிலங்களவையைச் சேர்ந்த 7 உறுப்பினரும் உள்ளனர். இது, மதிப்பீட்டுக் குழு மற்றும் அரசு நிறுவனங்களுக்கான குழுவுடன் நாடாளுமன்றத்தில் மிக முக்கியமான நிதிக்குழுக்களுள் ஒன்றாக உள்ளது. இந்திய அரசின் வருவாய் மற்றும் செலவினங்களை தணிக்கை செய்வதே பொதுக்கணக்குக் குழுவின் நோக்கமாகும். இதுதவிர, மதிப்பீட்டுக்குழு கிரிஷ் பாலசந்திர பாபட் தலைமையிலும், அரசு நிறுவனங்களுக்கான குழு மீனாட்சி லேகி தலைமையிலும், பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினரின் நலக்குழு கிரித் பிரேம்ஜிபாய் சோலங்கி தலைமையிலும் இருக்கும்.

## 6.எல்லைப் பாதுகாப்புப் படையின் (BSF) புதிய தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A) ராஜேஷ் சந்திரா

**B) V K ஜோரி ☑**

C) S S தேஸ்வால்

D) ராஜீவ் ராய் பட்நாகர்

✓ எல்லைப் பாதுகாப்புப் படையின் (BSF) புதிய தலைமை இயக்குநராக IPS அதிகாரி V K ஜோரி (மத்தியப் பிரதேசம்: 1984) நியமிக்கப்பட்டுள்ளார். ஆகஸ்ட்.31 அன்று ஓய்வுபெறவுள்ள தற்போதைய தலைமை இயக்குநர் இரஜினி காந்தி மிஸ்ராவிடம் இருந்து BSF பொறுப்பை அவர் பெற்றுக்கொள்வார். ஜோரி, தற்போது அமைச்சரவை செயலகத்தின்கீழ், புலனாய்வு அமைப்பான RAWஇல் சிறப்புச் செயலாளராக பணியாற்றிவருகிறார். செப்டம்பர் 2020 அன்று அவர் ஓய்வுபெறுவார். எல்லைப் பாதுகாப்புப்படை (BSF) என்பது இந்தியாவின் மிகப்பெரிய எல்லைக் காவல்படையாகும்.

- ✓ இது பாகிஸ்தான் மற்றும் வங்கதேசத்துடனான இந்தியாவின் 2 முக்கிய எல்லைகளைப் பாதுகாக்கப் பணிபுரிகிறது. ITPB (சீனா) மற்றும் SSB (நேபாளம் மற்றும் பூட்டான்) ஆகிய இரண்டும் பிற எல்லைப் பாதுகாப்புப் படைகளாகும்.

### 7. எந்த மத்திய அமைச்சகத்தால், Deep Ocean Mission (DOM) தொடங்கப்படவுள்ளது?



A) சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்

**B) புவி அறிவியல்கள் அமைச்சகம் ☑**

C) பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம்

D) வேதியியல் மற்றும் உரங்கள் அமைச்சகம்

- ✓ ஆழ்கடல் திட்டமானது (DOM) இறுதியாக இந்திய அரசிடமிருந்து ஒப்புதலைப் பெற்றுள்ளது. கடலின் ஆழமான இடைவெளிகளை ஆராய்வதற்கான ரூ.8000 கோடி மதிப்பிலான இந்த ஐந்தாண்டுத் திட்டத்தை மத்திய புவி அறிவியல் அமைச்சகம் செயல்படுத்தவுள்ளது. உலோகங்கள் (Metals) மற்றும் தாதுக்களைத் (Minerals) தேடுவதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.
- ✓ Poly – Metallic Noduleகளை (PMN) ஆராய்வதற்காக ஐ.நா. சர்வதேச கடல்படுகை ஆணையமானது மத்திய இந்தியப்பெருங்கடல் வடிநிலத்தில் 75,000 ச.கி.மீ., பரப்பளவை இந்தியாவுக்கு ஒதுக்கியுள்ளது. இவை இரும்பு, மாங்கனீசு, நிக்கல் மற்றும் கோபால்ட் ஆகியவற்றைக் கொண்ட கடற்பரப்பில் உள்ள பாறைச் சிதறல்களாகும். மத்திய இந்தியப் பெருங்கடலில் கடல்களின் அடிப்பகுதியில் 380 மில்லியன் மெட்ரிக் டன் PMN கிடைப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

### 8. இந்தியாவின் நடப்பாண்டு கீதை ஜெயந்தி விழாவுக்கு, பங்காண்மை நாடாக அழைக்கப்பட்டுள்ள நாடு எது?

A) இலங்கை

**B) நேபாளம் ☑**

C) இந்தோனேஷியா

D) தாய்லாந்து

- ✓ குருக்ஷேத்திரத்தில் நடக்கவுள்ள நடப்பாண்டு 'கீதை ஜெயந்தி விழா'வுக்கு நேபாளத்தை பங்காண்மை நாடாக அழைக்க ஹரியானா முதல்வர் மனோகர்லால் கட்டார் அந்த நாட்டுக்கு அழைப்புவிடுத்துள்ளார். இந்தியாவுக்கான நேபாள தூதர் நிலம்பர் ஆச்சார்யாவுக்கும் அவர் அழைப்புவிடுத்துள்ளார். கீதை ஜெயந்தி, ஹிந்து மாதமான மார்கழி வளர்பிறையில் சுக்ல ஏகாதசியில் வருகிறது. இது ஹிந்துக்களின் புனிதநூலான ஸ்ரீமத்–பகவத்கீதையின் பிறப்பைக்குறிக்கிறது. 'கீதை ஜெயந்தி விழா', பகவத்கீதையின் பிறந்தநாளாகக் கருதப்படுவதால் அது முக்கியத்துவம் பெறுகிறது.
- ✓ குருக்ஷேத்திரப் போரின்போது பகவான் ஸ்ரீகிருஷ்ணர் தனது தத்துவபோதனைகளை அர்ஜுனனுக்கு வழங்கிய புனிதநாளின் நினைவாக, மக்கள் 'கீதை ஜெயந்தி'யைக் கொண்டாடுகிறார்கள்.

**9.பெண் தொழில்முனைவோரை ஊக்குவிக்க NITI ஆயோக், எந்த சமூக ஊடகத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ளது?**

A) ஸ்கைப்

B) லிங்க்ட்இன்

C) டுவிட்டர்

**D) வாட்ஸ்அப் ☑**

✓ பெண்கள் தொழில்முனைவோர் தளத்தின் (WEP) ஆதரவின் கீழ், இந்தியாவில் பெண் தொழில்முனை–வோருக்கு ஆதரவளிப்பதற்கும், ஊக்குவிப்பதற்குமாக NITI ஆயோக், பேஸ்புக்கிற்குச் சொந்தமான வாட்ஸ்அப் உடன் கூட்டுச் சேர்ந்துள்ளது. பெண் தொழில்முனைவோர்களின் திறனை வளர்ப்பதை நோக்கமாகக்கொண்ட நிகழ்வுகளின் வருடாந்திர நிகழ்ச்சி நிரலை NITI ஆயோக்கும் வாட்ஸ்அப்–உம் அறிவிக்கும். மேலும், பெண் தொழில்முனைவோர்கள் எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொள்ளும் நோக்கில் குறிப்பிட்ட திட்டங்களை NITI ஆயோக்கும் வாட்ஸ்அப்–உம் உருவாக்கும்.

✓ இந்த முயற்சி, இந்திய WEP மன்றத்தில் பதிவுசெய்யப்பட்ட பயனர்களைக் குறிவைக்கும். நடப்பாண்டு வழங்கப்படும் NITI ஆயோக்கின் முதன்மைத் திட்டமான Women Transforming India (WTI) விருதுகளில் வாட்ஸ்அப் பங்குதாரராக இருக்கும். மேலும் WTI வெற்றியாளர்களுக்கு, $100,000 மதிப்புள்ள பரிசை வாட்ஸ்அப் வழங்கும். WTI விருதுகளை ஐ.நா அவையுடன் இணைந்து NITI ஆயோக் நிறுவியுள்ளது.

**10.எந்த IITஐச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், குங்குமச் சாயத்தைப் பயன்படுத்தி சூழலுக்குகந்த சூரிய மின்கலங்களை உருவாக்கியுள்ளனர்?**

A) ஐஐடி மெட்ராஸ்

B) ஐஐடி மும்பை

**C) ஐஐடி ஐதராபாத் ☑**

D) சிம்லா



✓ IIT ஐதராபாத்தில் உள்ள அறிவியலாளர்கள், இந்தியாவில் குங்குமம் அல்லது சாதிலிங்கம் தயாரிக்கப் பயன்படும் ஆயத்த சாயத்தைப் பயன்படுத்தி மலிவுவிலை, சூழலுக்கு உகந்த சூரிய மின்கலங்களை உருவாக்கியுள்ளனர். சாய–உணர்திறனுடைய சூரியமின்கலமானது (DSSC) நீரிய மின்பகுளி மற்றும் பிளாட்டினமற்ற எதிர் மின்முனைகளைக்கொண்ட (Electrodes) புதிய புச்சின் (New Fuchsin) சாயத்தை அடிப்படையாகக்கொண்டதாகும். இந்த ஆராய்ச்சி சூரிய மின்னாற்றல் இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

✓ இன்று புழக்கத்தில் இருக்கும் பெரும்பாலான சூரிய மின்கலங்கள் சிலிகானால் ஆனவை. சிலிகானால் தயாரிக்கப்படும் சூரிய மின்கலங்கள் மிகவுயர்ந்த வெப்பநிலை முறைகளை உள்ளடக்கியதோடு அதிக தயாரிப்புச் செலவுடையதாகவும் உள்ளன. DSSC, மூன்றாம் தலைமுறை மெல்லிய–படல கரிம மூலக் கூறு அடிப்படையிலான ஆற்றல் மாற்றும் சாதனமாகும்.

# நடப்பு நிகழ்வுகள்

## 1.நடப்பாண்டு F1 ஜெர்மன் கிராண்ட் பிரிக்ஸை வென்றது யார்?

A) டேனியல் வியாட்

B) லான்ஸ் ஸ்ட்ரோல்

C) செபாஸ்டியன் வெட்டல்

**D) மேக்ஸ் வெர்ஸ்டாப்பன் (Max Verstappen) ☑**

- ✓ ஹோக்கன்ஹெய்மில் நடைபெற்ற F1 ஜெர்மன் கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில், Red Bullஇன் ஓட்டுநர் மேக்ஸ் வெர்ஸ்டாப்பன், ஜெர்மன் கிராண்ட் பிரிக்ஸ் பட்டத்தை வென்றார். இந்தச் சீசனில் இது அவரது இரண்டாவது வெற்றியும், மொத்தமாக இது அவரது ஏழாவது வெற்றியுமாகும். நான்கு முறை முன்னாள் சாம்பியனான பெராரி வீரர் செபாஸ்டியன் வெட்டல் இரண்டாவது இடம் பிடித்தார். டோரோ ரோஸோ அணியின் இரஷ்ய வீரர் டேனியல் வியாட் மூன்றாவது இடத்தையும், ரேசிங் பாயிண்ட் அணியின் கனடிய வீரர் லான்ஸ் ஸ்ட்ரோல் நான்காவது இடத்தையும் பிடித்தனர்.

## 2.இந்தியாவின் புதிய நிதிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A) நீரஜ் குமார் குப்தா

B) கிரிஷ் சந்திர முர்மு

C) அதனு சக்ரவர்த்தி

**D) ராஜீவ் குமார் ☑**

- ✓ இ.ஆ.ப அதிகாரி ராஜீவ் குமார் (ஜார்க்கண்ட்: 1984) புதிய நிதிச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது, எரிசக்தி செயலராக உள்ள சுபாஷ் சந்திர கார்குக்குப் பிறகு அவர் இப்பதவிக்கு வந்துள்ளார். குமாரை புதிய நிதிச்செயலாளராக நியமிக்க பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவை நியமனக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ நிதிச்செயலாளர் என்பவர் நிதியமைச்சகத்தின் நிர்வாகத்தலைவராக உள்ளார். மேலும், நிதி அமைச்ச –கத்திற்குள் கொள்கை மற்றும் நிர்வாகத்தின் அனைத்து விசயங்களிலும் நிதியமைச்சரின் முதன்மை ஆலோசகராக உள்ளார். நிதியமைச்சகத்தில் உள்ள ஐந்து துறைகளின் (பொருளாதார விவகாரங்கள், வருவாய், செலவு, நிதி சேவைகள் மற்றும் முதலீடு மற்றும் பொது சொத்து மேலாண்மைத் துறை) ஐந்து செயலாளர்களுள் மூத்தவராகவும், அதிக அதிகாரம்மிக்கவராகவும் உள்ளார்.

## 3.ஷாவாலா தேஜா சிங் கோவில், எந்த நாட்டில் அமைந்துள்ளது?

A) மலேசியா B) இந்தோனேசியா

**C) பாகிஸ்தான் ☑** D) கம்போடியா

- ✓ உள்ளூர் ஹிந்து மக்களின் கோரிக்கையின் பேரில், இந்தியா – பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு முதல்முறையாக சீலைநகரமான சியால்கோட்டில், 1000 ஆண்டுகள் பழமையான ஹிந்துக்கோவிலை பாகிஸ்தான் திறந்துள்ளது. பிரதமர் இம்ரான் கானின் வழிகாட்டுதலின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தாரோவலில் உள்ள ஷாவாலா தேஜா சிங் கோவிலானது சர்தார் தேஜா சிங் என்பவரால் கட்டப்பட்டது.

- ✓ கடந்த 1992ஆம் ஆண்டு இந்தியாவில் பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது அதன் எதிரொலியாக பாகிஸ்தானில் ஹிந்துக் கோவில்கள் தாக்கப்பட்டன. அப்போது இந்த ஷாவாலா தேஜா சிங் கோவிலும் சிதிலமடைந்தது. அதையடுத்து சியால்கோட்டில் வசிக்கும் ஹிந்து மக்கள், அக்கோவிலுக்கு செல்வதை நிறுத்தினர். பாகிஸ்தானில் மொத்தம் 75 இலட்சம் ஹிந்துக்கள் வசிப்பதாக அந்நாட்டரசு மதிப்பிட்டுள்ள நிலையில், 90 இலட்சத்துக்கும் அதிகமான ஹிந்துக்கள் இருப்பதாக அங்குள்ளோர் கூறுகின்றனர்.

**4. எந்நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள், மேற்குத் தொடர்ச்சி மலையில் 26 மில்லியன் ஆண்டுக்கு முந்தைய ஒரு புதியவகை பச்சைப்பாம்பை (Vine Snake) கண்டறிந்துள்ளனர்?**

A) ஐஐடி மெட்ராஸ்

**B)** IISc பெங்களூரு ☑

C) ஐஐடி கான்பூர்

D) ஐஐடி கோரக்பூர்

- ✓ பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கழகத்தின் (IISc) ஆராய்ச்சியாளர்கள், மேற்குத் தொடர்ச்சி மலையில் *Proahaetulla antiqua* என்ற புதிய வகை பச்சைப்பாம்பினத்தைக் கண்டுபிடித்துள்ளனர். தொல்லினமான இது, தெற்கத்திய மேற்குத் தொடர்ச்சி மலைகளில் காணப்படுகிறது. இது, சுமார் 26 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஒலிகொசீன் காலத்தின்போது உருவாகியதாக கருதப்படுகிறது.

- ✓ இவ்வகை பாம்புகள் தமிழ்நாட்டின் களக்காடு–முண்டந்துறை புலிகள் காப்பகம் மற்றும் கேரளாவின் செந்தூரனி வனவுயிரி சரணாலயம் உள்ளிட்ட காப்பிடப்பட்ட வாழ்விடங்களில் காணப்படுகின்றன. இவ்விரு இடங்களுமே தென் மேற்குத்தொடர்ச்சி மலையில் அமைந்துள்ளன. இந்தக்கண்டுபிடிப்பானது ஆராய்ச்சியாளர்களுக்கு பச்சைப் பாம்புகளின் பரிணாமத்தைப் பற்றி மேலும் அறிய உதவுவதோடு மட்டுமல்லாமல், மேற்குத் தொடர்ச்சி மலையின் பரிணாம வரலாற்றையும் (இமயமலையை விட பழமையான ஒரு நிலப்பரப்பு) அறிய உதவுகிறது.

**5. 2018 புலிகள் கணக்கெடுப்பு அறிக்கையின்படி, எந்த மாநிலத்தில் அதிக எண்ணிக்கையிலான புலிகள் பதிவாகியுள்ளன?**

**A)** மத்திய பிரதேசம் ☑

B) உத்தரகாண்ட்

C) கர்நாடகா

D) சத்தீஸ்கர்

- ✓ 2019 சர்வதேச புலிகள் நாளை முன்னிட்டு, 4ஆவது சுற்று அகில இந்திய புலிகள் கணக்கெடுப்பு – 2018 முடிவுகளை பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டார். 2018ஆம் ஆண்டு நிலவரப்படி, இந்தியாவில் புலிகளின் எண்ணிக்கை 2967ஆக அதிகரித்துள்ளது. புலிகளின் எண்ணிக்கை அதிகரிப்பானது 2006ஆம் ஆண்டு முதல் புலிகளின் ஆண்டு சராசரி வளர்ச்சி விதிதத்துடன் ஒத்துப்போகிறது.

- ✓ புலிகள் கணக்கெடுப்பின்படி ம.பி$_{இல்}$ அதிக எண்ணிக்கையிலான புலிகள் (526) உள்ளன. புலிகளின் எண்ணிக்கையானது கர்நாடகாவில் 524 ஆகவும், உத்தரகாண்டில் 442 ஆகவும் உள்ளன. புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவது பற்றிய புனித பீட்டர்ஸ்பர்க் பிரகடனத்திற்கான தனது உறுதிப்பாட்டை, 2022 காலக்கெடுவுக்கு முன்பே அடைந்தது இந்தியாவிற்கே பெருமை சேர்க்கும் தருணமாக உள்ளது.

- ✓ சத்தீஸ்கர் மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்கள் புலிகளின் எண்ணிக்கையில் சரிவைக் கண்டுள்ளன. அதே நேரத்தில், ஒடிசாவில் புலிகளின் எண்ணிக்கை மாறாமல் அப்படியே உள்ளது. ம.பிரதேசத்தில் உள்ள பெஞ்ச் புலிகள் காப்பகத்தில் அதிக எண்ணிக்கையிலான புலிகள் பதிவாகியுள்ளன. அதே நேரத்தில், தமிழ்நாட்டின் சத்தியமங்கலம் புலிகள் காப்பகமானது 2014ஆம் ஆண்டு முதல் அதிகபட்ச முன்னேற்றத்தை பதிவுசெய்துள்ளது.

- ✓ அருகிவரும் இவ்வுயிரினங்களைப் பாதுகாப்பதற்கும், சுற்றுச்சூழல் ஒருமைப்பாட்டைப் பேணுவதற்கும் உதவுவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.29 அன்று சர்வதேச புலிகள் தினம் அனுசரிக்கப்படுகிறது. புலிகளின் எண்ணிக்கை அருகிவருவது மற்றும் அவற்றின் அவலநிலை குறித்து உலகளவில் கவனத்தை ஈர்க்கும் நோக்கத்துடன் இந்த நாள் 2010ஆம் ஆண்டு இரஷ்யாவில் நடந்த புனித பீட்டர்ஸ் பர்க் புலிகள் உச்சிமாநாட்டில் உருவாக்கப்பட்டது.

**6.எந்த நாடுகளைச்சேர்ந்த PTA இறக்குமதிகளுக்கு மத்திய அரசு அண்மையில் திட்டவட்டமான இறக்குமதி மிகு குவிப்புத் தவிர் சுங்கத்தை (definitive anti–dumping duty) விதித்துள்ளது?**

A) கம்போடியா & இந்தோனேஷியா

**B) தென்கொரியா & தாய்லாந்து ☑**

C) வியட்நாம் & இலங்கை

D) பிலிப்பைன்ஸ் & சீனா

- ✓ தென்கொரியா மற்றும் தாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் சுத்திகரிக்கப்பட்ட டெரெப்தாலிக் அமிலத்தின் (Purified Terephthalic Acid – PTA) அனைத்து இறக்குமதிக்கும் மத்திய நிதியமைச்சகம் திட்டவட்டமான இறக்குமதி மிகு குவிப்புத் தவிர் சுங்கத்தை விதித்துள்ளது. PTA என்பது பாலியஸ்டர் சில்லுகள் தயாரிப்பில் முதன்மை மூலப்பொருளாக உள்ளது. அவை ஜவுளி, சிப்பம் கட்டுதல், அலங்காரப் பொருட்கள், நுகர்வோர் பொருட்கள், பிசின்கள் மற்றும் பூச்சுகளில் பயன்படுத்தப்படுகின்றன.

**7. கலைஞர்களுக்கான சீனியர் / ஜூனியர் பெல்லோஷிப்பில், எந்த மொழியை சமீபத்தில் கலாசார அமைச்சகம் சேர்த்தது?**

A) நிமாதி

B) குமாவ்னி

C) சத்தீஸ்கரி

**D) சந்தாலி ☑**

- ✓ இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில், மீதமிருக்கும் மொழிகளான நேபாளி மற்றும் சந்தாலி ஆகிய மொழிகளை கலாசாரத்துறையில் இருக்கும் சிறந்த கலைஞர்களுக்கான சீனியர் / ஜூனியர் பெல்லோஷிப் விருது திட்டத்தில் இலக்கியப்பிரிவின் துணைப்பிரிவில் சேர்ப்பதாக கலாசார அமைச்சகம் சமீபத்தில் அறிவித்தது.
- ✓ துவாரகாவில் உள்ள கலாசார வளங்கள் மற்றும் பயிற்சி மையமானது பெல்லோஷிப் திட்டத்துக்கான மாணவர்களை தேர்வுசெய்யும் பணிகளைக் கையாளும் மைய நிறுவனமாக இருக்கும். "இலக்கிய கலைகள்" என்பது இந்தத் திட்டத்தின் கீழ் உள்ள துறைகளுள் ஒன்றாகும். அதில் மாணவர்கள், 22 மொழிகளில் தங்கள் துணைப்பிரிவு ஆராய்ச்சிக்கு விண்ணப்பிக்கலாம்.
- ✓ 22 மொழிகளில் இந்திய அரசியலமைப்பின் 344(1) மற்றும் 351ஆவது சரத்துகளிலிருந்து ஆங்கிலம் மற்றும் காசி ஆகிய மொழிகளுடன் பின்வரும் 20 மொழிகள் உள்ளன: (1) அசாமி, (2) பெங்காலி, (3) போடோ, (4) டோக்ரி , (5) குஜராத்தி, (6) ஹிந்தி, (7) கன்னடம், (8) கஷ்மீரி, (9) கொங்கனி, (10) மைதிலி, (11) மலையாளம், (12) மணிப்பூரி, (13) மராத்தி, (14) ஒரியா , (15) பஞ்சாபி, (16) சமற்கிருதம், (17) சிந்தி (18) தமிழ், (19) தெலுங்கு மற்றும் (20) உருது.

**8. Wingsuit Skydive Jump செய்த முதல் இந்திய விமானப்படை விமானி யார்?**

A) மிருதுளா கார்க்

**B) தருண் சவுத்ரி (Tarun Chaudhri) ☑**

C) இரமேஷ் சந்திர தோமர்

D) ஜைநேந்திர குமார்

- ✓ விங் கமாண்டர் தருண் சவுத்ரி, விங் சூட் ஸ்கை டைவ் ஜம்ப் செய்த முதல் இந்திய விமானப்படை விமானி ஆனார். ஜூலை.21 அன்று ஜோத்பூரில் உள்ள விமானப்படை நிலையத்தில் நடந்த கார்கில் வெற்றி நாள் கொண்டாட்டத்தின்போது, Mi–17 ஹெலிகாப்டரில் இருந்து 8,500 அடி உயரத்திலிருந்து அவர் இந்தச் சாதனையை நிகழ்த்தினார். ஜூலை.21 மற்றும் 22 ஆகிய தேதிகளில், ஜோத்பூரில் உள்ள விமானப்படை நிலையத்தில், கார்கில் வெற்றிநாள் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

**9.எந்த நகரத்தில், ISRO தொழில்நுட்பத் தொடர்புக் கூடத்தை அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது?**

**A) மாஸ்கோ ☑**

B) பிரேசிலியா

C) கையனே

D) பியூனஸ் ஏர்ஸ்

✓ 2022 ககன்யான் திட்டத்துக்கான இரஷ்ய ஒத்துழைப்பைக் கருத்தில்கொண்டு இரஷ்யத்தின் மாஸ்கோவில் ISRO தொழில்நுட்பத் தொடர்புக் கூடத்தை அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. ISRO இன் திட்ட இலக்குகளை அடைவதற்கும், இரஷ்யா மற்றும் அண்டை நாடுகளுடன் பல்வேறு விதமான செயல்பாடுகளில் சரியான நேரத்தில் ஈடுபடுவதற்கும் இந்தக் கூடம் ஒரு பயனுள்ள தொழினுட்ப ஒருங்கிணைப்பை அளிக்கும். விண்வெளி தொழினுட்பத்தில் நடப்பிலிருக்கும் ஒத்துழைப்–புக்கான இருதரப்பு திட்டங்களுக்கு ISRO தொழில்நுட்பத் தொடர்புக் கூடம் ஆதரவளிக்கும் மற்றும் ISROஇன் சார்பாக அது செயல்படும்.

✓ இந்திய குடியரசின் தலையீடு காரணமாக உருவான சர்வதேச தாவா தீர்வு ஒப்பந்தங்கள் குறித்த ஐ.நா. தீர்மானத்தில் கையெழுத்திட மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் தீர்மானத்தில் கையெழுத்திடுவது முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கையை அதிகரிக்கும். சர்வதேச நடைமுறையாக உள்ள தாவா தீர்வுக்கான மாற்றினைப் பின்பற்ற இந்தியா உறுதிபூண்டுள்ளது என்பது பற்றி வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சாதகமான சமிக்ஞையை இது அளிக்கும்.

**10.நடப்பாண்டு உலக காது கேளாத இளையோருக்கான பாட்மிண்டன் சாம்பியன்ஷிப்பில் தங்கம் வென்ற ஜெர்லின் அனிகா, எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராவார்?**

**A) தமிழ்நாடு ☑**

B) கேரளா

C) கர்நாடகா

D) ஒடிசா

✓ தைவானின் தைபேயில் நடந்த நடப்பாண்டு உலக காது கேளாத இளையோருக்கான பாட்மிண்டன் சாம்பியன்ஷிப்பில், தமிழ்நாட்டைச் சேர்ந்த சிறுமி ஜெர்லின் அனிகா தங்கப்பதக்கம் வென்றுள்ளார். மேலும், சாம்பியன்ஷிப்பின் 18 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில், 2 வெள்ளி மற்றும் 1 வெண்கலப் பதக்கத்தையும் அவர் வென்றுள்ளார். 15 வயதே ஆன அவர், மதுரை அரசுப்பள்ளியில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவியாவார்.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ தமிழ்நாடு புதுச்சேரி Bar Councilஇன் தலைவர் பதவிக்கான தேர்தலில் வழக்குரைஞர் பி.எஸ்.அமல்ராஜ் வெற்றிபெற்றார். இதேபோன்று துணைத்தலைவராக V கார்த்திகேயனும், அகில இந்திய Bar Council உறுப்பினராக S பிரபாகரனும் வெற்றிபெற்றனர்.

- ✓ தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கட்டணமானது ஆகஸ்ட் 10ஆம் தேதி முதல் ரூ.130 + GST என்ற மாத சந்தா கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

---